தாவொன்றிலிறத்தி, வளர்கா னுவென்றுத்தி, யிதையுவின்,
சந்ததிக்களிப்போமென்றுகஞ் சிந்தையிற்களிப்போம்,—

[1] கூபம்—கிணறு. [2] தனு—வில். அறி. 6:2. [3] ஏனம்—பாவம்.
[4] அருப்பம்—ஊர்.

வாவெனவழைத்தோன் பினுமவன் சீவனைத்தழைத்தோ,னீச,
வாகனப் பவனி வருங்கிறிஸ் தேகனைக் கவனி.

7. அடுமைக்குள்ளிருந்தும் பார்வோன் கொடுமைக்குள்
வருந்தும், யூதர்க்,
கானயங்கொடுத்து மோசேயா ரோனையும் விடுத்து,—
நெடுமையின்கோலை யெகிப்தின் கடுமையின் காலை,
யொருபத்து,
நீதியின்விதத்தை வாதைகள் மோது முச்சிதத்தைக்,—
கெடுவதும்பாரான் சனங்களை விடுவது மோரான்,
மனத்தினைக்,
கெட்டியும்படுத்தி கடல்விழத்தட்டியுமடுத்தி,—
நடுவதுமிட்டுச் சிறையினுட் படுவதும் விட்டுக், கானு,
நாட்டில்வைத்தவனே பவனி காட்டியுய்த்தவனே.

8. சிறையதைமீட்டும் பார்வோ னிறையதைப்போட்டுங்,
கடலினைத்,
திடத்துடன்பிரித்துங் கடந்தவர் நடத்துடன்சிரித்துங்,—
குறையறவாற்றி யவர்மன நிறையுறத்தேற்றி, மன்னுக்,
கோப்பு[1] றவாய்ந்தான் வருடம் நாற்பதுமீந்தான்,—
மறையதுந்தெரிந்தான் பத்து முறையதும்புரிந்தான், சீனு,
மலையினிலிருந்தான் மாய வலையினிற்பொருந்தான்,—
பறையதுமிலங்க மிகுந்த பொறையதுந்துலங்க, வேதம்,
பண்டுதந்தவனே வேடங் கொண்டுவந்தவனே.

9 ஆட்டிடைகிடந்த தவிதினை நாட்டிடைபடர்ந்த, கானு,
னனைத்துக்குமரசா யிசரேல் சனத்துக்குஞ்சிரசாய்,—
நாட்டிவன்சவுலை யுடல்விழ வாட்டிவன்கவலை, நரகத்தி,
னிடுவினைத்தாக்கி நீதியி னறுவினுக்காக்கித்,—தாட்டிக
விறையோன் பரர்பொருள் கூட்டிய திறையோன், சலமோன்,
றன்னையுங்கொண்டா னரசென நன்னயம்விண்டான்,—
பாட்டினிற்சிறந்தோன் பெத்தலேக் காட்டினிற் பிறந்தோன்,
பவமெனும்,
பங்கம்தழுந்தான் பவனிக் கிங்ஙனமெழுந்தான்.

10 மனுவெனவுதித்தா ரல்கையைச் சினமொடுமிதித்தார்,
சாஸ்திரி,
யாருட னுரைத்தார் காணிக்கை சீருடனிரைத்தார்,—

[1] கோப்பு—உல்லாசம்.

சனுவுடனுயர் பணியவுங் கனிவுறுசேயர், குடிவிடை,
தாரகைகாட்டிப் பாரிலிற் சேர்மிகையோட்டி,—
வினவு[1]டன்வானோர் நவசபை யனைவருமானோர், விண்ணிடை,
மெய்ப்புகழ்பலவே மனதொருமிப்பொடுசொலவே,—
யனையெனுமரியாள் சூசை மனையெனும்பெரியாள், பணிசெயு,
மற்புதனிவன்றான் வேசரியிற்பவனிவந்தான்.

11. எட்டெனுந்தினமே சுன்னத் திட்டனனினமே, யாலயத்,
தெண்ணஞ்சிற்புகுந்தான் சிமியோ னுண்ணெஞ்
சிற்றெருகுந்தான்,—
கட்டுடன்முன்னு லாண்டினில் மெட்டுடன்முன்னுல்,
தர்க்கித்த,
கலைப்பரிசேயர் தமைவென்ற தலைப்பரிசேயர்,—
மட்டுடனுண்டு முப்பதும் விட்டுடன் மீண்டு, தீட்சை,
மார்க்கமும்பெற்றான் சீடர்க்குத் தீர்க்கமுமுற்றான்,—
துட்டிடச்சயித்தா னிதனையுங் கெட்டிடச்சயித்தா,
னவனியிற்,
றாதுதருவனே பவனியில் வீதி தருவனே.

12. புத்தியுஞ்சாற்றி யெளியவர் க்ஸ்தியுமாற்றி, மிகுந்த,
பொறுமையுமோங்கிப் பாவிகள் சிறுமையுந்தாங்கிச்,—
செத்தவர்தமையு மெழுப்பி வைத்தவர்சுமையு, நுகத்தடி,
சின்னதென்றூதி மனுடருக் கின்னநன்றோதிப்,—
பத்தர்கள் பவத்தை யொழிக்கநி னைத்தவர்தவத்தைப்,
புரிந்து,
பாடுற விறந்தே யுயிர்த்துவிண் ணுடுறத்திறந்தே,—
முத்தியினின்றே யாகா யத்தினிற்சென்றே, நடுவிட,
முந்தவருவனே பவனியெ மூந்தவொருவனே.

13. சீமையைக்கெடுத்த பாம்பெனு மூமையையடுத்த, பொல்லா,
ரோந்தையிற்கிடந்தோர் முழுக்குருட்டாந்தையைத்
தொடர்ந்தோர்,—
தீமையில்விழுந்தே யித்தாலியச் சீமையைக்கழிந்தே, யீந்திய,
தேசத்திற்புகுந்தோர் பெத்தரிக்க ரோசத்தில்மிகுந்தோர்,—
சாமியைநினையார் வரகு சாமையைத்தினையார், வயிற்றுக்குச்,
சங்கடப்படுவா ராத்தும மங்கிடக்கெடுவார்,—
பூமியிலினமும் விழித்துக் காமிகள் மனமுங், குணப்படப்,
போதிக்கத்தானே வந்தன ஞதிக்கத் தானே.

[1] வினவுதல்—வினவுதல்.

மின்னார் புலம்பல்

விருத்தம்

பாவோது புகழுடையான் பெத்லெகேம் நாதனொரு பரமன்
மைந்தன்,
தேவாதி வேசரிவா கனப்பவனி யெழுந்துவந்த திறமை காணக்,
காவாதி மக்களெனுஞ் சீயோனின் சவைக்கூட்டக் கன்னிமார்கள்,
மாவீதி நிறைய வெரு சலையிலெங்கு மிகநெருங்கி வருகின்றாரே.

1\. திருநாளுக் கெருசலையிற் பெருநாளுக் கெழுமனந்தர்,
திகழ்வானின் மீன்கள்போல் வரும்ஞானமடவார்,—
கருணைபுரி நாதனிவ னாதமோ வாதமெனிற்,
கனிதின்றா னிவனோ குருசினின் றானென்பார்,—
தருமனா பேலென்பா ரவனுதிரம் வானோக்கிச்,
சத்தமிட்ட திவன்கறை[1]யி ரட்சித்துவிட்டதென்பா,—
ரிருடியனே னோக்கென்பா ரவன்வானி லிருந்தாப்போ,
லெடுபட்டா னிவனரர்க்குக் கொடுபட்டானென்பார்.—

2\. பேழையினோ வாவென்பா ரவனாலெட் டாத்து மக்கள்
பிழைத்தார்க ளுலகமெல்லாம் பிழைத்தாரோ வென்பார்,—
வாழுமபி ராமென்பா ரவன்மனைவிட் டாகாரை,
மருவினா னிவன்றேவ வுருவினா னென்பார்,—
சூழுமீ சாக்கென்பா ரேசாவென் றிலையவனைச்
சொன்னானே யிவன்மறந்து சொன்னானோவென்பா,—
சூழியக்கோள் லாபானின் மருமகனும் பொய்தாதைக்,
குரைத்தான்மெய் வித்தையிவன் விரைத்தானே யென்பார்.

3\. டன்னன்பார் வோன்மந்திரி யோசேப்பன் றன்னார்களை,
மருட்டினானிவனெவரை மிரட்டினானென்பார்,—
முன்னவன்மோ சேயென்பா ரவனாதிக் கொருகோப,
மூட்டினா னிவனன்பு பூட்டினா னென்பா,—
நுன்னுமுய ராசாரி யாரோனுங் கன்றினூட,
வருச்செய்தா னரரையிவன் கருச்செய்தா னென்பா,—
ரன்னமெல்கி சேதேக்கு மங்கிடத் தட்டவனை,
யற்றபத னிவன்கடவுள் பெற்றசுத னென்பார்.

4\. யோசுவா கிபேயோ னாராருக் கோதினதும்,
யூகமோ இவனளவும் யோகமோ வென்பார்,—
வீசுபுகழ் சிமசோன் பெண்களுட மயற்பட்டு,
விழிகெட்டா னிவன்மோட்ச வழியிட்டா னென்பார்,—

[1] கறை—இரத்தம்.

நேசமிகுஞ் சாமுவேற் றெரிசிதனைப் பாளமைத்த,
நிலைகண்டா ஸில்லையிவன் கலைகண்டா னென்பார்,—
தேசுலவு தவிதாச னரியாவைக் கொன்றுகொலை,
செய்தானே யிவன்பாவஞ் செய்தானோ வென்பார்.

5. ஞானசல மோனரச னக்கியான வழிசெலுதை,
நடத்தினுன் வேதமிவன் றிடத்திறை னென்பா,—
ஈனவெலி யாவென்போ னக்கினியை வரப்பண்ணி,
யழித்தானே யிவனெவரை யழித்தான் சொல்லென்பார்,—
மானவனின் சிடனெலி சாக்காடி களைவிட்டு,
வதைத்தானே பிள்ளைகளைச் சிதைத்தானே யென்பார்,—
தானமிகும் யோபென்பார் தான்பிறந்த நாளையவன்,
சபித்தானே யிவனுசிர் வதித்தானே யென்பார்.

6. புண்ணியன்யோ னுவென்பார் கடவுளைவிட்,
டோடியவன் போனுனே மீன்வயிற்று ளானுனே யென்பா,—
ரெண்ணிமற்றத் தெரிசிகளைச் சொன்னுனு மிவர்கள்மே,
லேதமதுண் டிவன்மேலோர் தீதுண்டோ வென்பார்,—
வண்ணமிகப் போஸ்தலரைச் சூட்டினுந்தா னவர்களுட,
மார்க்கமெல்லா மிவனுடைய தீர்க்கமே யென்பார்,—
கண்ணில்லாப் பாம்பிவனுக் கெந்தவித மொப்பாகக்,
காட்டினுள் ஆதிபகை மூட்டினு னென்பார்.

7. புத்தியுற்ற கன்னியர்கள் மாப்பிள்ளைக் கெதிர் கொண்டு,
பொங்குசுடர்த் தீபங்கள் செங்கையில் வைத்தெழுவார்,—
சித்திதனி லெண்ணெய்கொண் டேகாத கன்னியர்கள்,
தியங்குவார் மயங்கிவிழுந் துறங்குவார் திகைப்பார்,—
பத்திமிகும் பெண்கள்மணன் வருகிறு ரெனவொலித்த,
பறைகேட்டு விழிப்பார்நன் மறைகேட்டுச் செழிப்பார்,—
பெத்தலையி னுதனிவ னித்தரையை மீட்கவந்த,
பேசரிய கிறிஸ்தரசன் மேசியா வென்பார்.

8. வெற்றிமிகும் பராபரனின் மைந்தனுந்தான் கொண்டவிந்த,
வேடமெல்லா மனுடரின்சந் தோடமே யென்பார்,—
கற்றவிரு டியரெழுது மிம்மானு வேலிவன்றுன்,
கன்னிமரி மகனிசரேல் மன்னவனே யென்பார்,—
சற்றுமுணர் வில்லாத பொய்த்தேவ ரிவன்றனக்குச்,
சரியாமோ இவனெவர்க்கும் பெரியோனே யென்பார்,—
குற்றமிகும் லோக அரசுக்குச் சிரத்திரண்டு,
கொம்ப துண்டே யிவர்க்கேதும் வம்பதுண்டோ வென்பார்,

தேவமோகினித் தோற்றம்

கழி நெடில்

முந்துமே வாள்சா ராளும்ரே பக்காள் முதன்மைமலே யாளுடன்
ராகேல்,
முறைக்கொள்தா மார்சிப் பொருவிரா சாப்பு மோசைமுன்
மீரியாங் தெபோருள்,
வந்தசற் பாத்தூர்க் கைமையா கேலேழ் மக்கள்தாய் நகாமி ரூத்
தபிகாய்,
வளர்யொசே பாள்யோப் புவின்மகள் மூவா மானகற் பெல்தர்சூ
சன்னுள்,
விந்தைசே ரன்னு ளெலிசபெத் தம்மாள்மேன்மையின் மகதலே
மரியாள்,
மெய்க்கன்னி மரியாள் கிலேயோப்பை மரியாள்
மீண்டுமர்த் தாள்கத்த ரீனுள்,
சிந்தைகித் தோரி யாள்மம்மி தோற்காள் சேருமிம் மாதர்கள்
சிரசாய்த்,
திவ்விய சியோன் மகளென மேவித்,
தேவமோ கினியும்வந் தனளே.

அறுபத்து நாலடிச் சிந்து

அதிகசுபபரம சபையினெருசலேமின் வந்தாள், சம்பிரமமாக,
அதிகசுபபரம சபையினெருசலேமின் வந்தாள்.

1. அதிகசுபபரமசபையின் மின்வந்தா,
ளறிவினுயருமறை முறைமனதுவந்தாள்,
துதிமனுவேலுடகாதல்மிகுந்தாள்,
சுவிசேடசபைமுனமேவி யெழுந்தாள். —அதிக

2. மாதுசெனனங்கானுன்றேச, மற்றெருசலே
மீதுசியோனின்மலேவாசம் வேந்தனுந்த
வீதுமகிழ்ந்துபுகழ்நேசம், விளங்குசிட
ரோதுசுவிசேடப்பிரகாச, மொளிவனந்த
சந்திரசிதசரோருக[1] மேவியபாதஞ், சருவேசுரன்
மைந்தனுவந்து பிறந்துசிறந்தருணீதம், வளர்சாலோமோன்,
சிந்தைமகிழ்ந்து விளம்பமுழங்குசங்கீதந், தீர்க்கரெல்லா,
முந்தவரைந்த கடந்தசுதந்தரவேத, முதல்வனுவி,

[1] சரோருகம்—தாமரை.

வித்தக மகத்துவ வரத்தருள் பெருத்தகருணைவாரி,
விண்மேவு நாதர்,
சித்திர விதத்தினில் மிகுத்தெழி லுதித்துயர்சிங்காரி,
சிறப்பின்மிக்க,
பத்தியிலே யுத்தம யெனத்தவ மிகுத் தருளுதாரி, பராபரனை,
நித்திய மனத்தினினினைத்துருகி வைத்தவனுசாரி,
மங்கள மாக மகிழ்ந்துற வாடி, [நிச்சயசுப,
சங்கித ஞான பதம்பல பாடி,
பொங்கும் விளங்கு மனங்கனை[1]த் தேடித்,
துங்கபி ரும்பர மன்சபை நாடி. —அதிக

3. ஆகமத பாஞ்சித்தங்க, மவள் தருங் சி
னேகம் வானோர்களுக்குந் துங்க, நினைத்திடும் வி
வேகங் கிடையாத பிரசங்க, மேலாகிய வை
போகமனதி லந்தரங்கம், புண்ணியசுக
மிஞ்சிய ரஞ்சித வஞ்சியி லஞ்சி[2]ய ஞானி, வேதமுணர்ந்த
நெஞ்சினிலுஞ்செபவிஞ்சையி றைஞ்சவதானி, நித்தியகாலஞ்
சஞ்ச[3]ருமஞ்சுக[4] மஞ்சு[5]வெனுஞ் சுபமேனி, சர்ப்பத்தால்
வந்த
வஞ்சனை சஞ்சல மஞ்சவருஞ் செகமானி, மறுவில்லாத,
கட்டழகி கட்டியெதிர் பட்டதுகிற் பட்டதவர் நீதி, கனக
ரத்தினச்,
சுட்டியொளி விட்டிடில தெட்டிலொரு மட்டதிருசோதி,
சுரூபநுதல்,
வட்டமிடு பொட்டினுட திட்டமுநல கெட்டியவள்சேதி,
மலர்த்தமுக மெட்டினுட இட்டநவ சட்டம்வெகு நட்டணைக
ளோதி, விதத்துடனே,
மண்டல மாதர்க ளோடு குலாவி,
விண்டமெஞ் ஞானிகள் பானுரை கூவி,
யெண்டிசை வீதியி லேயு முலாவி,
பண்டப ரன்சுத னிணை மேவி. —அதிக

4. துங்காதத்துக்கு வாக்குத்தத்தஞ், சொன்ன படிக்கு
எங்கோன் மனுடருக்குச்சித்த மிரங்கி வந்து,
சிங்காரமாக வுதித்துத்தஞ் சிநேக முடன்
மங்காதசுவி சேடநித்தம், வழுத்திய பி
னங்கம்விளங்கி யெழுங்கன சீடரைக்கூட்டி, யவர்களுக்கு,
இங்கிதமுங் கலையின்கனிவும் பலகாட்டி, யெழுங்கணங்கள்,
கங்குல்மதங் கலகங்களையுங் கெடவோட்டிக் கடைசியிலே,

[1] அனங்கன்—உடலில்லான். [2] இலஞ்சி—குணம். [3] சஞ்சு—சாயல்.
[4] அஞ்சுகம்—கிளி. [5] மஞ்சு—அழகு.

பொங்குபவங்க ளறுங்கோலையின் கடுகுட்டி[1]ப்புரக்கவென்று,
தக்கசிலு வைக்குளுயிர் சொக்கி[2]மலை யிக்குழியுண்டூக்கி,
தவன் மூன்றுநா,
ளக்குழிவி லக்கியருமைக் கதிபருக்குரை விளக்கி,
யதன்பிறகு,
மைக்கண[3]நி லைக்குளொரு மெய்க் கடவுள்
பக்கவொளி புக்கி[4], மறுத்து மிந்த,
மிக்கவுல கைக்கடைய மூிக்கவரு சக்கியன்[5]
மயல்சிக்கி வேதநாயகன்,
செஞ்சொன் மிகுங்குற வஞ்சி படித்து,
மஞ்சுல வும்பல தாள மடித்து,
மிஞ்சிய கெஞ்சினி லாசை பிடித்து,
கொஞ்சிய வஞ்சியர் கூட கடித்து. —அதிக

5. கெட்டகள்ள தீர்க்கரான கெடுதற்காரத் துட்டன்
மிகுந்த இறுமாப்புத் தூஷண நாமப்
பட்டனதகிரமக் கோப்புப், பன்றிகள் மேய்க்குஞ்
சட்ட மவனுடைய மூப்புச் சகல நாளும்
வம்பு பெறும்படி கும்பொடு சம்பிரம[6]மிண்டு, வார்த்தைகள் பேசிக்,
கெம்பியெழும்பி மதம் பலவும் பகைவிண்டு[7], கிறிஸ்துவையும்
வெம்பி யிடும்புபுலம் பியெழும் புகைகொண்டு,
வெகுண்டு சீறுங்,
கொப்பொ டுடம்பு படும்படியும் படியுண்டு,
கொடிய வஞ்சப்,
பித்துபி டித்தமுழுச் சத்துருவி னைத்துவழி நீங்கப்,
பிசாசின் மகன்,
வைத்தவவ சுத்தவத மத்தினிரு ளத்தனையும் வாங்க,
மறுபடியுஞ்,
சித்தியவி தத்தினெறி யெத்திசையு முத்தமரிலோங்கத்,
தயாபரனை,
நித்தியமி தத்தொடுது தித்திருத யத்தினிடை தாங்க,
நினைந்துருகிப்,
பெத்தலேஞ் சரு வேசனை யேற்றிச்,
சுத்தமாந் திரு வாய்மைகள் சாற்றிப்,
பத்திகூர்ந் திரு சேவடி போற்றி,
மெத்தவாஞ்சைய தாய்மனந் தேற்றி. —அதிக

---

[1] கடுகுட்டி—முண்முடிகுட்டி. [2] சொக்கி—சோர்ந்து. [3] மைக்கணம்—மேகக்கூட்டம். [4] புக்கி—புகுந்து. [5] சக்கியன்—சிநேகிதன். [6] சம்பிரமம்—செல்விக்கை. [7] பகைவிண்டு—பகைபேசி.

நாட்டியத் தரு

விருத்தம்

மத்தமா சற்றதீ தற்றவா னத்தொரே
வஸ்துவை நினைக்க வரிதாய்,
பித்தர்கூ டிப்பிதற் றியபுலைக் கதைகளைப்
பிழைகளைப் பேசுவேனோ,
சத்தியவே தக்கிறிஸ் தவர்கள்பா ரித்துச்
சமஸ்தநா ளுந்துதிசெயுஞ்,
சித்திரகூடச் செருச லைப்பதியி னுச்சித
சியோன்மகள் வளம்பகர்வனே.

1. அதிசித்திர மிகமுக்கிய மதனப்பெண் பிரபலத்தைப்
பாடவோ,—அவ
ளருமைத் துரையெனச் சொல் பெருமைக் கிறிஸ்துவைக்
கொண் டாடவோ,
நிதியுத் தமசுபத்தி கதியுற் பனவிதத்தைச் சாற்றவோ,—
வரும்,
நிருபத் தவிதிசரேல் மரபுப் பரமவஸ்தை யேற்றவோ,
பதியற் றெருசலைக்கு ளுறுதியுற் றுயர்கன்னியைக்
காட்டவோ,—அன்று,
பரிவிற் சலமோன் வைத்த வரிசைப் படிபடித்து மூட்டவோ
துதிபற்றிய கவிகட்டி மதியுற்று வரிசித்த பாட்டிலே,—
சொன்ன,
சொருபக் கிருபைவைத்த பரிசுத்த பெத்லகேம் நாட்டிலே.

2. விஞ்சை[1]ச் சுரர்களுக்கு மிஞ்சித் தலைமைபெற்ற வரத்தினாள்,
—கர்மேல்,
விந்தைப் பருவதம்போ லந்தத் தபரஞ்சிப்பொன்சிரத்தினாள்,
மஞ்சுற்[2] றுலவுகொடி[3]ச் சஞ்சொ[4]த் தொளிர்சிறந்த
கொண்டையாள், மணி,
மாடப் புறவின்கண்ணென் றோடிப் பரந்தவிழிக்
கெண்டையாள்,
கஞ்ச[5]த் ததலீலியா வின்சுத்தத் தின்சுகந்த விதழினாள்,—
பரம,
காணிக் காசெனப்பொன் ணுணிப் பட்டந்தரித்த நுதலினாள்,

[1]விஞ்சை—கல்வி. [2]மஞ்சு—மேகம். [3]கொடி—காகம். [4]சஞ்சு—சாயல். [5]கஞ்சம்—தாமரை.

செஞ்சொற் பாமமாத ருஞ்சொற் புகழ்ந்துமெச்சும்
புருவத்தாள்,—தேவ,
சிந்தை யுருக்குஞ்செப விந்தையிருக்கு மங்கைப்
பருவத்தாள்.

3. வில்லைப்புருமவமமைத்தெல்லைப் பொருது முத்துப்
பல்லினுள்—வேத
மேன்மை யனைத்துங்கற்று ஞான மனத்தைப் பெற்ற
சொல்லினுள்,
எல்லைத் தமஸ்க்கின்றிசை யில்லுற் றுயர்லீபனேன் மூக்கினு,
ளிச
ரேலுக் கறைந்தபத்து நாலுக் குயர்ந்த தேவ வாக்கினுள்,
அல்லைக் குழலிட்டெரு செல்லைப் பதியின்றிட்ட
வன்னத்தாள், மா,
தளையின் கனி வெடிப்பின் விளையுஞ் சிகரத்திரு
கன்னத்தாள்,
தொல்லைச் சீவவிருட்சக் கொல்லைத் தலத்தின் முக்கிய
சுகத்தினுள், தேவ,
சோதிப்பிரவைதங்கும் நீதிக்கிருபை பொங்கு முகத்தினுள்.

4. முன்னன் றவிது தந்த பொன்னின் றுருவத்தந்தக்
கழுத்தினுள், சீனு,
மலையி லறைந்தரண்டு பலகை நிறைந்த சித்திர
வெழுத்தினுள்,
சொன்னந் தனிற்பதித்து மின்னும் தற்சீசின்ரத்தினச்
செங்கையாள், மயல்,
தோன்றும் வெளிமான்கன்றென் றூன்று முந்திரிகைக்குலைக்
கொங்கையாள்,
உன்னும் லீலியாப்புஷ்பந் துன்னுங் கோதுமையம்பாரப்
பண்டி[1]யாள், கிறிஸ்,
துளத்தைக் கட்டிக்கொண்ட கழுத்தை கிட்டிக் கண்ட
கண்டியாள்,
சின்னப் பதிதர்மனங் குன்னச் சுழிக்குமுந்திச் சுழியினு,
ளெஸ்ப்போன்,
தேசப் பதராபீமின் வாசற் குளம் வளைந்த விழியினுள்.

5. தந்துச் சூத்திரக்காரன் விந்தைப்பூஷண மென்ற
விடையினுள், பார்வோன்,
சரியும் ரதத்திற் பூண்ட பரியின் பவுஞ்சுபோன்ற
நடையினுள்,

[1]பண்டி—வயிறு.

அந்தத் தபராஞ்சிப்போன் சோர்ந்தத் தாதாரத்தாளின்
றுடையிருன், காசி,
யாவுஞ் சந்தனவாச மேவுஞ் சித்திரத்தைய னுடையிருன்,
தோத்தத்துடனிலக்கல் தாந்தத் தினிற்பதித்த பேனியாள்,
தேவ,
சுருதிமறைபனைத்து மருவிக்கற்றவவதானியாள் பந்தத்
துறம்விடனென் விந்தத் தெழுங்கேதுரின் சாயலான்,
காருன்,
பரம ராச்சிபத்தி னரிய மோக்கிஷத்தின் வாயிலான்.

6. மாசற் ஞெளிர்சங்கித சேசத் திலங்குசெப மாலையான், ஞான,
மன்னன் மகிழும்பாத்தினைப் பொன்னினலங்கிருத
வோலையான்,
தேசற்ற பரலோக ரோச புஷ்பங்களவிக் கற்பிருன்,
சால்யோன்,
செப்தவாலபத்தி லெய்த கற்பனைப்பெட்டியப் பொதமிருன்,
மோசப் பசாசர் மனம் நாசப்படுத்தற்கு நிலையிருன்,
வேத,
மூபுத் மறிந்து மோட்ச வழியுக் தெரிந்த ஞானத்
தலையிருன்,
ஏசுக் கிறிஸ்துவின் சொற் பேசிப் புகழ்ந்துகொள்ள
வெண்ணிரு, னவ,
ரிறைபத் தினைமறிந்து பதனத் துடனெழுக கண்ணிருன்.

7. கடிவிற் பளிரன்பேடு முடிமைத் திடமுடன் மத்தகம்
வைத்தான், தங்கள,
வாளைக் கிரமையினிதுய ளினமைக் கதிபனைவித் தகம்
வைத்தான்,
படிவிற் பருதி பிட்ட கெடிதுற்ற கவசத்தைச் சாத்தினு
னருன,
பயில்[1] பொற் சர்கைதைத்த வொயி[2]லுத் தரீ[3]கத்தையே
போர்த்தினுன்,
அடியிற் சக்தானைக் கேழ்ப் படியப் பண்ணிமிதித்துக்
காட்டினுன், வானெ,
ரணியுஞ் சொற்களான மணியின் வர்க்கமெல்லாம்
பூட்டினுன்,

---

[1]பயில்—சைகை. [2]ஒயில்—சாயல். [3]உத்தரீயம்—மேற்போர்வை.

கடியைத்தீ நரகுக்குள் முடியப் பதறிவிழவோட்டினுள்,நயம்,
கண்டு புவியைச் சயங் கொண்டு நிலைவக்கொடி
நாட்டினுள்.

8. வானத் தார்வணியும் ஞானத்தாபரணப் பெட்டியா, ஸெல்தர்,
வளர காசுவேரின் மணியின் சொன்னத்தங்கக் கட்டியாள்,
தானத் தேசுசுதன் மானத் தருணீதிவெள் ளுடையாள்,
பல,
சாஸ்திர விற்பனத்தோரை சூத்திரத் திளிற்பிணிக்குஞ்
சாடையாள்,
மோனத் தேவவனு பானத் துளியிறங்குந் தொண்டையாள்,
ஆகாத,
மூடர்க் குபதேசத்தைக் கூடச்சொலித் தர்க்கிக்குஞ்
சண்டையாள்,
நானத் தாள் சொலுக்கு மீறுைத் தாள் பலுக்கும்
நகைக்குமே, பேசு,
நாதர் பெத்தலேகம் நீதர் மனங்கிடந்து திகைக்குமே.

9. நனிசொற் பத்மினிப் பெண்ணிற் கனமென் றெருசலேயை
நோக்கிறார், ராசா,
நடைகா வனத்திற் கண்டுன் டடியிற் றரித்துநின்று
பார்க்கிறார்,
பனியிற் சிரம் நனைந்தேன் கனிவுத் தமியேயென்று
கொஞ்சுறார், வாயிற்,
படியைத் திறவுமென்று விடியுந் தனிலும்நின்று கெஞ்சுறார்,
இனிமைச் சீயோன்மகட் குனதர செனச்சொல்லச்
சொல்கிறார், தம,
திரக்கக் கருணைக்கடற் பெருக்கத்துட னலைத்தும் நல்கிறார்,
வினயப் பெருமைப் பேயை முனையச் சினந்து நோக்கி
சீறினர், திட்டி,
வேதங் கடந்தசத்திய போதந் தொடர்ந்தெல்லார்க்குங்
கூறினர்.

தேவமோகினி பிரஸ்தாபம்

விருத்தம்

எத்திசை புகழுங் கீர்த்தி யேசுநா யகனுக் கேற்ற,
நித்திய கன்னி யான நேயசீ யோனின் மாது,
சத்திய சபைமுன்பாகத் தனதுமேன் மைகளையெல்லாம்,
பத்தியுஞ் செபத்தி யானப் பண்புடன் பகர்கின்றாளே.

1. ஒன்றுமி லாதகாலைக் கன்றுப் பொருளளித்து
மூண்டுசெய்தோன் பேற்காதல் கொண்டவன் யா,
னன்று தனிநிராசன் சென்றுவாழ் எருசலே
மன்னயர்சி யோனருளைக் கன்னிகையு நான்,
என்றுமழி யாவல்தாய் நின்ற பாமதிறில்
தேசநாத ருக்குகந்த மாசிலாதாள் யான்,
மன்றல் கமழுங்கற்புக் குன்று மரியதாயா
மாகனிக் கிசைந்ததேவ யோகினிநானே.

2. ஆதியே வானையாள் சோதியைப் போலிருக்க
வாசித்தாள் கானவரை சேரித்தவள்,
பேதித்தேவாளின்மக்கள் சாதிகெட்டன்னையர்க்குப்
பிள்ளைகளைப் பெற்றாள்யான் கள்ளமுற்றேனே,
தீதாய்லோத்தின்பெண்சாதி சேர்தோம்பட்டணந் தன்னை
திரும்பிப்பார்த்தாள் யானென்றை விரும்பியாரோ,
மாது லோத்தின் பெண்களைக் கோதுசெய் தாரிய
மாகனிக் கிசைந்ததேவ யோகினிநானே.

1 ஆதி. 3:5; 19:26; 19:31–38.

3. சாருளெ கிட்டிலை துருகப் பார்வோன்விட்டுற்
றங்கியிருந்தாள் யான்கற்போ டெக்குமிருந்தேன்
விருயாக் கோவையுதற் பேறுகத் தந்துசொல்லி
வித்தித்த ரெபெக்காளையு மதிப்பேனேயான்,
கூறுய் ராகேலைக்கேட்க லேறு யாக்கோபைக் கூடுக்
கூச்சப்பாவையேயாள் சொன்னபேச்சையுங் கேளேன்,
மாறுய் ராகேல் பில்க்காளை யூறுய் யாக்கோபுக்கிட்டாள்
மாகனி மரிமின்றேவ யோகினிநானே.

1 ஆதி. 12:15–20,27; 29:16–31; 30:3,6.

4. தீனாள் யாக்கோபின்மகள் போனளே கற்பழிக்க
சிகே மூராரைக்கேட்டால் வாகாய்ச்சொல்வா,
ராளெழுந் தாமார்வேசி காவெனபெண் ணருக்கொண்டே
அடுத்த மாமன் யூதாவைக் கெடுத்தாளல்லோ,
மீனார் மோசேயின் றங்கை தானே மீரியாமன்று
வெண்குட்டங் கொண்டதுபெத்த சங்கட்டந்தானே,
மாளுள் தேவ்போறுன்மண வேலேனையித்தோத் தென்பர்
மாகனிக் கிசைந்ததேவ யோகினிநானே.

1 ஆதி. 34:2; 38:14–19; 4 ஆதி. 12:10; கிபா. 4:4.

5. விரிவாய் விசுவாசித்த யெரிகோவின் ராகாப்புவை
வேசிவேசி யென்றெழுதி யேசவுமாச்சே,
பரிய யாகேலுந்தன்னைப் பரிவாயடைந்த சிசே
ராவையு மாணியாற்கொன் றுசாவினுளன்றோ,
தெரியத்தந்தெல்லாஞ் சொல்லியுரியருத்தைப் போவாசை
சேர்க்கச்செய் நகோமியெனக் கேற்கையாவாளோ,
வரிசையில் லாமல்ரூத்தா விரவிற் களத்திவ்வந்தாள்
மாகனிக் கிசைந்ததேவ மோகினிகானே.

யாக். 2:25; நியா. 4:18-22:3,1-4; நியா. 3:5,6.

6. இப்போருள் மோசேசுவுக் கொப்பாங் குலப்பெண்டீரோ,
தேசோ மீதியான்றேச வாசாரி மகள்,
சர்ப்பாத்தூர்க் கைம்பெட்ட வப்ப மெலியாவுக்குத்
தந்தாளே யல்லாவேலைதத் தந்தாள் சொல்லுஞ்,
செப்பாய்ச் சூனேமியாளு முப்போ தெலிசாவுக்குச்
சின்ன அறை வீட்டைச்செய்த தென்னமேன்மைதான்,
மப்பாளு ளென்றன்னைத் தப்பாய் நினைத்தானேலி
மாகனிக் கிசைந்ததேவ மோகினிகானே.

2 மோ. 2:21; 1 இரா. 17:10; 2 இரா. 4:8; 1 சாமு. 1:12,14.

7. உரியாத்தன் மணவாளன் றெரியாமற் றவீதிடுே
டுளவாம் பர்சேபாளொரு களவாணிதான்,
கரிகுழ லெஸ்தரென்பாள் பெரியவகாசு வேராக்
தாலுக்கன்பெண் டானவட்கு மெலுக்கேதுண்டு,
சரியணி செங்கையின்றான் பிரியரு சன்லுளுந்தான்
சபையேறி ஞேளேயினிக் கவைகாரியமேன்,
வரிவிழி யபிகாயி லெரியும்கா பாலைச்சேர்ந்தாள்
மாகனிக் கிசைந்ததேவ மோகினிகானே.

2 சாமு. 11:3,4; எஸ். 2:16; சூசன்னள்சரி; 1 சாமு. 25:2டு.

8. அசனாத்துயோசேப்புக்கு நிசமாய்மனுசேயெப்பி
ராமையும் பெற்றுள் சிலைமயில் மேவின பஞ்சம்,
இசையாத தாமாரான அப்சலோமின் றங்கையாளை
யீடா யம்னேன்முறை கேடே செய்தா,
ஊசியா யூதித்தென்பாளும் விசையாய் வேஷம்போட்
டல்லோ
வோலப்பர் நேசர்தலை நீவிபோற்கொய்தாள்,
வசையாய்ச் சவுலின் மகள் திசைசேர் மிகாள் மலடி
மாகனிக் கிசைந்ததேவ மோகினிகானே.

1 மோ. 41:50; 2 சாமு. 13; யூதி. 13:7-9; 2 சாமு. 6:20.

9. நகமலேக்கோவின் மேலேயகமாய்நிதஞ் செலன்ஞன்
ஞானக் கிழவியென்றுலுங் கூனக்கிழவி,
யுகமை யெலிசப்பெத்துஞ் சுகமா யிஸ்நாதகனே
யூமையாஞ் சகரியாவுக் காமலோபெற்ருள்,
முகமலர் கன்னிமரி மகனேக்கா ணுதலேந்து
மூன்றுநாளாய்த் தேடியல்லோ தோன்றலாச்சு,
மகதலே மரியாளேச் செகதலந் தானறியு
மாகனிக் கிசைந்ததேவ மோகினிநானே.

லூக். 2:36-38; 1:18-20; 2:43-46; 8:2.

10. துடிப்பாயென்னுயகனே யெடுப்பாய்மரியாளன்று,
தோட்டக்கார னென்றதையான் கேட்டுச்சகித்தேன்,
படிப்பானபோதகர்சொற் ருெடுப்பாய் நின்றகேளாமற்
பாடுபட மர்த்தாள் வேலேக் கோடியேபோனுள்,
நடிப்பாய் கானுனிஸ்திரீ நொடிப்பாய்க் கர்த்தர்முன்றன்னே
நாய்க்குட்டி யென்றேயுளவ தாய்க்கட்டிச் சொன்னுள்,
மடிப்பாய் சமாரியப்பெண் பிடிப்பாயைவரை வைத்தாள்
மாகனிக் கிசைந்ததேவ மோகினிநானே.

யோவா. 20:15; லூக். 10:40,42; மாற். 7:25,29; யோவா. 4:16,18.

11. தக்கவிசருவேலென்பா ளக்கிரமக் காரியாகிச்,
சரிப்போனுப் போனடந்து சிரிப்பானுளே,
யொக்கவவள் தங்கையென்ற மிக்கயூதாவென்பாளு
முத்தமியோ பாகாலேச்சே வித்தல்லோபோனுள்,
பிக்கினி சலாமாளுெரு மக்கியான மார்க்கத்தாரும்
பேயின்கூட்டந் தானேயினி ஞாயங் கேட்பானேன்,
மைக்கனி வுறஞ்சுசையார் மெய்க்கனி மரியதாயார்
மாகனிக் கிசைந்ததேவ மோகினிநானே.

எசே. 23:4ு.

12. போலி சபையாள் நாசகி மூப்பாளென்றபொல்லாத
பாதகியின் செய்தியெல்லா மோதவசமோ,
நாப்பி மனுவைக்கெடுத் தேய்ப்புப் பிசாசுபோலே
நரக வழிதிறந்து விரியவைத்தாள், •
கோப்புக் குறித்துவிரு தாப்பொல்லாப் பாக்குவித்துக்
கூசாமற் பத்தாவைவிட்டு வேசியாய்ப்போனுள்,
மாப்பிள்ளேக் கெதிர்கொண்டாப்போற் போய்ப்பினுந்
திரும்பிவந்தாள்
மாகனிக் கிசைந்ததேவ மோகினிநானே.

வெண்ணிலாத் தரு

விருத்தம்

பூமிக்குச் சந்திரனென்று பொன்[1]னுக்கு நான்கு சந்திரன்,
சேமமாஞ் சனிக்கோ வெட்டு திங்களுக் காறு சந்திரன்,
நாமமா யூரானிஸ்க்கு நாலு நெப் தூனுக்கொன்று,
ஆழுபக் கிரகம்நாலா ருக்கினன் கடவுள்தானே.

1. சின்ன வெளிச்சமல் லோ வெண்ணிலாவே! நாற்
றினத்திலுண்டானாயல்லோ வெண்ணிலாவே!
தன்னொளியுனக்கில்லாததால் வெண்ணிலாவே! ஆதித்
தன்னொளியைக் கொண்டுயர்ந்தாய் வெண்ணிலாவே!
என்னமதிகொண்டெழுந்தாய் வெண்ணிலாவே! சாலே
மெருசலேம் வீதியிலே வெண்ணிலாவே!
கன்னியர்க்குள் நானொரு பெண் வெண்ணிலாவே! யெனைக்
காய்ந்து கொல்ல வேண்டாஞ் சொன்னேன் வெண்ணிலாவே!

2. திங்க ளென்ற பேர் கொண்ட தென் வெண்ணிலாவே! நீ
செவ்வாய்க்குப் பின்பிறந்ததும் வெண்ணிலாவே!
அங்கொரு நாட் சொப்பனத்தில் வெண்ணிலாவே! யோசேப்
படிவணங்கிக் கொண்டாயல்லோ வெண்ணிலாவே!
தங்க யோ சுவன் சண்டையில் வெண்ணிலாவே! யுனைச்
சூரியன் பின்னிற்கச் செய்தான் வெண்ணிலாவே!
மங்களச் சீயோன் குமாரி வெண்ணிலாவே!
வைதத விடந் தெரியாதோ வெண்ணிலாவே!

1 மோ. 1:16; யோசு. 10:12; ஆதி. 37:9.

3. சந்திரனென்று துள்ளாதே வெண்ணிலாவே! யென்
ருஸினுல் மிதிக்கச் செய்வேன் வெண்ணிலாவே!
இந்த உலக மயக்கை வெண்ணிலாவே! நீ
யென்று விட்டொழியப் போருய் வெண்ணிலாவே!
நந்திய களங்கமொன்று வெண்ணிலாவே! யுன்
னடு விலிருக்குதல்லோ வெண்ணிலாவே!
சிந்தை கருவங் கொண்டதால் வெண்ணிலாவே! நீ
தேய்ந்து குறைந்துபோனுய் வெண்ணிலாவே!

4. நாக்குச் சுட்டது போற் சுடும் வெண்ணிலாவே! நீ
நாட்குறிப்புக் கானுயல்லோ வெண்ணிலாவே!
தீக்குணத்தினுல் வளர்ந்து வெண்ணிலாவே!
தேய்பிறை யென்றே குறைந்தாய் வெண்ணிலாவே!

[1] பொன்—வியாழம்.

மாக்களின் னோக்கதித்து வெண்ணிலாவே! கடல்
வற்ற மேற்றத் துக் கேதாணுய் வெண்ணிலாவே!
மேக் குறும் வளர்பிறையில் வெண்ணிலாவே! வெட்டும்
வேய்களையு ளுத்தழித்தாய் வெண்ணிலாவே!

5. இஸ்திரி பதத்தில் வைத்த வெண்ணிலாவே! அவன்
இஸ்திரியைக் கும்பிடுவான் வெண்ணிலாவே!
வஸ்திரம் போற் பழசாய் வெண்ணிலாவே! அவன்
மார்க்கமும ழிந்து போகும் வெண்ணிலாவே!
விஸ்தரித் துரைக்க வென்றால் வெண்ணிலாவே! புவி
வேஷ முழுவதும் போம் வெண்ணிலாவே!
புஸ்தகத் திற் சொன்னபடி வெண்ணிலாவே! நீ
பூமியோ டழிந்து போவாய் வெண்ணிலாவே!

2 பேது. 3:10,11.

உபத்திர மென்ற தென்றல் தரு

விருத்தம்

மட்டு மிகு முபத்திரமே தென்றலென்ற படி கிறிஸ்து வருமுன்னேயுங்,
திட்டமுடன் வந்த பினு மிதுவரையு மினிமேலுந் தீர்வை நாளின்,
மட்டு முள்ள தெரிசி களப் போஸ்தலரை விசுவாச மார்க்கத்தாரை,
கெட்டழியச் செய்து மஞ் சோஞ் செயங் கொள்வோ மேசுவினுற் கெலிப் போம் நாமே.

1. தீர்க்க தெரி சிகளைத் துன்பஞ் செய்தனை தென்றலே! நீ
தீயினில் மூவரைப் போட்டுக் கொழுத்தினை தென்றலே!
பார்க்குள் தனி யேலைச் சிங்கக் கெபியினில் தென்றலே! நீ
பட்டுருளச்செய்துங் கெட்டழிந்தானோ சொல் தென்றலே!
மார்க் கெ ரேமி யாவைக் கேணியிற்றள்ளினை தென்றலே! அவன்
மாய்ந்து விடாது தற்காக்கப்பட்டானல்லோ தென்றலே!
போர்க்குளகப்பட்டயோசபாத்தன்றைக்குத் தென். அவன்
பொன்றிவிழாது தற்காக்கப்பட்டானல்லோ தென்றலே!

தானி. 3; 6:22; எரே. 38:6–12; 2 நாளா. 18:31.

2. கேணியில் யோசேப்பைப் போட்டது நீயல்லோ தென்றலே!
அருணன்,
கெட்டழியாதெகிப்பத்தினிற் சென்றதென் தென்றலே!
ஆணவங்கொண்டிசரேலின் பாலரைத் தென்றலே! நீ
யாற்றுத்தண்ணீரிலமிழ்த்திக் கொன்றுயல்லோ தென்றலே,
தோணும்படி பாவோன்செய்த பாதகந் தென்றலே மிகக்
கற்றியவனைக்கடலிற் றணித்ததே தென்றலே!
விண்ணில்மாய்ந்தவர் கோடியிற்கோடியே தென்றலே! நீ
மிக்க அப்போஸ்தலமாரையுங் கொன்றதுமே தென்றலே!

1 மோ. 37:24மு; 2 மோ. 1:22; 14:23-28.

பழைய ஆதாமென்றமன்மதத்தரு

விருத்தம்

அந்தா சொற்கம்பூமி யனைத்தையும் படைத்த நாதன்,
தந்திருச் சாயலாகத் தானிலை யாள வேண்டி,
விந்தையாயேதன் தோட்டவெளியினிற் கனிமண்ணாலே,
முந்தின ஆதாமென்ற முதல் மனுடனைச்செய்தானே.

1. சித்திரப்பூங் காவனத் தோடிருந்தாய் பழையாதமே! நீ,
தேவனோடொத்திருக்கநினைந்தாய் பழையாதமே!
மெத்தக் கருவங்கொண்டாயல்லவோ பழையாதமே. உன்
மேன்மையழிந்து விழுந்தனையே பழையாதமே!
எத்தனை பாக்கியத்தோடிருந்தாய் பழையாதமே! நீ
யெப்படித்தான் விழுந்தாயழிந்தாய் பழையாதமே!
சத்துருப்பேயை யுறவுசெய்தாய் பழையாதமே! ஆதி
சற்பத்தினாலவந்த துற்புத்தியோ பழையாதமே!

2. தேவருலாவிய சிங்காரமானபூங்காவிலே, நீ
சீவவிருட்சக்கனிபொசித்தாய் பழையாதமே!
மேவியுலாவிக்குலாவியநீ பழையாதமே! உன்
மேன்மையைப் போக்கடித் தாய் கெடுத்தாய் பழை.
சாவுங்கெடுதியும் வந்ததுவோ பழையாதமே! நீ
தப்புதற்கெங்கும் வழியில்லையே பழையாதமே!
பாவிகளின் பிணையாளியொன்றே பழையாதமே! அவர்
பாதத்தைத்தேடிக்கோ நாடிக்கோ நீ பழையாதமே!

3. துட்டப்பிசாசோடுறவு செய்தாய் பழையாதமே உன்
துற்குணம் நற்குணமாவதெப்போ பழையாதமே!
கெட்ட கொர்ச்சிக்கும்பே யொழிந்தான் பழையாதமே! இனிக்
கேடுவராது குணப்படுவாய் பழையாதமே!

பட்டப்பகலிலிருண்டிருண்டாய் பறையறாதபியே! அந்தப்
பாவத்தின்மையர்தன் வெளிப்படுதல் பறையறாதபியே
கட்டைச்சொருபங்களைச்செய்தவன் பறையறாதபியே அவன்
கட்டுண்டக்கினிக்கடலில் வீழ்வான் பறையறாதபியே

வெண்பா

பொங்காதே மெத்தப் புலையாதே வந்திட்டான்,
துங்கன் றவித்த துரைச்சாமி, செங்கை,
அடடா பறையறு சர்ப்பத் தோதிர விட்டு,
விடடா அதென சொற் படியே.

இராகம்: சுருட்டி

அடடா பறையறு சர்ப்பமே! சோதிவிட்டு
விடடா அதென சொற்படியே,

1. விடப்பெரியவனது முடியைத் தகர்த்துடைக்க,
வேதனிதல்லோவந்தான் வாதைப்படுவாய் போடா.

—அடடா

2. அன்று பான்சருபம் தின்றகருவிக்கனியோன்
டன்று சாங்கவிமுதாய், பின்னுஞ்
சென்றவிருக்கனி தின்ற செடிவதற்குத்
திடைமெவைக்கு மொழிந்தாய், அதற்கென்
றின்றுசிறின்துவந்த தொன்றுமுணராதே நீ
பிருடா பிருகண்கெட்ட, குருடா சண்டாள
திருடா மெத்தத் துன்னாதே, பொருடா புத்திசொல்கிறேன்.

—அடடா

3. மூர்த்தமதுமுடார்தலை கிள்ளைதப்படுத்தவேண்டி
மூடுங்கவனத்திலடுத்தா, யாதி
தாதவரக்களாயி மூர்த்துபோவதற்குச்
சதிசர்ப்பனைகள் தொடுத்தா, பிப்போ
எக்கைதப்பனைபழிக்க வந்ததறிவாய்ச் செ
பிடக்கும் பகத்தினிச்சை, கொடுக்குமக்கினியன்மையுத்
தொடுக்குமுனைதுடைய, துடிக்கும் பெண்டாடா செய்யும்.

—அடடா

4. அல்லும் பகலுமாகச் சவ்வியரிக்கிறுப்போ
ளிர்த்துமதியைக்கிறு, புவி
சொல்லும்படி சூலானைசத் தொல்லைசுமனதிற்
கொடுத்து மிகத்திகைக்கிறு, பின்று

வெல்லைப்பதியில்வந்த செல்லத்துரைமுன்னுந்தன்
மெனுக்குமொன்று மில்லாவின், பினுக்குங்குனுக்குமுடலனுக்கும் நெடியதலைத், துனுக்குமெங்கடாபோகும்.
—அடடா

5. சிங்கம்போல கெற்சித் தெங்குஞ் சுற்றித்திரிந்து
தீமைசெயத்தொடுக்கிருய், கன
பங்கமானசிற்றின் பங்கள் மிகவுங்காட்டிப்
பரம நன்மைதடுக்கிரு, யுன
தங்கம்பதறவென்ற துங்கன்றவிதெனக்குண்
டதத்துப்படபடத்துக், குதித்துத் துடிதுடித்து
மிதத்துக்கடுகடுத்து, மதத்துப்பேசாதேபோடா. —அடடா

6. மாட்டுக்குடிலிலேமே ஞட்டுத்துரை பிறந்துன்
கேட்டைத் தொலைத்துப்போட்டார், குற்றச்
சாட்டுகளை யினிமேற் கேட்டுப் புறக்கணித்தென்
றன்னைவிடவு மாட்டார், கவி
தீட்டும் வேதநாயகன்பாட்டும் பெருக்கமாச்சு
சேரடாவொருகைவந்து, பாரடாதவிதுவங்கிஷ
வேரடா வுனைவெற்றிகொண், டாரடா பத்திரஞ்சொன்னேன்.
—அடடா

பந்தடிக்குந் தரு

விருத்தம்

சூரியனைச் சந்திரனை யுடுக்களையங் தரத்திருத்தித் துலங்கச் செய்தோன்,—பாரியென நியமிக்கப் பட்டசியோன் குமரி மிகப் பரிவாய்த் தோன்றி,—வீரியமாய்க் கிரகங்க ளோட் டங்க ளிவையெல்லாம் வியந்தா னந்தச்,—சீரியைவாய் விளையாடிப் பந்தடித்தா ளவள்திறத்தைச் செப்பு வோமே.

தின திஞனத் தினதிஞனத் தினதிஞனத் தினதிஞ,
தென்ஞதெந்தினத் தென்ஞதெந்தினத் தென்ஞ
தெந்தின தினதிஞ.

1. இரவிபூமி பதிமூன்றிலட்சத் தெண்பதுடனு லாயிரத்,
தோற்றமானது நானூற்றறு பத்திரண்டதின்மேலதே,—
விரிமதிமகன் பதினைந்தொன்று வெள்ளியெட்டி லொன்பது,
மிக்கசந்திர ஞற்பத்திதொன்பதி லொன்றதறிவ
னேழொன்றே,—
உரியவந்தண ஞயிரத்திரு நூற்றேடெண்பத் தொன்றதே,
வுற்றசனிதொ ளாயித்தோ டொன்பதுபத் துடனைந்தே,—
பெரியதிங்க ளெண்பதோடரை பிசகிலாத கணக்கென,
பிரியசியோன் மகள்குலாவிப் பெலப்பதாகப்பந்தடிப்பளாம்.

2. இரவியோசமய சக்கரத்தி னாறுறுகோளிரு பத்தைந்தி,
செழுமணிவெட் டேவிஞாடி யிற்புதனை நியாதலே,—
விர்வெள்ளியிரு பத்துமூன்று மணிமூழிவேழ் விஞாடியே,
விடுலக்தாசிரு பத்துமூன்றெண் ணேழ்விஞாடி நாழிஞாடி,—
அரிபசந்திர னிருபத்தேழு நாளுடன்மணி யேழுமா,
பதின்ஞாடி நாற்பதுடன்மூன் றைந்துகோடியுமானதே,—
குருதியோவொரு தினமின்ஞாடி முப்பத்தொன்பது
கோடியுமே,
குறையிலாதிரு பத்திரண்டு நிறையிலாரு மதிபவே,—
அரசனென்பது மணிவிஞாடி ஐம்பத்தைந்துட னொடியுமே,
ஆறைந்துடனே மூன்றதாகும் அப்புறஞ்சனி மணிபத்தோ,
டொருவிப்பப்பதி னறுவிஞாடி யொருகோடியது மானதே,
உற்றவனோபம் பத்துமணிநா லெட்டுடனொடி பதினைந்தே,—
தெரிவுறுது சமசக்கரத்திற் றிங்களுருளுங் காலென,
திப்பசியோன் மகள்குலாவிச் சேர்ந்துநின்ற பர்
தடிப்பனாம்.

3. சக்கராபனைத் தொல்லொருமணி தனித்திரசுங்க ளடக்கிற,
தருதிநடையிற்கி விசுநாழிகை செனயிபனா ருயிர,—
பிக்கபதிரெ ராயிரத்திரு நூற்றேடைம்பத் தாறதாம்,
வெள்ளிபெண்பத் தோராயிரமுன் னூற்றுத்தொன்னூற்
றெட்டதே,—
இக்கட்டூவெழு பத்தையாயிரத் திருநூற்றேழிரு பத்திரண்,
டெழின்மதிரண் டாயிரத்துமுன் னூற்றுமுப்பத் தைந்ததே,
தக்கிசேவைபம் பத்தாறுயிரஞ் சதம்ரண்டுடனே பனிரண்டு,
தாராபதியு முப்பதாயிர முன்னூற்றைம்பத் தெட்டதாம்,—
சொக்குசனியிரு பத்திராயிர முன்னூற்றைம்பத்
தொன்றுமாக்,
தோற்றும்வனைய மப்படிக்கொள சோதியாகிய திக்களோ,—
முக்கிபப்பதி னையாயிரத்தெண் ணூற்றுநாற்பத்தாறென,
முதல்விசியோன் குமரிபாடி முடுசெகின்றபர் தடிப்பனாம்.

4. சக்கரவோட்டக் காலவிரசை தபனனைச் சுற்றிச்,
சாமனென்பத் தேழுநாள்மணி யிருபத்துமூன்றேவிஞ,—
டிக்கிரேழு கொடிமுப்பான்முன் றேவள்ளியிரு நூற்றறு,
வெட்டுநாளி ரெட்டுமணியோ டெண்ணைத் தொன்ற
விஞாடியும்,—
மக்கனொடியு மிருபத்தேழு மாகிலமொரு வருடமும்,
மறுத்தைந்துமணி நாற்பத்தெட்டு விஞாடிகோடியுமானதே,—
மிக்கசந்திர னிருபத்தேழு நாளுமணியு மேழுமாய்,
விஞாடிநான்கு பத்துமூன்று வெறுகோடியுமைத் தானதே,

வக்கிரனொரு வருடமூன் னூற் றிருபத்தொருதி வாவுமாய்,
மணியிருபத் தோடிருவி னடியுமறு மூன்றின்மேல்,
தொக்குநொடியிரு பத்தேழானது சுரகுருபதி னொருசமை,
தோற்றும்நாள்மூந் நூற்றுப்பதினேந் தேற்றமேழிரு மணியு
மாய்,
தக்கவினடி முப்பத்தொன்பது தருமிருநொடி 'சனியுந்தான்,
சாற்றவருட மிருபத்தொன்பது நூற்றறுபது சதுத்தினம்,
ஒக்குமணியோ சேழ்மூவேழ்வி னடியும்நொடி யைம்பதே,
யுற்றசனியின் வளையமப்படி யோங்கிய திங்க ளோவெனில்,
பிக்கில்லாத வற்சாமெண் பத்துமூன்று நாளுமே,
பெருகியவிரு நூற்றீரேழு மணியோரெட்டு வினடியும்,
பக்கிசைமாக முப்பத்தொன்ப தெனப்பரமசீ யோன்மகள்.
பாங்குடன்மகிழ்ந் தோங்கியோங்கி பணிந்துநின்றுபக் தடிப்
பளாம்.

5. மத்திபதூர மிரவியிலிருந் திங்கிலீ சுமயில்,
மாலவனொரு மூன்றுகோடியே யறுபத்தொன்பது
லட்சத்தோ,
டித்தொகையெழு பத்துமூவாயிரத் திருநூற்றூடேன்
பத்திரண்,
டெரிவெள்ளியறு கோடிதொண்ணூறு லட்சத்தெண்பத்
தெண்ணாயிரத்,
தொத்துமையிரு நூற்றுநாற்ப துலகமொன்பது கோடியைம்,
பத்தைந்திலட்சம் பதிமூவாயிரத் தெழுநூற்றுத்தொண்
ணூற்றுநா,
லத்தகைசந்திர னெனக்கொள்கச்செவ் வாய்பதினலு
கோடியே,
யைம்பத்தைந்துலட்ச முப்பத்துமூவா யிரத்தறுநூற் றறு
பத்தேழ்,
சுத்தவியாழம் நாற்பத்தொன்பது கோடியோடறு பத்தேழு,
தொகைலட்சமறு பத்தையாயிரத்திரு நூற்றெண்பத்
தொன்றதே,
பத்துச்சனிதொண் ணூற்றொருகோடி யேபதினொரு லட்சம்,
பாங்கினாற்பத் தோராயிரத்துட னூற்றுநாற்பத்திரண்,
டத்தகைசனி வளையந்திங்கணூற் றெண்பத்திரண்டு கோடிஐ,
யைந்துலட்சத் தெழுபத்தையாயிரத்திரு நூற்றிருபத் தெட்
டென,
வித்தகச்சீயோன் மகளகாய விரிவினந்தா வெளியிலே,
விளங்கியபர மண்டலங்களை வியந்துநின்றுபக் தடிப்பளாம்.

5. சூரியனிட்ட பெட்டிலட்சத் தெண்பத்தாறு பிரமயிலே,
சொச்சம்பாதுத் தொழுபத்தினூன் றச்சமயிலே பதிலே,
கரியபுதன் மூவாயிரத்து நாற்பெருன்பதுபைத் தொருமயில்,
கோவிவெள்ளிப் பூவாயிரத்தறு நாற்றாழுப்பதாருறையில,
பாரதேபூ பிரத்தொன்பது நாற் றைம்பத்திரு வம்புலி,
பரிவதாயிரன் டாயிரத்தொரு நாற்றெழுபதோ டிருமயில்,
நாரிவக்கிர ஐயாயிரத்து நாற்றாழுப்பத் தைமயில்,
நாங்காசமென்ன பத்தாறுயிரம் கான்றுபடா றுறபேத,
காரிமெழுபத் தொன்பதாயிரம் காறூற்றைந்து கழியமில்,
கனத்தலைமபம் லட்சத்தெண்பத் தையாயிரத்தோ டிரு
சதம்,
சோமவென்பது திங்கள்முப்பது காலையிரா றூற்றைம்பத்,
தெய்வமனச்சி போன்றிருமகன் பிறந்து இன்றைக் தடைப்
பனாம்.

குறவஞ்சி தோற்றம்

விருத்தம்

புத்திரனை வெருவருட பிறந்தவக்கோர் ஆசைபெறிர்
புருத்தக்கண்டு,—சித்தபதி தைத்தனைபாய் மகிழ்தலனே
அ [illegible] சிபோன்மாது,—என்றிடறும் வேனோப்பே
பணிக்கடை மாத்திரைக்கோல் கையில்வாங்கிச்,—சத்த
ம் [illegible] சத்தியசபைப் பெத்தலேம் குறவஞ்சி தோன்றினளே.

அகவல்

1. சிந்து

1. பொன்னகர்க்கிறைவன் புனிதன்பேரசை
மன்னரும்பார்போன் வைப்பில்[1] வாய்மையதாய்

2. அதுப்பிடின்றிசார[2] வேலை படைத்து
வளப்புறத்திபல்பாய் படத்துடன் கடத்தி

3. (முடிரு) அண்டபுவனக்கரு மடக்கதும் விளக்கமுற
மொண்டிகைசயிதுமபர வென்றியுறழுக்கவொழு

4. மேகமதிலேபெரிய மென்மைமெலிவாக
மாகதிசைதுதர்வின பாதமகிழ்வாக

[1] வைப்பு—இடம் [2] இபம்—வாசியல்

5. ஆகமமிழும்படிய னேகடனஞ்செய்
தேகமணமொன்றியெழி லாகவுமிறைஞ்ச

6. அதிகச்செயலுற் றருபத்துருவிற்
கதிபற்றியமெய்க் கருணைக்கடலொப்

7. பெதிரற்றிணையற் றிகலற்றிடாற்
றுதிரப்பொறியத் றுடலற்றுணைபெற்

8. றறிவுக்கறிவா யமலர்க்காசா
யுறவுக்குறவா யுலகுக்கொளியாய்

9. லிங்கைதவனமதிர விண்டுளொலிகுமுற
வந்தநார்பதற வஞ்சர்நெறிசிதற

10. வானத்தளவாயக்கினி மேவிப்படர்வாக
ஈனத்தனுகாவுக்கிர நீதத்திறையோனும்

11. அல்லற்படுகா வையப்படுகா
வெல்லப்படுகா வெல்லைப்பதியோர்

12. விண்ணுலகிடையே மின்னியசுரரு
மண்ணுலகிடையே மன்னியநரரும்

13. எடுத்துக்காத்தைக் குவித்திட்டிணக்கத்
தடுததுப்பதத்தைப் படித்தர்ச்சயித்துச்

14. செபத்தைச்செபத்தைச் செபித்துச்செபித்துப்
பவத்தைப்பவத்தைப் பழித்துப்பழித்து

15. தவத்தினிலையொடு சகத்திலொழுகிட
நவத்தினருண்மறை நயத்தினலமிகு

16. பததுக்கற்பனை யற்றைப்பற்றிய
சுத்தத்தற்பர சொற்கப்பொற்படர்

17. அற்புதமகிமை யானிறைவான
செப்புதற்கரிய சீனாமலையான்.

2 மோ. 19:16–19; 20 அதி.மி.

2. ஆறு

18. சகரியாவரத்திற் றரணியிற்றோன்றி
அகமெலாமகற்றி யறத்துருவாக

19. (முடுகு) ஒட்டகத்துவக்கு[1]டுத்தி யொக்கடப்பிரசத்தைநற்றி
யட்டதிக்கின்மெய்க்கமிக்க அற்புதற்கிடத்தடத்தை

---

[1] துவக்கு—தோல்.

20. ஒப்பமிட்டிசைத்திணக்கி யுத்தமத்துயர்த்திபெற்ற
செப்பமிட்டிடத்தலைத்தி றத்தி லற்றகத்தைவெற்றி

21. யிட்டிதத்தையிட்ட றத்தை யிட்டுமெச்சியிட்டவத்தை
விட்டகத்தைவிட்டிணத்தை விட்டனைத்தும்விட்டுவிட்டு

22. வந்தவனைத்தனி னின் அமலிழ்ந்தரை
தந்துநெருக்கி யடைத்தசனங்களை

23. யுந்தவமுப்புரி யுஞ்செபமும்புரி
யுந்திரமென்றணர் வஞ்சொலியும்பினை

24. அழைத்தனைத் தகத்தழுக்கறுத்த சட்டிருட்டுடைத்
துழைத்திதத்துறச் சலத்தினைத்தெளித் துயர்ச்சிரத்

25. தினைப்புனற்படப்பிடித்திழுத்தமிழ்த்தியற்புகற்
பினைப்படிக்கருட்செபத்தினைப்பெலப்படப்படித்

26. தானமுறையா லரியமெஞ்ஞான
ஸ்நானமதளித்தபோர் தானுமாகதியான்.

ஞாக். 3:3 ழ்.

3. நாடு

27. அன்னையருடனே யரியசிடர்களு
முன்னிவந்தெழுந்தல் குயர்கலியாணப்

28. (முடுகு) பந்தலிலடர்ந்த பரிவின்படிபயன்செப்
விருந்தைகணிறைந்தணி விதங்களுமிருந்த

29. தந்திரமுடன்சருவ மும்புரிவிஞேத
சுந்தரம்விளங்கிய கபங்கள்சொலொலுத

30. அனந்தமகிமைக ளணிந்துமடியவர்
நினைந்தபடிசெய நிறைந்தசபையிடை

31. விழுந்தகரர்வினை விடங்கள்கெடவல
கெழுந்தபொருளவ னெழுந்திருபையின்

32. அறிவுடனுதகமோ ரறுதிரிகுடமது
நிறைபடவருகையி னிமிஷமதுபர்மது

33. ரசமதில்ருசிதரு ரசமென அபிகவம்
வசமதிலருளிய மகிழ்பலபலனுள

34. வானோர்கள்மேவும் வளமெலாநிறைந்த
கானுனுவென்னுங் கலிலெயநாடான்.

யோ. 2:2-11.

4. நகர்

35. மட்டில்லாஞான வரத்தினானிறைந்த
அட்டமெய்க்குணத்தா னாலயந்தனிலே

36. (முடுகு) நீதியினாகம நேர்மைகளாகிய
போதகமேசொலு போதினிலேபல

37. பாதகர்கூடியு மேபரிகாசம
தோதியுமானிட னாமிவனோதுவ

38. தேதிதுஞானம தேதறிவேதுரை
யேதுயர்வேதரு ளேதறியோமிது

39. பாதகமாமட டாபழியோபடு
சாதனையோஅறி யோமயயோசரு

40. வீசுரனாமென வேயிவன்வீறொடு
பேசுவதேதிவ னோவினையாளனின்

41. நேயமதாமக னேநீசமாமிவ
னாயியுமேமரி யாளலவோவென

42. இன்மைசேர்தீயோ ரிகழினுந்தேவ
நன்மைசேர்நாச ரேத்தெனுநகரான்.

லூக். 4:29,30.

5. யானை

43. பன்னிருசிடர் பரிவுடன் சூழக்
கன்னிமாமரியாள் கருணையின்புதல்வன்

44. (முடுகு) விஞ்சையர்வரைந்தபடி மிஞ்சியவிதங்களுட
னெஞ்சினில்மகிழ்ந்துபல வஞ்சியர்நிறைந்தடிகள்

45. அஞ்சலிகளுஞ்செய அனந்தகரான்பினொடு
தஞ்சமெனவுஞ்சொலியி றைஞ்சஇளைஞோர்களவை

46. வந்தனமணிந்துதிரு மங்களபதங்கள்புகழ்
சிந்தைகள்விரிந்தமுத செஞ்சொல்கவிசைந்தபடி

47. பம்பைகள் முழங்கவுயர் பங்கையமுகங்களுள
கும்பமுலைமங்கையர்க தம்பமதுகொண்டணுக

48. விருட்சக்கிளைபல தறித்துத்தடமிசை
திருத்திச்செயலொடு தெளித்துப்புடவைகள்

49. விரித்துத்துதிமிகு விருப்பத்தருளுவர்
குருத்துக்களையிரு கரத்திற்குணமொடு

50. பிடித்துப்பாவருள் பெயத்துக்கதமென்ன
கடித்தத்திரவ்வதுகலத்திற்கதிதரும்

51. தூசுமென்றே புதைத்திடப்படுவளி
பேசாயகரு பெருசவிக்கெழுந்த

52. மோகனவேத மொழிப்படிக்க
வாகனமென்ற வழியருஞ்சாத்தான்.

மத். 20:29-9.

6. குதிரை

53. பாத்தினிலாதி பராபரன்வையாய்
வாத்தினின்ஞான மழுமக்ளுனென்

54. பத்தாடர்க்கும் பத்திவளர்க்கும்
அத்திடமென்றாகு சுற்றிவளைத்தாகு

55. சத்துருவழுசகு சற்பனைபலகள்
தத்திடகண்டர் தட்டிமெழுந்தாகு

56. சாட்டிடைக்காகு சாத்திரமின்றேகு
குட்டிசெதாடர்க்கும் காட்டிசெரிக்கும்

57. பாத்திடனைக்கம் பாக்கிபுதைக்கள்
செற்றார்விண்டம் பூர்த்திசெறிக்காக்

58. கடலினைக்தாக் கண்டும்பின்பும்
படவிப்பின்மத்திரர் தக்துப்புகைக்

59. கனமொடுசொண்டுக் கருசக்கெபாக்குஞ்
சினமருதெண்டறு சிக்குண்டருசாய

60. காரணமைந்தன் நன்படைசக
கானவிஸைக்தக் கொலிக்குத்தின்
சாணிபுருசக் கித்திட்டரு
சிடப்பர்க்குரு செவிக்கயமின்

61. தானவருந்தக் கஞுக்கெட்டிற
தான புழுக்குறு சமத்துக்கு
தேனமுதகுசின் திடச்செறுறம்
தேனவனமுசென் றிருப்புற்றுக்

62. தினைத்தானைத் திறத்திமெழுந்து
மின்னிற்பொய்ப்ரு மேகவெயரியாள்.

அப். 1:9.

7. கோடி

63. நீதுறும்காகத் தீயிலிற்கிடக்கும்
பாதகவலகை பயந்துதக்கனித்துப்

64. (முடுகு) பங்கங்கம்பஞ்சங் கஞ்சம்புஞ்சங்கொண்டங்
கங்கந்தென்பென்றண்டுக்கஞ்சஞ்சண்டங்குண்டங்

65. தொந்தம்பந்தந்துன்பந்தந்துஞ்சொந்தங்கண்டுந்
திந்துந்துந்திண்டுண்டுண்டுண்டென்றுஞ்சென்றும்

66. பூமேலேயேபோக்காயேச்சேபோட்டாய்சீச்சீ
ஆமாபேயேஆச்சாதுத்தூமூர்க்காதீட்பா

67. ஓகோபோறேனெட்டாய்தாத்தாபாட்டாலோட்டா,
ஆகாஈஈஆத்தேமாட்டேன்மூட்டாய்கூக்கூ

68. என்றுபேயலற ஏகமாய்க்கிறிஸ்தோர்
வென்றிசேர் சிலுவை விருதெனுங்கொடியான்.

8. மாலை

69. மோட்சவாசிகளு முனிவர்தானவருங்
காட்சிகாலாறு கதியின்மூப்பர்களுந்

70. (முடுகு) தேர்ந்தநெஞ்சப் பாங்குமிஞ்சித்
தீண்டுதுன்ப தீங்கைநீங்கித்
தார்ந்தபுந்திக் கோர்ந்தபண்புற்
றுய்ந்தவின்பத் தோங்கிநின்றிட்

71. டாண்டவர்க்குத் தாங்கலற்றேப்
பாம்படிக்குச் சாந்தகத்தைப்
பூண்டருட்சொற் பூண்டறத்தைப்
பூண்டுரத்தைப் பூண்டிதத்திற்

72. சூழ்ந்துபதத்தைக் கூர்ந்துமனத்துற
சோம்பலறுத்திட் டோங்கியுரைத்து
தாழ்ந்தடியுக்குட் சார்ந்துலகத்தைத்
தாண்டிவெளிப்பட் டுன்றிநிலைத்துப்

73. பரிசுத்தர்பரிசுத்தர் பரிசுத்தரெனமெச்சி
யருமைக்குளுயர்முக்கிய அருள்வைத்ததெருளுற்ற

74. மகிமைப்பொருளுனக்கு வலிமைப்பெலன்மகத்துவ,
மிகநித்தியமளவுக்கும் விளையக்கடனெனச்சொற்

75. சாத்திரமாகச் சகலரும்போற்றுந்
தோத்திரஞானச் சுபசெபமாலையான்.

76. [illegible]
[illegible]

77. [illegible]
[illegible]

78. [illegible]
[illegible]

79. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

80. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

81. [illegible]
[illegible]

82. [illegible]
[illegible]

83. [illegible]
[illegible]

84. [illegible]
[illegible]

85. [illegible]
[illegible]

86. [illegible]
[illegible]

87. [illegible]
[illegible]

88. [illegible]
[illegible]

[illegible]

89. டேற்றியகல்லோர்க் கெழில்பாகதிதந்
தாற்றுவாரென்றே யனைவருமறிய

90. டண்டம்டண்டம்டமடமடமடமடண்டண்டண்டண்,
டிண்டிம்டண்டிம்டிமடிமடிமடிம டிண்டிண்டிண்

91. திந்திந்திந்திந்திண்டுண்டுண்டுண்சிஞ்சிஞ்சிஞ்சிஞ்
துந்துங்கிங்கிந் துந்தும்பும்பும்பும்புங்கின்கென்

92. றேழுதூதர்கடா னெழுந்துபூவுலகைச்
சூழவேவானிற் றொனிக்குமேழ்முரசான்,

லூக். 24:31.

10. செங்கோல்

93. பரத்திலும்புவியிலும்பாதலத்திலு
மிருத்தியபொருளெலாமிசைந்தெந்நேரமுங்

94. (முடுகு.) காமெடுத்துத் தலைக்குவித்துக்
கழல்மடக்கிக் கருதிவித்தத்
தூரமிகுத்துப் பயமதுற்றிட்
டொருமைவைத்துத் தினமடுத்துச்

95. சகலவஸ்தைப் பரிசனித்துத்
தயவளித்துக் கிருபையுக்குட்
புகழ்நடத்திப் புதுமையிட்டுப்
புலவருக்குப் பலன்மிகுத்துத்

96. தருமகத்துவ முளதிரித்துவ
சருவசத்துரு வினைகெடுத்துயர்
பரமதற்பர னெனவொலித்தடி
முழுமனத்தொடு பணியநித்திய

97. பெலனுயர்த்திய வரமளித்திடு
பெருமையுற்றெழு பொருளுனக்கெதி
ரிலையெனச்சொல வெளியொளிக்கிடை
யெவருமெட்டவு மரியநற்புறம்

98. அறிவுடனின்றுங் கனம்பற்றும்
பெருக்கங்கொண் டிருப்பாகிய
திறமுடனன்பின் பலன்பட்சஞ்
சகத்தின்பஞ் செபத்தால்வளர்

99. சுரர்களினெஞ்சம் பணிந்தெச்சம்
படைத்தங்கஞ் சுபத்தாலையு
முரம்துமிஞ்சுந் தலச்சுத்தங்
கனத்துங்கம் புதைத்தோதிய

100. திசைபலசர்தம் பயன்கற்றும்
புகழ்ப்புங்கஞ் செயற்றுவிபும்
விசைமணிகொண்டும் பதங்கட்டும்
கவிச்சித்தும் படித்தேதமிரு

101. அருவிமுழங்குங் கனப்பக்கத்
தொணிக்குஞ்சங் கெதத்தாவருள்
பெருகுமனங்கொண் டனர்தஞ்சிக்
கனைக்குஞ்சஞ் சரித்தேதபிணும்

102. அருமைபிலாசச்செய் பெலமுனபொருளுன
தன்பின் படிமேவிய
வாமனைதகவமுட னைடயவுபடியர் முன்
வந்துந்தபவாபினம்

103. உரிமைசெபுறவுசெ புரயிடுதிறமரு
ளுர்தன்கழ லேகதி
கருணைகளுதவிபு மனுதினமுனதிரு
கண்கொண் டருளாயென

104. மன்றுளோர்விண்ணோர்புற்றுலகோருக்
கின்னமாப்ப்போற்றச்செலுத்துமாணைபினுன்.

பெத்தலேகேம் வளம்

105. செகித்தெவ்வுயிர்க்கும் நிறைக்திரட்சிக்கு
மேசக்கிறிஸ்தென் றிசைக்தநாயத்தான்

106. ஆதிசெப்பாவ மகற்றுதற்காக
மாதேனுங்கன்னி மரிவயிற்றுதித்துக்

107. காட்டகத்தினிலே கன்குல்குழிராவில்
மாட்டகத்தினிலே மதலையாய்ப்பிறக்க

108. (முடுகு) மாகத்தினிலேழுக்கிய வானத்திரள்கூடி
வேகத்துடனே சத்திய வேதத்தியல்சீடு

109. தானத்தொனிசேதத்திசை சாபற்றிறமாக
மேளப்பலவிணைப்படி மேவிப்புகழ்பாடி

110. ஆதிவந்தனர் சோதிவந்தனர்
அமலர்வந்தனர் விமலர்வந்தனர்
நீதிதந்தனர் வேதபர்தனர்
நிறைபுகன்றனர் குறைவகன்றனர்

111. எவருமனவிட வரிபபொருளிவர்
கவலைபறவரு கருணைபுருஷிவர்

112. இளமுமிவருட னிருடையதினர்
களமதுறுகள பிரியமுறுவர்கள்

113. கடவுள்பணிமைகள் கதியின்னிதமொடு
படருமுலவிடை பாவுமெனவவர்

114. இசைப்பொற்புத் திசைப்பக்கத்
திணைக்கோட்பிக் குயிற்பற்றி[1]த்
தலைப்புத்திப் புகழ்ச்செப்பிச்
செலக்கட்ட[2]த் தடத்திப்பர்[3]க்

115. கெதிர்ப்பட்டற் புதத்தைச்சொற்
சார்க்கசத் திசைப்பட்டுக்
கதிர்க்கொட்டுட் பிறப்பட்டுக்
கழற்கட்டைக் கருத்துற்றுத்

116. தோத்திரமேசெய் நேத்தியதாகவே
சாத்திரிமார்களும் வாழ்த்தியவாய்மைகள்

117. மெத்தமிருத்த விகற்பின்மகத்துவ
மெத்திசையுக்கு ளெதிர்ப்பிணையற்றெழு

118. பெத்தலகத்தருள் பெற்றவாத்திணை
நித்தியமட்டு நிகழ்த்திவிதிக்கினும்

119. வதொருவாறுமுடி யாததனிலேயினிய
மாதமிறைவானதிரி மாரியதுதூயவெழு

120. பாதைபிருபானுமிரை சாரிகனிலேபடர்கொள்
கேதவர்னமோபெரிய சேதர்வனமோ அரிய

121. சாலையழகோவுரிய தாரினழகோநெடிய
சோலையழகோபயில்செய் தோகையழகோசெரியு

122. மாதளையோடேகமுகு மாமரமுநேர்பலவு
தாதகி[4]விளாவிலவு சாதிவிபரீதமிகு

123. சந்தனவனங்களணிதங்கியபெரும்பனைகள்
நந்தவனமும்பலவி தங்களுநயந்திலகு

124. வன்னிமரமேயரசு புன்னைமரமேதிகழு
தென்னமரமோவயல்கள் சென்னல்விளைவோவதிக

125. பன்னிருமதிப்பருவ முன்னியவிருட்சமது
பன்னிருவிதக்கனிகள் நன்னயமளித்துதவ

---

[1] குயிற்பற்றி—சொல்லி.
[2] கட்டம்—காடு.
[3] இப்பர்—இடையர்.
[4] தாதகி—ஆத்திமரம்.

126. வாழைசண்பகம் வான்முருங்கைகள்
தாழைகுருக்கும் தேருமொன்னைநகள்

127. தெங்குகொங்கு தேக்குசத்து
வெங்கைகமுகில் வேம்புபோத்து

128. மஞ்சளிஞ்சிகள் கரும்பு வல்லமிஞ்சகிஞ்சககக
ளுஞ்சிறந்தமண்டபங்க ளுத்திரண்டமத்திரங்க

129. ளுக்குளங்களுக்தவங்களுக்திரங்களும் பெலன்க,
ளெக்கணங்களுக்தனங்களும்பயன்களுங்கொளுத்தின்

130. வாளுப்பதிபேலியவானவர் தேளுப்புகழோதிய பெடுதாமு
காளுப்பதி பூமியர்வாகிய பேளுப்புரிதானென வேவனர்.

குறவஞ்சி வளம்

131. பெத்தலேமரசன் பெருமையை வாழ்த்திச்
சத்தியவேத சாஸ்திரப்படிக்கு

132. வெண்டுகிலுடுத்து விண்பணி தரித்து
மண்டலமதிக்க மாமணியிலங்கும்

133. சரிகுழல் முடித்துத் தொங்கலுந் தூக்கி
விரிகதிர்ப்பிறையும் விதத்துடன் சூட்டிப்

134. பட்டமுங் கட்டிப் பச்சையுங் குத்தி
வட்டசுற்றிலத மத்தகத்திட்டுப்

135. பவளவன்னப் பாசியுமணிந்து
இலகுபொற்கச்சை யெழின்முலைக்கிசைத்து

136. ஆலவேல்விழிகட் கஞ்சனந் தீட்டிச்
சாலவேலைமிற் சரிவளைதரித்துத்

137. தந்தம் விட்டிழைத்த தற்சிசின் ரத்தினத்தின்
கொந்தளவோலை குழையினிற் கட்டிச்

138. சங்குபாசிகளுந் தனிக்குன்றி வடமும்
புங்கவெண்முத்தும் பொலிவுறப்பூண்டு

139. சாத்திரக்கூடையுங் கக்கத்திலிடுக்கி
மாத்திரைக்கோலும் வலக்கையிற் பிடித்து

140. மங்கையர்க்கரசோ மாசிலாவொளியோ
திங்கள் செங்கதிரோ தெய்வாக்கினியோ

141. என்றதிசயிக்க எவர்க்கு நற்குறிகள்
சென்று தான்பகரத் திறமுடனெழுந்து

142. (முடுகு) ஆரணமங்களகீதமுழங்கிட பாவருமன் புறவே
காரணமென்றறி ஞானம்விளங்கிய காமுகருந் தொழவே

143. அன்புசொரிந்துதவுந்தயவின்படி யண்டமடங்கலுமே
துன்பமகன்றிழிவுந் தவறுண்டு சுபங்கள் துலங்கிடவே

144. அதிசயமிஞ்சியும் கடனமிடும்பல அருமைபெறுங்கனிமார்
சதிரொடு கொஞ்சியுமிருபுறமும் புடைதாவுநடந்துபர்வாய்

145. தகதகெனமணிநகைகள் தளதளெனமுகவடிவு
தருதிகெனவரி விழிகள் திடுதிடென நடையிலைசகள்

146. அன்னநிகரேநடைகளண்ணல்நெறிபேயுடைக
ளின்னவினிதோவிடைக ளென்ன நிலேயோ துடைகள்

147. தீர்க்கமுறவேபரமசேர்க்கையுடனேசபையி
லார்க்குமருளேயுதவ ஆக்கமுடனேமுடுகி

148. மூப்புமொழியேபகரு மூர்க்கமுளபேயுட
பொய்மதமோடலகை பாச்சமதம்பாவுமற

149. மதிசேர்சத்திய மறையே பற்றிய
விதியாலுத்தம விசுவாசப்பெயர்

150. அஞ்சுகுறியின்சருவ விஞ்சையனைநெஞ்சிலித
மஞ்சியுமிறைஞ்சுகுற வஞ்சியிதோ வந்தனளே.

சிங்கிவரவுச் சிந்து

விருத்தம்

திருமதியை யகத்துணிந்து சிறுமதியைப் பதத்தணிந்த
சியோன்மாதுக்,—
கருமதியாங் குறிகள்பகர்ந் தருளும்
வெகு மதிபெறவென் றுவலாகப்,—பெருமதிசேர் விச
வாசக்குறவஞ்சி யெனு மேன்மைப் பெயர்கொண்டோங்கி,
வருமதி பொற் பெத்தலே மலேதங்கி நிறையணங்கி
னளினசிங்கி மிகமுழங்கி வருகின்றுளே.

சிங்கி வந்தனளே—விசுவாசச்
சிங்கி வந்தனளே

1. சிங்கி யருளனல் பொங்கி வடிவதி
லங்கி யறிவுது லங்கி நெறி மறை
தங்கிய யனேவணங்கி மொழிகள் தொ
டங்கி யெவருமிணங்கு குறி சொல. —சிங்கி

2. தொல்லை வினை பல அல்ல லிருளற
மல்ல லென வளர் புல்லர் கதிபெற
முல்லை நிலமுயர் புல்லணை யில்வரு
மெல்லை பொருவரு மில்லை யெனவளர்

துல்லிப மதுரபர் வல்ல பரமனி
னல்ல சரண் மன தில்லி லுறவொரு
செல்வி மகளிடை செல்ல மொடு குறி
சொல்லி யருள் பெற வெல்லை மலைக் குற —சிந்தி

3. ஆதி முதலில ஜோதி யருளிய
போத மதியுள வேத மறை தரு
நீதி நெறி தவ ரூது கரர் புரி
பேத மிகு பல தீத தகவிட
மாதர் பலரழு பூத செருசலை
வீதி தனில் மிகு பாதை யுடன் வரு
சோதி யடியிணை காதலொடு தொழு
தோதி பவையிடை சாதி முறை கொடு —சிந்தி

4. மாக மிசையடர் மேகமதனில் வி
வேக முடனதி வேகமொடு முழு
லோக மதிரவு போக மெழுவரு
யூக மிடுதிர் பேக முதல்வனை
பாகமுயிர் கொடு தாக மொடுசொலி
மூகமுட னதிமோக முடன் வளர்
நாக ரீக முள தேகமொளி விடு
போக முதவுபெத் லேக மலைக்குற —சிந்தி

5. புத்தி மனத்தி பலத்தைய கற்றி
புத்தி நலத்தி வரத்தி விரத்தி
பத்தி பதற்ற செபத்தி தவத்தி
பரத்தி யுரத்தி நபத்தி நியத்தி
முத்தி மனத்தி குணத்தி கணத்தி
முகத்தி சகத்தி அறத்தி திறத்தி
நித்தி சமத்தி மதத்தி கிதத்தி
நிறத்தி குறத்தி குறத்தி நினைத்த குறிசொல —சிந்தி

6. பஞ்ச வினைபடு நெஞ்சி நினைவொடு
கொஞ்ச பொருமைகள் மிஞ்சி பெருமெழு
கஞ்ச மலையிடை தஞ்சம் வினைமக
னின் சதிகள்கெட வஞ்செய் தலையிடை

மஞ்சுதி கழ்பா னஞ்சு குறியினை
நெஞ்சி னினைவுட னஞ்சலிகள் செய்து
செஞ்சொன் மொழியப ரஞ்சி வெல்லமலே
வஞ்சி யருள்குற வஞ்சி யெனுநல —சிங்கி

சிங்கி நடனச் சிந்து

கலிப்பா

வானோர்கள் போற்றவளர் மானவர் பெத்லேகர் வெற்பில்
ஞானு கான் சலமோ னுட்டுனத கீதமதி,
லேனே இளையவளுக் கின்னமில்லைக் கொங்கையென்று,
ஞனுக்கால் மூத்தவளுக் கானதன மெவ்வளவோ.

உன். 8:8.

துய்யகுற வஞ்சிமின்வந்தாள், பெத்லேகமலைத்
துய்யகுற வஞ்சிமின்வந்தாள்.

1. துய்யகுறவஞ்சிவந்தா ளையனேசுநாதர்மீது
மையல்கொள்சீ யோன்மகட்குச் செய்யநற்குறிகள் சொல்ல.
—துய்ய.

2. நீதியினுடையதணிந்து, ஞானுபரண
வேதசெப மாலைபுனைந்து, மெஞ்ஞானமுட
னுதியம லணைப்பணிந்து, சத்தியமறை
யோதுநெறி யாலைதுணிந்து, வெகுவிதமாய்க்
காதினிற்பணிகளிட்டுக், கர்த்தனின் சபைக்குட்பட்டுச்
சாதியின்மதத்தைவிட்டுச், சற்குருபதத்தைத்தொட்டுத்
—துய்ய.

3. வெள்ளைநிலைத் துகில்துலங்க, ஈராறுவிதத்
தெள்ளரிய மணியிலங்கக், கிறிஸ்தாசன்
வள்ளல்மண மாலைகுலுங்கப், பொல்லாதவரின்
கள்ளஇரு தயங்கலங்கத், குறிகள்கண்டு
பிள்ளையன்னம்போனடந்து, பேரின்பத்தைத்தொடர்ந்து
மெள்ளநாண மாகக்கூசி, வித்தாரமாகப்பேசி —துய்ய.

4. கன்னியர்க்குளவதானி, யன்னுளெனுமோ
ரன்னையினுமிகுஞானி, ஞானமண
மன்னன்மகிழ் வெகுமானி, யபாஞ்சியின்
பொன்னதெனவளர்மேனி, பருவமுலை
மின்னிநடை பின்னியிடை, சின்னிமொழி கொன்னியரு
ளுன்னிமய வன்னிதிரு, மன்னிபல சன்னைசொலி.
—துய்ய.

5. திட்டமுடன் குறிகாட்டிச், சீயோன்மகட்கு
மட்டிலது மயல்மூட்டித், திருவசனக்
கட்டளையின் புகழ்நாட்டி, அதிலொரு
பட்டமழ குடன்சூட்டிச், சிலுவையிட்டு,
வட்டமணிக் குடைதாங்கி, மாத்திரைக்கோ லொன்று வாங்கிச்,
சட்டமாய்ச் சபையிலோங்கிச், சகல அன்பருமீங்கி.
—தப்ப.

6. சத்திய சபையைநாடிக், கிறிஸ்துவின்பரி
சுத்தமொழி யுடன்கூடிச், சங்கீதஞ்சொலிப்
பக்தியுடன் பதம்பாடி, யூதித்தெனு
மிஸ்திரீயைப் போலேயாடிச், சபதங்கொண்டு
எத்தனெனும் பாம்புமுழுச், சத்துருவுக்கானவெரு
மத்தகத்தை வெட்டுவிக்க, வித்தைகற்றுச் சபையெய்க்க.
—தப்ப.

யூதித்து 13:7,8.

மலைவளம்

விருத்தம்

திருஞானப் பெத்தலே மதிபதியின் கிருபையிருக் திறங்கொண் டோங்கி,
வருஞானக் குறவஞ்சி தன்னைமகிழ் தெருசலே மகளை நோக்கித்,
தருஞான மொடுபேசிச் சுவிசேடச் சபையிலுற்ற ஞாதய லேயன்,
பெரும்ஞான மலைபெர்த மலையர்த மலைவளமை பேசுவாயே.

குறத் தரு

தினதேர்ந்தினத் தினதேர்ந்தினத் தினதேர்ந்தினத் தினனா,
தெந்தேர்ந்தினத் தெந்தேர்ந்தினத் தெந்தேர்ந்தினத் தினனா.

1. வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்,
வன்மையுள்ள சித்தரெல்லா மருந்தவங்கள் பிடிப்பார்,
ஞானமுடன் முல்லைநிலத் தலைவர்வந்து தொழுவார்,
நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்,
தானதர்ம மேழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்,
சண்டாளப் பாவமெல்லா மண்டாது தடுப்பார்,
ஈனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பார்,
ஏகன்மலை வானவெல்லை யெங்கள் மலையம்மே.—தின

2 ஆதிமலையெங்களுக்கோ ரேதன்மலையம்மே,
ஆண்டவன்று ரெங்களைத்தா னமைத்தமலையம்மே,
நீதியென் றநால்வரமுங் கொடுத்தமலையம்மே,
நித்தியமும் சாதரம னின்றமலையம்மே,
சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்தமலையம்மே,
தற்பரனு ரெம்மையங்கே சபித்தமலையம்மே,
பேதகமாய் நாங்களதை விட்டதற்பின்னம்மே,
பெத்தலேகை மெங்களுக்குப் பெரியமலையம்மே. —தின

3 ஆரியறு ராத்துமலை நோவைமலையம்மே,
யற்புதமாய்ப் பேழைவந்து நின்றமலையம்மே,
மோரியாவின் மலைதனிலே யாபிரகாமம்மே,
முக்கியமா யீசாக்கைப் பலிகொடுத்தானம்மே,
மேரிபாவை மோசேசு பிரம்புகொண்டேயடிக்க,
பெத்தவெள்ள மானவிதஞ் சித்திரங்காணம்மே,
சேரிலுயர் கற்பனையின் மலையதுதான் சீனு,
சேர்மைபெத்த லேகமெங்கள் நீதிமலையம்மே. —தின

4 காட்டமுள்ள ஓரேப்பு மலைக்குறவனம்மே,
ஞாயப்பிர மாணமதின் றலைக்குறவனம்மே,
யாட்டினத்தை மேய்த்ததிக்கு வாய்க்குறவனம்மே,
யக்கினியிற் காட்சிகண்ட மெய்க்குறவனம்மே,
காண்டிகமாய்ப் பார்வோனின் சேனையெல்லாமாளச்,
சமுத்திரத்தைப் பிரித்தமோசே முனிக்குறவனம்மே,
பாட்டனவன் காணிமலை சீனுமலையம்மே,
பாமபெத்த லேகமெங்கள் பழையமலையம்மே. —தின

5 ஓர்மலையோ ஏதோமி னெல்லைமலையம்மே,
யுச்சிதமா யாரோனு மரித்தமலையம்மே,
கார்முகில்சூழ் பிஸ்காவின் கொடுமுடியிலேறிக்,
கானானை மோசேசு கண்டமலையம்மே,
சேர்மிகுத்த மோவாப்பின் றேசமதிலிருக்கும்,
நேபோக்குன் றவன்மரித்த மலைதான்காணம்மே,
யேர்மோனின் மலையினிலே யேவியிர்முன்னிருந்தா,
ரெங்களுக்குப் பெத்தலேக மேற்றமலையம்மே, —தின

6 ஆபரீமுஞ் சாப்பேருங் கித்காத்துமலையு
மணியிசரேல் பாளையங்க ளிறங்கிநின்றதம்மே,
யேபாலில் மோசேசு சாபமிடச்சொல்லி,
யெழுதிவைத்தான் கெர்சீமி லாசிடைதானம்மே,

நாபாலின் குடியிருப்புக் கற்மேல்க்ராணம்மே,
நாடியங்கே யெலிசாவும் வந்திருந்தானம்மே,
லீபனேனே காணுவிற் பெரியமலேயேனு,
நெடியபெத்த லேமலேக்கு நிகர்மலேயேதம்மே. —தின

7. ஏகபரன் சேயீரின் மலேத்தேசமுழுதும்,
ஏசாவின் புத்திரர்க்குச் சுதந்திரமாய்க்கொடுத்தார்,
நாகமென்ற கிலேயாத்து ரூபனுடபங்கு,
நாடிவந்து லாபான்யாக் கோபைக்கண்டமலேயே,
யாகிலா மலேயதுலா மென்றவிருமலேயு,
மஞ்சியஞ்சித் தவிதுசவுற் கொளித்தமலேயம்மே,
வாகுறுமெப் பிரூயிமலே யன்னுளின்மலேயே,
வாழ்ந்திருக்கு மெங்கள்மலே பெத்தலேகேமம்மே. —தின

8. ஆகார்தா னெந்தனக்குச் சக்களத்தியம்மே,
யடிமையவள் பிள்ளையையுந் துரத்திவிட்டோமம்மே,
பூகாரோ வடிமைகட்குப் பங்கேததம்மே,
புத்திரர்க்கு மாத்திரந்தான் சொர்ந்தையுண்டுமம்மே,
சீகாராய்ப் பாங்காட்டி லடிமைகளேவிடுத்தோஞ்,
சீனுயி மலேயதைத்தான் சீதனமாய்க்கொடுத்தோம்,
வாகான ஞானமண வாளியர்க்குச்செல்லு,
மகிமைபெத்த லேகமெங்கள் வளமைமலேயம்மே. —தின

9. ஒலிவமலே யாண்டவனர் செபத்தின்மலேயம்மே,
யுத்தமன்று ருத்துமப்பா டானமலேயம்மே,
யலகைசுதன் றனேக்கொடுபோ யேற்றுமலேயம்மே,
ஆரணமா மலேயதற்குப் பெயரிலேக்காணம்மே,
நலமுடனே யுபதேச மலேப்பிரசங்கங்கள்,
நாதர்சொன்ன மலேயதுதான் ஞானமலேயம்மே,
பெலமுடனே யுயர்ந்தமலே தாபோர்தானம்மே,
பெரியபெத்த லேகமெங்கள் பெருமைமலேயம்மே. —தின

10. அற்புதசீ யோன்மலேதான் பொற்புமலேயம்மே,
ஆட்டுக்குட்டி மனேவிகுடி யானமலேயம்மே,
கற்புளகன் னியாஸ்திரீகள் வாழுமலேயம்மே,
காரணர்க்குக் கலியாண மாகுமலேயம்மே,
பற்பலபா டானமலே கொல்கதாத்தானம்மே,
பான்சுதனர் பாடுபட்டு மரித்தமலேயம்மே,
முற்பவத்தை நீக்கமனு வானமலேயம்மே,
முத்திபெத்த லேகமெங்கள் முதன்மைமலேயம்மே. —தின

11. எங்கள்குலம் ஞானமிருங் குறவர்குலமம்மே,
மெங்களுக்குச் சரிகுலங்க ளெங்குமில்லையம்மே,
பின்குலத்திற் பெண்கள்கொடோம் பெண்களையுங்கொள்
ளோம்,
பேசுதற்கிங் கெங்கள்குலம் ராசர்குலமம்மே,
மங்களஞ்சேர் திட்சைபெற்றோர்க் கெங்கள்பெண்ணைக்
கொடுப்போம்,
மாறுட்டக் காரருக்கு விருப்பாய்த்திரிவோம்,
புங்கமுடன் கிறிஸ்தவர்க்கு மலைகளெல்லாங் கொடுப்போம்.
புகழ்பெறுபெத் லேகமெங்கள் புதுமைமலையம்மே. —தின

12. பெண்ணுன பாம்புவென்ற நாகமுந்தானம்மே,
பெரியோனின் பேரைவைத்து விபசாரியானள்,
வண்ணமிதால் ஞானமண வாளனுக்குச்சீயோன்
மகள்தனையுங் கலியாண மாய்முகித்துக்கொடுத்தோம்,
திண்ணமுடன் புதுஎருச லேமலையுமற்றத்,
தேசமதின் மலைகளெல்லாஞ் சீதனமாய்க்கொடுத்தோம்,
நிண்ணயமா யிளையவட்குக் கொங்கையின்னமில்லை,
நீடுபெத்த லேகமெங்கள் நீதிமலையம்மே. —தின

நாட்டுவளம்

விருத்தம்

சாத்திரவள மறைகாட்டுங் கோத்திரைவளம் புவன வண்டை தானே காட்டுங்,—தோத்திரவள மொழிகாட்டும் போத்திரவளஞ் சங்கீதஞ் சூட்டும்யூதர்,—கோத்திர[1]வள னாக மங்காட்டுஞ் சுவிசேடங் குறையுங் காட்டுஞ்,— சூத்திரவளஞ் பெத்தலேம்நாட்டுவளம் பாட்டுவளஞ்சொல்லு வாயே.

தரு

நன்னனு நன்ன நானன்ன நானன்ன,
நானனு நன்ன நானன நான.

1. ஆதியிலதஞ்செய்வினைதீர்க்க, வனுதியானுெருரட்சகன்
றன்னை,
நீதியாய்த்தருவோமென்றுசொன்ன, நெறியினைநிறை
வேற்றுதற்காக,

---

[1] கோத்திரை—பூமி.

மாதுமாமரி யாளிடமாகவே, வானவன்மனுடனுருவாக,
வேதவோசைமுழங்கிடவந்தருள், வித்தகன்வெல்லைநா
டெங்கள்நாடே. —நன.

2. சாலஆபிரகாமுனியோடு. தயாபரன்சொன்னவாக்குத்
தத்தத்தின்.
பாலுந்தேனதியோடியதான, பண்புறுங்கானன் தேசத்தை
முற்றும்,
வாலருண்மகர்க்கீவமென்றேதிய, வாய்மையாமந்தயூதேயாத்
தேசம்,
மேலுண்மேவியபெத்லகேமென்ற, வேதனுர்வெல்லைநாடெங்
கள்நாடே. —நன்.

3. யூதேயாவிலறச்சின்னதாகிய, யோகமேநிறைமாபெத்லகேமே
நீதியாயிசருவேலையாள்பவர், நீடியுன்னிடமாகப் பிறப்பார்.
வேதமாமெனத்தீர்க்கர்களோதின, மேன்மையால்விடை
மேவியவீட்டி,
லாதியானரனுகப்பிறந்த, அதிசயவெல்லைநாடெங்கள்நாடே.
—நன்.

4. என்னைப்போலொரு தீர்க்கதரிசி, யெழும்புவானெனமோ
சேசுவென்போன்,
சொன்னதின்படி தாவீதரசனின், றுய்யக்கோத்திரத்தி
னரசாகக்,
கன்னிமாமரியாளிடமாகக், கருணையாளன்மனுவுருவாகப்,
பொன்னுலோகர்கொண்டாடிடவந்தருள், புண்ணியன்
வெல்லை நாடெங்கள்நாடே. —நன்.

5. தேவபூமிக்குமுன்புள்ளநாடு, தெய்வதூதருக்கன்புள்ளநாடு,
நாவலோர்புகழ்பாடியநாடு, ஞானிமார்கள்கொண்டாடிய
நாடு,
மேவியேவளர்ந்தோங்கியநாடு, வேடமானதுநீங்கியநாடு
பாவமேபறந்தோடியநாடு, பராபரன்வெல்லைநாடெங்கள்
நாடே. —நன்.

6. வார்த்தைப்பாட்டிலுண்டாகியநாடு, வானநாடர்கண்டேகிய
நாடு,
பாத்திபர்பணிந்தேத்தியநாடு, பாவியோர்மனந்தேற்றியநாடு,
தோத்திரப்பதமிஞ்சியநாடு, சூழும்பேய்க்கண மஞ்சியநாடு,
சாத்திரர்வந்து தேடியநாடு, தயாபரன்வெல்லைநாடெங்கள்
நாடே. —நன்.

7. வேதபாரகர் துதிக்கின்றநாடு, வேணதீர்க்க ருதிக்கின்றநாடு
மாதவப்பரிசேயர்களூடு, வாதுசேர்சதுக்கேயர்களூடு,
ஓதும்லேவியர் சேனையினூடு, வுலாவுமாசாரியோர்களினூடு,
நீதிசேருமப்போஸ்தலர்நாடு, நேயனின்வெல்லைநாடெங்கள்
நாடே. —நன்.

8. சொல்லக்காண்பதுஞானபுராணங், துலங்கக்காண்பது
சத்தியவேதம்,
வெல்லக்காண்பது ஐம்பொறிமாய்கை, மிதிக்கக்காண்பது
பேயின்சிரத்தைப்,
புல்லக்காண்பது விண்பெருமானை, பொறுக்கக்காண்பது
கண்டகுற்றத்தை,
சொல்லக்காண்பதுமூவாசையானதைக், கொற்றவன்வெல்லை
நாடெங்கள்நாடே. —நன்.

9. போற்றக்காண்ப தொருபரன்றன்னைப், புகழக்காண்பது
நித்தியவாழ்வை,
யாற்றக்காண்பதெளிமையுள்ளோரை, யணைக்கக்காண்பது
பாவிகடன்னை,
மாற்றக்காண்பது வெண்வஸ்திரங்கள், மதிக்கக்காண்பது
யேசுவினீதி,
சாற்றக்காண்பது ஞானசங்கீதங்கள், தற்பரன்வெல்லை
நாடெங்கள்நாடே. —நன்.

0 கற்கக்காண்பதுநல்லுபதேசங், கதிக்கக்காண்பதுதானதர்மங்
கள்,
நிற்கக்காண்பது நன்னெறிமார்க்கம், நினைக்கக்காண்பது
எண்ணினவெண்ணம்,
மக்கக்காண்பது பாம்புவின்வேதம், மடியக்காண்பது
அக்கியானமார்க்கம்,
சிக்கக்காண்பதுதேவசகாயங், திருப்பரன்வெல்லைநாடெங்கள்
நாடே. —நன்.

தல வளம்

விருத்தம்

பரலோகம் பூலோகம் பாதாளத் துள்ளவரும் பணிந்து
போற்றும்,
நரலோகத் தரசான மேசியா நாட்டுவளம் நவிலப் போமோ,
சுரலோகத் துற்றசித்தத் தடையாள முணர்ந்தறிஞர்
துதிக்கவந்த,

வரலோக பெத்தலேச் திரிலோகத் தலைமையை
வழுத்துவாயே.
தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு.
தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தினனு.

1. அர்ச்சிட்ட ஆபிரகா மிரட்சகருனை,
யாசையுடன் காணத்தவ சிருந்ததித்தத்தலமே,
நிச்சயமா யாக்கோபு வானத்தினேணியினை,
நித்திரையிற் கண்டுமகிழ்ந் தெழுந்ததித்தத்தலமே,
யுச்சிதமாய்த் தாவீது வேந்தனுலகெல்லா,
மோர்குடையிலாண்டு செங்கோல் செலுத்தினதித்தலமே,
பட்சமுடன் சிமியோனு மன்னுளென்பவனும்,
பாலகனை யேந்தியுரை பகர்ந்ததலமம்மே. —தின.

2. அபலைபிருத் தாரோடு மேதனைப்போற்செழித்த,
ஆச்சரிய யோர்தானின் பாய்ச்சலித்தத்தலமே,
செயமான இசுரவேற் கோத்திரத்துக்கெல்லாஞ்,
செல்லுநித்திய உம்பளிக்கை யாய்க்கொடுத்ததலமே,
நயமாகப் பானதியுந் தேனதியுமோடும்,
நன்மைமிகுங் கானானு தேயமிந்தத்தலமே,
சுயமாயோர் முந்திரிகைக் குலைபதனையிருபேர்,
தோள்மேலே சுமந்துகொண்டு போனதலமம்மே. —தின

3. எண்ணிறந்த ஞானிகளுந் தீர்க்கதரிசிகளு,
மிருடிகளுஞ் சித்தர்களும் பொருளுரைத்ததலமே,
விண்ணுலகுள் ளோரும்வந்து பணிந்ததிந்தத்தலமே,
மெய்யான வேதமுதல் முளைத்ததிந்தத்தலமே,
மண்ணுலகை யாண்டருளுங் கோடானகோடி,
மன்னவர்கள் பொன்கொடுத்து வணங்கினதித்தலமே,
யுண்மையதாயொவான்முனிவன் கிறிஸ்துவின்முன்வந்து,
யோர்தானிற் றாதுசொன்ன தேவதலமம்மே. —தின

4. நாசரேத்து ஆண்டவனார் வாழ்ந்ததலமம்மே,
நற்புதுமை முந்துதலங் கலிலேயாத்தானம்மே,
தேசமதிற் பலிசெய்தல மெருசலேமம்மே,
தேசிகனார் பாடுபட்டு மரித்ததலமம்மே,
பேசரிய கற்பனையின் பெட்டிநின்றதலமே,
பெலசலமோ னாலயங்கள் கட்டிவைத்ததலமே,
மேசியாவும் பிறந்ததலம் பெத்தலேகேமம்மே,
மெய்யான தலமிதுவி சேடதலமம்மே. —தின

5. மான்களைப்போற் சப்பாணி அள்ளினதித்தலமே,
வாதைமிகு கொண்டிமுட கிமிர்ந்ததிந்தத்தலமே,
தீன்படரும் ரோகிகளும் பேய்பிடித்தபேருஞ்,
செத்தவருங் குணமாகி யெழுந்ததிந்தத்தலமே,
பீன்பிடிப்போ ரறிவடைந்து தேர்ந்ததிந்தத்தலமே,
மேலான பாஷைகளைப் பேசினதித்தலமே,
வான்கதிர்போற் குருடர்கட்குப் பார்வைதந்ததலமே,
மகத்தான தலமிதற்கு மகிமைமெத்தஅம்மே. —தின

6 ஊமையரும் வாய்திறந்து பாடினதித்தலமே,
யொருக்காலுங் கேளாதோர் கேள்விபெற்றதலமே,
நாமிகளு முத்தமிக ளானதிந்தத்தலமே,
கள்ளனதி சேயமதாய்க் கதிசேர்ந்ததலமே,
நேமியது வாய்காட்டா தடங்கிநின்றதலமே,
நிருபனுட ஆவிசுடராகவந்ததலமே,
சாமியவர் புரூருப மானதிந்தத்தலமே,
சாற்றரிய அர்ச்சீட்ட தலமிதுகாணம்மே. —தின

7 கள்ளத்தீர்க்க தரிசியென்ற ந்திப்பேயுந்தானம்மே,
கபடாக வருவனென்று கடவுள்சொன்னதலமே,
உள்ளபத்துக் கொம்புளதும் ரண்டுகொம்புமான,
வுயர்ந்தவனு மிருகமதொன் றுருமென்றதலமே,
வள்ளலென்ற ஞானமணநாயகனைவிட்டு,
மறுமுகத்தை நோக்கத்தொழில் வருத்துவித்தவீம்புப்,
பிள்ளையின்வே சித்தனத்தின் பணையமதைப்பெற்றுப்,
பெருநரகில் வீழ்வனென்று பேசுதலமம்மே. —தின

8 வேசித்தனப் பாத்திரத்தைக் கையில்வைத்துக்கொண்டு,
வெறியெடுக்கக் குடித்தலைந்து வெளியரங்கமாக,
நாசியிலுங் கேடாக விபசாரம்பண்ணிச்,
சந்தியிலே போவர்கட்குப் பணையமதுபொருந்தி,
சீசியென்று கண்டவர்கள் கேட்டவர்களேசச்,
சேலைசற்று மில்லாமல் நிருவாணமாக,
ரோசமற்று ஊரார்க்குப் பிள்ளைகளைப்பெற்ற,
பாவிகுணப் பட்டாலுங் கிருபைசெய்யுந்தலமே. —தின

மனுடகுமாரன் குலவளம்

விருத்தம்

வல்லறஞ்சேர் மலைவளமு நாட்டுவள மானதையும் வகுத்தே
மோட்ச,
வில்லறஞ்சேர் புல்லணையின் றலவளத்தின் பெருமையெல்லா
மியல்பாய்ச் சொன்னாய்,
நல்லறஞ்சேர் ஞானமிகுங் குறவஞ்சிக் கொடியேநீ நயத்தினாலே,
சொல்லறஞ்சேர் பெத்லெகே மரசனுட கிளைவளத்தைச் சொல்லு
வாயே.

தினதேர்த்தினத் தினதோதினத் தினதேர்த்தினத் தினனா,
தெர்தேர்த்தினத் தெர்தோதினத் தெர்தேர்த்தினத் தினனா.

1. பெத்லெகே மரசனுட குலங்கேட்கிலம்மே,
பெரியகுலம் வானவர்க்கு மரியகுலமம்மே,
முத்தர்கட்கும் பத்தியுள்ள சித்தர்கட்குமம்மே,
மோனமிகு ஞானிகட்கு மேன்குலங்காணம்மே,
சத்திவள ராசகுல நேசகுலமம்மே,
சொலவரிய வன்மையுள்ள தெய்வகுலமம்மே,
சத்தனுக்கா மரியபரி சுத்தகுலமம்மே,
காரணனின் குலமுரைக்க வாயிலைக்காணம்மே. —தின

2. ஆபிரகா மீசாக்கு யாக்கோபுவென்போ,
ரங்கிவுத்தி யுயர்ந்தயூதர் வங்கிஷங்காணம்மே,
மாபிரிய மாம்சரேற் சாதிகளையெல்லாம்,
வல்லமையோ டாண்டதவி தேந்தல்குலமம்மே,
சாபிர்பெல் தாதனுக்கு சொன்னகுலமம்மே,
கன்னிகையின் வித்தான மன்னுகுலமம்மே,
பாவிக்கு லீடேற்ற வந்தகுலமம்மே,
பாபாவின் குலமிதனைப் பகரவொண்ணுதம்மே. —தின

3. அரசனுட முறைமைகளை விபரமுடன்சொல்ல,
ஆரறிவா ரறிந்தவர்க்கு மடக்கமுண்டோவம்மே,
வாய்த்துதித்த ஆபிரகாம் புத்திரன்காணம்மே,
மற்றுமவன் பிறக்குமுன்னே யிவனிருந்தானம்மே,
தரையிதுயிர் தாவீதின் புத்திரனென்றுக்கார்,
சாமிவேந்த னுண்டாவனென் றவனென்சொன்னனம்மே,
கருணையவர் மனையுட புத்திரனென்பதையுங்,
கர்த்தருட வடிமையென்ற கருத்தையும்பாரம்மே. —தின

4. அந்தமுள யொவான்முனிவன் றனக்கிவனுயிர்ளையோ,
ஞறுமாத்தைக் குப்பிறகு பிறந்தவன்காணம்மே,
யிந்தவித மானுது யிவனுடையபாத,
இரட்சைதொடப் பாத்திரம்கா னில்லையென்றுனம்மே,
வந்துமுனி யிடத்திலிவன் றீட்சைபெற்றதாலே,
மாதவனும் பாவியென்று கண்டதுபாரம்மே,
சந்தாஞ்சேர் தீட்சையினல் யொவான்குருவாச்சம்மே,
துப்பவனும் யொவான்றனக்குச் சுவாமியல்லோ அம்மே.

—தின

5. நாசரேத்து ஆரார்க ளாண்டவனையம்மே,
நல்லதச்சன் மகனென்றது ஞாயமோதானம்மே,
சோனுக்கு யாக்கோபும் யோசேயுஞ் சீமோ,
னீடும்யூதா வென்றவர்ச கோதார்காணம்மே,
மாசனுகான் றனக்கிவர்ச கோதரரேயானல்,
மற்றுமவன் சீடரிவ ராவதெவ்வாறம்மே,
பாசமிகுஞ் சகோதரிக ளவர்க்கேதெனம்மே,
பராபரனுக்குறமுறையார் பாரிலுண்டோ அம்மே. —தின

மனுடனுட குமாரனென்று சொன்னுக்காலம்மே,
மனுஷருட வியாச்சியத்தை யேற்றவன்காணம்மே,
சனுவான தேவனுட குமாரனென்றுலம்மே,
தற்பரனின் பாடுகட்குச் சங்கையுண்டுமம்மே,
யினிமையுள்ள சீடர்களின் குருவாகவிருந்து,
யிவனவர்கள் கால்களையுங் கழுவினன்காணம்மே,
கனமுடைய யூதர்களின் ராசனிவனம்மே,
கள்ளனைப்போற்கட்டுண்டது கபடமல்லோவம்மே. —தின

7 செபதேயின் மைந்தன்யொவான் யாக்கோபின்றுயுஞ்,
சிறிய அன்னை யாவதுவுந் தீர்க்கமல்லோ அம்மே,
தபமவனின் புத்திரர்கள் தம்பியல்லோவேணும்,
தம்பிகட்குக் கேட்டமனுந் தாக்கூடாதென்பானேன்,
உபதேசஞ் சொல்கையிலே தேடிவந்தபேர்க்கே,
யுற்றவெந்தன் றுய்தமைய ராரென்றதேனம்மே,
பவமதனை யிகழ்ந்தவர்கள் தேவனுடசித்தம்,
பணிவுடனே செய்வர்களோ வவர்களென்றுனம்மே. —தின

8 பந்தாவு மணவாளி யிருபேருங்கூடிப்,
பரமண்டலங் களிலிருக்கு மெங்கள்பிதாவென்று,
அற்றவிதி னிவர்ச கோதிரங்களாச்சே,
யோதியென்பெண் சாதியென்ப தேதுமுறையம்மே,

பற்றுமவர் கணவனுக்குத் தந்தையுமேயானால்,
மனைவிக்கு மாமனல்லோ மருமகளுமிவளே,
சத்தனுட சுதனிவட்குக் கொழுந்தனல்லோவேனும்,
கன்னியிவள் மனைவியென்ற காரணமேதம்மே. —தின

9. உங்களைச் சகோதரரென் றுரைத்தலமென்றுனே,
புரியசபை மணவாளி யாவதெவ்வாறம்மே,
மங்களபுரபரனின் சபையவர்க்குமனைவி,
மைந்தனுக்கு மனைவியென்றால் வாய்மையுதோவம்மே,
பின்னுரைக்க முறைமையின்ன பெத்தவண்மையம்மே,
பெல்லவர்க்கும் பிடிபடுகா தென்பதைப்பாரம்மே,
பங்கிவரைப் படைத்துவிட்ட முறைமையைப்பார்த்தக்கா,
வாண்டபரன் தந்தையல்லால் வேறிலக்காணம்மே.

—தின

10. திரியேக பராபரனென் றுரைத்தபோதம்மே,
திரித்துவத்தி லிரண்டாமவன் சுதனல்லவோ அம்மே,
சருவேசன் றனக்கிவருஞ் சரியானதாலே,
தந்தையவர் தனையனெவ ராவதெவ்வாறம்மே,
செறிபுடனே மனுடவுரு வெடுத்ததினுலம்மே,
சேயனுக்கு மிவர்க்குமிப்போ முறைகளென்னவம்மே,
மறுபடியுமன் றூபாளின் முறைமையினைத்தோணம்மே,
மற்றுமிவ ரோன்றுனை வகைமையும்பாரம்மே. —தின

11. இச்சுவே யென்பவனும் யூதாவென் பவனு,
மினையதுடி பாளொருத்தி மூத்தவள்தா னொருத்தி,
ச்சபாக இருவர்களும் விபசாரம்பண்ணி,
ச்சிதிபனை விட்டுமறு வேசிகளாய்ப்போனர்,
வசையாக இவ்விதமாய் மாறிச்சென்ற
மவேசி வெறிபெடுத்த காய்போலேதிரிந்து,
திசைதோறுங் கண்டவர்களோடெல்லாம்போனுள்,
சீபோனின் மகளாக்கன் தேவகன்னியம்மே. —தின

12. ஆதிபக்த பிள்ளாளின் கிளைவளத்தைப்பார்த்தா,
லன்னையில்லை தந்தையில்லை யாருமில்லையம்மே,
சாதியென்ற பேருமில்லை கூருமில்லையம்மே,
சனனுமில்லை மரணமில்லைத் தனையுமில்லையம்மே,
மாதருடன் படுக்கையில்லை பாசையில்லையம்மே,
மைத்துனர் மாமனென்ற வகையுமில்லையம்மே,
போதகர்க்குத் தங்கையில்லைத் தம்பியில்லையம்மே,
பொன்றுன பரன்குலத்தை புணர்ந்துகொண்டுளம்மே.

—தின

13. வானுலகோர் பூவுலகோர் பூமியின்கீழானோர்,
மற்றுலகோ ரும்வணங்கும் மகத்துவவஸ்தம்மே,
யானசிஷ்டி யாவுகட்கு முதற்பிறந்தோனம்மே,
யம்புவியும் வானுலகு மமைத்தவன்காணம்மே,
பூனுடலி லாதவச ரீரியவனம்மே,
பொப்புவமை யில்லாத முத்தொழிலோனம்மே,
ஞானியர்கள் நாவலர்கள் விண்ணுலகோர்மண்ணோர்,
நாவிலடங் காவேத நாயகன்காணம்மே. —தின

கிறிஸ்தவரின் மகிமை

விருத்தம்

...மிகும் பெத்லகே மரசனுட கிளைவளத்தின் மகிமையெல்லா,
...மிகு நீயுரைத்த மொழிதோறுங் கண்டுணர்ந்தேன்
முறைமை யாகத்,
...மிகும் விசுவாசக் குறவஞ்சி யெனுமேன்மைத் தையலேநீ,
...மிகுஞ் சுவிசேடக் கிறிஸ்தவரின் மகிமைசற்று நவிலுவாயே.

தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு,
தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தினனு.

1 ...ர்மிகுத்த திரித்துவத்தின் கிறிஸ்தவர்களம்மே,
...ரியேக பராபரனின் கிறிஸ்தவர்களம்மே,
...ர்மிகுத்த பத்துநெறிக் கிறிஸ்தவர்களம்மே,
...ஞாயப் பிரமாணக் கிறிஸ்தவர்களம்மே,
...ர்மிகுத்த வளம்பெருகுங் கிறிஸ்தவர்களம்மே,
...பசுநாத ருக்குகந்த கிறிஸ்தவர்களம்மே,
...ர்மிகுத்த சத்தியமறைக் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

2 ...வதமெல்லா முணர்ந்தறிந்த கிறிஸ்தவர்களம்மே,
மேலான பாதைகண்ட கிறிஸ்தவர்களம்மே,
...தமுட னடந்துவருங் கிறிஸ்தவர்களம்மே,
நித்தியசி வனிலேகுங் கிறிஸ்தவர்களம்மே,
போதகஞ்சேர் நன்மைமிகுங் கிறிஸ்தவர்களம்மே,
புத்தியுற்ற கன்னியராங் கிறிஸ்தவர்களம்மே,
பேதமில்லாச் சிநேகிதத்தின் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

3. மந்திரசெபமுறைமைதப்பாக் கிறிஸ்தவர்களம்மே,
வாதிடும்பேய்க் கணத்தைவென்ற கிறிஸ்தவர்களம்மே,
சுந்தரஞ்சேர் வானாட்டுக் கிறிஸ்தவர்களம்மே,
சொன்னமொழி தவறாத கிறிஸ்தவர்களம்மே,
தந்திரஞ்சேர் மாலமில்லாக் கிறிஸ்தவர்களம்மே,
தவசுவிசு வாசமனக் கிறிஸ்தவர்களம்மே,
அந்தரபா மண்டலத்தின் கிறிஸ்தவர்களம்மே,
அருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

4. சத்தியவே தஞ்சிறந்த கிறிஸ்தவர்களம்மே,
சன்மார்க்க விளக்குமுற்ற கிறிஸ்தவர்களம்மே,
பத்திமிகும் பரிசுத்த கிறிஸ்தவர்களம்மே,
பராபரனின் பிள்ளைகளாங் கிறிஸ்தவர்களம்மே,
முத்திதரும் வழியடைந்த கிறிஸ்தவர்களம்மே,
மூன்றாசை தனைக்கடந்த கிறிஸ்தவர்களம்மே,
பெத்தரிக்கம் பேசாத கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

5. வாசமிகும் பெத்லகேங் கிறிஸ்தவர்களம்மே,
வஞ்சகர்க்குந் தயவுசெய்யுங் கிறிஸ்தவர்களம்மே,
நேசமிகுஞ் சற்குணராங் கிறிஸ்தவர்களம்மே,
நீதிதரும் பரமசுதன் கிறிஸ்தவர்களம்மே,
தேசமெங்கும் பேரெடுத்த கிறிஸ்தவர்களம்மே,
செய்கரும மறிந்துசெய்யுங் கிறிஸ்தவர்களம்மே,
பேசரிய வேதாந்தக் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

6. இன்பம்வந்து மொருநிலையாங் கிறிஸ்தவர்களம்மே,
யெட்டாநாள் தீட்சைபெற்ற கிறிஸ்தவர்களம்மே,
துன்பம்வந்து முறுதிகொண்ட கிறிஸ்தவர்களம்மே,
துயர்சூழ்ந்துங் கலங்காத கிறிஸ்தவர்களம்மே,
வன்புகொண்டு மயங்காத கிறிஸ்தவர்களம்மே,
வாக்குத்தத்தத் தினுடைய கிறிஸ்தவர்களம்மே,
பின்புறணி பேசாத கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

7. அக்கியானச் சடங்கறுத்த கிறிஸ்தவர்களம்மே,
ஆசையெல்லாம் விட்டொழிந்த கிறிஸ்தவர்களம்மே,
மிக்கான வரமுடைய கிறிஸ்தவர்களம்மே,
வெகுவான பாஷைகற்ற கிறிஸ்தவர்களம்மே,

Rev. M.K. Danielraj

பொய்க்கான ருறவகன்ற கிறிஸ்தவர்களம்மே,
பொறுமைமிகு மனத்தாழ்மைக் கிறிஸ்தவர்களம்மே,
மெய்க்கான தொண்டமையிலாக் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

8 வெள்ளைநிலைத் துகிலுடுத்த கிறிஸ்தவர்களம்மே,
விண்ணுலகின் விருதுடைய கிறிஸ்தவர்களம்மே,
வள்ளலுக்கா மணமாலைக் கிறிஸ்தவர்களம்மே,
மாறாத செல்வமுள்ள கிறிஸ்தவர்களம்மே,
விள்ளரிய திருவசனக் கிறிஸ்தவர்களம்மே,
மீறாத கற்பனையின் கிறிஸ்தவர்களம்மே,
பிள்ளைகளுக் கறிவுணர்த்துங் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

9. நல்லவர்கள் நாங்களென்ற கிறிஸ்தவர்களம்மே,
நாலுவர நன்மைமிகுங் கிறிஸ்தவர்களம்மே,
வல்லமையின் வலபாகக் கிறிஸ்தவர்களம்மே,
மனுடர்களைத் தொழுகாத கிறிஸ்தவர்களம்மே,
சொல்லரிய வண்மையுள்ள கிறிஸ்தவர்களம்மே,
துல்லிபஞ்சேர் கற்பினெழுங் கிறிஸ்தவர்களம்மே,
யல்லலற்று வாழ்ந்திருக்குங் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

10 நன்றியறிந் தேநடக்குங் கிறிஸ்தவர்களம்மே,
நாடோறும் புகழ்படைத்த கிறிஸ்தவர்களம்மே,
பன்றிகண்முன் முத்தெறியாக் கிறிஸ்தவர்களம்மே,
பழையேற்பாட் டாகமஞ்சேர் கிறிஸ்தவர்களம்மே.
வென்றிதரும் பரன்சிலுவைக் கிறிஸ்தவர்களம்மே,
வித்தகஞ்சேர் செபமாலைக் கிறிஸ்தவர்களம்மே,
பின்திரும்பி முகநோக்காக் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

11 சதிராக வாழ்ந்திருக்குங் கிறிஸ்தவர்களம்மே,
சாத்திரம்பார்த் தலையாத கிறிஸ்தவர்களம்மே,
முதுஞானத் திரவியத்தின் கிறிஸ்தவர்களம்மே,
மோசேசுக் கடங்காத கிறிஸ்தவர்களம்மே,
பதறாத மனமுடைய கிறிஸ்தவர்களம்மே,
பாம்புவுக்குந் தீர்வையிடுங் கிறிஸ்தவர்களம்மே,
யெதிராளிக் கதிரான கிறிஸ்தவர்களம்மே,
யெழிலான சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

12. வாய்களுக்குப் பூட்டுவைத்த கிறிஸ்தவர்களம்மே,
வலியோலின் சலுகைகொண்ட கிறிஸ்தவர்களம்மே,
நாய்களுட வாயடைக்குங் கிறிஸ்தவர்களம்மே,
நாதாந்த மாய்ப்பேசுங் கிறிஸ்தவர்களம்மே,
தீய்களுக்கு மஞ்சாத கிறிஸ்தவர்களம்மே,
மாயலகை தனையழிக்குங் கிறிஸ்தவர்களம்மே,
பேய்களைச்சங் கரித்தவரின் கிறிஸ்தவர்களம்மே,
பெருமைபெறுஞ் சுவிசேடக் கிறிஸ்தவர்களம்மே. —தின

வாசல் வளம்

விருத்தம்

பொன்னகரோன் றிணையலது வேறிலையென் றோங்கு பெத்லேம் புதுமை நாட்டில்,—மன்னவனுஞ் சலமோனும் பின்னுளி லெசுவாவும் வகுத்தே வைத்த,—யுன்னதஞ்சே ரெருசலேம் பட்டணச்சீ யோன்மலைமே லோங்கு கோவில், —சன்னதிவா சலின்வளத்தை நன்னயமாயெந்தனுக்குச் சாற்றுவாயே.

1 இரா. 6; எஸ். 3:2.

(3) நானநன்னநன்ன—நானநன்ன,

(3) நானநன்னநானநன்ன—நானநன்ன.

1. வாசலிது பெண்ணே வாசலிது யேசு மகராச ராசனின்
வாசலிது,
மானபரன்றவிது மோனசுதன்சலமோன் ஞானபரன்றுதிக்
கும் வாசலிது,
தேசநிகழ் கேராபீனுஞ் சேராபீமுநிற்கும் வாசலிது,
தேவபரன்மகிமை மேவிமுகிலினுடை தாவிநிறைந்திருக்கும்
வாசலிது.—வாச

2. இசராவேற் சாதியெல்லா மிரைந்துசெல்லும் வாசலிது,
இலேவித்தமார்களெல்லாந் தாபித்துமந்திரசெபஞ்சேவித்துப்
பண்புசெயும் வாசலிது,
திசைமேவு மன்னர்மன்னர் தெரிசனஞ்செய் வாசலிது,
தேசத்திராசாத்தி நேசித்துக்காணிக்கைகொண் டாசித்துப்
போற்றவரும் வாசலிது.—வாச

2 பரிசேய ரூடன்வேத பாரகரையொழித்து,
பார்த்தவரர்கள் [illegible] [illegible]
[illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible]
[illegible] வாசனித்து —வாச

4 ஆசாரிய [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible] [illegible]
வாசனித்து,
[illegible] [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible]
வாசனித்து —வாச

5 [illegible] பாட்டகளின் [illegible] வாசனித்து,
[illegible] [illegible]
[illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible]
[illegible] வாசனித்து —வாச

[illegible] தீர்க்கர்களும் பெரியோர்களும் [illegible] வாசனித்து,
[illegible] [illegible]
[illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible]
[illegible] வாசனித்து —வாச

[illegible] [illegible] [illegible]
வாசனித்து,
[illegible] [illegible] [illegible]
[illegible] வாசனித்து,
[illegible] பாவிகளு [illegible] வாசனித்து,
ஆதாவில்லாதவர்க்கும் [illegible] [illegible]
[illegible] வாசனித்து —வாச

7 [illegible] [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible]
[illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible] வாசனித்து,
[illegible] [illegible] [illegible]
வாசனித்து —வாச

9. அன்னாளுஞ் சிமியோனு மேசையனையேந்திய வாசலிது,
ஆண்டவனுலகையெல்லா மீண்டவனுயர்பனிரண்டாண்டு
தனிற்றர்க்கமிடும் வாசலிது,
கன்னிமரியோசேப்புங் கர்த்தனைத்தேடிவரும் வாசலிது,
காசுப்பலகைகளை யோசைபடப்புரட்டி விசித்துரத்துகின்ற
வாசலிது. —வாச

10. ஆயக்காரன் பரிசேயன் வாதாடிச்செபஞ்செய்த வாசலிது,
ஆகமத்தினொடேகிரு பாசனத்தினுமீச வாகனத்தினோ
வரும் வாசலிது,
மாயக்கார வேசிக்கள்ளர் மறுபிறப்பாம் வாசலிது,
வழியுஞ்சத்தியஞ்சீவனுமையுநெருக்கமென்றவழுவதன்றிய
மோட்ச வாசலிது. —வாச

11. ஆச்சரிய மோட்ச வாசிகளின்பல அற்புதஞ்சேர்திரு
வாசலிது,
ஆவியக்கினிச்சுட ராகச்சீடர்சிரத்தில் மேவிநிறைந்திருந்த
வாசலிது,
காட்சிதருந் திட்சைபெற்றுநற் கருணைபெற்றுவரும்
வாசலிது,
கத்தனைமனத்தினில முத்தியேநினைத்துருகு முத்தம
கிறிஸ்தவரின் வாசலிது. — வாச

12. புகலருமீ ராறுபுதுமை யெருசலேம்வாசலிது,
புண்ணியசம் மனசோர்க ளண்ணலைத்து தித்திறைஞ்சி
விண்ணுலகுக்கேகிய வாசலிது,
சகலது ஷணைப்பேயுந் தன்றலைகாட்டப்போகாத வாசலிது,
சத்தியசாட்சிகளை மெத்தவுங்கொன்றவவ னிரத்தப்பழி
வாங்கும் வாசலிது. —வாச

தேச வளம்

பன்னிரு கோத்திரப் பங்கு

விருத்தம்

மோசையினைப் பார்வோனி னிடத்தனுப்பி யிசரேலை
முழுதுமீட்ட,
வீசனருள் சேர்தேவ சன்னதியின் வாசல்வள மெல்லாஞ்
சொன்னேன்,

ம்ாசனுகாப் பெத்லகேம் ராசனுட கிருபையினல் வரும்யத் கோப்பி,
னேசமக ராறிருவர் தேசவள மத்தனேயு நிகழ்த்து வாயே.

தானனே தானனே தானதந்தனத் தானனே.
செப்புகிறே ஞனறிந்த தேசமெல்லாங் கேளுமின்னே.

1. ஒப்பரியகிறிஸ்தரசனுயர்ந்தபெத்தலேநாட்டினிலே. —செப்
2. உன்னதஞ்சேர் யூதர்குலத் துயர்ந்தவிச ராவேலின்,
பன்னிரண்டு புத்திரர்க்குப் பகிர்ந்ததேசமெல்லா மறிவேன். —செப்
3. மகிழ்கானன் தேசமென்றும் வார்த்தைப்பாட்டுத் தேசமென்றும்,
யுகஇசரேற் றேசமென்றும் யூதேயாத்தேசமென்றும். —செப்
4. அர்ச்சீட்ட தேசமென்று மாம்பலஸ்தினத் தேசமென்று,
நிச்சயமாய்ச் சொல்லிவரு நேர்மையுள்ளதேசமதில். —செப்
5. யூதேயாச் சாமாரியா வுயர்கலிலேயாப் பேரேயா,
யூதேயா நாட்டினிலே யோங்குகோத்திர நாலதுண்டு. —செப்
6. யூதாவுஞ்சீமேயோனு முறுதானும் பென்யமீனும்,
யூகாவி லெருசலேம்பெத் தானியாபெத்தலேங் கேப்பு ரோனும். —செப்
7. சீமேயோனிலே பெர்சேபாவுஞ் சிக்லாகும் அஸ்கலோனும்,
நாமமிகு காசாவும் நாலுநக ரானதுவாம். —செப்
8. தானிலேபெத் சேமேசுஞ் சனுவான காத்தெனவு,
மானயோயோத் பேயெனவு மணிநகர்மூன்றங்குளதாம். —செப்
9. பென்யமீனி லெரிகோவும் பெற்பகேயு மாயாவு,
மெஞ்ஞானப் பேத்தல்கிபேயா ராமாகிபேயோன் விகல் பெத்தரோன். —செப்
10. சாமாரியாத் தேசமதிற் சார்ந்ததொன்றரைக் கொத்திரந் தான்,
வாமனபி ராயீமனு சேயினரை வங்கிஷந்தான். —செப்
11. சாலஎபி ராயிமிலே பேத்தல்சமாரி யாகரிசீஞ்,
சீலோவெபி ராயிமென்ற திருநகரைந் துமறிவேன். —செப்
12. மனுசேமுன் பாதியினில் வளருமொகித் தோயறிவேன்,
சனமேவு மேந்தராவுஞ் சாலேமுந் தானறிவேன். —செப்
13. கலிலேயாத் தேசமதிற் கனகோத்திர நாலதுண்டு,
கலியாஈச ஷார்சேபு லோனுசேர் நப்தலியாம். —செப்

14. ஈசஷாரி லீசஷாரு மிசராவேலும் பெத்சேமீசு,
மாசைகற்மேல் நாயினேர்மோ ஹறுபட்டணங் தானறி
வேன். —செப்

15. சேபுலோனிற் றீபேரியா பெத்சாயிதா சேர்பெத்தலேங்,
தாபோரு நாசரேத்துத் தரும கானூன் பதியறிவேன். —செப்

16. ஆசேரிற் றீருசரேப்பத் தாசிதோ னறிந்திருப்பேன்,
நேசதில்லா வேனெக்குங் காத்துமென்ஞா பகத்தி
லுண்டு. —செப்

17. நப்தலியி னபத்தலியு நற்கிறிஸ்தின் பருபதமுங்,
தபத்தின்மிகு கப்பர்நகூங் தானலது சேசாரியா. —செப்

18. நாலாவது பேரேயாவிலி ரண்டரைக்கோத் திரமதுண்டு,
சிலமனு சேயிற்பாதி திகழ்காத்தும் ரூபனுந்தான். —செப்

19. மனுசேயின் பாதியினில் வருமஸ்த ரோத்துடன்கேத,
ரனதிபாசான் கோராசின் யாப்புஸ்பெல்லா அறிவேன். —செப்

20. காத்திலே மிச்சிப்பாவுங் கன்மனு யிம்பினியேல்,
சாத்திரமாய்ச் சுக்கோத்துஞ் சதுர்ப்பட்டணம் யானறி
வேன். —செப்

21. ருபேனி லேஸ்ப் போனு நன்மைமிகுந் தேபேயுங்,
கூபமுறு சித்திமுங் கொமுநகர்மூன் றுமறிவேன். —செப்

22. இப்படியே ஐரோப்பா வெழிலாசியா ஆபிரிக்காத்,
தப்பாம லாமேரிக்கா சதுர்ப்பங்குதே சமுமறிவேன். —செப்

23. இப்பேயின் தேசமதி லேமுமலை மேலிருக்கும்,
பத்துக்கொம்பு மிருகம்வளர் பாபல்கோபுரம் யானறி
வேன். —செப்

24. எத்தன்முழுப் பெத்தரிக்க விரண்டுகொம்பு மிருகமெனுஞ்,
சத்துருப்பே யிருக்குமந்தத் தானமெல்லாமறிந்திருப்
பேன். —செப்

கவனிப்பு

முன் நாட்டுவளம் வந்தபடியினல் மறுபடி தேசவளங் காணவேண்டிய தில்லையே. நாடுதான் தேசம், தேசந்தான் நாடென்றால், மறுமொழி: அங்கே நாட்டின் சிறப்பை மாத்திரம் காட்டினதன்றி இக்கானூன்தேசத்தை இசராவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்குப் பங்கிட்ட பகுதியைக் காட்டாததால் தேசவளமென்றொரு தருவை இவ்விடத்தில் நூதனமாய் ஸ்தாபிக்கவேண்டியதாயிற்று.

விடுகதை

விருத்தம்

தாரகையைச் சிரத்தணிந்து சந்திரனைப் பதத்தணிந்து தயைசேர்
ஞானச்,
சூரியனை யாடையென இடைக்கணிந்த சீயோனின் றேகை
நல்லாள்,
வீரியமாய் விடுகதைகள் சிலதுரைப்பே னென்முன்னதை
விளக்க மாகச்,
சீருயரும் பெத்தலே மலைக்குறவஞ் சிக்கொடியே செப்பென்
றாளே.

எசல் தரு

னன னநன்ன நானநன்ன நானநன்ன நானநன்னநானா,
னன ன, நானன நானன நானன நானன நானனநானன
நானன நானனநானா.

1 மகிமையுட னீசமறி வாகனத்தில் வந்ததெவர் வஞ்சி? இம்,
மானுவேல்மேசியா வானுலகத்திறை யானவரா முனின்
ஞானமணாளப ரஞ்சி.
சகமைமிகுஞ் சாமிதனைச் சம்மனசு தேற்றுவதேன் வஞ்சி?
நரர்,
சாபத்தினால்தேவ கோபத்தில்மூழ்கிய ஆபத்திலேபிர
லாபித்ததாமப ரஞ்சி.

2 அதிசயம தானவரென் றாண்டகைக்கு நாமமென்ன வஞ்சி?
மெய்,
யானதேவனு மெய்யானமனுஷனு மானதினாலபி
தான மிதாச்சப ரஞ்சி.
சதிராகவெள்ளைநிலை யங்கிதனைத் தரித்தவரார் வஞ்சி? தேவ,
சத்தியமறைக்கருள் பெத்தலேகேம் பதிக் குத்தவரசனாம்
நித்தியகிறிஸ்தப ரஞ்சி.

3 தையலில்லா தவன்றனக்குத் தையலில்லா அங்கியதேன்
வஞ்சி? வுயர்,
காஷ்டிகத்தாவீது மேட்டிமை யாய்ப்பிலி போட்டார்
களென்றசொற் காட்டிடத்தானப ரஞ்சி.
செய்யசுதன் சிலுவையினிற் சேலையற்று நிற்பதுமேன்
வஞ்சி? திருச்,
சித்தமதாய்ப்பாரி சுத்தர்க்குநீதியின் வஸ்திரத்தைத்தர
மெத்தநினைத்தப ரஞ்சி.

4. பத்திலக்க ணத்தைவிடான் பத்திலக்கணத்தை விட்டான்
வஞ்சி? கெட்ட,
பன்றிக்குணப்பிசா சன்றைக் கமலனைப் பன்றிக்குள்ளேவிட
மன்றூடிற் றேஅபரஞ்சி.
சத்தியபத்தி னிற்பவருஞ் சத்தியபற்று நிற்பதென்ன வஞ்சி?
செயல்,
தங்குலைத்தைமூன் றங்குலியிற்கொண்ட துங்கன்மூன்றுணி
யிற் றெங்கலேயோ அப ரஞ்சி.

5. அஞ்சுகுறிப்பட்டவர்க்கு அஞ்சுகைப்பட்டிருப் பதென்ன
வஞ்சி? பேய்ச்,
கஞ்சதலையுடைத் தாறுதலைவிடுத் தாட்டிகளைமணஞ்
சூட்டினதாலப ரஞ்சி.
பஞ்சகத்தைப் படையாதோன் பஞ்சகத்தைப் படைத்த
தென்ன வஞ்சி? கன,
பரிசுத்தமுத்தர்களாவி வரிசித்த கத்தனைகாளுந் தெரிசித்து
நித்தியகாலங் கரிசித்துவாழ்ந் திருக்கஅப ரஞ்சி.

6. அல்லேலூயா ஓசனவென் றருளினசொற் கர்த்தமென்ன
வஞ்சி? கத்,
தாவினைத்துற தேவகுமாரனை மேவித் துதியுமென்
றேவித்தசொல்லப ரஞ்சி.
வல்லைனும் அல்பாஓ மேகாகா மென்றதென்ன வஞ்சி?
யெல்லா,
வஸ்துவுக்குந்துவக் கம்முடிவானதன் னித்தியதிரித்துவம
சத்துவத்தாலப ரஞ்சி.

7. ஏழென்றசொற் கென்னமகா காவென்றசொற் கென்ன
அர்த்தம் வஞ்சி? ஏ,
ழென்றலக்சங்குறை யன்றியமாகா வென்றதுஆயிரஞ்
சென்றஆண்டாமப ரஞ்சி.
பாழெனுந்துற்சற்பமென்று பிசாசுக்குப்பேர் வந்ததென்ன
வஞ்சி? அது,
பாம்பினுருவங்கொண் டோம்பிமனுக்களைத் தீம்புசெய்த
வினைக் காம்புகலாயப ரஞ்சி.

8. மிருகமென்றும் வேசியென்றும் விளம்பினசொல்லாரையடி
வஞ்சி? முழு,
வேதப்புரட்டனுந் தீதுற்றரோர்மைபின் பாதகப்பாம்புவைச்,
சாதித்தசொல்லப ரஞ்சி.

திருடனந்திக் கிறிஸ்துகள்ளத் தெரிசியென்ற பேரெவர்க்கு
வஞ்சி? முன்,
செப்பினபசாசின் றப்பிததலைவனுக் கொப்பிடக்
கோடிபே ரிப்படியுண்டப ரஞ்சி.

வித்தை வளம்

விருத்தம்

வானவர் துதிக்கும் பெத்லே மன்னவன் கிருபை யாலே,
ஈனனக் குரைத்த வேத நற்கதைப் பயனை யெல்லா,
மோனமாய் விடுவித் தாயுன் முக்கிய பரம வித்தை,
பானதை விரித்துச் சொல்லா யருட்குற வஞ்சிமின்னே.

சிந்து

வித்தகச்சீயோன்குமாரத்தி, யான் கற்ற
வித்தையைச்சொல்கிறேன் கேளாய், உயர்.

சத்தியவேதந் தருங் கிறிஸ்தேசு
சாமிவரும்பெத்த லேகநன்னாட்டினில். —வித்

சிசேராவைச்சுத்தி யாற்கொன்றயாகேலின்
தந்திரவித்தையதறிவேன், அன்று
பேசாமல்ருத்தென்ப வள்போவாசைக்கூடப்
பண்ணினவித்தையுமறிவேன், மிகு
வேசாறலாய்மலடி யன்னாளுஞ்சாமு
வேலைப்பெற்றவித்தையறிவேன், சற்றுங்
கூசாம லோத்தின்மக் கள்செய்தவித்தையிற்
கூட்டுவித்தையுமுண்டம்மே. —வித்

ஒட்டகக்கல்லணைக் குட்சுரூபத்தை
யொளித்தவள்வித்தையுமறிவேன், புள்ளிக்
குட்டிகளாய்ப்போட ராகேல்புருடன்செய்
கோரணிவித்தையுமறிவேன், அதி
திட்டணையாகவே வாட்களைக்காத்திட்ட
ராகாப்பின்வித்தையுமறிவேன், மிகு
திட்டமாய்த்தீர்க்க தெரிசனஞ்சொல்லவே
தெப்போராள்வித்தையுண்டம்மே. —வித்

4 அமோனைத்தூக்கினிற் போடப்பண்ணுமெஸ்த
ரானவள்வித்தையுந்தெரியும், நல்
தாமாரென்பவளும் யூதாவையேய்த்துச்செய்
தந்திரவித்தையுந்தெரியுந், தன்

கோமானைத்தப்பவிட் டாட்டுத்தோலைமஞ்சம்
கட்டினள்வித்தையுந்தெரியு, மொரு
பெட்டிதன்பிள்ளை யெழுக்குஞ்சொன்ன
திறமுந்தெரியுமெனம்மே. —வித்

5. காணவிஸ்திரிபேச் சிட்டுத்தர்க்கித்துக்
கட்டினவித்தையுந்தெரியும், பல
மானர்சிலுவை சுமந்தவன்பேச
மறந்தபழும்வித்தைதெரியு, மென்றன்
தானவனைபபிஷேகித்துப்பெயர்
தக்குவித்தாள்வித்தைதெரியு, மி
தானுமன்னுளொளிசப்பேத்தம்ம
னதிசயமெத்தவெனம்மே. —வித்

6. தோட்டக்காரனென்று கத்தனைக்கூப்பிட்டுச்
சொல்லவொருவித்தையுண்டு, ஞானப்
பாட்டுகள்பாடிக் கெம்பீரிக்கமீரியாம்
பாடலின்வித்தையுமுண்டு, மகா
மேட்டிமையாய்ச்சுசன் னுள்கற்பைக்காத்த
விநோதவித்தைமிகவுண்டு, இன்ன
மாட்டுக்குடிலிற்பிறந்தோனைக்கைக்குள்ளே
வைக்கமருந்துமுண்டம்மே. —வித்

7. இரண்டுபெயரொனுமூவரோனுக்கூட்டி
நாதனையும்வரவழைப்பே, னவ
ரண்டையிலாசரு வின்றங்கைபோலிருக்
கற்புதஞ்செய்விக்கச்செய்வே, னோந்து
வண்டப்புருடனை வைத்துக்கிணற்றக்கு
வந்தவள்மாயமும்புரிவேன், முன்
பண்டுமகதலா ளுர்மரியாள்செய்த
பாசாங்குங்கற்றனடியம்மே. —வி

8. சத்துருவின்தாலி யறபட்டுப்போக
பலபலவித்தைகளுண்டு, சவை
மூப்பரைக்கூட்டி வழக்கிட்டுவேசையை
மொட்டையடிப்பதுமுண்டு, செய்த
தீர்ப்புக்கெதிர்த்திடில் பேயை மாணவேல்
தேசம்விட்டோட்டவும்விண்டு, சற்று
மாப்புச்செய்யாமல் நரகக்குழிக்கினை
வைக்கவலதுமுண்டம்மே. —வி

குறிவளம்

விருத்தம்

ற்றிசை புகழும் பெத்லேம் நாட்டினுன் வித்தையெல்லா,
ற்றியே மகிழ்ந்து சொன்ன எழிற்குறவஞ்சி கேளாய்,
ற்றமில் லாத கன்னி மார்களுக்கியம்பு முந்தன்,
ற்றமாய்நற் குறியின் மார்க்கந் துணிவுடன் சொல்லுவாயே.

சிந்து

விச்சித்திரமென்குறி யம்மே, பன்னிரு
நட்சத்திரம்பூண்டந ராதிபப்பெண்ணே.

1. அச்சபதேசமதான, யோர்தா, னூரேடுங் கானுனு
தேசமதெங்கும்,
நிச்சய மாய்க்குறி சொல்லி, நான் பெற்ற, நேரான
விருதுகள் பாராய்நீயம்மே. —விச்

2. முன்னாளி லெகிப்பத்துத் தேயந், தன்னை, முக்கியமாயாண்ட
பார்வோனுவென்ற,
மன்னே னிடத்தினிற் சென்று, அவன், மந்திரி யாகவி
ருந்துகொண்டன்று,
தென்னரும் யாக்கோப்புத் தீர்க்க, னருளிய, தேசிகனுகிய
யோசேப்புச்சிங்கன்,
சொன்ன குறியதி னுலே பெற்ற, சுந்தர மோதிர
மிந்தாபாரம்மே. —விச்

3. அன்பாக நேபுகாத் நேச, ரென்ற, அண்ண லுலகினை
யாண்டருளும்நாளில்,
வன்பாக சாஸ்திரி மார்கள், சொன்ன, மாறுட்டக்
குறிமெத்தப் போராட்டமென்று,
தென்பாக அவர்களை வெட்ட, அந்தச், செய்தியைக்
கேட்டெங்கள் தானியேல்தீர்க்கன்,
கண்பாக மெய்க்குறி சொல்லிப் பெற்ற, ரத்தின சரப்பளி
மெத்த வுண்டம்மே. —விச்

4. எலியாசுத் தீர்க்கனி னுளி, லுல, கெங்கேயுங் கடும்பஞ்ச
முண்டானபோது,
தொலையாத கவலையினுலே, காட்டிற், சுப்பி யொடிக்கவந்த
கைம்பெண்டீராண்டை,

மல்யாதே யெண்ணெயு மாவு, மினி, வற்ருது என்றவ
இத்தாரஞ்சொல்லப்,
டலகாரத் தோசைகள் சுட்டு, அவள், படைத்துப்
படைத்துக்குறி கேட்கலேயோ அம்மே. —விச்

5. நூற்றி பிருபதாண் டாக, எங்கள், கோவாவுத் தீர்க்கனும்
வாகாகச்சொன்ன,
தேற்றாத வாக்குறி கேட்டுத், நவஞ், செய்யாத பாவிகள்
தன்னிரில்மான,
மாற்றமில்லாதவன் விட்ட, சனை, மாரியிலேமகா விரியமாக,
பெற்றத்தி லேதப்பிப்போன, அந்த, எட்டுப்பே ரெங்களுக்
குக் கிட்டத்தானம்மே. —விச்

6. வாலேனும் கினிவைமா நகரை, யொரு, மண்டலம்
காற்பது காலேக்குள்ளாகத்,
தானக அழிவுறச் செய்வோ, மதைச், சாற்றுவாய் நீயென்று
போனவுக்கோத,
ஆனதும் கானம்ப மாட்டே, னென், றப்பாலே யோடிபோர்
சப்பற்குளேக,
மீனுலே பவன்றனைப் பிடித்துப், பின்னும், விட்டுக்
குறிசொன்ன மேன்மைபாரம்மே. —விச்

7. ஏசையா யெரேமியாத் தீர்க்கன், மறை, யெசேக்கியேலுடன்
தானியேல்தீர்க்கன்,
ஓசையா மல்கியாத்தீர்க்க, னுயர், யோவேல்செ பானியாச
கரியாத்தீர்க்கன்,
மோசேசு எலிபாசுத்தீர்க்க, னந்த, முக்கிய சாமுவேல்
தாவீதுத்தீர்க்கன்,
யேசியாத் தீர்க்கனின் மேலே, சொன்ன, மெய்யான
குறிப்பிப்போ கைமேற்பாரம்மே. —விச்

8. கடைப்பிடிக் காலத்தில் கூடும் கெட்ட கள்ளத் தெரிசியு
மெள்ளவே வந்து,
அடுத்தவர் தங்களைக் கெடுத்துத், தின்பண்ட, மாகாது
மணஞ்செய்யப் போகாதென்ற,
மடத்தனப் பேயுட ஆவி, மிஞ்ச, மருளுட போதத்தாவி
குளதுவாக்கித்,
திடனற்ற வீழ்வர் களென்ற, பாவுலு, செப்பின குட்சிக்கு
அவரே சாட்சி. —விச்

கொலோ. 2:21.

பொதுக்குறி சொல்லுந் தரு

விருத்தம்

பானுக்கு ளொளியாய் நின்ற பரமனே தாசுமத்தின்,—
றேனுக்குள் மதுர மான திருமொழிக் குறிசொல் மின்னே,
—வானுக்கு ளொளி யாக வந்தபெத் லேகர் நாட்டி,—
ஞானுக்கு ளுயிர்போ லென்மே லொருகுறி சொல்லு வாயே.

தெந்தினதினதின்னதென்னதெந்தின, தின
தெந்தினதினதின்னதென்னதெந்தின.

வந்தகுறி யெதெனிலுங் கண்டுகொள்ளம்மே, பெந்தன்,
மனதுக்கு எற்கனீ நடந்துகொள்ளம்மே,
மூர்த்தினைப லனிற்பத்தி லொன்றலவம்மே, சற்று,
மோசமட ராப்படிக்கு நன்றுசெய்யம்மே)
சந்தகமில் லாமற்குறி சொல்லுவேனம்மே! பல,
சாஸ்திரிக ளோடெதிர்த்து வெல்லுவேனம்மே,
பெர்துலகு மெச்சுகுற வஞ்சிநானம்மே, யுமக்,
கேக்காதர் பர்தமதே தஞ்சமாமம்மே. —தெந்தி

துப்பதப்ப பரிசுத்த வெள்ளைச்சியம்மே, நித்திய,
சோபனமுண் டாகுதபார் வெள்ளைச்சியம்மே.
செப்பதவஞ் செய்யுமுமக் கின்பமாமம்மே, தவஞ்,
செப்பாத பாவிகட்குத் துன்பமாமம்மே)
செப்பெனநீ யெண்ணினது சித்தயாமம்மே, யருள்,
வேதசத ஞானமக்கு முத்தியாமம்மே,
போப்பல்லஎன் குறியெல்லாங் கைமேலாமம்மே, யுயர்,
பத்தியின லத்தனையு முற்றுமம்மே —தெந்தி

புத்தியுள்ளகன் னியர்க்குள்வாகுரியம்மே, ஞானப்,
புமானு மக்கெதிர தாகுவானம்மே,
வெற்றியுட னுன்னையவனைத் தாற்றுவானம்மே, மண,
வீட்டினுக்குட் சேர்த்துன்மனத் தேற்றுவானம்மே,
நித்திபகன் காட்சியெல்லாங் காட்டுவானம்மே, பெரும்,
நீதியின டையணிகள் பூட்டுவானம்மே.
பற்றியுனை மணஞ்செய்து கொள்ளுவானம்மே, யவர்,
பாதமதில் நீயிருந்து துள்ளுவாயம்மே) —தெந்தி

அக்கிரமக்கார ஆதிப்பாம்பென்றவ னெரி
பக்கினிக் கடலுக்குள்ளே தள்ளுண்பானம்மே,
நிக்கிரக மாகியவன் சேனைகளெல்லா, மந்த,
கெஷ்டூர வுடேகூட விழுகுவாரம்மே,

யக்கிரமா யக்கினியுங் கெந்தகமுமே, பபி,
லோனின்மேலே வானத்தினின் றேவிழுமம்மே,
சக்கரவர்த்தி யேசுநாத ராளுவாரம்மே, யப்போ,
சண்டாள மார்க்கமெல்லாங் கிழதாமம்மே. —தெந்தி

5. பாக்கியமு மக்குமாவி சேடமாமம்மே, கெட்ட,
பாம்புவுட வேதமெங்கும் நாசமாமம்மே
சேர்க்கையுடன் யூதர்குண மாகுவாரம்மே, யேசு,
தேவன்மேல் விசுவாசமாய்ப் போகுவாரம்மே,
ஆக்கமுள்ள முதலுயிர்த் தானமாமம்மே, யப்போ,
அக்கியான மார்க்கமெல்லா மீனமாமம்மே,
வாக்கியங்கள் யாவுநிறை வேறிப்போமம்மே, யதி,
வாழ்வுபெற்று நித்தியமும் வாழ்வைசீயம்மே. —தெந்தி

குறிக்காரம்பத் தரு

விருத்தம்

பாட்டிலே யடங்கா நன்மைப் பரமபெத் லேகர் நாட்டில்,
தாஷ்டிக விசரா வேலின் றளபதி தவிது மைந்தன், காட்டிய
சாய மைந்தான் கருணையக் கினியின் கண்ணன், வாட்டமற்
றுயர்த்தோன் ஞான மாப்பிள்ளை வருவானம்மே.

நானநன்னநானநன்னநானநன்னநானநன்னநான,
நானநன்னநானநன்னநானநன்னநானநன்னநான.

1. விசுவாச மந்திரத்தை நிசமாக நீயுரைப்பாயம்மே மன,
விட்டினைப்பரி சுத்தமாய்க் கூட்டியேசிங் காரித்து
வையம்மே,
தசஞான மந்திரமும் விசையாய்மும் முறைசொல்வாயம்மே
யேசு,
தற்பரன்சொன் னசெபத்தை யெப்போது முச்சரிப்பா
யம்மே,
இசைவான கவிசேட மசையாத புஸ்தகம்பாரம்மே, நன்று,
வீராறப் போஸ்தலமார் மாறாத வாக்கியஞ்சேரம்மே,
திசைதோறுங் கடவுளை யசையாம லேவணங்காயம்மே,
குல,
தெய்வத்தையே நேர்ந்துகொள்வாய் மெய்பத்தையே சார்ந்து
கொள்வாயம்மே.

2. வித்தகன்ச ரீரத்துக்கொப் புற்றகோதும்பை யப்பம்வை
யம்மே, ஞான,
விந்தைசேரு முந்திரிகைக் கந்தரச முங்கொண்டுவையம்மே,
அத்தனின்பழைய யேற்பாட்டின் புஸ்தகத்தையு மெடுத்தா
வம்மே, சுத்த,
ஆசாரி சால்வையினைக் கூசாம லருகில்வைப்பாயம்மே,
சத்தியன் றவிதுபார்த்த புத்தியின்குறி கைகண்டதம்மே,
திருச்,
சன்னதிக் குறிகளாலே பின்னபேத கம்வராதெனம்மே,
மெத்தவொளி வாமார்ப்பதக் கத்தையுங்கவனித்துக்கொள்
ளம்மே, யதின்,
மெய்யான ஊரிந்தும்மிம் பொய்யாத குறிசொல்லுமம்மே.

3. நெற்றியிலு மார்பிலேயுங் சுத்தனின்சிலு வைவரையம்மே,
யொரு,
நேராக நின்றுகன சீராகப் பணிந்துகொள்ளம்மே,
பத்தியாய்க் கிறிஸ்துவின்கா யத்தையுந்தியா னித்துக்கொள்
ளம்மே, தேவ,
பத்திலட்ச ணத்தையுமனத்தினி னைத்துக்கொள்வாயம்மே,
புத்தியாய்ச்சு றுக்கிலேத வத்திலேமு யற்சிசெய்வாயம்மே,
நரர்,
போற்றுதற் கரியவேத சாஸ்திரத்தையுஞ் சற்றுப்பாரம்மே,
முற்றிலுங்கு ணத்துக்குவந் துத்தமம னஸ்தாபப்படம்மே,
யந்த,
மோசேயின் சடங்கெல்லாம் பேசாமல் விட்டுவிடாயம்மே.

கைகாட்டச் சொல்லுந் தரு

கலித்துறை

விண்ணுடர் பாடிய பெத்தல கேமில் விளங்குமதிப்
பெண்ணே தவக்கொடி யேகற்பி லோங்கிய பேரின்பமே,
மண்ணுளும் ராக்கினி யேயுயர் ஞான மனோன்மணியே,
கண்ணே மலர்க்கரங் காட்டாய் மனக்குறி காட்டுதற்கே.

நான நன்ன நன்ன நான நன்ன நன்ன,
நானநன்ன நானநன்ன நானநன்ன.

1. தேவ முத்திரையிட்ட கையைக்காட்டாய், வளர்
சிலுவை முத்திரையிட்ட கையைக்காட்டாய்,
காவிற் கனிபறித்த கையைக்காட்டாய், யேசு
கத்தனை யபிஷேகித்த கையைக்காட்டாய்.

கூவிக் குவித்து நிற்கும் கையைக்காட்டாய், ஐயைக்
கும்பிட்டர்ச்சனைசெயுங் கையைக்காட்டாய்,
சாவற் றுயர்ந்தபெத்லேம் நன்னகர்க்குள்ளே, வந்த
தருமசஞ் சீவியேயுன் கையைக்காட்டாய்.

2. தோத்திரச்செபமாலைதொட்ட கையைக்காட்டாய், தேவ
சுதனுக்கமுதளித்த கையைக்காட்டாய்,
சாத்திரமெல்லாம்வரைந்த கையைக்காட்டா, யொளிர்
தற்சிசின் ரத்தினத்தின் கையைக்காட்டாய்,
பாத்திரம றிந்துசெய்யுங் கையைக்காட்டா, யேசர்
பண்டுதந்த பொற்சரியின் கையைக்காட்டாய்,
காத்திர விறைத்தவிது கோத்திரத்தில்வாழ், தேவ
கன்னியா ஸ்திரீயேயுந்தன் கையைக்காட்டாய்.

3. சதுளைக மணிகளைப்பற்றுங் கையைக்காட்டாய், சீவ
தண்ணீர் வாங் கிக்குடிக்குங் கையைக்காட்டாய்,
திலதவொளித்திடங்கொண்ட கையைக்காட்டாய், புத்திச்
சித்தியாலெண்ணெய் கொண்டுபோங் கையைக்காட்டாய்,
வலியஅப ரஞ்சியின்மின் கையைக்காட்டாய், ஞான
மணமோதி ரந்தரித்த கையைக்காட்டாய்,
நிலை துயர்ந்தபெத்லேம் ராசவிடம்வாழ், சதா
நித்தியசோ பனமேயுன் கையைக்காட்டாய்.

4. மட்டில்லாத ஆகாமியுட கெட்டநடக்கை, முழு
மாயமென்று ஞாயமாக வூரெங்குஞ்சொல்லி,
பட்டதிக்கி ல்விசாரி யாகத்திரிந்து, மேசு
ஆண்டவர்க்கு மணமாலை பூண்டவளென்று,
திட்டமாகச் சொன்னஅவள் வாயைக்கிழித்து, ஆகாமி
தேடித்தின்னும் வேசையென்று பாடியறைந்து,
சட்டமாகக் குலஸ்திரீ நான்தானென்று, வந்த
சபையின் குமாரத்தியே கையைக்காட்டாய்.

கைக்குறி சொல்லுந் தரு

கலிப்பா

வானமண் டலம்பரவும் வல்லவர் பெத் லேகர்வெற்பில்,
ஞானமிஞ்சு சியோன்றன் ஐயகியின் கைபார்த்து,
மோனவஞ்சி யப்பமுடன் முந்திரிகை யென்றதிருப்
பானமுண்ட வாய்ாற் பரிந்துகுறி சொல்வாளே.

தினதேர்தினத் தினதேர்தினத் தினதேர்தினத் தினனு,
தினதேர்தினத் தினதேர்தினத் தினதேர்தினத் தினனு.

அன்னியன்னித் தருமமெல்லாஞ் செய்யுமிந்தக்கையே,
அருளான கிருபைநதி பெருகுமிந்தக்கையே,
தன்னயமற்று உபகாரம் செய்யுமிந்தக்கையே,
கற்றவர்க்குப் பணிவிடைகள் செய்யுமிந்தக்கையே,
தென்றமிழ்ப் பாவலரைப் பரிசளிக்குங்கையே,
சித்திரமாய்ப் புஸ்தகங்கள் வைத்திருக்குங்கையே,
வெள்ளைநிலைத் துகில்தனைக் கொய்துடுக்குங்கையே,
மேலான தன்மையெல்லாம் விளையுமிந்தக்கையே. —தின

இல்லார்க்குக் கேட்டதெல்லாங் கொடுக்குமிந்தக்கையே,
ஏழைகளை யாதரித்துத் தாங்குமிந்தக்கையே,
பொல்லாப்பில் விழுந்தவரைத் தூக்கிவிடுங்கையே,
பொற்பாம மோட்சவழி காட்டுமிந்தக்கையே,
நல்லாரைக் கண்டவுடன் ஸ்தோத்திரஞ்சொல்கையே,
[illegible]ணைபார் துட்டர்களை மட்டில்வைக்குங்கையே,
சல்லாப மாய்நடந்து வீசிவருங்கையே,
சகலசம்பத் தும்பெருகித் தழைக்குமிந்தக்கையே. —தின

பாப்பதற்றுப் பேய்களுக்கும் நாய்களுக்குங்கெட்ட,
வாயருக்குந் தீயருக்கு மதம்பொழிந்தபேர்க்கும்,
எப்பவனுக்கும் ஆப்பதுக டாவுமிந்தக்கையே,
பரிகாசக் காரர்பல்லைத் தகர்த்துடைக்குங்கையே,
காப்பிரியப் பாவிகட்குச் சாபமிடுங்கையே,
சத்தியவி ரோதிகளைச் சங்கரிக்குங்கையே,
ஒப்பெறு மடாமையைத்தான் மயிரறுக்குங்கையே,
முட்டாள்சத் துருக்கள்கைக்கு மெட்டாதகையே. —தின

குறவஞ்சி தெய்வத்தை நேரும் அகவல்

விருத்தம்

மிக்கதோர் குறிகள் பார்க்கில் விளங்குகை பிடித்தோனேக,
சக்கரா திபதி யாவன் றருமபூ ரணியு நீயே, [டில்,
பொக்குமிக் குறிபொய் யாதென் றொருவர்பெத் லேகர்நாட்
முக்கியக் குறமின் மாது முதல்வனை வணங்கலுற்றாள்.

1. பொன்னகர்க்கிறைவா புவியெல்லாம்புரப்பாய்
மன்னர்தங்குலத்தாய் வானவர்க்கிடத்தாய்.

2. ஆறிலட்சணத்தா யட்டமெய்க்குணத்தாய்
மாறிலாவரத்தாய் மணிமுடிதரித்தாய்.

3. வேதநாயகனே விமலசற்குருவே
ஒடுங்காத வொருவனேசரணம்.

4. கர்த்தனேசரணக் கடவுளேசரணம்
அத்தனேசரணம் அறிவேசரணம்.

5. சத்தியசொரூபா சகலகாரணத்தாய்
முத்தியங்கடலே முதல்வனேசரணம்.

6. மாசிலாதவனே மரித்துயிர்த்தவனே
யேசுநாயகனே யென்முன்வந்துதவாய்.

7. பத்தர்கட்குறவே பராபரப்பொருளே
வித்தகானனத்தில் வெளிப்பிறந்தவாய்.

8. சாத்திரத்தடங்காய் சக்கரத்தடங்காய்
கோத்திரத்தடங்காய் குறிபிணுக்கடங்காய்.

9. ஒன்றிலுமடங்காய் ஒப்பிடவடங்காய்
மின்றெரிக்கெளா யேசனேபோற்றி.

10. முப்பொருளவனே முதல்வனேபோற்றி
அப்பனேபோற்றி அண்ணலேபோற்றி.

11. தேசுவாசனத்தாய் செருக்கிலாசனத்தாய்
தேசவித்தகத்தாய் தெய்வபுள்ளகத்தாய்.

12. நசரையம்பதியாய் நாரிலன்பதியா
மசரியல்குலத்தா பெரும்வியாகுலத்தாய்.

13. அதர்சங்கத்தாய் சொன்னிசக்கத்தாய்
பாதகைப்படையாய் வாகைப்படையாய்.

14. திருவைபாசனத்தாய் இலேசபோசனத்தாய்
பொறுமைநெஞ்சடைத்தாய் பொறிப்பகையுடைத்தா

15. ஆதவாசகத்தா பரிபவாசகத்தாய்
பாதபங்கயத்தாய் பரமபங்கயத்தாய்.

16. ஆறுமுத்திரையாய் அடக்குமுத்திரையா
மீறுசயம்பத்தாய் விளம்பிபபத்தாய்.

17. பெத்தலேக்கடலே பெருமலிக்கடலே
பத்திராசனத்தாய் பாம்பேர்சனத்தாய்.

18. வெற்றியின்கொடியா வெறிமருட்கொடியா
சற்றுமண்டலத்தாய் சோதிமண்டலத்தாய்.

19. சிறுமையின்மாண்டாய் செகமெலாமாண்டாய்
வலியசக்குடையா வானம்நன்கொடையா.

20. சித்தினைக்கடந்தாய் சிந்தனைக்கடந்தாய்
வந்தனைக்குவந்தாய் மாட்டகத்துவந்தாய்.

21. உன்னையேபணிந்தே னுனக்கியானடிமை
யென்னையேகேட்டிங் கெழுந்துவந்துதவாய்.

22. தானியேல்தனக்குத் தயவுசெய்தருளு
மானுவேலேநீ வந்தெனக்குதவாய்.

23. சூசைபார்வோனின் சொற்பனம்விடுக்கப்
பேசுவித்தவனே பெலத்தெனக்குதவாய்.

24. தவிதரசனுக்குத் தனித்தெல்லாக்குறியுங்
கவனமாய்ச்சொன்ன கடவுளேயுதவாய்.

25. மோசையென்பவனை முக்கியப்படுத்து
பேசியாவேயில் வேளையிலுதவாய்.

26. சாமுவேல்தன்னைத் தனித்தழைத்துரைத்த
சாமியேயெனக்கித் தருணம்வந்துதவாய்.

27. இசரவேல்சாதிக் கெய்துவதெல்லாம்
நிசமதாய்ச்சொன்ன நிருபனேயுதவாய்.

28. தீர்க்கருக்கெல்லாந் தெரிசனஞ்சொன்ன
மார்க்கமாயெனக்கும் வந்தருள்செய்வாய்.

29. காட்டியகாட்சிக் கருணைவாரிதியே
தேட்டமாயெனக்குந் திருவுளம்பற்றாய்.

30. வளங்களித்துயர்ந்த மட்டிலாதவனே
விளங்குமெய்க்குறிக்காய் வேண்டினேனுன்னை.

31. எனக்குமுன்னிருந்த இளந்தைமோகினிப்பெண்
மனத்துதினுள்நினைந்தது வானமோபுவியோ.

32. தவத்தினினினைவோ தருமசிந்தனையோ
நவத்தினுக்குயர்ந்த ஞானநன்மைகளோ.

33. வரத்தினைப்பெறவோ வரிசையதுறவோ
பரத்தின்மேற்கண்ணோ பரமகாரியமோ.

34. பொருளைவேண்டுவதோ பூரணகாரியமோ
வருகுழோர்குறியோ வர்த்செய்திகளோ.

35. துக்கசஞ்சலமோ சோதனைப்படலோ
தக்கபொற்பணியோ சரீரநன்மைகளோ.

36. தோழிமேல்மயலோ சுகத்தைவேண்டியதோ
ஊழியம்வாழ்க வுகந்தவாஞ்சையதோ.

37. எவரெனுமிவளுக் கிடறுசெய்ததுவோ
பவவினைப்பேய்கள் படுத்தியதுயரோ.

38. வானவனிவட்கு மயல்விடுத்ததுவோ
தானிவளவர்மேற் சார்ந்தஇச்சைகளோ.

39. ஏதெனுங்கைவிட் டேகியவிதமோ
காதினிற்பணியோ களவுபோனதுவோ.

40. பேரின்பக்காதலோ பின்னென்றுதானே
வாரிமேனடந்தான் மணஞ்செய்யமகிழ்ந்தோ.

41. பாம்புடபுரட்டோ பசாசுடமிரட்டோ
காப்புவைத்ததுவோ கலக்கமேதுளதோ.

42. சொல்லியகுறிக்குட் டோகைதானினைத்த
நல்லதோர்குறியை நயந்தருள்வீரே.

நினைத்தகுறி சொல்லுந் தரு

விருத்தம்

வெஞ்சினத் தரத்தைத் தேய்த்த விமலர்பெத் லேகரன்பு
மிஞ்சுது பரிசுத் தாவி விளம்புது பேய்க ளெல்லா,
மஞ்சுது கருக்து மேலு மாகுதாஞ் சுகள்வந் தென்முன்
கொஞ்சுதென் மனது கூடக் குதிக்குது குறிகே ளம்மே

தெந்தினதினதினனதெனனதெந்தின, தின
தெந்தினதினதினனதெனனதெந்தின.

1. (வஞ்சி.) குறிசொல்லக்கேளம்மேகுறிசொல்லக்கேள்,
யூதர் கோத்திரக்கன்னியாஸ்திரீ யேகுறிசொல்லக்கேள்,
அறிவி லுயர்ந்த பெத்லேம் நன்னகரில் வாழ், சீயோன்
அவையின் குமாரத்தியே குறிசொல்லக்கேள்,
மறையோ ரெழுதிவைத்த வார்த்தையின்படி, நீச
வாகனத்தின் மேலேயேசு ராசனும்வந்தான்,
பொறைமிகுங் கோதையே நீ பந்தடிக்கையில், அவன்
புறத்தளங் கண்டுபயம் பூண்டதாமம்மே.

2. (மோகினி.) இல்லையில்லைக் குறவஞ்சி யேகாந்தக்காரி,
யென்முன்
னெக்கசக்கமான வார்த்தை யெப்படிச்சொல்வாய்,
நல்லநல்ல குறியெல்லாஞ் சொல்லியே வந்தாயிப்போ,
நடுவிலெல்லாங்கலைத்துக்குலைத்துப்போட்டாய்,
தில்லுமுல்லு தாகச்செல்லக் கல்விக்குறிகள், கொண்டு
செப்பவாறு யானதற்கிங் கொப்புவுமாட்டேன்,
வெல்லையெல்லைச் சேனைகாணி யில்லையெனக்கே,
விந்தையென்ற றிந்துவந்து தந்துசொல்லடி.

3. (வஞ்சி.) நீசமறி யேறிவரு மேசுநாயகர், அவர்
நித்தியவங் கணக்கார ரிஸ்திரீகளில்,
தேசுதிகழ் மங்கையேநீ கண்டுமோகித்தா, யது
செப்பப்பயந் தேயிருந்தேன் செப்புவேன்முன்னே,
மாசதனு காதபெத்த லேகமலைமே, விது
மாயமடி மாயமடி மயக்கக்கள்ளி,
மேசியாவி னன்பினால்நீ காய்ச்சல்கொண்டது, மற்ற
வித்தையெல்லா நீபடித்த சுற்றறியேனோ.

4. (மோகினி.) என்னசொன்னாய் குறவஞ்சி சற்றுமெண்ணமற்
புத்திக்,
கிசையாதவார்த்தையெல்லாம் வசையோடொக்கும்,
நன்னயஞ்சேர்கன்னியென்று நானிருக்கையி, லென்னை,
நாணமற்றுக்காதல்மிஞ்சிக் காணுதேயென்றாய்,
பின்னையும்பே ரின்பச்சுரத் தண்டனையென்றாய், தம்பி,
ராளின்சிநே கத்தாவல் கொண்டனையென்று,
யுன்னியுன்னி சொன்னகுறி யொப்பிப்பாயானா, லவ
னாரும்பேரு மேதென்றெனக் கோதடிபெண்ணே.

5. (வஞ்சி.) ஏதடி யுனைப்போலெனக் கறிமுகமோ, அவ
னிடம்பேருஞ் சொல்லுவதுங் குறிமுகமோ,
காதல்மிஞ்சி நீவிடுத்த தூதுகண்டேனே, மாலை
கன்னிவாங்கப் போனஅந்தச் சன்னைகண்டேனே,
சாதனையாய் நீசிநேகக் காய்ச்சல்கொண்டது, முந்தன்
றந்திரமெல் லாங்கர்த்தரின் மந்திரஞ்சொல்லும்,
பேதகமற் றின்னமுனக் காகச்சொல்லுவேன், அவன்
பெண்சேர வல்லபெரு மாப்பிள்ளையம்மே.

6. (மோகினி.) பெண்சேரவல்லதிறவானவனென்று, மெந்தன்,
பெரியமாப் பிள்ளையென்றும் பேசுவையோடி,
கனைசேர மயங்குமுன் பெத்தரிக்கமோ, வுந்தன்,
கல்விழுந்த மோகொழுந்த வாயின்மதமோ,

தின்சேரும் பெத்லகேம் நன்னகர்க்குள்ளே, மெத்தத்
தித்திரிப்பாய்ப் பேசவேண்டாஞ் சித்திரக்கள்ளி,
விண்சேர மயக்காம லுண்மைசொல்லடி, ஞான
விசுவாசச் சிங்கியென்ற வேடிக்கைக்காரி.

7. (வஞ்சி.) இந்நேர மட்டுநீசொன்ன தெல்லாம்பொறுத்தேன் சடைக்,
கிழுக்துவிடப் படாதென் றெண்ணி யொறுத்தேன்,
முன்னாலேபெத்தலேகாதர் விட்டதுதிலே, யுந்தன்
முக்கிய அரசன் மகா மெத்தனவரா,
யன்னல்லோ நீச வாகனத்தின்மேலேறி,
யுனக்கென்ற வாருமென்று சியோன்மட்குச்,
சொன்னாலே சொல்லுங்கோவென்று சொல்லிவிடுத்த, அன்று,
தொட்டுக்காதல் கொண்டாயல்லோ சுவிசேடப் பெண்ணே.

8. (மோகினி.) உள்ளகுறி வெளியாக்கிச் சொன்னவுடனே, பிவி
யொழிப்பதெப்படியென்று களிப்புக்கொண்டு,
வள்ளல்பெத்த லேகம்நாதர் பேரெடுக்கவே, ஞான
மங்கையர்சி யோன்குமாரி செங்கைகுவித்துத்,
துன்னிமகிழ்ந் தக்களிப்ப தாகவணங்கிச், சிவ,
துணியைடக்ச் சத்தினாலே நாணிக்கவிழ்ந்து,
கின்னைமொழிபோற் குளறிக்கொஞ்சிக்கொஞ்சியே, மனக்
கெம்பீரத்தி னவ்விருந் துடம்புபூரித்தாள்.

9. (வஞ்சி.) பெத்தலேகம் ராசனுனைக்கொள்ளவேவாரு, னுனை,
பேணுமுந்த னணயெல்லாங் காணவேபோறேன்,
சுத்தவெள்ளைத் துகில்கூறை யொன்றவருகுங், தேவ
துப்பஅப ரஞ்சிச்செப மாலைவருகும்,
உத்தபரி யத்துடமை யாவதும்வரும், நன்மை,
யுபருமொ னுபாணப் பெட்டியும்வருஞ்,
சத்திபசி லுவைமுத்திரை மோதிரம்வரும், பல
சம்பத்தோ டிருப்பைநீபே ரின்பத்தாலம்மே.

10. (மோகினி.) என்று சொன்ன ஞானக்குற வஞ்சியை நோக்கி, நல்,
பெருசலேமின்குமாரியேது சொல்வாளாம்,
நன்றுமிருக் குறிசொல்ல வுன்றனைப்போலே, மிக்க
நாட்டிலேகா ணேனென்றணி பூட்டிமிதமாய்ப்,

பொன்றுகினும் வேண்டினபொருளுமளித்து, இரத்தினப்
பூடணத்தால் முற்றினுங்சிங் காரித்துவிட்டு,
ஒன்றினங்கு றியெனக்கு ரைக்கவேவேணுஞ், சபைக்
குற்றதலைப் பசாசுவென்றிங் கோதுவதேனே.

விருத்தம்

கன்மலைப் பெத்தலேகம் நாதாருள் பெறவிசைந்த நாரிகூந்தற்,
பொன்மாலை மணிமாலை பூமாலை செபமாலை பொலிவாய்ப் பூண்ட,
மின்மாலைக் குழலியர்கள் விரைந்துவா ஞானவிசு வாசச் சிங்கி,
தென்மாலைக் குறிகள் சொல்லி நன்னகர் பட்டணமுழுதும்
திரிகுவாளே.

சிங்கன் வரவு

விருத்தம்

சத்தியத்தின் கச்சைக்கட்டி நீதியின்மார்க் கவசமற்றுஞ்
சனுவாய் பூண்டு,
எத்திசையி னலகையெல்லாம் பயந்தலறக் கூவிவிரைந்
தெதிர்ந்து நோக்கி,
சந்தகஞ்சேர் சுவிசேட ஞானவலைக் கண்ணிகளும் வெகுவாய்க்
கொண்டு,
சத்தவு பதேசியெனப் பெத்தலே மலைக்குழவன் றேன்றி ஞனே.

சிந்து

வந்தானையே, ஞானச்சிங்கன்
வந்தானையே.

1 வந்தானையே பெத்தலேகேமில் வளர்கிறிஸ்தேசுவி னுமத்
தைப்போற்றித்,
தந்தானத்தான தனைதகுதத்திமி தய்யச்செஞ்சணத்தொங்க
தகிர்தத்தித்திமியென்று,
தாளத்துடனேபாடி யாடிச்சபைநடுவே. —வந்

2 பத்திக்குவித்தாய் முளைத்தபராபரன் பாதத்தைநாவோத்துப்
பாடிக்கொண்டாடியே,
தத்தித்திமித்தெய்யத் தாதிந்தத்தாவென்று,
சகலர்க்குமருளிட்ட கிருபைக்கு முடிவற்ற சாமிக்குகந்த
சுவி சேடச்சபைநடுவே. —வந்

3. தேடிப்பராபரன் பாதத்துன்னே நித்திய சிவனைக்காணத்தன்
சிந்தையெல்லாம்வைத்துப்,
பாடிப்படித்துக்கெம் பீர்த்துப்பூரித்து பாமொத்த பதமொத்த
பயனொத்த பணிவொத்த,
பயமொத்த பழுதற்ற பரிசுத்த சபையுக்குள். —வந்

4. வானோர்கள்போற்றிய ஏகசக்ராதிபன் மாமறையைக்கெதி
மாகவைத்துக்கொண்டு,
தானுதனுதத்த னுதர்தனுவென்று தமிழுக்குள் மிகமுக்கிய
கவிகட்டி நடமிட்டு,
சதுரிட்ட வதியுத்தம சபையுக்குள் விபரிக்க. —வந்

5. ஆதிபராபரன் கற்பனைப்பெட்டிமுன் னர்ச்சிட்டதாவீது
ஆடினவாய்மைபோல்,
தாதிமித் தாதொங்கத் தெய்யத் தளாங்கென்று சதிபிட்ட
கழுதுக்சன் தலைவெட்டி விருதிட்டுத்,
தடையற்ற விடைபெற்ற சபையுக்கு ளறிவிக்க. —வந்

6. மேட்டிமையாகிய சத்துருபசாசென்ற வேசியாபா
ளேடேசரியென்று,
தாஷ்டிக மாய்ச்சொன்ன செய்தியைக் கேட்டந்தத் தாசிக்கு
ஞாபத்தோ டேயுத்திபோதிக்க,
வேதச் சுவிசேடத்தை பேழைக்குள் ளேவைத்து. —வந்

சிங்கன் வளம்

விருத்தம்

சாத்திர மாறுந் தாண்டித் தானதாய் நின்ற வாதி,
சூத்திரன் றனைக்கொண் டாடித் தோன்மறை வசனத்தாலே,
நேத்தியாய் மனுவை யெல்லாம் நித்திய வழியிற் சேர்க்கும்,
காத்திசை புகழும் ஞானச் சிங்கனும் நான்றானேயே.

சிந்து

ஞானச்சிங்கனே, குறப்பயல்
ஞானச்சிங்கனே.

1. ஞானச்சிங்கனே கானக்கவிலேயவின் காட்டுக்குயர்
பெத்தலேம் கோட்டைக்கரசனை,
வானத்திருந்துவந்த மானத்துரையைக்கண்டு,
மகிமைப்படுத்தியக மகிழ்ந்து பணிந்துகொள்ளும். —ஞான

2. சக்கரவர்த்தி தாவீ தேந்திரன் மெச்சவருஞ் சங்கையுள
வானோர்கள் துங்கன்பரமநகர்,
முக்கியமானதேவன் பக்கிஷமாகத்தங்க முதல்வனேசுநாத
அதிபன்வளருநாட்டில்,
திக்கெல்லாம்புகழச் சிக்கதாய்மனுவைச் சேர்த்துப்
பிடிக்கும்வலை பார்த்துப்பணிதிசெய்து,
கைக்குள்வைத்துக்கொண்டு தக்கநேரங்களிற் கண்ணி
வைத்துருக்க ளெண்ணிப்பிடித்துக்கொள்ளும். —ஞான
3. குருவுஞ்சிஷனையுங் கூட்டிப்பிடிக்கும்வலை கொடியபேரை
விழுக் காட்டிப்பிடிக்கும்வலை,
பெருமையோரைமிகத் தாழ்த்திப்பிடிக்கும்வலை
பேதையோரையரு ளாக்கிப்பிடிக்கும்வலை,
தருணமானபோது அறிவுள்ளோர்களையுந் தர்க்கத்தால்
மடக்கிச் சிக்கிக்கொள்ளும்வலை,
அரசரமைச்சரையு மடுத்துப்பிடிக்கும்வலை,
அனைத்துங்கொண்டயனை நினைத்துத்தோத்திரஞ்செய்யும்.
—ஞான
4. மாயையானபல லோகவாழ்வின்வலை மண்ணினைசைவலை
பொன்னினைசைவலை,
தோகைக்காமமய லாசபாசவலை சூழுமலகைவைத்த
பாழும்வலைகடன்னில்,
தேகமோடுசிக்கி ஆவிமாய அழல் சேருவோர்களைக்
கூர்மையோடுகண்டு,
தாகமாகயேசு நாதசுவாமியன்று தந்தவலையைக்கொண்டு
எந்தனிடத்துள்ளாக்கும். —ஞான
5. ஆயத்துறையில்வாழ்மத் தேயைப்பிடித்தவலை அப்போஸ்
தலரையொரு மிப்பாய்ப் படுத்தவலை,
ஞாயத்தாலொருநாள் மூவாயிரச்சில்வான
நரரைவாரிக்கொண்ட மலையன்பெரியவலை,
மாயப்பெருமைப்பரி சேயச்சவுலைக்கண்ணை
மயக்கித்தமஸ்கிற்போகும் வழியிற்பதிவுவைத்து,
நேயத்தோடிழுத்த தேவசெயத்தின்வலை
நேத்தியானவலை சேர்த்துவைத்துக்கொண்ட. —ஞான

மந்திர வளம்

தந்திர வலகை செய்த சதியினைக் கடந்தி டேறச்,
சுந்தர மிலங்கும் பெத்லேந் தென்னகர்க் கரசாய் வந்த,
எந்தையா மேசு நாத ரிசைத்தெனக் கியம்பும் ஞான,
மந்திர செபங்க ளெல்லாம் வகையுட னறிவேனையே.

மந்திரம்பானறிவே, னடைபே
மந்திரம்பானறிவேன்.

1. மந்திரம்பானறி வேனேதுநாயகன்
மானிடனானபெத் லேகம் நன்னாட்டினில்,
தந்தலைநயுட னேபொருதிச்செயந்
தான்கொண்டுமேவவுஞ் சாகாதிருக்கவும்.

2. ஆகடியாருட னேசருவேசனை
யர்ச்சனைசெய்யாமல் துற்சனப்பேய்களைத்
தாருடன்பணிந் தேவருமக்கியானச்
சண்டாளமார்க்கத்தார் அண்டபரன்றனை,
வேகருடன்றொழு தேபண்புசெய்யவும்
விறஞ்சமணர் துலுக்கர்மதத்துடன்,
மாயமிகும்அறி யாணப்பதிதரும்
வாய்மையதாய்ச்சத்திய வேதத்துளாகவும்.

3. வேதத்தைக்கேட்டு மதின்படிசெய்யாமல்
மீறிநடக்கின்ற தாறுமாறுக்காரர்,
சேதத்தைக்கண்டுணர்ந் தேதம்மனது
திரும்பிக்குணப்பட்டுத் தெய்வத்தைப்போற்றவும்,
பாதத்துளானோர் மறுபிறப்பாகவும்
பாவத்தைச்செய்தவ னீதத்தைச்செய்துமுன்,
னுதத்தினால்வந்த சாபத்தினாசனை
யண்டிக்கொண்டுபோ மண்டலத்திற்செல்ல.

4. காலத்துன்மாலையுன் மந்திரம் நற்கரு
ணைவிசுவாசமுங் கற்பனைமந்திரமு,
மெய்ப்பரமண்ட லச்செபம்போசனம்
செய்செபம்பின்செபந் தீட்சைவிதிச்செபம்,
பாலர்படிக்கின்ற கூடத்துமுன்செபம்,
பண்பானபின்செபம் பாவசங்கீர்த்தனம்,
ஆலயத்தின்றவக் கச்செபம் பிற்செப
மல்லாற்பெரும்பாவ சங்கீர்த்தனமென்ற.

5. மூன்றுன்மோசேமுனி வரிதிரண்டாக
முற்றம்பிரிய வருக்கச்செய்மந்திரம்,
மன்னலைத்தந்தரு ளச்செய்தமந்திரம்,
மாமலைபிற்சல மேவப்பண்மந்திரம்
பின்னுன்போர்தானைக் கடந்தெழுமந்திரம்
பேரெரிகோநகர் வீழச்செய்மந்திரம்,
நன்னலேசந்திரன் சூரியனோடாமற்
ஞனடுவானத்தில் மேனிற்கச்சொன்ன.

6. அக்கினிகட்டின மூவரின்மந்திரம்
ஆசாப்புந்தாவீதும் பாடினமந்திரஞ்,
சிக்குக்கெபியினிற் சிங்கத்தின்வாய்தனைச்
சித்திரமாய்க்கட்டுந் தானியேல் மந்திரம்,
உக்கிர அக்கினி வீழ்ந்தழிவாகவே,
யுற்ற எலியாசு பண்ணின மந்திரந்,
தக்கதெரிசிக ளப்போஸ்தலன்மாருஞ்
சாற்றினதுமெனக் கேற்றதுமாகிய.
—மந்

7. மூன்றரையாயன மாய்மழைபெய்யாமல்
முக்கியமாயெலி யாபண்ணுமந்திரந்
தோன்றும்பின்னையு மழைபெய்யப்பண்ணின
சூட்சத்தின்மந்திரம் வாச்சத்தின்மந்திரம்,
ஊன்றியபாதகர் மேலக்கினிவிழுந்
தொக்கநிருமூல மாகச்செய் மந்திர,
மீன்றன்வயிற்றினி லேயோனுப்பண்ணின
விந்தையின்மந்திரம னந்தமனந்தமாய்.
—மந்

முந்தனிசுவாச மந்திரத்தாலுயர்
முன்னீரில் விண்டை[1] விழச்சொல்லுமந்திரம்,
ஐந்தப்பத்தைக்கொடுத் தையாயிரம்பேருக்
கற்புதமாய்ப்பொசிக் கத்தந்த மந்திரஞ்,
சிந்துவின்மேலே நடந்திட்ட மந்திரஞ்
செத்தபின் லாசர்க் குயிர்தந்த மந்திரம்,
மாய்மாலஞ்செய்து பிரவஞ்சவாழ்க்கையை
வண்மையதாயெண்ணித் தனமைக்குடக்தைபாய்த்,
தேமாசுவென்றவன் போனுப்போலேபக்கி
தெத்திப்போட்டெந்தனை யெத்திப்போட்டந்தாலே.—போபி

பாரினிலக்கியான மார்க்கத்தைவிட்டுப்
பராபரன்பேரினிற் பத்திநம்பிக்கையாய்க்,
சீருடன்மெஞ்ஞான ஸ்நானம்பெற்றுத்தவஞ்
செய்துபரிசுத்த மாய்நடந்துத்தம,
வீரியத்தோடு பிசாசுடன்போர்செய்தெவ்
வேளையிலேயும் விழித்துச்செபம்பண்ணி,
நேருடனின்று கிறிஸ்துவைப்பற்றிய
நீதிமான்கள்செய்த பாவம்போனுப்போலே. —போபி

9. அந்தியுஞ்சந்தியு மர்றுபொழுதினு
மாண்டவன்பாதத்தை யாய்ந்துணர்ந்தன்புடன்,
சிந்தையிற்கொண்டு தியானித்துருக்கமாய்த்
தேசச்சனங்கட்கெல் லாமுபதேசித்துச்,
சந்தோடமாகப் பதங்கள்வண்ணங்கள்சங்
கீதங்கள்கீதங்கள் வேதங்கள்பாடியே,
வந்தனையாய்ப்புகழ்ந் தேற்றிக்கொண்டாடிய
வானர்க்குவந்த வினைபறந்தாப்போலே. —போயி

10. கோவிற்சமையத்திற் கூட்டத்தினின்று
குருவுமெழுந்து பிரசங்கஞ்சொல்லையில்,
தேவவசனத்தைக் கேட்டுணராமற்
செவிட்டுவிரியன்கள் போலேயிருந்தபின்,
ஞவலாய்ப்பிள்ளையைச் சாக்கிட்டுப்பின்ஞென்றுக்
காகவுந்தீவிர மாயெழுந்தங்கவ,
ரேவலுக்காய்வேண்டிப் போறதாய்க்காட்டியே
எட்டிநடந்து கடந்தோடிப்போனுப்போல். —போயி

11. நன்மைவந்தாற்கன சந்தோடமாகவே
நாடிச்சுகித்துப்பிர தாபித்துப்பற்பல,
துன்மைவந்தாப்போலே யோப்பின்பெண்சாதிபோல
தூற்றியநேர்தெய்வத் தைப்பழித்தேசியே,
தன்மறைவிட்டகன் ஞேடிப்புறத்தியிற்
சண்டாளலோகப் பொருள்தனைநாடியே
வன்மனமாய்மாலக் காரக்கிறிஸ்தவர்
வந்தவழியேதி ரும்பிப்போனுப்போலே. —போயி

12. திக்கிலெழுதலே பத்துக்கொம்புள்ள
சிவப்புமிருகத் துவப்புடனேறிக்கொண்,
டக்கிரமச்சிவப் பாடைரத்தாம்பரத்
தாற்றுலுக்கிப்பொன்னி ஞல்மினுக்கிக்கன,
வுக்கிரமான அசுத்தப்பொற்பாத்திர
மொன்றையுந்தன்கையி லேபிடித்துப்பினும்,
வெட்கமில்லாமது பானத்தில் பாவி
வெறிகொண்டுவேசித் தனஞ்செய்யப்போனுப்போல். —போயி

சிங்கன் புலம்பல் தரு

விருத்தம்

பாம்புவியு மதிளிறைந்த பொருளுஞ் செய்த பாடாபணை வணங்காமற் பலபேய் தன்னை, வரம்புரியு மென்று நினைத் தகந்தை யாக மதியழிந்து நினைவழிந்து மயக்கங் கொண்டு, காங்குவித்து வணங்கியொரு பலனுங் காணுக் கசடருக்கே துரைத்தாலுங் கருதா ரென்று, சிரங்கவிழ்த்து மரித் துயிர்த்த பெத்த லேகர் திருவுளத்தாற் சிங்கிதனைத் தேடி னுனே.

1. அன்னப்புளுவுக்குக் கண்ணியைவைத்துநான்
வன்னமயிலுக்குப் போனேன்,
வன்னமயிலுங் குயிலும்படுத்துதென்
பொன்னுன சிங்கியைக் காணேன்,
தின்னச் சிறகிக்குக் கண்ணியைவைத்துநான்
சின்னக் குருகுக்குப் போனேன்,
சின்னக்குருகுங் கிளியும்படுத்துதென்
கன்னிகைச் சிங்கியைக் காணேன்.

2. சக்கரவாகத்துக் குக்கண்ணிகுத்திநான்
வக்காபடுக்கவே போனேன்,
வக்காவுஞ் சக்கர வாகமும் பட்டுதென்
மிக்கான சிங்கியைக் காணேன்,
மைக்கவுதாரிக்கு சிக்கக்கண்ணிவைத்துக்
கொக்குப்படுக்கவே போனேன்,
கொக்கும் நிலாமுக்கி யுங்கூடப்பட்டுதென்
தொக்கான சிங்கியைக் காணேன்.

3. வெம்பிப்பறவையின் வேட்டைக்குப்போய் ஞான
வேட்டையெல்லாந் தப்பிப் போச்சே,
கம்பிளிதூக்கக் காடியாய்ப்போன
கதைவந்து சேரவுமாச்சே,
நம்பியே கற்பகஞ் சேர்ந்தவர்க்குவிடம்
நல்கினதுமொரு பேச்சே,
வம்பியென் சிங்கியைக் காணுமல்தேடி
மயங்குவதுமெனக் கேச்சே.

4. இற்றைவரைக்கும் விசுவாசச் சிங்கி
யெனைப்பிரிந்ததறி யேனே,
ஒற்றையாய் நின்று புலம்புவதுமெனக்
குற்றகிராசாரந் தானே,
கற்றறிமோழை யெனும்வேதப்புறட்டரும்
கள்ளத்தனம்புரி வானே,
பற்றிய நெஞ்சத் துயரென்று நீங்கிப்
பரதாபந் தீருவ னானே.

சிங்கியைத் தேட்டச் சிந்து

விருத்தம்

தேசமெங்கு மிருப்பவரும் பெத்தலேகர் திருவுளத்தாற்
கதிபெறுதல் திண்ண மாம்போல்,
ஆசையுட னுலகமெல்லா மலைந்துமென்ன ஆவதென்று
புத்தியினா லறிந்து தேறி,
நேசமிகும் விசுவாச மற்றபோதே நிலையேது துறையேது
நேர்மை யேதென்
றோசையுட னினைந்துருகிப் பெத்தலேமுக் கோடினான்
சிங்கிதனைத்தேடி னானே

சிங்கியைக்காணேனே, விசுவாசச்
சிங்கியைக்காணேனே.

1. சிங்கியைக் கற்பலங் காரியை நாரியைச்
சித்திரப்பெத்தலேம் அத்தனைப்பாடிய,
மங்கள வினோதசங் கீதமாதாந்த
வேதாந்த மதங்கியென்வங்கண. —சி

2. தாராவை மாடப்பு றாவைக் குயிலியைச்
சல்லாப வுல்லாச சையோக சம்போகப்,
பேரான ஞானச் சுகந்தருகும் அன்னப்
பேடையைச் சாடையாய்ப் பேசுங்கிளிதனைச்,
சீரான தோகைம யிலைவடிந்தசெந்
தேனை யமுர்தத்தைச் செங்கரும் பானதை,
நேரான மோக்கிஷ பாக்கியத்தையிரு
நேத்திரத்தை ஞானப் பாத்திரத்தையெந்தன். —சி

3. கண்ணைமணியைக் கனகத்தைச்செல்வபூங்
காவனத்தைச்சிவ கற்பகத்தைத்தேவ,
பெண்ணைப்பவளக் கொடியைமரகதப்
பெட்டியைத்தங்கத்தை முத்தைப்பிரகாசிக்கும்,

விண்ணைவிண்ணாட்டொளி வைமின்னலைவிடி
வெள்ளியைக்கள்ளியை விந்தைக்கிருபாலியை,
யெண்ணினவெண்ணத்தைப் புண்ணியத்தையென
திச்சைக்கண்ணாட்டியைப் பட்சப்பெண்டாட்டியை. —சிங்

4. சித்திரச்சோலையைச் சத்திரச்சாலையைச்
சிங்காரப்பாவையை வங்காரப்பூவையைப்,
பத்திரவினோதத்தை மித்திரசினேகத்தைப்
பாஞ்சாலையைமன வாஞ்சாலையைக்கன,
வித்திரக்கிரீடத்தை யுத்திரவிசேடத்தை
விச்சித்திரத்தைவிண் ணட்சத்திரத்தைமுன்,
குத்திரமாய்ப்போன வித்தாரக்காரியைக்
கோமாட்டியைஞான சீமாட்டியையெந்தன். —சிங்

5. வேதப்பொருளைப் பயன்கொண்டுமூடி
விளக்கிநின்றாளத்தை மேவவென்றெண்ணியான்,
சீதமதிமுகத் துக்கெதிர்வந்தனென்
சிந்தையைக்கண்டு சிரித்துக்கொண்டேயவள்,
பாதிப்பொருளை விபரிக்குமுன்னமே
பாவியென்னெஞ்சம் பரவசங்கொண்டதா,
னீதிப்பெருக்கி லெனைவைத்துக்கூடியே
நெஞ்சத்தோடேமெத்தக் கொஞ்சிக்கொண்டாளந்த. —சிங்

6. நம்பிக்கையற்றா னுளையுக்குளோர்விசை
நாணமில்லாமலே யான்விழுந்தேனது,
வம்பிக்குப்பேச்சது வாச்சுதென்றேவேத
வாக்கியத்தைக்கொண்டு மூர்க்கமாய்ப்பேச்சிட்டுக்,
கும்பிக்குனின்றெனைத் தூக்கிவிட்டாளப்போ
கும்பிட்டுவீழ்ந்தவள் காலைப்பிடித்தனன்,
கெம்பித்தென்கொஞ்சத் தனத்தையறிந்தெனைக்
கிட்டவணைத்தொரு முத்தமிட்டாளந்த. —சிங்

7. பஞ்சசண்டாளப் பதிதத்துரோகி
பாபேலுறும்கன்மியின் பேரைப்பகருமுன்,
நெஞ்சம்பதறித் திடுக்கிட்டெழுந்தந்த
நெட்டூரனிட்ட திருச்சபைக்கட்டளை
சஞ்சலமென்று பரன்சுதன்வாக்காலே
தப்பாமல்யாவர்க்கு மொப்புவித்தப்புற
மிஞ்சினகோபத்தி னாலேயவன்றனை
வெட்டச்சினத்துட னெட்டிநடந்துபோம். —சி

சிங்கன் புலம்பல் சிந்து

விருத்தம்

துங்கமெய் விசுவாசத்தின் சுந்தரி தனைக்கா ணுதா,
லெங்குதான் போனு ளோவென் றிடைவிடாக் கருத்தினோடு,
பொங்கிய மனத்தால் வெல்லைப் புறமெல்லாம் புகுந்து நோக்கிச்,
சிங்கியைத் தேடித் தேடிச் சிங்கனும் புலம்ப லுற்றான்.

சிங்கியெங்குங்காணேனே,
இங்கித மிகுஞ்சினேக வங்கணமென் விசுவாசச்
சிங்கியெங்குங்காணேனே.

1. துங்கமிகும்பெத்தலேகம் ராசர்வளநாட்டினிற்
சுத்தசுவிசேடமெனும் பொத்தகத்தைப்படிக்கையிற்,
சுறுசுறுப்போ டெனைவிருப்ப மொடு திருப்ப மிகவருத்தும். —சிங்

2. அண்டர்தொழும்பரமன் மைந்தனின்மேலெந்தனுக்
கானவிசுவாசமடையே, யவ
ளெல்லாமலேசுவின் சொல்மேலெனக்கொரு
ஆசையுந்தோற் றுதுமெய்யே,
விண்டுபல ஞானங்கள்புரிவா, ளதின்
விஸ்தரிப்பை யுஞ்சொல்லித்தருவாள், சுதன்
மேலே மயல்கொண்டுதிரிவாள், ரண்டு
விழிகொண்டென் னொடுதினம்பொருவா, ளந்த
வேதாந்தக் காரியுட னாதாந்தத் தைநினைந்து,
மேனிபொங்குறு, பொறியோமயங்குறு, அறிவோகலங்குறு,
மனம்விடவிடென்கிறு, உடல்படபடென்கிறு இன்ப. —சிங்

3. மாசற்றவனின்மேற் பத்திநம்பிக்கைக்கு
வாச்சுது இவளென்று இருந்தே, னென்னை
மறந்துபறக்கவிட்டுக் கடந்ததினுல்மெத்த
மயக்கம் பிடித்துத் திரிந்தலைந்தேன்,
தேசத்துக் கெங்குமிது சொல்லே, என்ன
செய்யட்டு மெனக்கிதோர் தொல்லை, யந்தச்
சீமாட்டி யின்மனதுங் கல்லே, பின்னுஞ்
சென்று பறக்கவுஞ்சிற கில்லை, மணச்
சிங்காரக்காரியுமி ரங்காதமோசமெனின்,
சிந்தைசொல்லுறு, மனம் நைந்துகொல்லுறு, கடிவந்து
வெல்லுறு, மேல்சிலுசிலென்கிறு, கண்ணீர் மலமலென்கிறு,
விந்தை. —சிங்

4. எங்கேயெங்கேபார்த்தாலு மவளைப்போற்கண்ணுக்குளிருக்
கிறது அவள்செய்த மாயம், அந்த
இளைய குமரிவந்தால் மனதுக்கு சந்தோட
மிருக்குமெ னக்குமா யேயம்,
மங்கையுட ஆசைசிக்கித் தானே, யுலக
மாதுபலைக் குடம்பெடுத் தேனே, மற்ற
மாமையையும் வெறுத்துவிட் டேனே, பெற்றன்
மனதையும் பறிகொடுத் தேனே, மந்த
மாஞானக் காரிதந்த மேன்ஞானங் கொண்டுமனம்,
வாஞ்சைகொள் ளுது, புகழுஞ்சவின் ளுது, மயல்
வீஞ்சுதுள்ளுது, திகழ், வாசமலர்ப்பெத்தலேகம் ராசர்வள
காட்டினிலே. —சிங்

குள்ளப்பதிதர்வந்து மென்ளக்கலைத்தாலவன்
கொஞ்சமட்டி லேவிடா னேயே, பொல்லாக்
கொடியஞராய்கள் திடமன தாகவந்து
குறிசொல்வ தெல்லாமுழுப் பொய்யே,
கள்ளப் புரட்டன் சபைக்குத் தலையோ, அவன்
கட்டுவி சேடமெல்லாம் நிலையோ, ஆதி
கடவுட் கெதிரியவ னிலையோ, பாவி
கருதி யிருப்பதேழு மலையோ, இன்னங்
காரையற் சிக்கிதலை வீறையலேத்தலைந்து,
சத்தியாகிறு, மனமெத்தகோகுது, பாபேல்
பத்திவேகுது, வெறி கருக்குமென்கிறு, பொறிகிரங்கி
ரென்கிற தென்ன. —சிங்

சிங்கியடையாளச் சிந்து

கலிப்பா

சக்கநல சேனைகளுந் தற்பரனைக் கொண்டாடி,
பங்கிதம கிழ்ச்சிதுதி யேத்திடுபெத் லேகர்வெற்பிற்,
றங்குமுங்க ளின்பசக சாதகத்தை யாரறிவார்,
சிங்கியடை யாளமென்ன சிங்காரீ செப்புவையே.

சுத்தமயிலழகியையே, விசுவாசச்சிங்கி
சுத்தமயிலழகியையே, என்சிங்கியையே.

1. எத்தனைபெடுத்துரைத்து மத்தனையுமீடுமல்ல
பெத்தலேகாதாருள் விஸ்தரித்தமாதுபொருள். —சுத்த

2. ஆதியான் றன்கையினாலே யாவையைப்படைத்த நேரெல்
மாதையுஞ்சிட்டித்தெனக்கே யாதரவாய்த் தான்கொடுத்த
ரேதவனுக்கிணைசொல காதல்மிகவாருதையே,
நீதியினுடையணிந்து சோதிமயமாய்ச்சமைந்த. —ச

3. வையகம்புரக்கவந்த ஐயனையெலார்க்குணர்த்த,
மையலாயிருப்பன் லோக செய்பலைத் தவிர்ப்பன்கூடை,
கையிலே மாத்திரைக்கோலொன் றப்பவேபிடித்திருப்ப
பையவே நடப்பன் கொஞ்சி ஐயையவன்தானே
வஞ்சி. —ச

4. ஆபேலே னொக்கு நோவா ஆபிரகாஞ் சாருளீசாக்,
கவன்சேயக் கோபுயோசேப் பான்ற மோசே யின்றூரிர
காபுவேசி கிதையோ னிபத்தா சிம்சோன் பாருக்,
தாபசாமு வேல்தவீது சார்ந்தவிசு வாசமாது[1]. —ச

5. நூற்றதிபன்வளவை நோக்கிப்பெத்தலேகர்செல்ல,
பாத்திரனல்லெசாற்றும் வார்த்தைமாத்திரமொன்றே,
பேற்றதெனவப்போதங் காற்றும் விசுவாசத்தை,
பாத்திபன் கேட்டுரைத்த நேற்றி நிறையென் சிங்கி. —ச,

6. நேற்றேழாமணியிலே பாற்றுமகன் சுகத்தை,
சாற்றவே கேட்டிவனுர் தேட்டமாயோடிவந்து,
வேட்டியினோத்தையே யிட்டமாய்த் தொட்டவளும்,
போற்றும்[2] விசுவாசத்தைக் காட்டுமென் சிங்கிமெத்த.—ச,

7. பருதிமெபென்றவொரு குருடன் வழிபருகே,
பாத்திபன்போரு ரென்றதைக் கேட்டுக்குணமாவனென்ற
திரமொடு நம்பியோடும் திடவிசுவாசப்பத்திக்,
குரிய காருணின்றிரிக் குள்ளவனு நம்பிக்கையாள். —ச,

8. எடுத்துத் திமிர்வாதனைப் படுக்கையோடே கொணர்ந்து,
நடத்திவிடமில்லாத இடுக்கால் தளந்திறந்து,
விடுக்கப்பெத்லேகர்பார்த்துத் திடத்துவிசுவாசநேர்,
கொடுத்தார்வலைபக்கத்தி னடுத்தகள்ளனுஞ் சாட்சி. —ச

9. கண்டுவிசுவாசிப்பதிற் காணுதோர் பாக்கியரென்,
றண்டபிரான்சொன்னதுபோ லழகுசிங்கியோடேநான்,
தண்டிக்கவந்தற்றேருணுகில் சந்தேகத்தோமையர்போல,
விண்டிடேன் விசுவாசத்தைக் கொண்டவளவள்வடிவில்.
—ச

[1] எபி. 11 அதி. [2] காத்தல்.

10. சந்தேகமனுவெனு முந்தாதவனருகில்,
வந்தாலென் வியதையத்தின் சிந்தாகுலங்களருஞ்,
சந்தோடமாய் மறையை யந்தாதியாய் விளம்பி,
யுந்தானே சொல்லிக்குயி தந்தானவனேவல்லி.
—சத்த

11. புறட்டுமெதக்காருட கோப்பெல்லாமழிக்கத் தன்னுட்,
டீர்ப்புச்செய்து கூர்மையாக பார்ப்பளவ னக்குமிங்கு,
தீர்ப்பன்பெத்த லேகர்பதஞ் சேர்ப்பன்துய்ய வெண்மை திறங்,
காப்பவனினிச்சொலவென் றுப்பிசகு தென்செய்குவன்.
—சத்த

சிங்கன் கைக்கூலிச் சிந்து

கலிப்பா

அண்டபிண்டம் யாவினையு மந்தரத்தி லேயமைத்த,
அண்டபிரான் வந்துதித்த அம்பலப்பெத் லே நாட்டில்,
விண்டுருதி செப்புவிசு வாசமெனு முன்சிங்கியைக்,
கண்டுசொல்ல சிங்காவுன் கைக்கூலி சொல்லுவையே.

பல்லவி

மருந்தொன்று சொல்லிக்கொடுப்பேன், கேளையே.

1. அருந்துமருந்தில்ருட்சம் பொருந்துமருந்தியேசு
சொரிந்தவுதிரமெய்யுந் தருந்திவ்விய நற்கருணை.
—மரு

2. முன்னாளிற் சின்னப்பர் முடுகிமெலித்தே தீவில்
மோசமாய் விரியன்சுற்ற நாசமாயுதறிப்போட்டு,
பின்னையுஞ் சந்தோடமாகப் பேசிடச்செய்யுமருந்தா
மன்னதைச் சொல்லித்தருவே னழகுசிங்கியைக்காண்பி.
—மரு

3. நாகதாளிவேர் மருந்து தேகமழி யாமருந்து
நச்சுவிடம்போமருந்து நிச்சயத்திடமருந்து,
பாகமுடன் செய்மருந்து பக்கிஷவுச்சிதமருந்
தேகனைவணங்கிச்சொல்வே னெப்பொழுதுங் கைபலிக்கும்.
—மரு

4. கூடுவிட்டாவிபோகுமுன் பாடுபட்ட கத்தனை நீ
தேடுகிட்டுயர்மருந்தைக் கேடுவிட்டு வாங்கிப்போசி,
வாடிதுட்டப் பேயருண்டே யோடுமெட்டநோவுமுனை
சாடியொட்டாதம்மருந்தை நாடியுற்றுவாழ்தல்கெட்டி.
—மரு

5. பெத்தலேகேம்வெற்பி லுற்றமருந்தால் பகைவர்
இட்டவிஷமுமற்று கத்தன் கிருபைபெற்று,
மெத்த நீ வாழ்ந்திடச் சித்திசெயுமருந்தின்
வித்தைவிளம்புவேனென் முத்தி சிங்கியைக்காட்டு. —ம

சிங்கன் துயரச் சிந்து

விருத்தம்

அகலக்கட் டையதாம் வாசற் கழைத்துனைக் கொண்டு போனள்
விகலுமென் றனையுமோட்ச வீட்டினிற் சேர்ப்பா யல்லோ,
புகலரும் சிங்கா வுந்தன் பூவைதான் குறிகள் சொல்லிச்
சகலருங் காணப்போன சன்னதித் தெருவி தாமே.

சிங்கியெங்கே போனளேயே, யென் விசுவாச
சிங்கியெங்கே போனளேயே.

1. துங்கமிகும் இம்மானுவேல்
துப்பபெத்த லேகர் நாட்டில். —சி

2. பூலோக முழுதுஞ் செல்வாள், அறிவின் மிகு
மேலான குறியுஞ் சொல்வாள்,
நாலா விஞ்ஞைக்காரி நளினசங் கீதக்காரி,
மாலாயச் சிங்கியெனை மறந்துகிடக்கமாட்டாள். —சி

3. சந்திரன் முகத்தைக்காட்டுவாள், மயக்குவிக்க மந்திரசெ
பத்தை மூட்டுவாள்
அந்தரமாக நின்றுகொண் டாரைத் தேடிப்போனளோ,
தந்திரக்காரச்சிங்கி தனித்துங்கிடக்கமாட்டாள். —சி

4. சூத்திரப்படியே குறிப்பாள், கண்டதற்கெல்லாஞ் சாத்திரப
பாய்க் கையை நெரிப்பாள்
பாத்திரத்தி லப்பம் பின்னோர் பாத்திரத்தில் ரசம்வாங்கி,
ஆத்திரமாய் நின்றுகுடித் தானந்தமாய் நிற்கிருளோ. —சி

5. அண்டமெண்டிசையுமோடிப், பாபேலெனும் பண்டு மாயை
யிலுங்கூடிக்
கண்டகண்டவிடமெல்லாங் கத்திக்கத்திக்குறிசொல்லிச்,
சண்டைசண்டையிட்டுப் தீம்பரைச் சபையிலிழுக்
கிருளோ. —சி

சிங்கியைக் கண்ணுற்ற சிந்து

கலிப்பா

ஏவையைமுன் னுதிசற்ப மெத்தினதா லுண்டான
பாவமற வந்துதித்த பாத்திபன்வெல் லைத்தெருவிற்,
பாவமீன யிற்றேடிப் பறிந்தவெள்ளி கண்டதுபோற்,
பூவைவஞ்சி யைக்குழுவன் பூரிப்பாய்க் கண்டானே.

லூக். 15:8,9.

விருத்தம்

துபவந் தவிர்க்கமுள்ளின் மகுடம்பூண்ட மன்னவர்பெத்
லேகாட்டில் வாஞ்சையான,
தனிறை யிருபேருங் கண்ட போதே களித்தானந் தக்கடவீர்
பெருகியோட,
தகலத் தழுவதற்குக் கூடுக்காலை கோடிபோன்ற மின்ன
லொளி குறுக்கிட் டாப்போல்,
திரகரடுத்ததங்கே விசையாய் ராகேல் வேண்டினயாக் கோபுநிக
ரெங்கினு னே.

இங்கேவாரா, பெண்கண்ணே!
இங்கேவாராய்.

1. இங்கே வாராயாசை பொங்கப்பாராயுட
லங்கஞ்சேராய் நல்ல சிங்கியரே மானே. —இங்கே

2. பாதகோகநிற்ப தேதுகடினமாய்ச்
சாதுருணமொரு போதுதவிர்த்திடு
மாதலாலென்னுள மாதேகிட்டிபடர்
வாதைமிகுக்குது போதினைசொல்லி நீ. —இங்கே

3. தேட்டமாய்மன்மதன் பூட்டியவஞ்சக
மாட்டுதுபேயுமே கோட்டிகொள்ளுதுடல்,
வாட்டுதுகாட்டினீ கட்டுகுமிற்சத்தம்
காட்டுதிங்கிட்டமா யாற்றனைக்கிட்டி நீ. —இங்கே

4. முந்துயக்கோபுநா னென்டியாபோடியே
வந்து பதானரா மன்டைகினைற்றிலே,
சொர்தமாமன்லாயான் றந்தராகேலிடு
வந்தெழுந்துமுத்தந் தந்ததுபோற்றா. —இங்கே

5. ஈசாக்கு யாக்கோபை யாசீர்வதிக்கையில்
யாக்கோபெகிப்பதில் யோசேப்பைக்காண்கையில்,
ஏசாவை யேதோம் வழிப்புறநோக்கையில்
நேசமாய் முத்தி கொடுத்தநேர் கிட்டி நீ. —இங்கே

6. யோசேப்பு தன்பின் ஞனபென்யமீனே
யோனத்தான் ரூவீதை யோங்கல் சவுலேமுன்,
ராசபிஷேகத்திற் சாமுவேல் முத்திசெய்
பாசம்போவிட்டமா யாசையாய்க்கிட்டியே. —இங்கே

7. தாவீதபிசலோம் பர்சிலாதன்னேயுந்
தந்தை கெட்டமக னண்டையுமோடியும்,
கூவியேபேசுவின் மூப்பர்பவுலேயும்
கூடிமுத்தமிட்ட சாடையாய்க்கிட்டி நீ. —இங்கே

8. அபிசலோமிச ராவேலரின் மனம்
அப்பன்ற வீதிட நின்றெடுபட்டிட,
சுபமுகமனு யாரையுமுத்திசெய்
சூட்சத்தைவிட்டுநீ ரூத்தைப்போற்கிட்டியே. —இங்கே

9. கள்ளயூதாசு பணத்தைக் கைப்பற்றியே
கத்தனேக் காட்டின வஞ்சகமுத்தியைத்,
தள்ளிகள்ளத்தன காமியை யெள்ளி நாஞ்
சந்தோடமாகக் கலந்துமகிழ்ந்திட. —இங்கே

10. ராசர்துரைகள்சந் தித்திடுங்காலேயி
னேசமாயாலிங்க னஞ்செய்கிறுரிங்கி
லீசருமோர்வருக் கோர்வர்முத்திசெய்யக்
கூசிடார் நீயுமே கூசிடாமற்கிட்டி. —இங்கே

11. பிள்ளேயைப் பெற்ருரும் பெற்ருரை மற்ரேருங்
கள்ளமில்லாத சினேகிதரியாரையும்
விள்ளுபவுல்பரி சுத்தமுத்தத்தினுற்
கொள்ளவே பட்சமாய்ச் சொல்வதிலட்சணம். —இங்கே

12. பெத்தலேமாநகர்க் கத்தனேப்பற்றினு
லெத்தனே மோசங்கள் சுற்றிலுங்கெட்டிடு,
மெத்தனெனும் முச் சத்துரு சங்கட்ட
முற்றுந் தொலேத்திடச் சித்தமாய்க்கிட்டியே. —இங்கே

சிங்கன் சிங்கியோடு சம்பாஷித்தல்

கலிப்பா

எண்டிக் கினுமடங்கா வேகர்பெத்த லேகர்வெற்பிற்,
றண்டாமற் றேடுசிங்கன் றையலைத்தான் கண்டவுடன்,
பண்டுகுன்றப் பர்விடுக்கப் பட்டதுக்கென் றக்களிப்புக்,
கொண்டவர்போன் மன்றாடிக் கூத்தாடி நின்றானே.

அப். 12:3-16.

1. இத்தனை காலமா யென்னிடங்கேளாம
லெங்கே நீசென்றனை சிங்கி? மா
பெத்தலேகேநகர் சீயோன் குமாரிக்குப்
பத்திக் குறிசொலச் சிங்கா.

2. உற்றதுணையெனக் காருணைப்போலொன்று
மோதாமலோடினாய் சிங்கி? நான்
மெத்தப்பவுசுகள் பெற்றுவந்தேனெனை
முற்றுங்கவனியே சிங்கா.

3. நோக்கிலதிகமாய் நூதனந்தோற்றுது
கேட்கப்பயமடி சிங்கி? இங்கே
யார்க்குப்பயமினி சீக்கிரமாக நீ
தீர்க்கமாய்க் கேளடா சிங்கா.

4. காலுக்குக்கீழே கடிக்குஞ் சற்பத்தைக்
கடிந்துதைத்திட்டதேன் சிங்கி? பாம்
பாலவிஷத்தை யகற்றின இயேசுவி
னற்புதத்தாலடா சிங்கா.

5. ஆலப்பாம்புக்குமேல் கெண்டைக்காலூடே
யணிந்திருப்பதென்ன சிங்கி? இத்
தாலத்திலுத்தம வேதத்தின்றோற்பாரஞ்
சாதுக்கணிந்தேண்டா சிங்கா.

எபே. 6:11-15.

6. முற்றுங்கறுத்து முழங்காறடித்தது
மோசமதென்னடி சிங்கி? நான்
சற்றுவிடாமற் செபித்துக் கிறிஸ்துவைச்
சாற்றினதாலடா சிங்கா.

7. மேலேயிடுப்பி லிறுக்கி நெருக்கிய
வித்தையிதென்னடி சிங்கி? நித்திய
சாலோக பெத்தலே நாதர்சபைப்பித்த
சத்தியக்கச்சையே சிங்கா.

8. உந்திக்குமேலே யொடுக்கியடுக்கிய
உச்சிதமென்னடி சிங்கி? இங்கே
வந்தபெத்தலேகர் தந்த நீதியின் மார்
வஸ்திரந்தானடா சிங்கா.

9. மாருக்குநேரே கழுத்திற்கிடக்கிற
ஆரமதென்னடி சிங்கி? வெல்லை
யூருக்கு நாயகர் பேருக்குப்போட்டமுத்
தாரக்கண்டியடா சிங்கா.

10. கையிலே மின்னவே வேடிக்கையாய்க்கட்டு
காரணமென்னடி சிங்கி? முன்
செய்தவேலைக்காகத் தையலிரேபெக்காள்
தேடினபொற்சரி சிங்கா.

11. ரேபெக்காள்கைச்சரி யைவிட வுன்கையி
லிரட்டிப்பதென்னடி சிங்கி? கையாற்
றீவட்டிதூபக் கலசம்பிடித்த
சிறப்புக்கணிந்தது சிங்கா.

அறி. 8:4-5, மத். 25:1

12. கையிலூன்றிப் பிடித்த மஞ்சள்வட்டக்
காரணமேதடி சிங்கி? வெல்லை
வையகம் வந்தவர் மேல்விசுவாசத்தின்
வாஞ்சைபொற் கேடையஞ் சிங்கா.

13. காதிலேமுத்துச் சவடி பலபல
காத்திரமானதேன் சிங்கி? கேட்கக்
காதுளோன்கேட்கக் கடவனென்றோதின
போதகம் பெற்றதாற் சிங்கா.

14. செக்கச்சிவந்துன் னுதடழகானமா
முக்கியஞ்சொல்லடி சிங்கி? நம்
பக்கிஷப்பெத்தலே நாதர்விலாவிலே
பாய்ந்த குருதியாற் சிங்கா.

15. மூக்கெல்லாம் வாசனை யேற்க மயக்குது
மூக்கமதென்னடி சிங்கி? வெல்லைப்
பாக்கியரைநற் றபிலத்தாற் பெத்தானி
யூர்க்குட்பூசினதாற் சிங்கா.

16. கண்ணைச்சுற்றிக்கருங் கோடொன்றுபோட்ட இவ்
விண்ணாணமென்னடி சிங்கி? முன்னே
பெண்ணான ஏசபே லைத்தின மையல்ல
பெத்தலேகர்க்காகச் சிங்கா.

2 ராஜா. 9:30.

17. நெற்றியில்வட்டமாய்க் கட்டியிருக்கிற
நேர்மையிதென்னடி சிங்கி? யாரோன்
பெற்றபொற்பட்ட மெனக்குக் கிடைத்தது
பெத்தலேம் நாதரால் சிங்கா.

2 மோசே 39:30

18. ஆரோனைப்பார்க்கி லதிசப்பெரிதான
ஆச்சரியமென்ன சிங்கி? நல்ல
சீரான பெத்தலே நாதருளினாற்
சேனைவித நன்மை சிங்கா.

1 பேது. 2:9.

19. வேரில்லாப்பூமரம் போலுன்றன் கொண்டையில்
வேடிக்கைப் பூவேண்டி சிங்கி? யாரோ
னாரியன் கைக்கோல் தளிர்த்துப் பூத்தசெய்தி
யாய்ந்திலையோகாணாஞ் சிங்கா.

4 மோ. 17:8

20. முக்காடுபோட்ட விசித்திரமென்னடி
வெட்கத்துள்ளானையோ சிங்கி? சாராள்
முக்காட்டுக்காயிரம் வெள்ளியபிமேலேக்
முன்னமேதந்ததால் சிங்கா.

1 மோ. 20:16.

21. வானத்து நாட்டாரால் வந்தவரிசைக
ளானத்தைக்காட்டடி சிங்கி? இந்தத்
தானத்திலேவந்த பெத்தலேநாதர்
சமஸ்தத்தையுந்தந்தார் சிங்கா.

22. கண்ணினாற் காண்கிற எண்ணக்கூடாப்பொருள்
கர்த்தர் கொடுத்ததோ சிங்கி? யடர்
விண்ணையுமண்ணையு மல்லாமற்றம்மையு
மேவிக்கொடுத்தனர் சிங்கா.

சங். 19:1-6. 1 தீமோ. 3:16.

23. மண்ணுனமானிட னென்னவதிட்பலன்
பண்ணுவர் நாதர்க்குச் சிங்கி? தந்த
எண்ணுதகோடி தயவுக்கெங்காகிலு
மீடுண்டோசொல்லடா சிங்கா.

24. நாக்குத்துடிக்குது நல்வாயிதழுக்குப்
பார்க்கப் பொறுக்கலை சிங்கி? யுன்றன்
வாய்க்குருசிப்பது நற்கருணையல்லோ
வாங்கு கனிந்தடா சிங்கா.

25. தீர்க்கமாய்ப்பேசுமுன் வாக்கைக்கேட்கமன
மேக்கமெடுக்குது சிங்கி? சற்றும்
போக்கற்றப்பேச்சுப் புகலவேண்டாமிங்கே
புண்ணியஞ் செய்யடா சிங்கா.

26. ஒக்கவிருக்க வொதுக்கிடந்தேடவோ
உண்மையைச் சொல்லடி சிங்கி? பருங்
கொக்குப்பிடிக்கப் பதுக்கிடம்பாரடா
தக்கதருணத்திற் சிங்கா.

27. பெட்டகப்பேயைப் பிடித்தோட்டவேண்டாமோ
கிட்டி நெருங்கடி சிங்கி? வாக்குத்
தட்டாமல் முச்சத் துருக்கனைநாசமாய்
வெட்டிவிடத்தகுஞ் சிங்கா.

28. சோதனைப்பொய்ப்போ தகத்தைவெல்லுதற்குச்
சாதனை யென்னடி சிங்கி? கள்ளப்
போதனைவேசியைப் போக்கிவிழச்செய்யப்
புத்தியாய்க் குத்தடா சிங்கா.

29. இல்லாக்கருத்தெல்லா மெங்கேபடித்தாய் நீ
வெல்லையான் போதமோ சிங்கி? அவ
ரல்லாமல் விள்ளுமோ எள்ளவாயினுஞ்
சொல்லின்பயனடா சிங்கா.

30. விந்தைக்காரியுனை வெல்லக்கூடாதபடி
சிந்தைமயக்குது சிங்கி? யிது
சந்தேகமோவுன் றலைவிநானல்லவோ
பிந்துவேனோசற்றுஞ் சிங்கா.

31. கூடிக்குலாவி யுலாவிப்பெத்லேகரைக்
கும்பிடுவோமடி சிங்கி? நாம்
பாடிப்பணிந்து மகிழ்ந்துகெம்பீரமாய்
நாடிக்கொள்வோமடா சிங்கா.

32. பட்சிபிடிக்குநாம் பெத்தலேம் ராசனைப்
பாடச்சகிப்பானோ சிங்கி? முன்
மச்சம்பிடித்தவர் மிச்சமாய்ப்பாடையி
லச்சம் நமக்கென்ன சிங்கா.

33. வேதத்திலுள்ள கருத்தையெடுத்து
விநோதமாய்ச் சொன்னதார் சிங்கி? சதுர்ப்
போதக சாஸ்திரி யென்றபெயர்பெற்ற
வேதநாயகன்காண் சிங்கா.

34. இத்தனை பாவினம் பாடினசெய்கைக்கு
மென்ன பரிசடி சிங்கி? வந்த
பெத்தலேகர்பரி செத்தனை சொல்லுநான்
நித்திய காணியாட்சி சிங்கா.

4 மோ. 18:20.

35. பெத்தலேகர்கலி யாணத்தினன்றைக்குப்
பேசுவனோ புகழ் சிங்கி? யவன்
புத்திரருமவ னுங்குலமியாவரும்
பூட்டுவர் மங்களஞ் சிங்கா.

36. பூரிப்பாய்[1]ப் பாடுதல் பெத்தலே நாதர்க்குப்
பூரிப்பளிக்குமோ சிங்கி? மிக்க
வாரி[2]ப்பலன்தரு வாரிப்புவிக்கருள்
வாரியென்றென்றுமே சிங்கா.

வாழ்த்து

வெண்பா

ஊரெங்கு மோடி யுலைவதேன் பெத்தலேஞ்,
சிரேசு நாதரைநாஞ் சேர்ந்தக்கால், தீருமே,
பாவம் பிணிநோய் பசாச நர சம்மரணம்,
பாவலரே பாடிமகிழ் வோம்.

வாழ்த்துகிறேன், வாழ்த்துகிறேன்,
மனுவேலை வாழ்த்துகிறேன்.

1. அட்டதிக்கு முடையானை
யனுப்பவமு மடையானை,
மட்டில்லாத கொடையானைப் படையானை
வாழ்த்துகிறேன்.

[1] பூரிப்பு-மிகுதி. [2] வாரி-சமுத்திரம்.

2. தந்தையில்லாத் திருமகனைத்
தாதையருள் ஒருமகனை,
சந்ததியாத் தலைமகனைக் கலைமகனை
வாழ்த்துகிறேன்.

3. தீயவனைப் படைமுகத்திற்
செல்லாமற் படமுடியைத்,
தானுதைத்து முன்முடியைச் சிதைத்தவனை
வாழ்த்துகிறேன்.

4. ஆதாமுக் கையனுமா
மைந்தனுமா மாமனுமாம்,
மாதருக்குச் சேயனுமா னேயனையே
வாழ்த்துகிறேன்.

5. வேதமறை சொன்னவனை
மேதினியின் முன்னவனை,
வாதைவென்ற மன்னவனைத் தன்னவனை
வாழ்த்துகிறேன்.

6. அனைத்துலகும் படைத்து மெத்த
அதிசயமாய்க் காத்தளிக்குந்,
தினகிருபா சனத்திருக்குஞ் சேயனை
வாழ்த்துகிறேன்.

7. வருகலியை யரித்தோனை
மறுவடிவைத் தரித்தோனை,
தருக்கிருமைத் திறத்தானைச்
சிறத்தானைப் பாடுகிறேன்.

8. ஒருமலையில் மறுரூபத்
திருமலையிற் சொரூபம்,
அருள் மலையி லாசீரும் ஆண்டவனை
வாழ்த்துகிறேன்.

9. அருமருக்கு மருமருக்கு
மாவியாக்குஞ் சிலுவைக்கு,
கிருபைவைக்கும் பெருமைமிக்குந்
நின்றுவையே பாடுகிறேன்.

10. சீவந்திச் செருக்காளை
சீமோனுக்குருக்காளை,
பாவிகள்மேற் றிருக்காளைப் பொருக்காளை
வாழ்த்துகிறேன்.

11. ஆராயக்கூடாத அகண்டதிரி
யேகத்துவ அம்பரனை,
நம்பரனைத் தம்பமென
வாழ்த்துகிறேன்.

12. விண்ணாற்றங்கரையானை
விரிவுபெத்தலை வரையானை,
யெண்ணூழி காலமெல்லா மிருப்பவனை
வாழ்த்துகிறேன்.

13. சபையனைத்துக் கொருகோனை
தமிழிசைக்குவருவோனை,
அபையந்தந்த பெருமானைத்
திறமானை வாழ்த்துகிறேன்.

14. புறட்டர் சபைக் கோப்பொழிய
தீர்ப்புச்செய்து சேர்ப்பவனைக்,
காப்பவனைப் பாப்பயனைக்
கேட்பவனை வாழ்த்துகிறேன்.

விருத்தம்

பார்வளம் படைத்தநித்திய பரமன் வாழி,
பரிசுத்த சத்தியதேற் றரவன் வாழி,
சீராக ரட்சைசெயப் பெத்த லேகேஞு,
சிறந்தசியோன் மணனேசுக் கிறிஸ்து வாழி,
போலே செய்தகுறம் பெருக வாழி,
பிரியமுட னுய்ந்துணரும் பெரியோர் வாழி,
நேரான நீதிமன்னர் நெறியோர் வாழி,
நித்தியசுப சோபனநீ டூழிதானே.

ஆரணாதிந்தம்

1. தேவஸ்துதி

வெண்பா

வேதாட்ச ரங்களெல்லா மெய்யென் றறிந்துணர்ந்த,
வாதாடா துன்னை வசனிக்கத்—தாதா!
கருணாகரமே காகா சரணம்;
ஒருதா விண்ணாள் குருபதி.

சரணங்கள்

1. ஒருதாவிண்ணாள் குருபதி சரணம்
உலாச சுயாதிபதிரி சூரியசிரணம்
வருதாபரதரணம்-குலஸ்திரீ
மரிதாய்காழ்சரணம் தயாளோ.

2. கருணாகரமா குணபதிசரணம்
காவாதியேவையின் திரீபாந்தசரணம்
பரமேசியோனரணம்-நித்திய
பவணாசாசரணம் தயாளோ.

3. நசரேத்தழகா நரபதிசரணம்
நடுநிலைதவரா தருள்செயுந்திரணம்
நிசமாய்வருதரணம்-இரட்சியும்
நிறைவாகரசரணம் தயாளோ.

4. கருத்தாதிருத்தாள் சீர்பணிநித்தா
காணானுதேசாதிப பரிசுத்தா
வருத்தாமல்க்காதரணம்-கிறிஸ்துவே
மனுவேல்மன்ணாசரணம் தயாளோ.

5. வெல்லைமாநக ராதிநாயகன்சீர்
நெல்லையம்பதி வேதநாயகன்பா
விமலாகனதரணம்-சத்குரு
வினைதீர் தினசரணம் தயாளோ.

2. சீயோன் மகத்துவம்

விருத்தம்

அஞ்சுகமொழிச்சூ சன்னு
ளபரஞ்சித்தங்கத் தன்னுள்
செஞ்சொலினயத்தி வின்னுள்
சித்திரத்திலங்கும் பொன்னுள்
சஞ்சலமனத்தி லுன்னுள்
சமஸ்தசாஸ்திரவிற்பன்னுள்
மஞ்சுரு சீயோன்மின்னுள்
மகத்துவங்களைச்சொன்னுளே.

நன்னன நான நன்ன
நான நான.

1. சுந்தரப்பூங்காவனத்தின்முந்துந் தந்தைதாயானோர்
சூழ்ந்ததருளிக்களிடை வாழ்ந்திருக்கும்நாள்
வந்துசோதிக்கச்செய்த தந்திரப்பிசாசினுலே
மரணத்துக்கு நேரானதருணத்திலே
யந்தத்திருமுதலார் சொந்தவாக்குப்பிரகார
மவதாரமாய்ப்பிறந்த தவீதேந்திரனுன
தந்தைப்பிதாவினுென்றும் விந்தைக்குமாரனுக்குத்
தாரமாய்நேமித்த சீயோன் காரிகைநானே.

2. ஆரோன்மோசேயைவிட்டுப் பாரோனையெகிப்பத்தி
லாழ்ந்தசமுத்திரத்திற் ருழ்ந்தழியவே
சேருனதுபோலாக்கிப் பேருனவிசறேலைச்
சேதமன்றிநடத்தி வேதங்கொடுத்து
மாருதமேகத்தூணில் வீருகவேயிருந்து
வர்க்கத்தெழுசாதிகளை நிற்கிரகஞ்செய்தே
பூரும்பவம்போக்குஞ் சிங் கேருங்கிறிஸ்துவேந்த
னுன்னதவருகைக்கேற்ற கன்னிகைநானே.

3. சேமினகத்தருக் கபிரகாமின் குமாரி யென்னைச்
சீயோன்மலையிற்செங்கோல் சாயாமலே
சாமியைவாழ்த்திக்கொண்டு நேமுகஞ்செய்தபோது
சகரியாவோசேயாவின் முகதாபிலே
பூமியெலாமறிய நாமகோத்திரம் விளங்கிப்
பொன்னேலேழுன்றெழுதியந்நேரமே
ஓமனுதிப்பிரணவந்தாமே கூறினசத்த
முரியதிருச்சபைக்குத் தெரியாததோ.

4. சிலோவினிஸ்திரீகள் கோலாகலங்களுடன்
சேர்ந்துநடனமாடிப் போந்துபோகவே
யோலோலமென்றரற்ற மாலாகிப்பென்யமீன
ருள்ளாக்கியங்கவரைக் கொள்ளைகொண்டாப்போற்
சாலேம்பட்டணத்துக்கு மேலாஞ்சீயோன்மலையின்
றங்கமணிமாளிகையிற் பங்கமுண்டுமோ
நாலாவிதங்களான நூலாகமங்கற்றோரே
ராசஸ்திரீநாணொருத்தி நேசஸ்திரீயே.

5. வஸ்தியைமாற்றவந்த வெஸ்தராசாத்தியுட
மார்க்கமெலாந்துலுக்கன் றீர்க்கமலவோ
விஸ்தாரமாகப்பார்வோன் புத்திரிக்குச் சால்மோன்செய்த
வீடென்னாண்மனையின் கூடங்காணுமோ
பொஸ்தகச்சுருட்சொன்ன இஸ்திரீகளிலெலனைப்
போலேகீர்த்திபெற்றதார் சாலேமிலே
யஸ்தமிக்காச்சூரியனித்தியம்பிரகாசிக்கின்ற
அச்சயச்சீயோன்மலைபி னுச்சிதம் நானே.

6. ஆட்டுக்குட்டிக்கு மணவேட்டலுக்காயத்தமா
யாரபாரங்களுடன் வாரபோது
பாட்டுக்கள்சங்கீதக்கொண்டாட்டுக்கள் பாடிக்கொண்டு
பரமண்டலமுழங்க வாரபோது
மீட்டும்வீணைகளுட னட்டியங்களாடிக்கோடி
வித்தியாதரர்முழங்க வாரபோது
தாஷ்டீகமாயர்ச்செய் சிட்டர்சோபனங்கூறச்
சம்மனசுவாழ்த்துஞ் சியோ னம்மனு நானே.

7. எக்காளங்கண்முழங்க முக்காலங்கண்மரித்தோ
ரெல்லவருமெழுந்து வாரபோது
மிக்கானநாயகனார் மெய்க்கோலமாயெழுந்து
மேகபத்திராசனத்தில் வாரபோது
திக்காதிந்தங்கொள்ளாச் சொக்கானந்தனூதர்க
டேவனுரோடெழுந்து வாரபோது
அக்காலமன்னனுடன் வெட்காதருகிருக்கு
மானந்திஞானசச்சி தானந்தி நானே.

8. மஞ்சுத்தீபங்களேந்தி யஞ்சர்ச்செயகனிமார்
மாப்பிளைக்கெதிர்க்கொண்டு வாரபோது
கொஞ்சிக்குலாவியாடிச் செஞ்சொற்கீதங்கள்பாடிக்
குருசுவார்ச்சையருடன் வாரபோது

தஞ்சைத்திருச்சபைக ணெஞ்சைத்திசைந்துவேத
சாஸ்திரியாரோடெழுந்து வாரபோது
மிஞ்சப்பிரபலத்தப ரஞ்சிப்பிரகாசமண
விட்டிலெனக்குவாய்ப்ப தாட்டுக்குட்டியே.

3. சீயோன் பிரலாபம்

விருத்தம்

முன்செய்த வினையுந் தானும்
முளைத்த சென்மப்பாவத்தாற்
பின்செய்த வினையுநீக்கிப்
பேறுதந்தளிக்க வல்லோய்
நின்செயற் படிக்கென்னெஞ்சி
நிரம்பியகாதல் கொண்டே
னென்செய்வேன் கிருபைகூர்ந்
திரட்சியும் கிறிஸ்தையாவே.

இராகம் : தோடி

பல்லவி

காதல்மிகுந்து நின்மேற்
கதிக்குதென் செய்குவேன்.

சரணங்கள்

1. ஆதிசொந்தக்குமாரமனுடவதார
அருமையிரட்சகரெங்க ணீதிக்கிறிஸ்துநாதா. —காத

2. உலகுடல்பேயும் வலிசெயுமென்னே
யுனதுதிருவிழிபார்த் தாதரித்தாண்முன்னே. —காத

3. அன்பின்றிருவதன மின்புறநோக்கையா
அரியகிருபையோடென்னருந்துயர் நீக்கையா. —காத

(உன். 1:2–4)

4. மனதுவைத்தெந்தனின் மனைதனில்வாரும்
வாயின்முத்தங்களினு லொருமுத்தந்தாரும். —காத

5. திவிதாட்சிக்கனியின் ரசத்திலுன்னேசஞ்
சிறந்ததென்னுத்துமத்தின் றிடவிசுவாசம். —காத

6. பரிமள தயிலமானது நின்னுமம்
பரமகன்னிகைமார்கள் பட்சதாபக்ஷேமம். —காத

7. என்னையுமக்குள்ளிழு பேகவஸ்தன்பானே
இசைந்துமக்குப்பின்னாலே யோடுவென் சீயோனே.) —காத

8. சுவிசேடகவிவேத நாயகன் சங்கீதா
சுவாமிமெய்யானவொரு தேவகிறிஸ்துநாதா. —காத

4

விருத்தம்

கன்னிகை சீயோன் மாது
கனமிகு மிசருவேலின்
மன்னவன் றன்னைத்தேடி
மையல்கொண் டிருந்ததெல்லாம்
பொன்னக ரெருசலேமின்
புத்திரிகளுக்குச் சொல்லித்
தன்னையே வருந்திவாடித்
தயங்கினாள் மயங்கினாளே.

1. என் பிராணநாயகனைத் தேடி-நா
ணிரங்கிறேன் கான்மயில் போலே
அன்பிற்குறியானைத் தேடி-நா
னலைகிறேன் மானினம்போலே.

2. ஞானமணவாளனைத்தேடி-நா
னலிகிறேன்வாஞ்சையினாலே
சேனையின்கர்த்தரைத்தேடி-நான்
தியங்கிறேன் சிந்தைதடுமாறி.

3. நல்லமறைக்கோனைத்தேடி-நா
னாட்டமுற்றேனொரு சாலேம்
வல்லமனுவேலனைத்தேடி-நான்
மயங்கிறேனே சாலே மாதே.

4. பத்தாவைப் பாத்திபனைத் தேடி-நான்
பாதபித்துத்திரிகிறே னேங்கிக்
கத்தாவைக்காவலனைத் தேடி-நான்
கனிந்துருகிறேனடி பாங்கி.

5. மேலானராசாவைத் தேடி-நான்
மெலிந்துகரைந்தே னுருவமாறிச்
சாலோமோன்வேந்தனையே தேடி-நான்
தவித்துநிற்கிறேன் முகம் வாடி.

6. வெய்யிலென்மேற் பட்டதினாலே-நான்
மெத்தவுங்கருத்துவிட்டேன் சாலேம்
வையகத்தோர்களைக்கச் செல்லே-நான்
மையல்கொண்டேன் மேசியாமேலே.

(உன். 1:6)

7. கன்மலைவெடிப்பினிற் புறாப்போ-லுன்
கலங்கிறேன் மலங்கிறேனா சாலேம்
நன்மணதுக்காதலனைச் சேர-நா
ணமற்றுவெளிப்பட்டேன் சாலேம்.

(உன். 2:14)

8. நினைகத்தாலேவியாதி யானே-னெனைத்
தேற்றீரோபழங்களாலே
அனைகதன்மிக்கரண்டுசாலே-மெனை
யாதரித்துக்கொள்ளுமன்பாலே. (உன். 5:8)

5

விருத்தம்

அவாவிருதயத்திற் றூற்ற
வம்பக[1] மாருயூற்றத்
தவாசையிற் றவங்களேற்றச்
சந்ததம் புகழைச் சாற்றச்
சிவாபரா வென்றே பேற்றச்
சிந்தையின் றுயர மாற்றச்
சுவாமிநின் றன்னைப் போற்றத்
துரிதம்வந்தாற்றித் தேற்றே.

பல்லவி

சுவாமியுன்றன்கிருபைக்கபயமே
துணைசெய்யும் நயமே.

சரணங்கள்

1. அவாவே யென தருமைப் பெருமான்
அன்போநான்றுன்பப்படுவேனோ
அநியாயவுலகில். —சுவாமி

[1] அம்பகம் = கண்.

2, உனையன்றி யிருப்பதற்கிருப்ப
வொழியாத்துயர்களை யகற்றுதற்கு
யுனக்கொரு சிறந்தசெல்வமென்.
—சுவாமி

3, பனிமா லைமுடியணைக்கையாய்
பலிசா தனைப்படுத்தத் திரிபுரிந்த
பயந்தருள்விற் றிருத்தேன்.
—சுவாமி

4, இருளாழியை யுகத்தேபாவ
புண்மைபேயெனதாகிகலிருந்த
புயிர்போய்மருந்தே.
—சுவாமி

5, மின்னமாய்ப் பிறர்தனைக்கண்டு
மென்னவாயினோ தெரியவில்லையே
யென்றன் பிராணநாதனே.
—சுவாமி

6, ஐயோமனதிரக்கமில்லையோ
அடைப்பருந்தொய்யப்பற்றால்லையோ
ஆதரவுசொல்லையோ.
—சுவாமி

7, இரவோடகல் பகலிரவதாய்த்
திரிகாலமுமுருகிநின்றே
னுருகலினிற்றெய்வமே.
—சுவாமி

8, செல்லையான் கவியுருக்கமுருக்கம்
நீயோவெனதாசைப்பெருக்கமே
நின்றிருவிரக்கமே.
—சுவாமி

6

விருத்தம்

அன்பனே யருமை யானே
யருள்மிகுங் கிருபை யோனே
இன்பனே யினிய வானே
யென்னுயிர் மீட்பி ரானே
துன்பமே யிருந்தே னானே
துயர் தவிர்த்தாள் வல்லோனே
முன்பின்று னேதன் னானே
முதல்வனே யாம னானே.

பல்லவி

எனக்கின்பனே யன்பனே
பரமாசாரி.

அனுபல்லவி

உனையண்டினேன்றஞ்சஞ்சீ வானுசாரி. —என

சரணங்கள்

1. உன்னதமே ஓம்பரமே யென்கோவே
ஒசியன்னாட்சியுமே சியா ராசாவே. —என

2. அர்ச்சயப்பராபரனே யத்தாவே
யாத்துமமிச்சிக்குமோ ரருமைப்பத்தாவே. —என

3. காரணமேதோ கதையோகர்த்தாவே
கவலையினாலே கலங்கிறே னித்தாவே. —என

4. நித்திரையாகாரமின்றிக்கண்ணாரே
நெடுந்துயரமானேன் பிரானேவிண்ணாரே. —என

5. வேதநாயகன்சொன் னனேமுன்னனே
விரும்பிரட்சிப்பதுன் கடனும னனே. —என

7

விருத்தம்

என்சகி மானே தேனே
இன்பமே யிசரேல் போற்றும்
பொன்செரு சாலேம் வாழும்
பூவையே ஓகோ சாலேம்
வன்செய லெனது பூமான்
வாஞ்சையாய் மையல் கொண்ட
துஞ்சமஞ்சொல்வேனெஞ்சத்
துறுதுயர் கேளாய் மின்னே.

1. என்சகிமானே அடிசெலம்
செழுந்தேனேயெனைத்தானே
நாதனுந்தனியே விடுத்தானே
பொன்னெருசாலேம் அடிசெலம்.

2. பொன்னெருசாலேம் அடிசெலம்
ஓகோசாலேம் இதுகாலம்
பூபனும்[1] நிசமாய் மறந்தானே
என் மணக்கோலம் அடிசெலம்.

[1] பூபன் = அரசன்.

3. என் மணக்கோலம் அடிசெலம்
அதி சீலமனுகூலன்
தேவனும் நானா யெழுந்தானே
முன்பு நான்செய்த அடிசெலம்.
4. (முன்பு நான்செய்த அடிசெலம்.
மாபாவ வினை யீதோ
தெரிகிலேன் மாதே துலையாதோ
வெல்லைச்சீராளன் அடிசெலம்)
5. வெல்லைச்சீராளன் அடி.செலம்
சீராளன் பிரிந்தானோ
நெல்லைக் காராளன் பகர்ந்தானோ
என்பிரியமானே அடிசெலம்.

8. திரித்துவாலோசனை

விருத்தம்

வினாவுதற் கரியவான
சேனைகள் விரைந்து போற்றப்
பொனாடுல கனைத்தும் வாழ்த்தப்
பூரணக் கிருபை யோங்கி
மனோகரத்துடனே நேச
மைந்தனாவியுமொன்றாக
அநாதியான் பரமபத்திரா
சனத்தில்வீற்றிருந்தா ரன்றே.

நன்ன நான நான நான
நான நானன நான நான.

1. உன்னத பத்திராசனத்திலுரிமைத்திரு மைந்தனுடன்
றன்னகரில்லாவனாதி தற்பரனார் வீற்றிருந்தார்.
2. சேரக்கூடாதவொளியிலத்திவ்வியகிரு பாசனத்தில்
வீரப்பிரதாபமாக வேதனாரும் வீற்றிருந்தார்.
3. கேராபீன்கள் சூழ்ந்துநிற்கக் கீர்த்தனங்களே முழங்கச்
சீராய்த் திரியேகராச தேவதேவன் கொலுவிருந்தார்.
4. நாலுசீவன்கணின் றேற்ற நாதகீதவோதையார்ப்பச்
சீலமிகுந் திரியேகதேவதேவன் கொலுவிருந்தார்.
5. கோடாகோடி தூதராடக் கோடாகோடி.நீதர்பாட
வாடாதூழி காலமாக வல்லபிதாவீற்றிருந்தார்.
6. ஆவியுடன் மைந்தனாரு மருகிருக்கத் திருவுளத்தாற்
சீவனாதிபிதாவொன்றான தேவதேவன் கொலுவிருந்தார்.

9. தூதாக்கள் கட்டியம்

விருத்தம்

துத்திய மகத்துவ தேவ
சுயாதிபத் திரித்துவகர்த்தா
நித்தியக்கிருபைப் பத்திரா
சனத்தில் வீற்றிருக்கு நேரம்
பத்தியாய்க்கேரா பீன்கள்
பரிசுத்த ரெனமுக் காலுஞ்
சத்தம்வைத் தினியாய்ப் பாடித்
தாள்பணிந் திறைஞ்சிநின்றார்.

1. அதிகசவுரியகன வலமைமகிமையுடையவதி
சயபரம திவியரூபியே
அளவிடவுணரவரிய நெடியகருணையினுதைய
வறிவினொரு சுயசொரூபியே
விதிமறையினெறிகடிரு வசனமொழியருள்பொழியும்
விமரிசைவி புதர்கணதரா
மிகவுமொளிவிடுமொருவ ரடாரியகடுவெளியின்
மிசையுறையு மறு தணபரா
சதிவினையலகைகள்படு கொடியபட விடமுடிக
டகரநட மிடு மிருபதா
சருவவுலகமுநிறைவ ளமைகள்செறிபொறைகளொடு
தயைபுரி தருமகுணபிதா
துதிசெய்திருதிருவடிகள் சரணெனவிணவர்கள்படை
தொழுமரிய திருவடிவமே
சுபசுகிர்தநலமிலகு பிரசனசன தியின்வலு
துணையரு ளுனதபிரமமே.
பராக்கு, சுவாமி பராக்கு.

2. திருமறைநெறியினுலவு பரமகுருபரவிமல
திவியகருணையினுதையமே
சிவமயசொருபவருப சுசிகரவசிகரவரு
டிகழ்பிரவை யொளிர்மதியமே
யுருவமிலதுடலுமில துவமையிலதரியதிரு
வுளமுடைய கருணைநதியே
யுயர்ககன விரிவினெடு வெளியினுயர்வினுமுனத
வொளிவினுல வியசனதியே
தருமசுபசமுகமிசை பரவுகெருபினுகணவ
சபையமரர் பணியும்நலமே

சகலபொருள்களையுமறு தினமதனிலருளிமிகு
தயைசெயு மதிவினகலமே
யருமைபெருமைகள்செய்துன தருளுதவுதிருவிழிகொ
டனவரத துதிசரணமே
அனையவுயிர்களுமிரவு பகலுமுடிவிலதுருவி
யபையமி டுனதபிரமமே.

பராக்கு, சுவாமி பராக்கு.

10. சங்கீர்த்தனம்

விருத்தம்

தம்பிரா னொருமெய்த்தேவே
சத்தியத் திருப்பிதாவே
யும்பரி னுரிமைக்கோவே
யுன்னதத் துயர்ந்தவாழ்வே
நம்பினேஞ் சரணந்தாவே
ஞானசங் கீர்த்தனப்பாவே
அம்பரா யேயோவாவே
அருள்செய்அல் லேலூயாவே.

பல்லவி

கிருபைப்பரா கிருபைப்பரா
கிருபைப் பரமேசுரா
கீர்த்தனஞ் சங்கீர்த்தனமிஸ்
தோத்திரஞ் சருவேசுரா.

சரணங்கள்

1. அருமைப் பிதாச்சுதனரூபி
யட்சயத் திரியேகமே
அனந்தசதானந்தருளா
னந்தப் பிரவாகமே. —கிரு

2. அதிகசவு ரியவல்லமை
மகிமைப் பிரதாபியே
அதிசயவி னோதகிரு
பாசனத் தொரூபியே. —கிரு

3. பரமதயாபர கருணும்
பரவுனத நேசமே
பகரமுடியாத பரி
பூரணவிலாசமே. —கிரு

4. உதாரவசி தானவுயர்
வானவர்தானமே
யுருவமிலா அவயவமிலா
தொனிர்பரமஞானமே. —திரு

5. பரிசுத்தம் நீதிக்ன்முக்கிய
பாக்கியசத் தியதேவனே
ப்ரிவற்றபூரணபக்ஷா
பதிசித் தியசிவனே. —திரு

6. அருள்செய்பரா அருள்செய்பரா
அனந்த சதாகாலமே
அம்பரவே காம்பராகரு
ணையபரவே லோகமே. —திரு

11

விருத்தம்

ஒப்பிலாத் தயைவிசால
சூழ்பெர ஜீழ்காலனு
செப்பருந் தேவசீலன்
தெரிசனக் கெட்டாக்கோலன்
தப்பறை படர்ந்த ஞாலனு
சகலரும் போற்றாம்மாலன்
அப்பனே ஆதிமூலன்
அருள்செய மோகமோலன்.

பல்லவி

சிவப்பரம பேயோவாதிவிய
திரிபேகவதிசய தேவாரேகுருபா.

அனுபல்லவி

மூவா னொரேபரூபி
முக்கிய கிருபைச்சொரூபி. —சி

சரணங்கள்

1. சருவேசரா சருவக்கியானி
நிருபாகரா வரியயெஞ்ஞானி
திரிலோகயாளும் பிரதானிபொறைத்
தற்பராமெய்யான தாதாகிருருபா. —சி

2. கருணாகரகதிதருங் கத்தா
பரிபூரணவதி பரிசுத்தா
பரமேசுரா மெஞ்ஞானப்பத்தா சரண்
டந்தாள் சதானந்தாளந்தாய் நீ குருபர. —சிவ

3. அதிபதியேயற்புத நாதா
அதிசயமே சத்தியவேதா
பரகதியாணித்திய போதாதுதி
தூதர்கள்பாடிய சுந்தராகுருபர. —சிவ

4. அருளம்பராவானவர் கோவே
ஒருதம்பிரானுன மெய்த்தேவே
யுருவம்படாநித்திய பிதாவேசர
ணம்பினேம் வேதாந்த நாதாநீகுருபர. —சிவ

5. ஓம் அல்லா அல்பா ஓமேகா
மாவல்லா மகத்துவ தெய்வீகா
ஆ அல்லேலூயா திரியேகா ஆ
மன்னுசினேகா முன்னுநீகாகா. —சிவ

12

விருத்தம்

நினைத்தது தருஞ்சகாயா
நித்திய கிருபைத்தூயா
வினைத்துயர் தவிர்க்குமாயா
வினைதவுற் பனவுபாயா
வனைத்துதி செய்வோமோயா
தூழியோ டூழிநேயா
அனைத்துள வுயிர்க்குந்தாயா
அன்பையா அல்லேலூயா.

பல்லவி

சிவதவசுபநவ தெய்வவதி
செயசொரூபியே அருள்புரி
திரிமுதலொரு பொருளநுகுண
திவிய ரூபியே.

அனுபல்லவி

உவமையற்றமெஞ்ஞான சத்தியவுன்னதத்தேவாதயாபர
ஒப்பிலா வுண்மைப்பராபர ஒரேயேயோவா. —சிவ

சரணங்கள்

1. ஓம்பகவா ஓம்நமா அல்பா ஓமேகாவே ஓகோ
வும்பராகருணும்பரா ஓலம்பதந்தாவே
ஆம்பிரமா ஓம்நமா அனாதிமூலமே ஓலோலம்
அல்லேலூயா மகத்துவமனந்த காலமே. —சிவ

2. அதிசவுரிய பெலமகிமையனாதி யன்பையா ஓர்
ஐயனேபரமையனே யருள்செய்யு மின்பையா
துதிமிகுமதிபதி சயபதிசுர நரபதியே ஐயாவே
சுத்தனேசதாநித்தனே கரிசித்தவானதியே. —சிவ

3. வேதமந்திர தீதவிந்தைகண் மிகுந்தசிங்காராவுதாரா
மித்திரபேதகனத்தமேவிய சத்துருசங்காரா
ஆதியந்தமிலாதசுந்தர ஆமனுமனு ஓகோகோ
அனந்தனந்தசங் கீர்த்தனந்துதியாளுமோசன. —சிவ

13. பிதாவின்றிருவாக்கு

விருத்தம்

ஆதியான் சுதனோடாவி
யானவர் தமையும்நோக்கிப்
பூதலங் கெடுக்கப்பட்டுப்
போனதா லவரைமீட்க
மாதின்வித்தினிலே தோன்றி
மனுடவ தாரஞ்செய்தென்
னீதியி னுத்ரவாதஞ்
செய்வதார் நிகழ்த்துமென்றான்.

1. தந்தையனாதிபிதா மைந்தனாவியு மொன்றாய்ச்
சதா கோடிகோடி யூழிகாலம்
விந்தைப்பத்ராசனத்திற் சுந்தரத்தாஞ்சுகள்போற்ற
வீற்றிருக்கின்ற வொருநாளில்.

2. சோதிக்கேராபீன்களும் நாதகீதப்பிரதாப
தூதர்சேனைகளெலாங் கேட்க
ஆதிபிதாவானோர்தம் நீதிக்குமாரனையும்
அரூபித்தம்பிரானையுங் கண்ணோக்கி.

3. அருமைத்திருக்குமாரா பரிசுத்தாவியேநீவிர்
கருதிக்கேளுஞ் சொல்லுவோமென்றே
திருவாய்மலர்ந்து தேவ திருவுளத்தின்படியே
செப்பலுற்றார் சிறிதுமாற்றம்.

4. அந்தகாரச்செறக்கம் புவி யாதும்மொருவாகித்து
மறுகாலினக்குள் வெளியுண்டாக்கி
வையந்தரிருவளையுர் தன் ஆகிநைகாலமில்
வைத்துக் கிருடைகள் யாராட்டு.

5. ஏதன்சிங்காரக்காவின் மீதிருவினதமாக
இரண்டுவிருட்ச சந்தையுமாட்டு
ஆதன்விருட்சம் என்றதீதறிவின் விருட்சம்
ஆக இரண்டுவொன் றருளாமல்.

6. விலருக்கற்பனை மீறி மனைக் சற்பத்தின் சொல்லே
பொய்யென்றருக்கின தத்தினாலே
கலைகுலைசெய்த சாபங்க ளுலகந்தனில் வந்தது
கடுகவழுந்திருள் புகாமல்.

7. இரட்சிக்கவேறுமாறு இல்லைஇப்பட்டதோன்று
னீதிக்குத்தரவாதஞ் சாராது
முச்சகத்திற்படைத்த எச்சிலுமெட்டாது
யோக்கியத்தைத்தரலாது.

8. சம்பனைக்கள் தானுஞ் சம்பதித்துச்செல்லாது
சத்தியவுண்மையும் இல்லாது
சம்பியொருத்தர்செய்தாற் செம்மையுடையதாமறிந்தலாம்
ஞாயம்நீதிக்கும் பொருந்தாது.

9. மைந்தர் கற்பனை மீற விக்கைத்கோபத்தினைக்குள
மற்றப்பிரதான ஆதாரரும்
வாக்குத்திரவா தஞ்செய்த வெள்ளைதரயுத்துக்கேற்ற
மண்ணினைக்கும் கைகட்டாமே.

10. எந்தச்சுபாவத்திலே வந்தநேயாளமாயிக்க
ஈடுசெய்யப் படுநீதி
அந்தப்பிரகாரமாக கணைந்தி மடியவேணும்
அல்லதுபரந்தி சாகவேணும்.

11. ஆனதாற் பூதலத்திலொனாலும் நிக்கவொது
மங்களைகர்ப்பத் துறபாவித்த
மானிடனைப்பிறந்து மானிடர்செய்தபவ
மாற்றுதற்காகப் பாடுபட்டு.

12. மாண்டுயிர்த்தாலல்லாது மீண்டொருகுலத்தை
வாழ்விக்கும்வகை யொன்றுங்காணேம்
நீண்ட அன்பாலஞ்செய்ய வேண்டுமெப்பொருளென்ன
நீவிர்நிகழ்த்துமென்றுரைத்தன.

14. பரிசுத்தாவியின் மறுமொழி

விருத்தம்

திருமுதல் கிருபையாச
னத்தில்வீற் றிருக்கத் திவிய
அருபியா ரெழுந்துநின்
றனுதினை நோக்கியையா
இருநிலங் கெடுக்கப்பட்டன்
னோர்நரகத்தில் வீழ்கா
துரிமையாய் மீட்கவேண்டி
யொருசுத னனுப்பவென்றான்.

பல்லவி

ஐயனே நரர்மீதிரங்கியரு ளையனே

சரணங்கள்

1. வையங்கெடுக்கப்பட்டு நொய்யுதனுதியுளின்
றப்பசுதனை விடுத்துய்யக் கிருபைபுரியும். —ஐ
2. ஆதத்தின் மக்களெல்லாம் போதத்தவிக்கிறார்கள்
வேதத்துரைப்பிரகாரம் நீதிச்சுதனைத் தந்தாள். —ஐ
3. மைந்தர்மடிந்துநர கந்தனில் வீழ்காதுன்றன்
மைந்தனைத்தந்தாதரித் தெந்தவிதமுங்காப்பாய். —ஐ
4. முந்துமனுடருக்குத் தந்த வாக்குத்தத்தத்துன்
சிந்தைமகிழ்ந்தவர் நிற்பந்தந் தவிர்க்கவேண்டும். —ஐ
5. நம்மிலொருவரான மும்முதலினடுவர்
தம்மையனுப்புவதே செம்மை நன்மைப்பிதாவே. —ஐ
6. ஆகாதவன்மடிந்து சாகா துயிர்பிழைக்க
வாகாயருள்செயுந் திரியேகாவுமக்கி ஸ்தோத்திரம். —ஐ

15. பிதாவுக்குஞ் சுதனுக்குஞ் சம்பாவனை

விருத்தம்

உன்னதப் பிதாவொன்றான
புத்திரன் முகத்தைநோக்கி
யென்னதி பிரியநேச
மைந்தனே யிரங்கக்காலங்

கன்னியாஸ்திரீபாற் றேன்றிக்
கருணையா யுலகைமீட்டுப்
பொன்னகர் வாழ்கச்செய்யும்
புண்ணிய முமக்கென்றனே.

1. வன்னமலர்க்காவதனில் மானிடர்க்கனுக்ரகித்துச்
சொன்னதொருகாலமாச்சே சுந்தரத்திருக்குமாரா.
2. சத்தியபிதாவேயுன்றன் றப்பிலாசீதிப்பிரகாரஞ்
சித்தமதற்கானபடிசெல்லுகிறேன் விடைகொடுத்தால்.
3. ஆதிநரர்பாதகத்துக் காக்கினையிடாதிருந்தால்
நீதிநிலைநிற்பதெங்கே நேசமிகுஞ்சுந்தரமே.
நீதிநிறைவேற்றுதற்காய் நீணிலத்திலேபிறந்து
சாதிகளின்பாவத்துக்குத் தாதையேநானுத்தரிப்பேன்.
5. ஆதிநரர்பாதகத்துக் காக்கினையிட்டேயழித்தா
லோதுகிருபைக்கிடமேயுண்டு மோதான்சுந்தரமே.
ஓதுமுன்கிருபைப்பிரதாப முன்னதசினேகத்தையே
பூதலமெலாமறியப் போய்விளங்கச்செய்வேனையா.
இஸ்திரீயின்வித்திலொரு இரட்சகனைத்தான்விடுக்க
விஸ்தரித்துச்சொன்னதற்கு வேளைவந்ததென்மகனே.
மத்தியஸ்தனுகநானே மானிடவதாரஞ்செய்து
சத்தியவுரைவழாமல்த் தாதையுமக்கீடுசெய்வேன்.
வே. நெஞ்சினும்பனமேயென்ற னேசகீரீடமே நீர்சென்று
அஞ்சல்கொடுத்தேழைதனை யாதரிக்கவேண்டுமன்பே.
அட்சயப்பிதாவேயுன்ற னரியகட்டளைப்பிரகாரம்
இச்சணமேபோய்வருவே னென்றனையனுப்புமையா.
எனைப்பிரிந்துபோயுலகிலேழையைமீட்டாக்கினையை
மனத்துறச்சுமர்ந்தும்மோடே வாழ்வியுமென்னேசமைந்தா.
வாக்குத்தத்தத்தின்படியேமாந்தர்பிணையாளியாகத்
திர்க்கமுடன்பாடுபடச் செல்லுகிறேன்றிருவுளமே.
13. நானிலத்தினின்வருகை நாளதனைக்காணநின்று
மானிடரெலாந்தவித்து வாடுகிறாரென்மகனே.
14. ஆனதினாலுடனே யரிவையிடத்துற்பவித்து
மானிடருக்காய்ப்பெலியாய் மாண்டிறக்கப்போறேனையா.
15. பாருலகெலாங்கெடுக்கப் பட்டுநரகிற் செல்லாமல்
வாருமென்றன்கண்மணியே வாழ்த்துகிறேன்போய்வருவீர்.
16. சத்தியக்கிருபைப் பிதாவே தப்பிலாதமெய்ப்பொருளே
சித்தமுடன்போய்வருவேன் றிருவுளமேசரணமையா.

16. குமாரன் சபதம்

விருத்தம்

ஆதியான் பரிசுத்தாவி
யிருவரு மருளிச்செய்த
போதகப்படி பொன்றுன
புத்திரன் மனுவேனின்றே
யேது போசனையென்றுறு
மியற்றுவேன் கவலைவேண்டாஞ்
சோதியே வருகிறேன்போ
யெனத்தொழுதகன்றுன் மாதோ.

பல்லவி

இதுக்கோ இந்த போசனை சாமி
மனுவேல் நானிருக்க.

அனுபல்லவி

வதைக்கிறேன் வேதாளத்தை
யுதைக்கிறே னவன்வித்தைச்
சிதைக்கிறே னாகத்திற்
புதைக்கிறே னதுக்கென்ன. —இத

சரணங்கள்

1. இஸ்திரீ கன்னிகையின்
வித்தென்றிருவுருவங்காட்டி வலுசர்பத்தை
யெத்தி மிதித்து வஞ்ச
கத்தின்றலையைவிழுத்தாட்டி அதின்வித்தனைத்துஞ்
செத்து மடிந்து நர
கத்திற்கிடந்தலறமாட்டி நாற்றுமாக்கள்
பத்துக்கற்பனைபிரமா
ணத்தின்படிநடக்க நாட்டியுலகையெல்லாஞ்
சத்தியவே தத்தையர்ச்
சித்துநடந்துனது
சித்தத்தை மண்ணேர்கள்வர்
ணத்தைப்போற் செய்விக்கிறேன் —இத

2. துடுக்கா யேதேனில்வந்து
முடுக்காயேவாளையேய்த்த வண்டன்சர்பத்துருவம்
உடுப்பா யெடுத்துக்கொண்டு
மடிப்பாய்க்கெடுத்தவனு மிண்டன்பொல்லாவிடக்கன்

படுக்காளி வஞ்சகத்தி
னிடக்காகநின்றதைசொன்னசண்டன் இவன்றாத்தை
யெடுப்பாய்த் தகர்த்துடைக்கப்
பிடிப்பாய்நிருணயம்பண்ணிக் கொண்டேன் உத்தரந்
தந்தாற்
பிடிப்பேனவனானை
யிடிப்பே னொரு நொடியில்
மடிப்பேன் பழிக்குப்பழி
முடிப்பேனென் றொலாகாதோ. —இது

3. பூத்த புவனமெல்லாங்
காத்திரட்சிக்குஞ்சரு வேசாபொல்லாதவரில்
பாத்திரமானவரெம்
மாத்திரம்கலம்பரம வாசாநித்தியவாசா
சாத்திரமும்நீ செய்யும்
ஆத்திரமும்வீணுமா நேசாஞானப்பிரகாசா
தோத்திர வேதநாயகன்
காத்திரக்கவிக்கருள்வி லாசாவுலகைக்கரை
யேற்றி யூழியூழியும்
போற்றியுமைப்பணிய
தேத்தியாயுன் ராச்சியத்தில்
வாழ்த்திவைக் கிறேனையா. —இது

17. பிதாவினுத்தரவு

விருத்தம்

மாறுதலில்லான் சொன்ன
வார்த்தையால் மகிழ்ந்துமைந்தன்
றேறியே யுலகைமீட்கத்
திருவுளத் தனுக்கிரகித்துப்
பேறுடன் விடையும்பெற்றுப்
பிரிந்தன னணைத்துக்கட்டி
யாறுத லாயனுதி
பிதாவுமக் களித்தான்றே.

45ஆம் பிரார்த்தனை, 2-கவி.

1. தூய்ய திருப்பாலனே
துன்பவினை சூழ்ந்ததோ—மகனே
வையகத்தோ ரால்நமக்கு
வந்தபல விதுதானோ.

2. ஆதியுட னேவையை
யந்தவனந்தனிலே—மகனே
காதலுடன் வைத்ததற்குக்
கண்டபல னிதுவோதான்.

3. விலகுங்க னிபொசித்து
வீழ்ந்தபாவிகளுக்காய்—மகனே
வலமைத்தே வாதிதேவன்
மனுடனுக வேண்டாமோ.

4. தெண்டிக்க நேரஸ்தராய்ச்
சேர்ந்த நரரையெல்லா—மகனே
கண்டுசந் தித்துமீட்பாய்
கருணைத் திருவடிவே.

5. கோபாக்கினை பெரிது
குற்றமில்லாதஆடே—மகனே
பாவாட்களைச் சயித்துப்
பாடுபட் டுத்தரிப்பாய்.

6. நரகத்தைக் காணுமல்
நரர்குலம் வாழ்கவே—மகனே
தரணத்திற் சென்றுலகின்
சாபத்தை யேதவிர்ப்பாய்.

7. மானிட னுய்ப்பிறந்து
வல்வினையைச் சுமந்து—மகனே
ஈனச் சிலுவைதனி
லேயறையுண்டிறந்து.

8. மரணத்தைச் செயங்கொண்டு
வலியசற் பத்தைக்கொன்று—மகனே
நரகத்தைப் பூட்டிவான
நாட்டில் வருகுவீரே.

18

வெண்பா

தேசுலவுமேலாந் திரித்துவத்திலொன்ருன
மாசில்லாஞான மணவாளன்—மேசியா
நேசக்கருணை நிரம்பியெனைமீண்ட
வாசைக்கிறிஸ் தரசனே.

ஆசைக்கிறிஸ்தரச னிவர்தானே—வேந்தன்
அருமை இரட்சகரென்பதிவர்தானே.

1. மாசில்லாத சித்ர பாவைபோலிருக்கிறார்
மகிமைத்தமது திருவசனத்தை விதிக்கிறார்
வந்தெனைமுகம் பாராரா
மனத்துயரத்தைத் தீராரா
மாட்டாரா கைவிட்டுப்போட்டாரா
மாட்டுக்கொட்டிற்குள்ளவர் வந்ததென்னவோ. —ஆசை

2. அழகினிலிராசகுமாரனைப்போலே இருக்கிறு
ரன்பானபார்வையாலென் னகத்தையுருக்கிறு
ராத்துமத் தகைமீறுதே
பாசைவின்னிது மேறுதே
அற்புதமோ தெய்வவற்பனமோ
ஆச்சரியமாயெனையீண் டாண்டதெய்வமே. —ஆசை

3. அத்தன்றிருச்செபமேப் புத்திபெட்படிக்கொள்ளு
மாண்டவன்கிருபைக்கென் னகமக்களித்துத்துன்று
மாராய்வில்லாத வாழ்மே
பளவிலடங்காத சீளமே
அவரன்பதுவு மின்பமது
மாச்சரியமாய் பிருமிப்பாக்கிவைக்குதே. —ஆசை

4. கர்த்தன் திருவுடலிற் காயமைத்திருக்குது
கங்குல்பகலுமாயென் கருத்தினையுருக்குது
காணுதவாட்டை சோக்காரா
கண்டுபிடித்தாற் றாக்காரா—அவர்
கற்பனையும் விற்பனமும்
காட்சியாகத்தோன்றியென்கண் ணுக்குணிற்குதே.—ஆசை

5. வேதநாயகன்சொன்ன பாட்டைக்குலாவுகிறார்
மிக்கசவையினடுவே வந்துலாவுகிறார்
மேனியெல்லாம் பசும்பொன்னு
மெய்யாக வானத்தின்மன்னு—இவர்
விண்ணோர்க்கு மண்ணோர்க்கு
மேவிநடுவாகவந்த மேசியாவோ. —ஆசை

19. மணவாளன் மனைவியைச் சந்தித்தல்

விருத்தம்

திவிதாட் சித்தோட்டத்திற்
சித்திரச் சீபோன்செல்வி
காவல்காத் திருக்கும்போது
காரணத் தம்பிரானார்

மேவியோர் மனுடனாக
வேடமே கொண்டுசென்று
பாவையைச் சந்தித்தங்கே
பரிந்துசம் பாஷித்தானே.

கிறிஸ்து

1. கன்னல்மொழிமின்னரசே காவிலுறும்பூங்குயிலே
அன்னநடைப்பெண்மயிலே அருமைச்சீயோனேகேளாய்.
2. கோத்திரிகைக்காவனத்திற் காத்திருக்கும்பைங்கிளியே
பூத்ததிருமலரே பொற்கொடியே பெண்ணேயிராகேல்.
3. விரும்பியல்லோவுன்னைத்தேடி வேஷமாறிப்பூவில் வந்தேன்
திரும்பாயோஎன்பிறகே சித்திரச்சீயோன்மலைக்கு
4. போவோம்வாராய் பெண்ணேராகேல் பொற்புறு
சீயோன்மலைக்கு
தேவசெம்மறியாட்டின் திருக்கலியாணத்துக்கு.
5. அன்பேயென்னுருயிரே யாத்துமசினேகிதியே
என்பிறகேவாராய்மாதே யேதென்பரதீசுக்கு.
6. ஏதன்பரதீசினி லின்பமுண்டு செல்வமுண்டு
தீதற்றவாழ்வதுண்டு சீவவிருட்சமுண்டு.
7. வாராய்நீபெண்ணேயிராகேல் மகத்வச்சீயோன் மலைக்கு
தாராயுன்பொற்கரத்தைச் சம்மதித்திங்கென்றனக்கு.
8. ஏதன்சிங்காரக்காவி லென்னகுறையுண்டுனக்கு
மாதரசேநித்தியமும் வாழ்ந்துசுகித்திருப்பாய்.

சீயோன்

9. என்னசொன்னீர்தம்பிரானே யேதுகாணுமிந்தவார்த்தை
கன்னியென்றுநானிருக்கக் கைகொடுக்கச்சொல்லுவீரோ.
10. சித்தரப்பேச்சாகப்பேசிச் சிறையெடுக்கவந்தீரோ தான்
பத்தினிநானென்றுமக்குப் படலையோநெஞ்சகத்தில்.
11. கூடிவரச்சொல்லுகிறீர் கோத்திரத்துக்கினமல்லோ
நாடியென்னைக்கொண்டுசெல்ல ஞாயமுண்டோநீதியுண்டோ.
12. எந்தவூர்நீர்தம்பிரானே யெங்கணிருந்தெங்குவந்தீர்
என்றனைநீர்கைப்பிடிக்க ஏதுமக்குச்சொந்தமுண்டோ.
13. திரும்பிச்சீயோன்மலைக்குச் சேர்ந்துவரச்சொல்லுகிறீர்
பெரும்பழியுண்டாகாதோ பிறந்தகயூதர்கண்டால்.

தனிவழிகாவ்வாரத்தான் சம்பதிக்குமோவினைக்கள்
அனியாய யூதருமெய் மருக்கொலைசெய்திடாரோ.
கட்டிவார்கள்கள்வனைப்போற் காலொக்கலைத் தூனைத்தாக்
கொட்டமிட்டுக்கழுவேற்றிக் கொன்றிடுவார் தப்புமையா.
சீயோன்மணவாளருக்குத் தீர்க்கவெழுதினதா
மாடும்விதியல்லாது மற்றிலைக்காண் மன்னவனே.

திரிந்த

மாடும்படுவந்தாலும் மறப்பேனோ சீயோனுன்னை
ஒடும்படுவந்தாலு முனக்காயுயிர்கொடுப்பேன்.
ஈபெனக்கதிகமல்லா லின்பிராணனேசமல்லால்
ஆபிழைபெயுன்னைவிட ஆனபொருளேதெனக்கு.
உன்னுயிர்க்காவென்னுயிர்விட புன்னுடற்காவென்னு
டலு, மிக்கிலத்திலேபெவியா மீயவந்தேன் சத்தியமே.
பாமண்டலத்தைவிட்டேன் பத்திராசனத்தைவிட்டேன்
நரைமண்டலத்தில்வந்தேன் நலைசாய்க்கவிடமற்றேன்.
எத்தனையோபாக்கியங்க ளத்தனையும்விட்டேனல்லோ
வுத்தமியேயுன்பொருட்டா லுயிர்தாவஞ்சுவேனோ.
வர்த்தேதல்லாம்பான்படுவேன் வல்வினையைத் தரிப்பே
னுன்றன்சினேகமெனக் கொன்றிருந்தாற்போதுமின்னே.
வன்னமயிலேமானே வாரீரோ பொன்னகர்க்கு
அன்னப்புருவேவாவே யன்பாயென்னோடுலாவே.
சேர்ந்துநடந்துவாருஞ் சீயோன்மலைக்குப்போவோம்
போர்த்தசினேகிதமே பூரணமே பெண்ணேயிராகேல்.

சீயோன்

சித்திரங்களாகப்பேசித் திரியாதேயுந்தம்பிரானே
பெத்துவாதமாகப்பேசி யேய்க்காதேயுமாசாரே.
20. சாலேம்பட்டணமாளும் தாவீதிராசன்மகன்
மாலாகியென்றனைநீர் மாலையிடக்கிட்டுமோதான்.
21. பூலோகத்தார்பணியும் பூமண்டலாதிபதி
சாலோமோன்வேந்தனுக்குத் தங்கையென்றறிந்திலீரோ.
எங்கள்குலம் யூதர்குல மெபிரேயச்சாதியல்லோ
தங்கவந்தனுடவர்க்குத் தருமோபெண்கிட்டுதற்கு.

29. கலிலேயநாட்டானுக்குக் கலியாணஞ்செய்யலாமோ
நலியாமற்சொல்லுமையா நாசரேத்தினன்மையுண்டோ.

30. வழிப்போக்கனோடேகூட வாழ்ந்திருக்கச்சிந்திப்பேனோ
பழிக்காரோதேசமெங்கும் பார்த்தவருங்கேட்டவரும்.

31. கள்ளவாய்வந்தவரைக் கனிந்துறவாடுவேனோ
மெள்ளவுருமாறிவந்த வேஷதாரித் தம்பிரானே.

32. சாதிவிட்டுச்சாதிவந்து தலம்விட்டுக்காடுசென்ற
ஏதுமற்றஏழையற்கோ இச்சித்துப்பின்றொடர்வேன்.

கிறிஸ்து

(எசேக். 16:3–8)

33. என்னசொன்னாய் பேதாய்கோதா யெருசலேமகளே
யுன்னுடபூருவோத்திர முரைக்கிறேன் கேளுமிப்போ.

34. ஏமோரியன்றகப்பன் கேதீத்தியின்றவளே
சாமாரியாள்தமக்கை தங்கைசோதோமியாளே.

35. நீபிறந்தநாளிலேநின் தொப்புளறுபட்டதில்லை
நீபிரியமாம்படிநீ ராற்கழுவப்பட்டதில்லை.

36. உப்பாற்சுத்திகரிக்கப் பட்டதில்லைநீயோவென்றுல்த்
துப்பாய்ப்பிடவைகளிற் சுற்றிவைக்கப்பட்டதில்லை.

37. அருவருப்பானதினு லந்தரத்தெறியப்பட்டா
யொருகண்ணெனுமுன்பேரி லுருக்கம்வைத்ததேயில்லை.

38. வெளியிலெறியப்பட்டாய் மெத்தஅரோசிக்கப்பட்டா
யிளிவாய்க்கிடக்கையிலே யேகிவந்தோமுன்னருகே.

39. மிக்கவுன்றனிரத்தமதில் மிதிபடக்கண்டிரங்கிப்
பக்கிஷமாயுன்னுடனே பிழைப்பாயென்றேபகர்ந்தோம்.

40. பிழைப்பாயென்றேஞ்செந்நீரிற் பிரண்டுகிடக்கு முன்னைப்
பழிக்காயோஇப்போமாதே பருவமுனக்குவந்தால்.

41. உன்னைவயலின்பயிர்போ லுருக்கஇரக்கமாக
அன்னமேயனேகனேக மாயிரங்களாக்கிவைத்தோம்.

42. நேசமின்கொடிபோலோங்கி நீவளர்ந்தேறிச்செழித்து
மாசவுந்தரியத்தையடைந்தாய் வாலைப்பிராயமானாய்.

43. விம்மியேதனமெழும்பி மிகவுன்மயிர்வளர்ந்தும்
அம்மணத்தோடேயிருந்தா யருகேகடந்துவந்தோம்.

உன்னைக்கண்ணேக்கிப் பார்த்தோமுற்றனைநாம்
பார்த்தபோது
கன்னியுன்கால்ப்பருவ காலமாயிருந்ததுவே.
எம்முடையவஸ்திரத்தை நாமுன்மேலே விரித்துன்
அம்மணத்தைமூடியுனக் காணையிட்டுக்கொடுத்தோம்.
உன்னுடன் விவாகஞ்செய்ய உடன்படிக்கைக்குள்ளாகேனே
யென்னுடவளானுயன்றே யெருசலேமகளே.
திருவாணமூடினத்தை நீமறந்துபேசலாமோ
அறியாயோபேதாயுன்ற னுதிபூருவோத்திரத்தை.

சீயோன்

மட்டுமேறியாதைபன்றி வார்த்தைசொல்லக் கேட்பேனே
நான்
அட்டதிக்கிலுங்கள்வள்ள வறிபேனே தம்பிரானே.
கன்னியுங்கள் தாயாரும்மை கர்ப்பமுண்டானகாலை
அன்னியனகுலஸ்திராப னருளுக்குடிமதிப்பில்.
நாசரேத்தைவிட்டுமாதா நடந்துபாதபித்து
வாசமலர் பெத்தலேமில் மடத்திலிடமில்லாமல்.
பேறுகாலமானதினும் பிள்ளையாரே நீர்பிறக்க
வேறிடமொன்றுமில்லாமல் வெளிபேவனுந்திரத்தில்.
மாடடையுங்கொட்டிலுக்கு மருகிவந்துபெற்றவும்மை,
மூடியபிடவைசுற்றி முன்னணையில்வைத்திலரோ.
மாட்டுமுன்னெட்டியிலே வந்தவரைநான்பிடித்தாற்
பாட்டுவேதநாயகன்றன் னுட்டிலெங்குந்து ற்றவானே.
எகித்துவுக்கோடினதே ரோதையனுக்கஞ்சியல்லோ
மகத்துவம்வல்லமைகள் வளமைகளென்னசொல்ல.
சாமாரியாப்பெண்கிட்டத் தண்ணீர்நீர் கேட்டதுண்டே,
ஆமாகங்கோத்திரத்துக் கடுக்குமோ ஆசானுரே.
கழுதைக்குட்டியிலேறிக் கலியாணஞ் செய்யவந்தீர்
முழுலோகத்துக்குமிது முக்கியவிசேடமல்லோ.
17. அக்கழுதைக்குட்டியுமக் ககப்பட்டசந்தோஷத்தை
முக்கியக்குலஸ்திரீக்கு முன்னாக்கூறச்சொன்னீரோ.
(சகரி. 9:9)
கிட்டுமோ இந்தவாழ்வு
18 கிடைக்குமோஎங்களுக்கு கொண் டாளவந்த ஐயனுரே.
அடக்கமாய்ச்சீயோனைக்கொண் டாளவந்த ஐயனுரே.
19. போதும்போதுந்தர்க்கவாதம் போய்விடுங்காணத்தானுரே
காதல்கொண்டுநிற்கவேண்டாங் கடந்திடுந்தம்பிரானே.

கிறிஸ்து

([illegible])

60. [illegible]
[illegible]
61. [illegible]
[illegible]
62. [illegible]
[illegible]
63. [illegible]
[illegible]
64. [illegible]
[illegible]
65. வெற்றியில் வெற்றிப்பட்டத்தை [illegible] காதுகளில்
[illegible]
66. [illegible]
[illegible]
67. பொன்னினாலும் வெள்ளியாலும் பூண்டலங்கரிக்கப்பட்ட
[illegible]
68. [illegible]
[illegible]
69. [illegible]
[illegible]
70. இராச்சியத்தையுடைய [illegible]
பராக்கிரமத்துனை [illegible]
குற்றமொன்று மில்லாமல்
முற்றிலு நன்றாகவே
மறை பெற்று வலமை பெற்று
நிறை பெற்று நீடுழிவாழ்க
வன்மையுஞ் சட்டமுமகா
செம்மையுந் திட்டமுமாக. —ஆர்

8. கன்மத்தினால் மனது
துன்மைக்குச்சார்ந்திராமல்
கட்டளைப்பிரமாணத்துக்குத்
திட்டமாகக் கீழ்ப்படிந்து

நன்மை துன்மை பாவபுண்ணியம்
இன்னதென்றறிந்து புத்தி
நடத்தினபடி யெல்லாமனந்
திடத்துடனே கீழ்ப்படிய. —ஆற்

9. துற்குண மொன்று மில்லாமல்
நற்குணங்களே நிறைந்து
துன்மையை விலக்கி விட்டு
நன்மையைத் தெரிந்துகொண்டு
சற்குணம தாய் நடக்கத்
துக்கதிற மூந்திடனுஞ்
சாகிரதையும் பெலனுஞ்
சாமர்த்திய முள்ளதாய். —ஆற்

10. மனதின் குணகுணங்க
ளெனு நம்பிக்கை சினேகம்
வல்லபயந்தேவ பத்தி
சொல்லரும் வரங்களெல்லாம்
தனதுடைய சிஷ்டிகரின்
கனமுடைய ஊழியத்திற்
சந்தோடமாய் நிலைத்து
நந்தாமலே யிருக்க. —ஆற்

11. முரட்டாட்ட ஈனகுணம
குருட்டாட்ட மானகுண
மூர்க்க வயிராக்கியங்கள்
ஆக்கிரம சலாக்கியங்கள்
கரட்டாட்ட அசமந்தம்
பிரட்டாட்ட மாறுபாடு
கற்பனைக் கெதிர்த்து நிற்கும் —ஆற்
சற்பனைத் தனமுமற்று.

12. அச்சமற்ற குணங்களும்
இலட்சை கெட்டதனங்களும்
ஆசையந்த காரமும்
மாசடர்ந்த கொடூரமும்
சச்சரவு காமவிகார
இச்சைகளனைத்து மிப்போ
சங்கடங்களாய் முளைத்த —ஆற்
பங்கங்களொன்று மில்லாமல்.

13. அவகேடு அவமதி
தவகேடு சற்பனைகள்

அக்கிரம அருவருப்புத்
துர்குண குறு குறுப்பு
அட்டவினை கோடியுள
கெட்டகுண மானதில்
அற்ப அணுவாகிலுந்
தப்பிதமொன்று மிலாமல். —ஆ

14. பாக்கியங் குறையற்றச
லாக்கியம் அளவில்லாத
பக்கிஷம் பரமஞானம்
பொக்கிஷம் நிறைந்திலங்கும்
ஆக்கமும் அழிவில்லாத
தீர்க்கமுஞ் சொல்லக்கூடாத
அட்சய அட்சய தேவ
உச்சித உச்சிதமாக. —ஆ

15. வெள்ள நிகராகிய
தென்று செல்வ ஊற்றுகள்
மெண்டு முடியாதது
கண்டு களி கூரவு
முள்ளம் நிறைவாகிய
துன்று பரிபூரணத்
தாழியுள்ள காலமெல்லாம்
வாழ்கவுங் கிருபையாக. —ஆ

16. சித்தம்பலத்தினோடு
பேரம்பலமு நீடு
தேகமென்ற வீடதி
லாகமொன்றி வாழ்கவே
நற்றிறமை மேவிய
கத்தவியமானது
நாசியிற் சுவாசந்தன்னைத்
தேசு பெற ஊதித்தந்து. —ஆ

விருத்தம்

எண்டிசை யனைத்துந்தானு
யிருந்தமெய்ப்பரமசோதி
மண்டலம் யாவுந்தந்து
மனிதனைப் படைத்த நேர்மை
கண்டதோர் கணக்க னெல்லாக்,
கணக்குமோர்தொகை யிட்டாப்போல்
அண்டத்தின் குறிப்பதாக
பிண்டத்தை யமைத்த வாறே.

அண்டத்திற் கண்டதெல்லாம் அறிவுடன்
பிண்டத்திற் கண்டேனே.
மண்டலஞ் சூரியன் சந்திரன் தாரகை
வானமும் பூமியுமான சகலமும். —அண்ட

2. அந்தரமான பரமண்டலங்கள் பிர
வஞ்சம் நடப்பதற்கான உதவிபோல்
உந்தியபாத் திருந்து சிரச
அறாப்பு கட்டின நடத்தி வருவதனால். —அண்ட

3. சூரியனோ கிரகங்கள் நடுவினில்
தோன்றிப் பிரகாச முஷ்டணங்கொடுக்கும்போல்
வீரமும் வெப்பமும் சோரியதின் வழி
மேனி நடுவின்றிதயங் கொடுப்பதால். —அண்ட

4. குளிரு மீரமுமாகிய வாதமே
கூடும் புனற்கடையான மலாசனை
வளரும் அனலோடு லறலாகிய
வலிய பித்தம் நெருப்பி னிலக்கணம். —அண்ட

5. உலர்ந்து குளிருமான சிலேஷ்டுமம்
ஐங்கிய பூமியதின் குறியுஷ்டணங்
கலந்த ஈரமுமான இரத்தமா
காயத்தின்றன் குறியோசித்துப் பாருங்கோ —அண்ட

6. மிருது மீரமுமான சிரத்திடை
மேவிய மூளை விது[1] வினிலக்கணம்
இருதயஞ் சூரியன் னடையாளம் நல்
ஈரல் வியாழத்தின் னடையாளமே. —அண்ட

7. பிச்சிருக்கும் பை செவ்வாயுலட்சணம்
பேதமில்லாவீரல் தான் சனியன் குறி
அச்சது மாங்காய் சுக்கிரன்[2]றனக்கே
ஆறுகளின் குறியிரத்தத்தின் தாரைகள் —அண்ட

8. கண்ணீர் மழைக்குறியோர் வைபனிக்குறி
காயம் நடுக்குதல் பூமிய திர்தல்கள்
பண்ணிய கோபத்தினாலே சிவந்தகண்
பார்க்கு மிடிக்கு மினல்க்கு மிலட்சணம். —அண்ட

9. தாறுமாருய்ச் சிறுகல்மணலைத்தும்பீர்த்
தாரை சலப்பை சமுத்திரத்தின் குறி
யேறி யிரங்கு மிரத்தங்கடலதின்
ஏற்றத்துக்கும் வடிவுக்கும் மிலக்கணம். —அண்ட

[1] விது—சந்திரன். [2] சுக்கிரன்—வெள்ளி.

10. என் புகளே பருப்பதங்களின் குறி
யிராப் பகனித்திரை சாகரணக்குறி
யொன்பதி ரத்தினங்கள் வன்னகங்கள் கண்ணுக்
குள்ளும் புறம்பிலுங்காணுங் குறிகளே. —அண்ட

11. மரத்தின் வேரது கால்களதின்குறி
வயறும் நெஞ்சும் அடிமரத்தின்குறி
திரத்திரண்டு கை கொம்புகளின் குறி
சேர்ந்த இலைகள் மயிர்க்கடையாளமே. —அண்ட

12. மூடப்பட்டகண் அரும்புகளின் குறி
முழுத்திறந்த கண் மலர்ந்த புஷ்பங்கள்
நாடப்பட்ட புண்ணியங்களும் பாவமும்
நற்கனியோடழு குங்கனியானதே. —அண்ட

13. மாமுளைத்து வளர்வது போலவே
மனுடனுக்குப் பிறப்பு வளர்த்தியுண்
டுரியதான விலங்கு பறவைகள்
ஊர் வனவு மிவனுட் குறியல்லவோ. —அண்ட

14. விலங்குகட்குப் பஞ்சந்திரியங்களு
மேவிய சேஷ்டையு முண்டது போலவே
யிலங்கு மானிடனுக்குப் பஞ்சந்திரி
யங்களுட் சேட்டையுமிருக்குமேரையால். —அண்ட

15. ஆவிகளான பரமதூதாக்கள் போல்
ஆற்று மத்தைக் கொண்டிருப்பதால் நர
சீவனுக்கறிவு புத்தியாலோசனை
திர்க்கச்சுதந்தர மனது முண்டதால். —அண்ட

16. சம்பிரிதி கணக்கேற்றி விரித்துத்
தனித்தொகை நாலஞ்செழுத்துளடக்கிய
பண்பது போலப்பராபரன் யாவும்
படைத்து நரனைக்குறிப்பிட மாக்கினன். —அண்ட

விருத்தம்

பின் கணக்கி யற்ற மேவும்
பெருமைசேர் பரமநாதன்
முன் கணக்குடனே யாதி
முதல் மனுடன் திரேகத்தை
நன்கணக்காகச் செய்த
ஞாயம் நீரரியவேண்டில்

என் கணக்கதின் பிரகாரம்
இருந்த தென்றறையக்கேண்மோ

என் கணக்கை கேளுமையா அலதுங்கள்
தன் கணக்கை பாருமையா

என் கணக்கு முங்கணக்கும்
ஏகலக்கலாமலென்ன
முன் கணக்கும் பின்கணக்கு
முடிந்ததொகை யொன்றல்லோ. —என்

2. சிரத்தில் அறுபதஸ்தி
கரத்திலே முப்பத்தொன்றாய்ச்
செய்ய கரமிரண்டிலேயும்
பொய்யல்ல அறுபத்திரண்டு
திட்டமாயடிப் பிண்டத்தில்
இட்டதறுபத் தேழஸ்தி
சேர்ந்த இருகால் துடையில்
தீர்ந்தகணக்கறுபது. —என்

3. ஒரு வேற்றுமையுமில்லை
இருநூற்று நாற்பத்தொன்ப
துள்ள அஸ்தி தானிதிற்
கள்ளமென்ன கவடென்ன
உறுதியதின் விபரத்தை
மறுபடியுங்கேளுங்கள்
ஓங்குக பாலத்திற் பதி
னன் கெலும்புண்டதுகளில். —என்

4. நெற்றியஸ்தி ஒன்று கபா
லத்துடபின் அஸ்தி யொன்று
நீண்ட செவரஸ்திரண்டு
பூண்டக பாலஸ்திரண்டு
நீடியது வாரெலும் பொன்
றோடஸ்தி வாரஸ்தியொன்று
நேராயிரு செவிக்கும் —என்
ஓராறு சிற்றெலும்பு.

5. மேல்வாயில் மூ வொன்பதுங்
கீழ்வாயில் பத்தொன்பது
மிக்க மூக்கஸ்தி யொன்று
பக்க மொன்றுக் கவ்வஞ்சாக
மேவிய இருபக்கத்துக்
காவது பத்தெலும்புகள்

மேற் பல்லுப் பதினாறோடு
பார்ப்பதற் கிருப்பத்தேழு. —என்

6. கடைவாயிருபக்கத்துக்
கடைசியாமஸ்திரண்டு
கல்லது போலேயிருக்கும்
பல்லஸ்தி வாரஸ்தி யொன்று
காழ்ப்புறக்க தித்து நின்ற
கீழ்ப் பல்லுப் பதினாறோடு
கணக்கறுபதெலும்புக்குப்
பிணக்கத்தில்லைத் தலையிலே. —என்

7. நாலெட்டு முள்ளெலும்பு
மூவெட்டு பக்கெலும்பு
ரண்டு துறப்பெலும்பு
ஒன்றிரண்டு நெஞ்செலும்பு
நடுவிடுப்பி லாறெலும்பு
படுத்துகை யனைத்துங் கூட்ட
நட்டதும் அடிப்பிண்டத்தில்
இட்டதும் அறுபத்தேழே. —என்

8. கைப்பட்டை யஸ்தியுடன்
ஒப்பு தோளஸ்தியுமுன்
கையெலும்புகளிரண்டதிலே
நொய்தொன்று பெரிதொன்று மணிக்
கட்டுமுதல் விரல்மட்டும்
எட்டுடனாலு சின்னஸ்தி
கைத்தல விரல்க்கு மூன்று
யஸ்திகள் பதினைந்தாகும். —என்

9. ஒன்றது துடையினஸ்தி
ஒன்றது முழங்காற் சில்லு
ஒன்றது குதிரைமுகம்
ஒன்றது கெண்டைக்காலஸ்தி
யொன்றிய பாதம் பனிரண்டஸ்திகள்
நின்றவிரல்கள் பதினாலஸ்திகள்
ஒருகாலுக்கு முப்பது சரியே
விருகாலுக்கும் அப்படித்தானே. —என்

10. முள்ளெலும்புக்குள் ளுண்டான
தெள்ளிய மூளைவாயினின்று
முப்பத்திரண்டு சோடுகளான
தப்பித மிலாத நரம்புகள்

முற்றினும் புறப்பட்டுப் போஞ்
சித்திரமன்றித் தலையின்
மூளையிலெழு நரம்புப்
பாளையம் பத்துச் சோடுகள். —என

11. முந்தின சோடு மோர்ப்ப நரம்பு
பிந்தின சோடு திஷ்டி நரம்பு
மூன்றும் சோடு கண்கள் அசைக்கும்
நான்காசைகளின் அசவை யிழுக்கும்
மூவிதமாய்ப் பிரிந்தைந்தாஞ்சோடு
ஓர் விதமானது கண்களிலெய்து
முப்பிரிவதிலிரு பங்கு கடானே
தப்பறமேல் வாய்தாழ் வாய் புகுமே. —என்

12. ஆறுஞ்சோடு ருசி நரம்புகள்
கூறுமேழு செவி நரம்புகள்
அட்டச்சோடு போது நரம்புகள்
திட்டத் தொன்பது நாக்கு நரம்புகள்
அப்பாற் பத்தாஞ்சோடுகளானது
ஒப்பாகத் திரள் அவையவமெய்தும்
ஆகத்தலையிற் சோடுகள் பத்துக்
கேகத்தொகை வித்தியாசமிருக்குதோ. —என்

13. கண்ணதிற் சருமமாறு
வெண்மைபா முந்தினது
கரோருகங்குளம்புபோலச்
சராசரி யிரண்டாவது
கருமுந்திரிகைப்பழம் போல்
உரிவை[1]யுண்டு மூன்றுக்குக்
கட்டு வலை போலே யிருக்குந்
திட்டி நரம்பு நாலது நான்கு. —என்

14. வளாகித்தோ லென்ற தஞ்சு
ஒளிவிடு சிலந்தி பூச்சி
வலைப்போலிருப்பதாறு
நிலையிதன்றிக் கண்ணில் மூன்று
வகைரசங்களொன்று தண்ணீர்
தொகை யிரண்டதுருகின வளையல்
மற்றது படிகம் போல
முற்றிலுங் கெட்டியாய் நிற்கும். —என்

15. அஸ்திவாரப் புறத்தில்
உத்தமுள்ளெலும்புகளோ

[1] உரிவை—தோல்.

டடவுடன் கட்டியிருக்குந்
திடமுள இதையமது
ஆறு விரற் கடைநீளந்
தேற்கலம் நாலு விரற்கடை
அரிய சித்திரத்தங் குண்டாகிய
பெரியரத்தத்தாரைகைஞன்கு. —என்

16. நாலிரத்ததாரையிற்
கோலமாயிரு குழல்கள்
இரத்தத்தை யிருதயத்தில்
ஒத்து விழப்பண்ணுமற்ற
ரண்டு தாரைகளின் வழியாய்ச்
சென்று முன்னிதையத்துற்ற
நாடிய ரத்தங்களெல்லாம்
நீடிய பெலத்தோடேறும். —என்

17. ஒரு விசைக்கிருதயத்தின்
பெரிய தாதிலே யிரத்தம்
ஒரு பலந் தள்ளுண்டு போகும்
பெரிய மனுஷருக்கானல்
ஒரு தாசிலேடிக்கும்
இருதாம் நாலெட்டு[1] விசைக்குள்
ஒரு முப்பத்தெண்ணூற்று நாற்பது
குருதிபலன்கள் தாதினிலேறும். —என்

18. ஒரு ராப்பகலதான
இருபத்துநான்கு தாசில்
ஒன்பது பத்தீராயிரம்
பின்பொரு நூற்றறுபது
மோடுமீரேழு நூற்றுநாற்பது
கூடதுலாவிய சோரியாவதும்
ஒற்றைத்தாசில் மும்முறையாகச்
சுற்றித்தாதி லேறியிறங்கும். —என்

19. வாலீரல் அகலம்நீளம்
நாலுவிரற் கடையெட்டு விரற்கடை
வலத்திலே நல்லீரலிருக்கும்
பெலத்திலே நுரையீரலுயிர்க்கும்
மாங்காயிரண்டொரு பிச்சொருபையே
பாங்காய்க்குடலிருபத் தெட்டுமுழம்
மற்றுமென்குட் சிக்கணக்கின்
சுற்றுகளெலாம் விநோதம். —என்

[1] இருதாம் நாலெட்டு—64

20. இராயனுக்கு மந்திரிதள
வாய்கள் பிரதானிகணின்று
நடந்த செய்திகளனைத்துந்
தொடர்ந்த விண்ணப்பஞ் செய்யும்போல்
நாவொடுபரிசஞ்செவிகண் மூக்கெனு
மேவிய பஞ்சந்திரியங்கள் சொல
இராச்சியபாரம் பண்ணுதெனக்குட்
சூட்சும ஆற்றுமமானது தானே. —என்

21. இக்கணக்கதின் பிரகாரம்
எக்குல முயர்ந்தசாதி
என்புகள் நரம்பு தோல்கள்
ஒன்புதுவாயில் மற்ற உறுப்புகள்
இடங்கைகட்குயர் ந்ததோபொரும்
வலங்கைகட் குயர்ந்ததோ அதை
யெந்தனக்குரைக்கவேணும்
வந்தனமுங்களுக்கையர். —என்

விருத்தம்

ஆதியான் மண்ணினாலே
அமைத்தெனை மனுடனுக்கிப்
பூதலப்பொருள்கள் யாதும்
புகழ்பெற எனக்குத்தந்தான்
மாதெனுமேவையோடு
மகிழ்ந்து சல்லாபமாக
ஏதெனிலுறுஞ்சிங்காரக்
காவதிலிருந்தேனானே.

சிங்காரக்காவி லிருந்தேன்
திறமையாகச்
சிங்காரக்காவி லிருந்தேன்.

துங்காதி தேவர் தொழும்
நங்காரணாதிமுதல்
பங்காயெனக்களித்த
மங்காச் செல்வம் பொழியும். —சிங்

2. எந்தையளவிலாஅ
னந்த விதங்களாக
உந்துந் திரளானசீவ
செந்துக்களோ டெனையுந்
தந்ததலா லொரும
டந்தையரோ டுலவிச்

சந்ததம் வாழ்ந்திருக்க
விந்தையதா யளித்த. —சிங்

3. புண்ணிய சொரூபமான
அண்ணலா ரெனையன்பாக
மண்ணாதினாலே வனைந்து
திண்ணமுடனே யுருவம்
பண்ணிய பின்னாசியதில்
நண்ணவுஞ் சுவாசந்தன்னை
வண்ணமாக ஊதித்தந்த
எண்ணமதினான் மகிழ்ந்து. —சிங்

4. கத்தனார் அசந்தெனக்கு
நித்திரைவரவும் பண்ணிப்
பத்திரமதாய் விலாவில்
அஸ்தியொன்றெடுத் ததனைச்
சித்திரம்போலே வையென்ற
இஸ்திரீதனைப் படைத்து
மெத்தவு மென்னோடிருக்க
வைத்ததயவைக் கொண்டாடி. —சிங்

5. நீதங்களே நிறைந்த
நாதன் கிருபைகொண்டு
வேதங்களால் வரப்பிர
சாதங்களு மடைந்து
சேதங்களேது மன்றி
மாதுங்கமாகவே நான்
கீதங்கள் பாடிக்கொண்டு
ஏதன்பரதீ சென்ற. —சிங்

6. காணவுங் கருத்தினிடை
தோணவுங் கூடாதகத்தன்
வேண விருட்சக்கனிகள்
ஊணென எனக்களித்துப்
பேணியொரு பெண்ணையுந்தந்
தானுருவத் தென்னைநிரு
வாணமுடனே வகுத்தும்
நாணமதில்லாமற் சும்மா. —சிங்

7. நன்மையு நலமுமிக்க
உண்மையும் உறவுமான
மும்முதலொரு கடவுள்
தம்மையு மறிந்துகொண்டு

செம்மை தருமேவையுடன்
அம்மணத்தோடே யிருந்தும்
கன்மமொன்று இல்லாமல்
சம்மனசுபோலே நாங்கள். —சிங்

8. சாலைகள் விசாலமுள
சோலைகள் நடுவதாக
நாலுநதியோடி வர
ஓலமிடவே பறவை
மேலு மழகானபல
கோலமிருகங்கள் தொழ
ஏலினபேரிட்டுக் கொண்டு
வாலிபத்துரையைப் போலே. —சிங்

விருத்தம்

ஒன்றுமிலாத காலத்
துலகெலாம் படைத்தநாதன்
என்று மாறுமனிற்க
ஏதனிற் கிழக்கதாகச்
சென்றொரு தோட்டம்போட்டுச்
சீவனின் விருட்சத்தோடு
நன்றுதீ தறியத்தக்க
விருட்சமும் நாட்டினனே.

நாட்டின னாட்டினனே யிருவிருட்சம்
நாட்டின னாட்டினனே.

1. ஆட்டினன் செயலனைத்தும்
காட்டினனே தனிலே
கூட்டினன் தோட்டமொன்று
சூட்டினன தினடுவே. —நாட்டி

2. ஈட்டினன் கிருபையைக்கை
நீட்டினன் காட்சிகளை
மூட்டினன் பேயைநர
கோட்டினன் தீநரகைப்
பூட்டினன் வேதமறை
தீட்டினன் தேவர்கள் கொண்
டாட்டினன் சங்கீதப் —நாட்டி
பாட்டினன் படினமாக.

3. ஆதியான் அளவிறந்த
நீதியா னீடுபரஞ்

சோதியான் சொல்லுரைகள்
பேதியான் பேதங்கள்,
போதியான் புதுமொழிகள்
ஓதியா னுலகதற்கு
வாதியான் மாறுத
வீதியான் வெளிநடுவே. —நாட்டு

4. ஆட்டியா னர்தமிருக்
காட்டியான் காரணத்தின்
கூட்டியான் சொல்லரிய
மாட்டியான் மாதவர்க்குத்
தாட்டியான் உண்மையுள்ள
சாட்டியான் பொய்களைக்க
டாட்டியா னென்றையும்அ
பேட்டியான் மேன்மையாக. —நாட்டு

5. ஒப்பத்தான் உண்மையிருஞ்
செப்பத்தான் தீவினைகள்
தப்பத்தான் அடியவர்க்குத்
துப்புத்தான் தூதருக்கும்
பொற்புத்தான் ஏதமென்ற
வெற்புத்தான் சொன்னபடி
மெய்ப்பித்தான் மாவிடரைக்
கற்பித்தான் கருணையாக. —நாட்டு

6. ஓங்கின னுலகனைத்துந்
தாங்கினன் பாசவினை
நீங்கின னெடியபுகழ்
நாங்கின னூன்முறையின்
பாங்கினன் பாதிசிற்
றேங்கின விருநதிகள்
காங்கினன் ஆதிரான்
தூங்கினன் காவதிலே. —நாட்டு

7. ஆற்றினன் அண்டபிண்டம்
போற்றினன் ஏதனிடை
பேற்றினன் தோட்டமொன்று
தோற்றின விருவர்களைத்
தேற்றினன் திருவுரைகள்
சாற்றினன் மெஞ்ஞான
ஊற்றின னொருகனியை
மாற்றினன் வானையாக. —நாட்டு

8. தூக்கினனே வையைக்கண்
ணோக்கின ணாதிவினை
நீக்கினன் துயரனைத்தும்
போக்கினன் பாழ்அரவை
நூக்கினன்[1] ஆக்கினைகள்
தாக்கின[2] னம்மையரு
ளாக்கினன் வேதாந்த
வாக்கினன் திருவுளமாய். —நாட்டி

9. அந்தத்தான் ஆதிநரர்
சொந்தத்தான் அவர்கள்பவம்
நந்தத்தான் பூதலத்தில்
முந்தத்தான் செங்குருதி
சிந்தத்தான் சீவனையும்
நுந்தத்தான் மாந்தர்கள்விண்
ணுந்தத்தான் பாதார
விந்தத்தா னுரிமையாக. —நாட்டி

10. அங்கத்தான் தீவினைக
லங்கத்தான் பாதகம
லங்கத்தான் நல்வினைது
லங்கத்தான் சோதனைஅ
டங்கத்தான் பேய்களுமொ
டுங்கத்தா னீதிகள்வி
ளங்கத்தான் ஆரணமு
ழங்கத்தான் அதிவிதமாய். —நாட்டி

ஆரணம் – வேதம்

வகுப்பு 2

நோவாவின் பேழை

1. கப்பற்றமிழ்

விருத்தம்

நட்புத்தரும் நோவைக் குருஞானத்திடனோடு
நாதப்பொருள் போதித்தருள் வேதப்படிபேழை
செப்பத் தோடிளைத்துத் தருதிட்டத்தையுமப்பாற்
சிட்டித்த சிருட்டிப் புகலத்துட்புகுநேரும்

[1] நூக்கினன்—தள்ளினன், [2] தாக்கல்—எதிர்த்தல்.

அப்புக்கடல் சுற்றிப்புவியிற் பற்றியவேலி
யாவக்குள நாமத்தையும் வாய்மைச்செயலாகக்
கப்பற் றமிழொப்பத்தொடு கட்டிச்சொலுதற்குக்
கற்றுக் கொடுபத்துக் கருணைக்கற்பனையோனே.

கலம் -- கப்பல்

ஏலேலோ ஏலலல்லோ தத்தையா
ஏலேலோ ஏலலல்லோ.

1. சீரிலங்கு முதல் யுகத்தில்
செய்துயர்ந்த தவப்புனிதன்
பேரிலங்கு நோவை செய்த பேழைப்
பெரிய கப்பற்ற மிழுரைக்க

காரண அனாதி சருவேசனருள் சேயன்
காசினியின் ஞானவொளிவாக வருதூயன்
ஆரண நிதான சுவிசேட முரைவாயன்
ஆதம் வினைதீர நரனாகிய சகாயன்.

தாரண விவேக மொடுபாடு படுநேயன்
சாவலகை தீவினைகண் மாய விடுபாயன்
மாரண மதாக உயிரோடெழுதிசேயன்
வான நவசேனை தொழுவே மகிழும் ராயன்

பூரண விசேட பதமே யருள் செய்யாயன்
பூவுலகை நீத முறு தீர்வையிடு நாயன்
வாரணமுதாக எதிராடியுரையோதும்
வானவனை நீசமறியேறி யியல்பாகத்

தோரண முலாவெருசலேய நகர்மீது
யூதரா சாயுயரும் ஞான மணனை
பேரணியுமே சுநசாரதிபனை நாவிற்
பேணி முனையாணி யடி பூணமறவேனே. —ஏலே

2. ஞான மிகும் பரனருளால் உகத்தி
ஞகரிகமோடமைத்த
தானமிகு நோவையுட கப்பற்
சரிதைகளின் விபரமது.

ஆதிபரமேசுரனொராறுதினம் வானும்
ஆதரையுமாதரை யுண்மேவு பொருள்யாதும்
போதர வதாயருளியே தனிவோகப்
பூரண விலாச முறுகா வதையமைத்து

மாதுமனையே வைமணஞத மிருபேரை
வாய்மை யுடனே யதனில் வாழ்கவு நிறுத்தித்

தீதுயாமே தோடவொரு தெனவு நீடு
சிவமர நேர்துகனி யார் துமெனவோதி

நீதியுடனுறு வரமேன்மைகள் கொடுத்த
நேரமதிலே யலகை கோரமிகவாகி
சோதனை செய்தே நரகிலே கவர நாடித்
தோகைய ரோடே களின மாகமொழி கூறக்

காதலுடன் மாததிக தீவிர மதாகக்
காரணீ னீதிதனை யேது நினையாது
கோதுகனியே கொய்துட னுவலுடனோடி
கூடுமணவாளனோடு தானு நுகர்போது

பாதகர்களோடமலன் ஞாய நடுவோர்திப்
பாரமிகு மாகொடிய தீர்வையிடுகாலே
மேதினியிலே யணுகிவேலைகளி யற்றி
வேர்வை விழவே யரியபாடதுகள் பட்டுத்

தாதையுடன் மாதனையுநாள் விடுமனுளிற்
சாயலெழிலான பலசேயர்கள் பிறந்து
ஏத முறவே பெருகியாகடிய மீறி
யீனமுறுதீவினை களே யதிகரிக்க

ஓதுமொரு தேவபரனேவை முனிவன்பால்
ஓவிய மதாயருளு நூலினெழுகாமல்
சூதுபுரிபாவிக ளெலாமழிய வானிற்
சோனைமழையே விடுசுயாதிபதி நீதி

பேதகமிலாது சொலி நோவை முனியாடு
பேழையுடகாதையையு நேரினுரையோடு
நாதர்சபை சூழுமறிவாகரர் முனுக
ஞானமிகு மாதிறமையோடு பகர்வேனே. —ஏலே

3. பரனுரைத்த மொழிப்படியே யியைந்து
பண்புடனோர் பேழைதனை
வரமிகுத்த நோவை முனி மரத்தின்
வகையுடனே சேர்ப்பதற்காய்

அத்தியால் புங்குபுளி பூவரசு நெல்லி
ஆச்சாகருங்காலி குங்குமங்கொன்றை
யித்தி யகத்தி கடுக்காய சோகு
ஈந்து பேரீந்து மலைவேம்பு மஞ்சாடி

யுத்த எலும்பிச்சைசீனிநாருத்தை
யொடையு சிலை மா பலாவெட்பாலை வெள்வேல்

முத்தின சண்டகஞ் சந்தனங்கோங்கு
மூக்கில் கூந்தற்பனை தேக்கு சாதிக்காய்

மெத்தனத்தேக்காச கருவிலி தனக்கு
விளாவாகை பெருகாவல் பாய்மாவிருட்சஞ்
சித்திரச்சிலை பாலை மாவிலிங் கெட்டி
தேவதாரி சம்பு காகை பூவர்த்தி

பத்திராட்சம் வில்லை மாதளை மருதம்வன்னி
பாதிரி புன்னை மகிள் பன்னீரோடாத்தி
வித்திலவு முள்ளிலவு வெண்ணொச்சி தேத்தான்
வேங்கை யிலுப்பை விலாத்தை பனைதான்றி

துத்திபனிச்சைகடம் பொடகில் காயா
துரிஞ்ச குருந்து செருந்தி சிவந்தில்
நெத்துக்களாச்சி கொய்யாவுடன் சித்தா
நேர்வாளம் அருநெல்லி பப்பாயி பூகம்

கல்தானி பூபிராய் லிபனுன் கேதர்
காட்டொலிவு காட்டொலிவுகண்ட மரமெல்லாம்
எத்தனை விதங்களோ அத்தனையுமாய்ச்சே
மிதெல்லாக்கப்பலுக்கிடல்லவென்று

கொற்றவனுரைத்தபடி முற்றுமியல்பாகக்
கோட்பேர் மரக்களை வாய்ப்பாய்க்கொணர்ந்து
சத்தத்தறுத்தினைத்தே பலகை சேர்த்துச்
குட்சாதி லட்சவித வேலைகளியற்றி

வெற்றியுடன் முக்றாற முழுநீளமாக
மேலகலமைம்பது முயர முப்பதுமாய்ப்
புத்தியுடா சித்திர விதத்துடனமைக்கப்
பொறைமுனிவன் கப்பல் சரிவா முகிந்ததப்பா.—

4. அருந்தவத்து கோவை முனி வளமா
பமைத்த திருப்பேழையுக்குள்
விரைந்து விரைந்தனியணியாய்க் கடந்த
மிகுந்து வரும் விலங்கினங்கள்.

பானை சிக்கக் காடி பொட்டகம் புல்வா
பாவி காண்டாமிருகக்காட்டாடூங்கு
சினமட்ட மச்சமட்டர்துரங்கஞ்
செம்மறியாடு வெள்ளாடு குறும்பாடு

மான்மரை கவரிமான் மரகாய் செருக்கை
மந்தி குரங்கு சிவிங்கி கடம்பை

பூனை சிறும்பன்றி முட்பன்றி பன்றி
புலியிடபம் பொலிபெருது எருமைக்கடாக்கள்
கூன் முயற் குழிமுயல் வெருகு நரிபோரி
கோவேறு கழுதை வண்ணான் கழுதை காட்டா
ஆனநாயச்சி நாய் கழுதைக்குடத்தி
ஆகாத ஓநாய்கள் செந்நாய் கணிரா

யீனுக்கிடாரிப்பசுக்கண் முசுக்கள்
இன்ன மெண்ணிலாவிலங்கூர் வனத்திற்
பானைப்பெருச்சாளி மூஞ்சூறு சுண்டான்
பருமெலி வெள்ளெலிகாரெலிகுன்னான்

கானூறினட்டை மாவட்டை செவ்வட்டை
கஸ்தூரிப்பிள்ளை நாவிப்பிள்ளை பூரான்
ஊனுண உடும்பு கடுவன் கிரிப்பிள்ளை
யோந்தி பச்சோந்தி தேவாங்கு வெண்டேரை

வான்பல்லியணில் அரணை கொம்பேறிமூக்கன்
மண்டெலி சுண்டெலி மண்ணுளி சுருட்டை
சூனைப்பூ நாகமுள்வெலி காட்டோணான்
சொரிவிரியனெரிவிரியன் வெண்ணந்தை சாரை

தீன்சிலந்திப்பூச்சி யிருதலைமணியன்
தேள் நட்டுவக்காலி சாணாமூக்கன்
வேனலிற் கொடிய விடமுள நல்ல பாம்பு
மீளாத கருநாகங் கருவழலை செய்பான்

ஞானபாணர் செய்த சிவனுள சேர்ந்து
யாவுமரா பானுமகடாக ஒருசோடு
சோனைமழை தூவுமுனே பேழையினுளாகச்
சூழவதி ஞாயமுடனே நிறைந்ததப்பா. —ஏலே.

5. சிறந்து சிறந்தே செபங்கள் தினமுஞ்
செய்யு நோவை கப்பலுக்குட்
பறந்து பறந்தெழுந்து வரும் பல
பறவைகளின் வகுப்பதுதான்.

கொக்கு மடையானுரை வெண்ணுரை நரையான்
குருகு செங்காலுரை பெருநாரை கிறவி
சக்கரவாகஞ்சிவல் சம்பங்கோழி
சாதகநிலா முக்கிதகைவிலானுள்ளான்
சிக்கிறு சிச்சிலி செம்போத்துக்கூகை
செங்கோழி வான்கோழி நாங்கனவாப்பபுள்

19

ஒக்ரு கவுதாரி பலகூழைக்கடாக்கள்
ளார்க்குருவி பூமணாங்காடை செவற்காடை

இக் கந்தாகேகையங்கோட்டுவான் வலியான்
இரிஞ்சல் சாக்குருவி யோனான் கொத்திவௌவால்
வக்காகலிக்கி கருவாட்டு வாலி
வருச்சாளி வாலாட்டி கோட்டானாட்காட்டி

கிற்கி கானான் கோழி காப்பிரிக்கோழி
கின்னிக்கோழி வெட்டுக்கிளிகளின் வகுப்பும்
பக்கிப்படைக்குருவி நீக்குருவி தாரா
பஞ்சவன்னக்கிளி பஞ்சுவெட்டானு

மிக்க வல்லுறுமாங்கொத்தி மீன்கொத்தி
வெண்ணாந்தை பொய்யாப்புள்ளொண்காற்புள்
அன்றில்,—கக்குமண்டங்காக்கை நீர்க்காக்கை ஆலா
கரும்புறாமணிப்புறா மாடப்புறாக்கள்

சொற்காட்டுப் புறாத்தூக்கணாங்குருவி வயிரி
தோகைமயிலன்னப் புறாவானம்பாடி
புக்கண்டாண்ட பட்சி கழுகு கருடன்
பூந்து பொன்னான் றட்டான் கொண்டவனத்தான்

அக்கோகுயில் கரிச்சான் கொண்டலாத்தி
ஆகாப்பு சோலையாமற் கோலாங்கிளியு
முக்கியமனிலா வாத்து நீர்வாத்துக்கூசு
முதன்மையன்னப்பட்சி புல் புல் முதலான

துக்குணி நெட்டைச்சிட்டுக்கட்டைப்பெட்டைச்
சிட்டு,—துட்டுவிட்டிற்சிட்டிராட்டைப்பொட்டுச்
சிட்டுக்,—குக்கிக்குக்கிக்கிக்கிக்கெக்கிக்கெக்கிக்
கத்திக், கொட்டமிட்டுப்பெட்டி முட்டுடிற்றுபாரப்பா.

—ஏலே.

6. நன்னயஞ்சேர் நோவை முனி செய்த
நாவாய் தனிலே யடர்ந்த
வன்னவன்னப்பூச்சிகளின் மகிமை
வகுப்புகள்தான் அனந்தவிதம்.

மூ. பட்டுப்பூச்சி தெள்ளுப்பூச்சி நூற்பூச்சி

பறப்பூச்சி நுரைப்பூச்சி கோலியப்பூச்சி
வெட்டுக்காற்பூச்சி மாசன்னாசிப்பூச்சி
யிலைப்பூச்சி மழைப்பூச்சி யாறுகாற்பூச்சி

அட்டைப்பூச்சி வன்னத்தேவடியாப்பூச்சி
ஆயிரங்காற்பூச்சி முருங்கைப்பூப் பூச்சி
நெட்டை நாக்கப்பூச்சி யொட்டைக்காற்பூச்சி
நீலப்பூச்சி பிள்ளைப்பூச்சி யெரிப் பூச்சி

மட்டையோலைப்பூச்சி பஞ்சவன்னப்பூச்சி
மகமைப்பட்டுப்பூச்சி மலேங்காட்டுங்பூச்சி
கட்டைநெற்பூச்சி யிந்திரகோபப்பூச்சி
கரும்பூச்சி மின்னிட்டான்பூச்சி பாற்பூச்சி

கொட்டைகாய்ப்பூச்சி யொடுசகாலத்துப்பூச்சி
சூரங்குப்பூச்சி விளக்கூர்துபுற்பூச்சி
முட்டைப்பூச்சி மூட்டைப்பூச்சி பேய்ப்பூச்சி
முகவிருந்துப்பூச்சி சிலந்திப்பூச்சிகளுந்

தட்டானூசித்தட்டான் செந்தட்டானீசல்
தடித்தட்டான் கருந்தட்டான் கொடித்தட்டான் பீத்தி
யொட்டியான் பலவிதப்புழுமகிழிகிரிட்டி
யுண்ணி சிராயுண்ணி குடலுண்ணி நாயீ

பொட்டுவன்னப் பொன்னீ வீட்டினீ தேனீ
பொரிவண்டு கரிவண்டு சுழல்வண்டு முசுறு
குட்டைவண்டு தென்னைவண்டு பொன்வண்டு
கொடிவண்டு பேய்வண்டு பாப்பாரவண்டு

வட்டப்பெருங்கழுதைவண்டு மாவண்டு
வரிவண்டு சிறுவண்டு வண்ணூரவண்டு
சிட்டைவண்டு சிராய்வண்டு நீர்வண்டு
சிறுகுளவி கருங்குளவி செவிப்பாம்புபாச்சை

வெட்டுக்கிளி சுவர்கோழி கக்காளத்தி
வெள்ளைப்பேன் சீலைப்பேன் தலையிற்பேன்கொசுகு
சுட்டெறும்பு கட்டெறும்பு சுள்ளெறும்புமற்றுந்
தொகைதொகையாய்க் கப்பலுக்குள்
வருகுது காணப்பா. —ஏலே.

7. வானபரன் கிருபையினு ளேவாவின்
மரக்கலத் துளடங்குகின்ற
சேனையுயிர்ப் பிராணிகட்கும் பொசிக்கச்
சேர்ந்த நவதானியங்கள்.

மூ. சீரகச்சம்பா நெல்முத்துச்சம்பா நெல்
செம்புலிச்சம்பா பொங்கச்சம்பாமணியன்
கோரைச்சம்பா புனுகுசம்பா குத்தாலை
கொடிவழுதலைச்சம்பா குங்குமச்சம்பா

பேரின்வரகுச்சம்பா வெந்தையச்சம்பா
பெருஞ்சம்பா செம்பாளை பூம்பாளை சுகுதா
சூரின்மணல்வாரி குண்டைச்சம்பா வாலா
ஞெலச்சம்பா முளகுசம்பா பிசானம்

வேரித்தில்லை நாயக மடுமுழுங்கி
வெண்சம்பா கல்லுண்டை கைவிரைச்சம்பா
ஏரிக்கருங்குருவை காட்டளிவாணன்
ஈர்க்குச்சம்பா முளகிவாசரமுண்டன்

காரிற் கடப்புக்கார் மட்டைக்கார் பூங்கார்
கடுக்கைக்காருசிக்கார் குருவிக்கார் செங்கார்
கீரிப்பூங்கார் சண்டிக்கார் சித்திரைக்கார்
கேப்பைதினை சாமைகாடைக்கண்ணிவரகு

போர்க்குதிரை வாலிமுத்துச் சோளஞ்சோளம்
புற்கம்புதுவரைவிடு துவரைபட்டாணி
சாரிக்காராமணிப் பயறுடன்காணந்
தட்டைமொச்சைக்கொட்டை குங்குமப்பயறு

நீர்நரிப்பயறு பாசிப்பயறுளுந்து
நிலக்கடலை பொரிக்கடலை வயற்பயறேடெள்ளு
வாரிக்கிழங்கு பல பீனிசுகள் அவரை
மற்றுள நவதானியங்களின் வகையும்

பாரிலி சவ்வரிசி கோதும்பை வகையும்
பற்பல பதார்த்தங்கள் தின்பண்டவகையும்
தேர்தும் பெருங்களிகள் கந்தங்கள் வகையுஞ்
சேகரமாய் நெய்ப்புதிலி யெண்ணெப்புதலிகளு

மோருடன் பால்தயிருள்ள வகையெல்லா
முக்கியமாய்க் கப்பலுக்குட் பொக்கிஷமாய்ச்
சேர்த்திட, டாருவக்கேணியினீ ரதுநிரப்பி
யாவுரஸ்து முஸ்திப்பாய்ச்சுது காணப்பா. —ஏலே

8. மாழை செறிந்திலங்குகின்ற சத்திய
மாதவனே வாவினுட
பேழையது சரக்குவகை யனைத்தும்
பெருக்கமுடன் கொள்ளுதுகாண்.

மூ. மரமஞ்சள் கறிமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்

வால்மிளகு சீரகம் வெந்தையங் கடுகு
திரிபாலை சிறுதேக்கு முத்தக்காசோமஞ்
சிறுநாகப்பூ சாதிக்காய் சாதிபத்திரி

கருவாப்பட்டை சன்னலவ்வங்கப்பட்டை
கடுகுரோகணி குரோசாணி யிலவங்கம்
அரிதாரம் படிக்காரம் வெண்காரந்தாரம்
அதிவிடையம் அதிமதுர மேலங்கிராம்பு

பெருங்காயம் வெங்காயம் ஈரவெங்காயம்
பேராத்தை சித்தாத்தை சதகுப்பை கஞ்சா
நருக்கு மூலஞ்சுக்கு கோஷ்டமிந்துப்பு
நவச்சாரஞ் சவுக்காரம் பூவந்திக்கொட்டை

துரிசுதுத்தங்கருஞ் சீரகம் நாவி
சோம்பு தேற்றாங் கொட்டை தான்றிக்காய்
கடுக்காய் சுருகுபுகையிலை பாக்கு வெற்றிலை யிஞ்சி
சாம்பிராணி கற்பூரம் குங்கிலியம் போளம்

பருமிளகு கசகசா அக்கிராகாரம்
பாஷாணங் கெந்தகம் வீரம் வெடியுப்பு
நிரற் கடலுப்பு பொட்டிலுப்பு செங்கொட்டை
நெறிவிடந்தற்கோலம் அரிசிதிப்பிலிப்புங்

குருமைவாலுளியரிசி சீனிகற்கண்டு
கோரோசனை புனுகு ஜவ்வாது குங்குமப்பூ
பொரிகாரஞ் சீனிக்காரஞ் சித்திரமூலம்
பிண்ணாக்கு சீயக்காய் மிளகாய் தேங்காய்

மிருதுபின் வசம்பு மாசிக்கா விளங்கம்
வெட்டிவேர் மிச்சவெல்லங் கொத்தமல்லி
திரளான பொன்வெள்ளி செம்பிரும்பீயஞ்
சேர்நாகங்காரீயம் இரதபஞ்சலோகம்
நுரையெழும்பீர் வயின் மதேயாரப்பீப்பாய்

நுகர்பிராந்திப் போட்டில் கிளாரெட்டு ப்போட்
டில்களும், வரையிலாத் தீவாந்திர உச்சித
மனைத்தும், மரக்கலத்தில் வகைப்படிக்கு —ஏலே
நிறைத்தனர் காணப்பா.

9. மட்டுமிகும் புகழ்படைத்த நோ
வாவினுட கப்பலுக்குள்த்
தட்டுமுட்டுச் சாமான்கள் அனைத்துஞ்
சனுவுடனே யேற்றினர் காண்.

மூ. அண்டாக்கிடாரந்தண்ணீர்த் தொட்டி நீர்ச்சால்
அம்மியுலக்கை யுரலேந்திரக்கற்கள்
குண்டு செப்புக்குடம் போகணிச்சட்டி
கொப்பரை யடுப்புகள் தட்டுச்சல்லடைகள்

கெண்டி சேமக்கலங் காளாஞ்சிதாலங்
கிண்ணியகப்பை காண்டி தாம்பாளம்
சுண்டுகொட்டுக்கூடை பன்னீர்ச்செம்போடு
தூண்டாவிளக்குகள் பூசை யேற்றினங்கள்

கண்டித்திராச்செப்பு பஞ்சபாத்திரங்கள்
கறிச்சறுவ சட்டிகள் சறுவப்பானைகளும்
உண்ட பூதக்கலங் கும் பாக்கள் தழுகை
யுற்றகமலந்தவலை தூபக்கலையங்கள்

முண்டுப்படிக்கங்கள் வெள்ளிக்கும்பங்கள்
மூக்குக்கண்ணாடி சீனக்கண்ணாடிகளும்
தண்டாயுதங்கள் கத்தி கேடகங்கள்
சறுவாயுதங்களும் அளவு செம்புகளும்

பெண்டுகளின் மைச்சிமிள்கள் சீப்பீர் வலிகளும்
பெட்டகம் பேழைகள் ஆஸ்தி பாஸ்திகளும்
மண்டு சேகண்டிகள் வாத்தியமுட்டுகளு
மணிகண வரத்தினப் பூடணாதிகளுந்

திண்டுத்தலைகாணி மெத்தைமேற் கட்டி
திரைச்சீலை படுதாக்கள் மெல்லிய வஸ்திரங்கள்
பண்டங்கள் சகலாத்துச் சுழுகு குத்தினிகள்
பட்டுப்பட்டாவளிகள் ஏட்டாகமங்கள்

விண்டெழுது கடதாசிப் பொஸ்தகச்சுருள்கள்
மேசைப்பலகை நாற்காலி யங்கங்கள்
எண்டிசைக்கரகங்கள் வெள்ளைப் பீங்கான்கள்
இதமான்டீசு சூப்பிளேட்டுரையிஸ்ப்போலும்

நண்டுக்காலிஸ் பூன்கணைபு பார்க்குகளும்
டப்பிளை மிசியூர் டமிளர் வயின்கிளாசுகளும்
மிண்டு சூப்ட்டூரியன் கேட்டிலாந்திரணுக்கள்
வேண சாமானெலாந் தோணிகொண்டு தப்பா. —ஏலே

10. எந்தைபரன் கிருபையினா லேவை
யிளைத்த பெருங் கப்பலுக்குள்
செந்துகளின் திரளனைத்தும் இயல்பாய்ச்
சென்று நிறைந்திருந்த தற்பின்.

மூ. மதிநோவை யொன்றவன் மனைவியா ரொன்று

மைந்தர் சேம்காமுடன் யாப்பேத்து மூவர்
சுதரவர் தமக்குரிய தேவிமார் மூவர்
தொகை யெட்டுமாக்களும் பேழையுட் செல்கக்

கதிநீடு மொருதேவ னெரிநீதியதனாற்
கனகோர மொடுசலப் பிரவாகம் விடுபோ
துதக[1]மேவு மாமுத்தினாற்றுகள் பிளந்தங்
குயர்வான வானத்தின் மதகுகடிறந்து

பதிவாக நாற்பது தினமிரவுபகலாய்ப்
பயமான குமுறலொடு பொழியு நீர்களதனால்
நதி நீர்களுடைவாகி நகர்மீதிலோடி
நடுவான மளலான கிரிகள் யாதுமூடித்

திதியேது மடரா துயிர்கள்யாது மாள்கச்
சிலைமீது பதினைந்து முழமதிக மேவச்
சதிகாரர் அனைவோரு முயிர் மேதையான
சகலதாபர செந்து நிக்கிரகமாகி

யெதிர்நீர்க ளிடுகுமுளி யதினாலும்வாய்வ
திடுதூளி வலியாலு முனியாடலான
நிதிமேவு பேழையோ அதிரோ டெழும்பி
நிலையாத நீர்மீதில் அசைவாடி நிற்கப்

பொது நூற்றைம்பது நாண் மிகுதியுமாக நீர்கள்
புவிமீது செறிவு பிரளையமாயெழும்ப
இதுநேரமேயோங்க லணியே துஞ்சேர்த்திட்
டிதமான சிலுவைக்கொடிக் கம்பங்க ணாட்டு

வதியான வெண்கல நகராக்கண் மூட்டு
வாகான ஆயகுழ லெக்காளமூது
விதி வேதநாயகன் பாட்டொன்று பாடி
மிக்கசரபோ சேந்திரன் மன்னவன் கேட்க

நுதி கூறும் விசுவாசப்பிரமாணத்தோடே
நூறுவிசை பரமண்டல மந்திரஞ் சொல்லி
யதிநோவை கப்பலைத் துரிதமாக ஓட்டி —ஏலே
ஆயிரம் பெரிய பீரங்கி தீரப்பா.

[1]உதகம் -தண்ணீர்,

11. ஏகபரனடிய னோவை கப்பல்
ஏரிநதி வாரிகடல்
வேகமுடன் சுற்றிவரும் நீரில்
மிகுத்த பல மச்சவகை.

மூ. பாரைமீனுரி பாரை திமிங்கலஞ்சுறு மீன்
பாற்சுறு வேளாச்சுறு கொம்பன் சுறு மீன்
காரைமீன் திமிலமீன் கிழங்கான் வாளை மீன்
காத்தியாவாளை சாவாளை முள்வாளை

நாருவாளை யோலைவாளை சித்வாளை
நல்வாளை மிரட்டுவாளை வாளைகடியன்
சூரைக்கடிச்சை காலாகலவா கோலா
தோகைமீன் கொக்குமீன் காக்கைமீன் விளமீன்

பாரையடி மடவா கொடுவா முதலை யாமை
பரவு மீன் கத்தாளை பன்னுக்கத்தாளை
கூரற்கத்தாளை செங்கத்தாளை வெண்கண்
குறுங்கத்தாளை நாய்க்கத்தாளை பொய்க்கண்மீன்

பூரைக்கத்தாளை சோற்றுக்கத்தாளைமீன்
பொடிக்கத்தாளை வட்டக்கத்தாளை தொழுத்தை
சாருங்கானுங் கெழுத்தை வன்சிரமீன்
சாணிக்கெண்டைமீன் வெளிச்சக்கெண்டைமீன்

சாருமுட்டிக்கெண்டை சேற்கெண்டை பொருவாய்
சங்குநத்தை சூடைக்கெண்டை தேட்கெண்டை
யாரால் பேயாரால் சேற்றுரா னட்டாரால்
அயிரை கெளுத்தி சாக்கெளுத்தி கத்திமீன்

காரைத்திருக்கைமீன் குருவித்திருக்கை
கணவாய்மீன் மட்டத்திருக்கைமீன் மணலி
யூருமாடாத் திருக்கை வாற்றிருக்கை
யூதுமீன் இப்பிமீன் லத்திமீன் சோதி

யூருளோஸ் செப்பிலி பரவு மீன் மயிரை
யுல்லம் நெய்மீ சிலாவிரா லெருமைநாக்கு
தேரை நெத்திலிமீன் குறவைமீன் உழுவை
திரளி வவ்வால் கருவவ்வால் ஐவவ்வால்

தேரிநண்டு வளவிக்கச்சை விலாங்கு
சென்னைக்கூனி யிரால் கட்டாவஞ்சனமீன்
நீர்ச்சுருட்டை நீர்க்குறட்டை தலைப்பிரட்டை தவளை
நிறைந்தகடலடர்ந்து கப்பல்மிதந்ததுகாணப்பா. ஏலே

12\. வையோலவாபெக்கின் யுத்திர
கற்புவித்த மோவை கப்பல்
அயிரோப்பாத் தேயமெல்லாஞ் சுற்றி
படவுடனே வருந்த காண்

௬௩. இங்கிலீசு ராச்சியம் லண்டன் பட்டணமும்

இஸ்பானா ராச்சிய மதிரீத்து நகரும்
உக்காரி தேயத்து பூதாப்பட்டணமும்
உலாந்தாவில் அமெஸ்தர்த்தாம் ரொத்தர்தாம நகரும்

சக்ஸையில்கோத்துயில் ஏதன்புருஞ்பட்டணமும்
தாத்தார் தேசம் அஸ்ற் திராகன் பட்டணமும்
புங்க சர்லாந்துவின் நாம்வின் பட்டணம்
பொறிருப்போ பெயியாப் பிராகுப்பட்டணமும்

துக்கமிரும் பொர்துக்கால் இஸ்போவாப் பட்டணத்
சுவேதி ராச்சியத்திலின் தொக்கொல்ம நகரும்
அங்கவுஸ்திரியாக்கிழ் காட்டிவிற் பிரிசெல்
அயிரோப்பா துற்கி கொனல் தாந்திகோப்புலியும்

வங்கை யித்தாலியா வின்ரோமாபுரியு
மாதருமதின் மார்க்கிற் கொப்பாஞ்சன்றும்
சக்கப் பிராஞ்சவிற் பரிசபட்டணமுஞ்
சுவிசகாடானதிற் கிற்கு பட்டணமும்

திங்கட் கிலேசியாப் பிரே செலவு நகரும்
சிர்ப்போ லோனியாக்கிருக் கோவும் வார்சோவும்
கக்குலிவோனியா ரெவல்றீக்கூறும்
கலிமேவு ருசியா மொஸ்கோவா நகரும்

பெண்கட் புருசியாபோர்லின் கெனிகில்பெருகும்
பின் லாந்திராச்சியத் தாபோப் பட்டணமும்
நக்குகொர் வெகு பேர் வினகர் அவுஸ்திரி
யாவில் வியனியனுக்கர் லாந்தின் மித்தாவு

மங்களல் மாஞானி லேவியன் தன்னீழ்
மயிஞ்சிலில் மொகுஞ்சு திரியாவிற் கொப்லேஞ்சும்
பங்குகெர் லோனியாப் போன் பட்டணமும்
பாவாரியா மினிகன் சக்சோலி திரேஸ்தன்

கொங்குப் பிருந்தன் பூர்குப் பெர்லீன் பட்டணமும்
கோட்டுப்பிலாத்தி ஞர்த்தின் மன்னேயிம்பதியும்
தங்கப்புருணக வீக்கினன்ஞேவா வைதல்
தான்அற்றி யாசியாவில் வருகுது காணகப்பல் —ஏ

13. நேசமிகும் ரோவாவின் பெரிய
நேர்மையுள்ள கப்பலது
ஆசியாவின் திசை நோக்கி யெழுந்
தடர்ந்தோடி வருகுது காண்.

மூ. ஆற்கி பாரிசு சிந்து பெரிய தாத்தாரும்

சொல்லிய மகா சீனம் ஆசியாதீவில்
அத்தாசி துற்குமுந் தினதேசமாங்கு
அரசுதானி கொனஸ் தாந்திநோப்புளியம்

நத்தோலியா சூரிய அற்ப்புதேசம்
நற்சின்ன ஆசியா எபேசு சிமிர்ணு
பெர்கமுதியாத் திர சார் துபில் தெல்பியா
பின்னும் லவொதிகெயா தாரிசு சிப்ரூத்தும்

சற்சூரியாதேசம் அலேப்பந்தி யோக்கியா
சாமாரியாப்பட்டணம் இஸ்காந்திரோணு
உத்தமஸ்குத்தீரு சீதோன் முறைவில்
யூதேயாச் சீர்மையது நான்கு பிரிவாகும்

இத்தகமை யூதேயாவின் பட்டணங்கள்
எருசேலம் பெத்தானியா பெத்தலேகேம்
சிக்லாணு அஸ்கலோன் கேபுரான் காசா
சிற்பேத்ப கேபெற்சே பாபெற்சே மீசும்

பிற்காத்து யோயோப்பே ராமாவோடெரிகோ
பேத்தலரயா கீ பேயா கீபேயோனு
முற்பெத்த ரேன்பட்டணஞ் சாமாரியாவில்
மொகித்தோ கரிசீ மெப்பருயி மேந்தோரும்

பக்கிஷசா லேஞ்சிலோ வுங்கலிலேயாவில்
பரீஷசா ரிஸற்யேல்ப் பெத்சேமிஸ் கற்மேல்
மக்கட்பெத் சாய்தா கப்பர் நகூம் பட்டணம்
வன்மலேத்தாபோருடன் சரே பத்தா

கத்தரி னாசரேத் தூருடன் கானா
காத்ததும் எர்மோனப்த நல்லியே னோக்கு
மெய்க்கிறிஸ்தின் பருபதந் தீபேரியாவு
மிக்கசெ சாரியாவும் பெரேயாவில்

அஸ்தரோத்துக்கேதர் பாசான் கொராத் ச்சின்
யாப்புசு மிச்சிப்பா மகனாயிம் பினியேல்
சுக்கோத்தெஸ் போன்தேபே சித்திமுஞ் சுற்றித்
துரிதமாயற்புவினில் வருகுது காண் கப்பல். —ஏலே

14. உன்னதப் பாரபரனின் கிருபை
யுற்ற நோவின் தரணி[1]
யின்னமின்னம் ஆசியாவில் அடர்ந்த
எல்லையெல்லாஞ் சுற்றுதுகாண்

மூ. கல்லின் மலையறபு சீனாப்பருபதமும்

கருந்தரினோ ரேப்புக்குன்றதும் வறண்டறபு
மல்லறச்செழித்தறபின் மக்க மதீன
மாபாரிசுத்தேச மஸ்பகானகரும்

ஒல்லிய தேர்பெந்து சீராஸ்துப் பட்டண
மோர் முஸ்தீவும்பெரிய கமிரன் பட்டணமும்
நல்ல இந்துத் தேச மெனா முகிலர் சீர்மை
நதிமருவு பெரியபாட்சா விடைநிலே

தில்லிகு சாரத்து வங்காள மாகூரா
சீர் கொலுக்குத்தாவோ டுகுளிப்பட்டணஞ்
சொல்லிய பெனார்ச்சியென்ற துகாசிப்பட்டணம்
சொற்க புண்கண்பாயி தீவொடு சூரத்து

மெல்லியர் கொங்கணமலது டக்கனில்த்தாமன்
வெம்பாயி ராசப்பூர் கோவையோர்னாவா
சல்லூர் மலையாளத்திற் கண்ணனூர துவுந்
தலைச்சேரி கள்ளிக்கோட்டையுடன் தானூர்

கொல்லங் கொச்சி கொடுங்கலூர் அஞ்சு தெங்கு
கூர்த்திருவாங்கோடு மதுரை மாபுரியில்
துல்லிபக்கன்னியா குமரி கோட்டாறு
தூற்றுக்குடியிரா மேசுரஞ் சேது

[1]தரணி—கப்பல்.

புல்லிராமநாத புரங்கீழ்க் கரையும்
பொன்றிருநெல் வேலியுறை யூர்சிராப்பள்ளி
நெல்லதிக சோளநா டான தஞ்சையினில்
நேர்மா தேவிப்பட்டணமொடு கும்பகோணம்

செல்ல மன்னூர்கோவில் மாயூரம் ஆரூர்
தீவுக்கோட்டை நாகை நாகூர் காரைக்கால்
அல்லற்கெடுந் தரங்கம்பாடியப்பால்
அழகான செஞ்சியிற் றில்லை புதுச்சேரி

தொல்பரங்கிப்பேட்டை தேவனும்பட்டணஞ்
சொக்கூடலூர் அரியலூருடையார் பாளையம்
எல்லை மைசூரதிற் சிரங்கப்பட்டணம்
இத்தனையுஞ் சுற்றி வருதத்தருட கப்பல். —ஏலே

15. அத்தனுட தீர்க்கனெனும் இலாமேக்
கருளும் நோவை முனிவன் கப்பல்
எத்தனையோ ஆசியாவின் சகல
எல்லையெங்குஞ்சுற்றுதுகாண்

மூ. அதிவிசையநகரமாதிய கற்நாடகத்தில்

ஆற்காடு திருப்பாலூர் மயிலாப்பூர் வேலூர்
சதுரங்கப்பஞ்டணம் சென்னப்பட்டணம் வி
சையநகரங் கோவிளங் காஞ்சி பழவேற்கா

டிதி திருப்பதி கலித்துறை கோலகொண்டை
யின்மாசிலிப் பட்டணம் விபிலிப்பட்டணம்
பதிவிசாகப் பட்டணங் கெங்கைக்கப்பால்ப்
பதிமூன்றிராச்சியம் அச்சமலதச்சி

மத மலக்காத்திப் பிரூரக்க மலாவா
மற்தபான் கம்போயா ஆவாயா சியாந்
ததியானபையோகு காச்சினங் துங்கின்
தருணச்சேரி பெரிய தாத்தார் தேசத்தில்

சிதமேவு தன்னரசு தாத்தாரின் றேசம்
சீனத்தாத்தாருசித் தாத்தாரின் றேசம்
கதிமகா சீனத்தில் நங்கின் பெக்கினும்
கந்தானும் அமக்காவும் பெர் மோசாத்தீவுக்

துதியாசியாத்தீவில் மால்த்தீவை யொன்றி
சுய இலங்கைக்கரை கண்டி கொழும்பு
நதியிராமேசுரம் யாட்பாணந்திருக்க
ஞமலையாவுகத்தீவில் பத்தாம் வத்தாவி

திதிவிருணைத்திவு செலவுத்தினிலே
சேலப்பைப்பட்டண மக்கசாப்பட்டணம்
விதமானமலுக்காவிற் றேனுத்திப்பட்டணம்
மிக்கதிதோராவும் அம்போயினுவு

முதியதீமோராவும் பந்தர்ப்பட்டணமும்
முக்கியமனிலாத்தீவின் மனிலாப்பட்டணமும்
பொதுவாக அதினேடு சேர்ந்தநகரங்கள்
பொற்சிமாளத்தச்சைப் பட்டணமுந்தாண்டி.

எதிரான கல்லாத்திவெல்லாங்கடந்தே
யியல்பாகச் சம்பங்கித் தீவின்மேற்சென்று
நதியேந்திராவுக்கு நேராகவோடி
நோவைகப்பல் ஆபிரிக்காத்தேகம் வந்துதப்பா.—ஏலே

16. மாபிரியலாமேக்கி னூரிய
மைந்தனேவாவின்றரணி
ஆபிரிக்காத்தேசமெல்லாஞ் சுற்றி
ஆமெரிக்கா அடர்ந்ததுவே.

ரூ. அச்சம்மிற்பேர்ப்பரியாவினில் மரோக்கா

அலக்கிறு தூனிசு திரிபோலிபற்கான்
கச்செகிப்பத்தில் அலேஸ்கந்திரிசியாவும்
காயீறு சுவேசு பிலேத்துட்கேரீத்து

துச்சாவார் வனூந்திரம் நிகிரிசியாவும்
தூபியா ஆபேக்கீஸ் ஆயானியாவு
முச்சப்பிசீனியா கினேயாக்கோங்கு
மோனு மொத்தப்பாவுஞ் சங்கிப்பாராவும்

வச்சிரக்காப்பிறிதேச மோனுயேமுகி
மற்றுபிரிக்காவிற் சேர்ந்த தீவுகளும்
பச்சைமுனைத்திவுகள் கனரித்திவுகள்
பண்சினேயாவுக்குக் கிழானதீவு

மதக்கஸ்தாசவுடன் மஸ்கரித்திவும்
வாகாமேரிக்காவின் நவஇஸ்பாஞாவில்
மெச்சுமொழிக்கோவோடாகு வாய்புலக்கோ
விராக்கூருகாப்பட்டணம் தலசுக்காலாவும்

நச்சஞ்சலவதோர் கூவாதிமாஜும்
நவமேழிக்கோவிலே சிவந்த சமுத்திரமும்
எச்சக்கவிமோரனியும் பிலோரிதாவில்
இஸ்பாஞாபிலோரிதா சங்ககுஸ்திஞ்ஞோ

இச்சைப்பிருஞ்சிப்பி லோரிதாசங்லூவிஸ்
இங்கிலீஸ்ப்பிலோரிதா கரோலீஞசவனன்
பிச்சர் வேடார்பிலோரித்தா கனதாவில்
பென்சில் வானியாதேசம் பில்தெல்ப்பியாலூர்

சச்சிங்கிலீசுக்கஞதா வீரக்கினிதேசம்
சந்தமரியாதேசம் நவஇங்கிலீஸ்தேசம்
பொஸ்தேரிகனவயோர்கக் காத்தியா
புகழ்பிருஞ்சுக்கஞதாவில்க, காப்புப்புருத்தோஜு

முச்சன் சிர்வாயசன லாவுரெஞ்சியாறும்
உயர் நவபிருஞ்சுவிற் பலசாதிவாழுஞ்
செசசை மிகுகாட்டுக் கஞதாவுஞ் சுற்றி
தென்ஞமேரிக்காவில் வருகுதுகாண்கப்பல். —ஏலே

17. பூமேவுலாமேக்கின் சற்
புத்திரநோவாவின் கப்பல்
ஆமேரிக்காத்தேசஞ் சுற்றியாஸ்தி
ரேசியாவுக்கடர்ந்ததுவே.

மூ. தூத்துமனியாபாகு வாயமாசோனி

சொற்பேருடன் சிலிதேருப்பிறமாவும்
தேற்றும் கெல்லான் பிராசிலியாத்தேசம்
தேருப்பிருமாவிலே கற்தக்கேஞவும்

போர்த் தோப்பெல் லோகரிப் பானியாப்பட்டணம்
பொற்சன் மார்த்தாப்பட்டணம் நவஅந்தலூசியா
பெற்றப்பஞமாவுடன் கரூரிஞமே
பேருவிற் கித்தோலி மாகல்லாவேனி

சீர்த்திப் பொத்தோசியுங் குஸ்கோபட்டணமும்
சீலியிற் பிலோத்தவியாசன் யாக்கோவும்
ஏற்றாத்து மனியாவிற் சன்மிகாயேலு
மெஸ்தோக் கோவுமகெல்லான் றேசமீது

பாத்திரச்சீர் வாயசன் பிலிப்புமேயுடனே
பாகுவாயில் சுமசீயோன் புயோனேஸ்
வேற்றயிரேசுடன் வில்லரிக்காவு
மிசியோன் றேசம்பிரா சீலியாவினிலே

நேத்திப்பன்னுங்கு நாட்டிற் பிரதானம்
நிறையர்ச் சீட்டவர் குடாக்கடல் சஞ்சலவதோர்
தாழ்த்தமாசோனியில் மாசோனியாறு
சந்துமிங்கிஸ் பானுலா அத்தில்த்தீவும்

கோத்திரையா மாயிக்கா பெரூத்தேரிக்கோவும்
கூபர்த்தீவு கரிப்பாத்தீ வொடின்னம்
லூத்தாயித்தீவு சந்தமோசங்குறாசு
நூற்கனரித்தீவு காப்புரோத்தோனும்

காத்திரப்பெர் முஸ்தீவு அசோர்த்தீவுமோடிக்
கவனமாய்த் தெற்சேயீர்ப் பட்டணந்தாண்டி
ஆஸ்திரேசியாக்கண்ட நியுலாண்டுஞ்சுற்றி
ஆராத்துமலையண்டி நின்றதிசயத்தால்

சாஸ்திரக்கப்பற் றமிழறங்கேற்றித்
தஞ்சை அயினசு சர போசேந்திரன் வாழ்க
சூத்திரமகா தேவதேவனைப்போற்றிச்
சொற்சந் தோடவேட்டு லட்கந்தீரப்பா. —ஏலே

2. கப்பற்றமிழ்

விருத்தம்

முந்தின யுகத்திலாதி முழுவுலகத்தை நீரால்
மைந்தர்கள் செய்த பாவவலிமையாலழித்தபோது,
எந்தயாபரனூர் நோவைக்கிட்ட கட்டளைப் பிரகாரம்,
விந்தையாய்ப் பேழைசெய்த விசுவகன் மாவும்நானே!

ஏலேலோ ஏலலல்லோ
தந்தையா தாதிந்தா தெய்தான
ஏலேலோ ஏலலல்லோ.

1. செப்பமிகு முதல்யுகத்தில் வளமாய்ச்
செழித்திருந்த நோவாவின்

கப்பலென்ற பேழைசெய்த விசுவ
கன்மாவும் நானலவோ
முப்பொருளதான திரியேகசுதனாக
முத்திவழி காட்டவென இத்தரையில்வந்த
எப்பொருளையுந் தருகுமெஞ்ஞானதச்ச
னேசுகசாதிபதி யென்குருவதாமே. —ஏலே

2. ஆதியிலே மாந்தர்செய்த கொடிய
அக்கிரமத்தால்ப் பரனார்
நீதியினால் மிகச்சினந்து பொழிந்து
நிறைந்த சலப்பிரளயத்தாற்
பூதலமெலாமழியவே செயுமநேரம்
போதக நோவாவினுடனேர்மையொடு கூடி
சேதமிலா தெட்டுப்பேர்களுயிர் தப்பச்
செப்பமுடனே நானோர் கப்பல் செய்தேனே. —ஏலே

3. வானவனின் புத்திரர்கள் பொல்லா
மனுட குமாரத்திகளை
யீனமுடன் கூடினதால்ப் பவத்தி
லிச்சைகளிலே யுழன்றார்
ஆனபடியால் நூற்றியிருபதாண்டல்லா
லதிகமிலை மனுடர்களினாயுளென வோதி
ஞானமுன நோவைக்கு அவையெலாஞ்சொல்லி
நண்ணியொரு பேழையைப் பண்ணச்சொன்னாரே.
—ஏலே

4. அந்நாளில் பூதலத்தில் மனுஷர்
அக்கிரமம் பெரிய தென்றுந்
துன்னுமவர் நினைவதெல்லாம் நித்தம்
தோற்றிய பொல்லாங்க தென்றும்
உன்னதம தானபரனார் கண்டபோது
உலகமதில் மானிடனை யுண்டாக்கினதினால்த்
தன்னிகரிலான் மனஸ்தரபமாயாவுஞ்
சங்காரஞ்செய்யுமுன் வங்கஞ்செய்தேனே. —ஏலே

5. மனுடர் முதல்கொண்டுலகில் தங்கி
வளருமிருகங்கள் மட்டுங்
கனமிகுந்த ஊர்வனங்கள் மேலா
காசப்பறவைக ளனைத்துஞ்
சினமுடனே யாவையும் நிக்கிரகஞ்செய்வோம்
திட்டமென நோவைக்குக் கட்டளைகளிட்டு
நினைவுடனே கப்பலைச்செய்யும் விதமெல்லாம்
நித்தியனெனக் குபதேசித்து வைத்தாரே. —ஏலே

6. கோப்பேரென்ற மரங்களினா லழகாய்க்
கோலமிகும் பேழைதன்னைத்
தப்பாக உண்டுபண்ணி யுள்ளாய்த்
தடுத்துத் தடுத்தறைகள் செய்து
காப்பாகத் தெய்வத்தை முன்னிட்டுக்கொண்டு
கடவுளுட சொற்படி திடமுடனே நானும்
வாய்ப்பாகப் பேழைக்குள் உள்ளும் புறம்பும்
மால்ப்பேசினாப்போலே கீல்ப்பூசினேனே. —ஏலே

7. முன்னூறு முழநீள முயரம்
முப்பதுதான் முழமாகி
யன்னவாய்[1] கல்மது முழந்தா
னைம்பது தானாக வைத்துப்
பின்னாலே மேல்தட்டுக்கொரு முழத்தடியில்
பிசகாமல் வெளிச்சம் வருந்திறப்பதனைப்பண்ணிப்
பன்னூலையுங் கற்றுப் பேழையின் கதவைப்
பக்கத்தில் வைக்கவொருமிக்கச் செய்தேனே. —ஏலே

8. மாக்கலத்தின் கீழறையு மிரண்டாம்
வனுத்தத்தட்டின் அறைகளையும்
பெருக்கமுடன் லேறையுஞ் செய்து
பெருகுஞ்சலப்பிரளையந்தான்
சுருக்கமுடன் வருமுனமே நோவையவன் மனைவி
சுத்தமுள புத்திரர்கள் சேம்காம் யாப்பேத்தும்
இரக்கமா யெங்களுட தேவிகளுமாக
எட்டுப்பேருந் தப்பி யேறிக்கொண்டோமே. —ஏலே

9. சுத்தமுள்ள விலங்குகளி லாண் பெண்
சோடு சோடாயெவ்வேழுஞ்
சுத்தமற்ற விலங்குகளி லாண் பெண்
சோடதொவ்வொன் றாகவுந்தான்
சித்தமுடனாகாசப் பறவைகளிலெல்லாஞ்
சேவலும் பேடான எவ்வேழு சோடும்
சத்துவமதாய்த்தின்னும் ஆகாரத்தோடு
தட்டு முட்டுகளெல்லாம் பெட்டிகொண்டு தப்பா. —ஏலே

10. அறநூறு வயதுதான் நோவைக்
கான வந்தநாளையிலே
பறவைகளுமூர்வனவும் உலகின்
பலசாதி விலங்குகளும்

[1]நாவாய் - கப்பல்.

திறமாக மனுடர்களில் நாங்களெண்பேரும்
செப்பமுடனோவாவின் கப்பலேறினபின்
அறிவான பராபரனெங்கள் பின்னாக
அதிக சீக்கிரமாகக் கதவடைத்தாரே. —ஏலே

11. கப்பலுக்குள்ளேறின பின்னேழு
கனத்த நல் வாரங்கடந்த
அப்பொழுது பூமியிலே பிரளை
யத்தின் தண்ணீர் மிகவாகி
ஒப்பான ஆழத்தி னூற்றுகள் பிளந்து
உயர்வான வானத்தின் மதகுகடிறந்து
தப்பாமலிரவு பகனாற்பது நாளாய்த்
தாரைவிட்டோயாத மாரி வீசினதே. —ஏலே

12. தண்ணீர்கள் பூமியின் மேல் மிகவுந்
தான் மிகுந்த வெள்ளமதாய்
விண்ணாடுந் தொடப்பெருகியுயர்ந்த
மேருவெல்லா மூடப்பட்டு
எண்ணுதமலையின் மேற் பதினைந்துமுழமா
யேறியே நீர்கொண்டு பேழையுமிதக்க
மண்ணாடு அசைகின்ற சீவசெந்துவெல்லா
மனுஷர்முதல் மிருகம் வரைமாண்டதுகாணப்பா.
—ஏலே

13. நூற்றன்பது நாளாகப் பெருத்து
தூங்கிய தண்ணீர் கதிக்க
மாற்றமில்லா னெங்களையுங் கலத்தில்
வைத்தசெந்துவையும் நினைந்தே
காற்றதனைப் பூமியின்மேல் மோதவிட்டுக்
ககனத்திலுண்டான மழைகளை நிறுத்தி
யூற்றையு மடைத்தபின் ஆராத்துமலைமேல்
ஒப்பரியநோவாவின் கப்பல் வந்ததுவே. —ஏலே

14. பத்துமதியானதிலே தண்ணீர்
பாரிலெங்குங் குறைந்துவரச்
சித்திரஞ்சேர் பருபதத்தின் முழுச்
சிகரமெல்லாந் தெரிந்ததுவே
வித்தகநோவைக் கறுநூற் றொன்றதாகி
மேவியிரண்டாந் திங்களிருபத்தேழாம் நாள்
இத்தரையெலாங் காய்ந்திருந்த தாலண்ணல்
எங்களையெலாம் வெளியிலேறச் சொன்னாரே. —ஏலே

15. கனமான பலிப்பீடம் கட்டிக்
கத்தனுக்குப் பலியிடவே

மனுடமுதல் சீவனெல்லாம் பல்கி
வருத்தனையாய் வாழ்கவென்று
இனமான வார்த்தைப்பாடெங்களுக் கருளி
யிப்பாரை யப்பால் அழிக்கோ மெனத்தான்
அனையதொரு மேகத்தில் யாவருங்காண
அருளினுர் பச்சைவில்லடை யாளந்தானே. —ஏலே

16. விந்தையுட னிவ்விதமாய் முன்னுள்
மிகுந்த சலப்பிரளையத்தில்
சிந்தையன்றி யெண்மர்களும் பிழைத்துச்
செகதலத்திலே பலுகி
அந்தமுள மேல்சாதி கீழ்சாதியென்றும்
ஆயிரம் விதங்களாய் மேன்மைபாராட்டி
யெந்தனை யிடங்கையென்றே சாதித்தேசி
யியான்செய்த நன்றியதெலா மறந்தாரே. —ஏலே

3. கப்பற்றமிழ்

விருத்தம்

வானபரனீதிகொடி தாய்முனுலகோரை
மாரியதினு லழியவாதை யிடுநேரம்
ஞானமுனி நோவையொடு பேழையினுளான
யாவுயிருமே கருணையானினைவதாகி
யீனமற வாயுவையுமே படரவீச
ஏறுதகமோடி வடிவாய் வெளிகடோண
லானபோழுதே கணுறநீடுமடையாளம்
ஆதிநவ நூதனமெலா மறைகுவேனே.

சலப்பிரளையத்தின் முகிவு

ஏலல ஏலேலோ ஏலேலோ
ஏலல ஏலேலோ ஏல
ஏலஏலல ஏலஏலல ஏலஏலல ஏலலஏலோ.

1. பூவுல கூடுசரா சரநர
சீவனோடான தெலாம்பரி
பூரணன்கன நீதியின்படி
தீர்வை கொண்டழிவாகவுங் கண்டேன். —ஏல

2. நாற்பது நாளளவாய்ப் பெரும்புனல்
மாப்பெல னோடிக்கக் கருங்கிரி
யாவுமுங்கிடவே விசும்பிடை
மேவியம்பு கடாவவுங்கண்டேன். —ஏல

3. பேழையுளோவையையும் பினுமதி
லான உயிர்க்களையுங் கன
பேறுதந் தருளாகி யங்கமி
லானினைந்த! விதங்களுங் கண்டேன். —ஏல

4. ஊற்றுறு பூமியின்மேற் பராபரன்
காற்றை யடிக்கவிட்டார் அதால்
ஊரின் மிஞ்சிய நீரமர்ந்தடி
யாழவன் புனல் சோரவுங் கண்டேன். —ஏல

5. ஆழத்தினூற்றுகளும் ஆகாயத்தின
சூழத்துறுமதகும் அடை
வுண்டுவிண்டு பொழிந்து சிந்திய
அப்பணங்கள்[1] அமர்ந்ததுங் கண்டேன். —ஏல

6. பாடும் பரனடியார் பவம்பறந்
தோடும் பெருங்கதையோல் அதி
பான்மையுற்றிடு நேமியப்புகள்
பூமிவிட்டுத் திரும்பவுங் கண்டேன். —ஏல

7. ஏற்ற நூற்றைம்பதின்மேற் சலீலத்தி
னேற்றமெலாங் குறைந்து மதி
யேழிலே பதினேழிலே முனி
பேழையாரத்தில் வாரத்தைக் கண்டேன் —ஏல

8. தத்தியெழும் புனல்கள் வளர்மதி
பத்துமட்டுங் குறையத் தச
திங்களின் முதற்பொங்கரின் சிக
ரங்கள் காணும் விதங்களும் கண்டேன். —ஏல

9. போக்குறு நாற்பதுநாட் கடந்துபின்
காக்கையை நீக்கிவிட்டான் அது
பூக நீர்வற்றிப் போகுமந்தரம்
ஏகியேகி வருவதுங் கண்டேன். —ஏல

10. கொஞ்சப் புனலதுவோ எனப்பினுங்
கொஞ்சிப் புறாவை விட்டான் அங்கு
கொள்ளை வெள்ளங்கள் உள்ளதாலதின்
உள்ளங்காற் கிடமில்லதுங் கண்டேன். —ஏல

11. வேறெழு நாட்பொறுத்து வெளிப்புறத்
தேறப்பு[2]று வொன்றிட்டான் அது
விண்டணாந்தனிலுந் தொலிந்திலை
கொண்டு கொண்டந்தி வந்ததுங் கண்டேன். —ஏல

[1]அப்பணங்கள்,—தண்ணீர் [2]அப்பு—நீர்.

12. நண்ணுமெழுநினம் போய்த் திரும்பவும்
இன்னம் புருவிடவே அது
நன்றி கேடர்கள் சென்ற காதை
நடந்தொழிந்து பறந்ததுங் கண்டேன். —ஏல

13. ஆண்டறு நாற்றென்றிலே முதன்மதி
யானிய மொன்றதிலே முனி
யாங்கு சோங்கதிற்றுங்கு தட்டதை
வாங்கிக் காண்க நீர்வாங்கவுங் கண்டேன். —ஏல

14. வாய்ந்த கொடும் பகைஞர் எரிந்துளம்
காய்ந்து கிடந்ததுபோ லிரு
மாதமீர் பதினேழு தேதியிற்
பூதலத்தின் வறத்தலைக் கண்டேன். —ஏல

15. வானவனேவாவைப் பிறப்பட்டு
வாவெள மற்றோனும் அவன்
மாதுஞ் சேயருஞ் சேயர் தேவியும்
ஒதையாய் வெளியே வரக்கண்டேன். —ஏல

16. ஆதிபான்மயவால் மாக்கலத்
தானசெந்தான தெல்லாம் அணி
யாகவே கவடாகவே விரை
வாயெழுந்த வினைதமுங் கண்டேன். —ஏல

வகுப்பு 3.

உடன்படிக்கைப் பெட்டி

விருத்தம்

தற்பரனி சருவேலர்
தங்களைப் பார்வோன் முன்னின்
றற்புதம் பலதுஞ் செய்தே
யழைத்தருங் கடலைத்தாண்டி
வெற்பெனுஞ் சீனைமீது
வேதமே கொடுத்தபோது
கற்பனை வாங்கரெண்டு
கற்பலகையைச் செய்தேனே.

கற்பலகை செய்தேனையா வேத்தின்
கற்பலகை செய்தேனையா.

1. விற்பனமோசேசுவுக்கு வெற்பெனுஞ் சீனைமலையி
லற்புதனர் சொன்ன பத்துக் கற்பனை யெல்லாமெழுத.—கற்

2. விக்கிரகமுடனே கடவுள் விதித்தபலகைதனிற்
சொந்த விரலாலெழுதித் தலைக்கையோசேகவுக்குத்
தந்ததைக் குன்றடியினிலத் தானெறிந்துபோட்டுடைத்த
முற்றினைதுக் கொப்பதாக முகமிழந்தாயிரண்டு. —கந்

3. ஆரோனாசாரியென தன்னையர்த்த ஸ்தாபியே
வீருகவே பிசாசேவர் பொன்தடைமைகளே
யாருக வாக்கிச்செய்த மாட்டுருசினை விளைந்த
தாருணாபாவினையுக் தகைக்கமுறடியும். —கந்

4. கடவுளொருத்தனென்றக் கடவுளிருமைச்சித்த,
கடவுடனேயுவுகாளா சாத்துட்பெற்றோமைசாக்கித்
திட்சொலே விபசாரம் எக்களவுபொய்மிச்சைமிட்
டுடன் புறத்தியார் பொருளைதோன்றுயாசிக்காதிருக்க. —கந்

5. இக்கனைத்து வேதிதிரத் தேவர்களெக்காளமுத
இக்கவிசப்பூருவ மின்னலுமிடிமுழக்க
அக்கினியின் மீதிருந்து ஆச்சரியமாய்க்காக்குத்
தக்கபாமேசாலோர் தந்தருள் சாட்சியினிரண்டு. —கந்

விருத்தம்

மாட்சிமிகும் பரஞ்சோதி
வளர்திருபாசனமான ரூபமீத
காட்சிதாவெழுக்கருளும்
பாடுகெருபீன்களுயுங் கனக்கச்செய்து
குட்டியுடனூறுகிளைச் சடர்கிலேயு
மோசையுமுஞ் சொன்னத்தாலே
சாட்சிவைக்குமுடன் பெட்டகையும்
பெட்டகையுந் திட்டமுடன் சமைத்தேனேனே.

பெட்டகமொன்றுசெய்தேனேபாடன் பழுக்கைப்
பெட்டகமொன்றுசெய்தேனேபா.

1. மட்டானவில்லாத பான்பெட்டுடன்மோசேகைக்கு
இட்டகட்டளைப்படி பேதிட்டவட்டமாகவேனான். —பெட்

2. குன்றிரக்கன் கற்றச் சால்திரமேனையதாக
சித்திரமான திறல் செத்திபதாகவே மொரு. —பெட்

3. ஒன்றரை முழுமகல மொன்றரை முழுமுயாய்
ஒன்றரை மேலொன்று சீரமொன்றியபடியிருக்க —பெட்

4. பொற்றகட்டாலுட் புறமும்புறத்திப்புற முழுமுகச்
சுற்றிலும் பொற்றிரீனைகள் சோடினையாய்ச்சமைத்த. —பெட்

5. நாலுபக்கக்கோடியிலும் நாலுபொன்வளையஞ்செய்து
மாலுடன் செய்வாரையதின்மேலேயும் பொன் தகடிட்டு.
—பெட்டி

6. மாசற்ற பொன்னாலே கிருபாசன மூடியைப்பண்ணித்
தேசுபெறவேயிரண்டுகேரு பீன்கள் செய்து. —பெட்டி

7. அந்தண்டையிந்தண்டை கிருபாசன மூடிவரம்பில்
விந்தையுடன் கேரூபீன்கள் மேவியிசையாயிருக்க.—பெட்டி

8. வீரியத்தோடே செட்டைகள் விரித்தெதிர் முகங்களாய்க்
கேருபீன்கள் நின்று கிருபாசனமூடியைநோக்க. —பெட்டி

9. எந்தைபரனார்மறையினீரைந்து கற்பனையென்று
தந்தகற்பலகையான சாட்சியைவைப்பதற்காய். —பெட்டி

10. செப்பமுடனே சமுகத்தப்பம் வைக்கச்சித்திமரத்
தொப்பியமேசையைப் பொன்னால்துப்பரவாய்
மூடிப்போட.—பெட்டி

11. ஆறுகிளைக்குத்து விளக்கடிக்கப்பட்டபொன்னாலே
வீறுடன் விநோதமானவேலையாகச் செய்ததல்லால்.
—பெட்டி

12. அன்னாளில் யூதர்கட்குமுன்னோனளித்தவான
மன்னாவிலோர் படியைப்பின்னாலே வைத்துவைக்க.
—பெட்டி

13. பெலிப்பீடந்தூபப்பீடம் பிரகாரம்வாசஸ்தலம்
கெலிப்புற்றனேகங்கிரிகையெல்லாம் படைத்து. —பெட்டி

14. வேதனார் சீனாமலையில் போதகமோசேக்குக்காட்டும்
மாதிரியதின் படியே பேதக மில்லாமல்யானும். —பெட்டி

வகுப்பு 4.

ஒரேசாதி

வல்லமை யரசர் தொட்டு
வறிமையோராளவதாக
எல்லையில்லாத சீவ
செந்துக்களினங்களெல்லாம்
அல்லலில்லாத சோதி
யருளியபடியேபார்க்கிற்
சொல்லுமெக்குலத்தோர் வாழ்வுஞ்
சுக்கிலமொன்றுதானே.

கர்கிலமொன்றல்லவோ மனுடரின்
தோற்றமுமொன்றல்லவோ.

1. மிக்கபராபரன் சற்பனையாலாதி
மக்கள் பிறந்து வளர்ந்தது மாண்டதும். —சக்

2. ஆதமுமேவாளு மானத்தமாய்க்கூடி
ஆபேலைக்காயீனைச்சேத்தையும் பின்சில
மாதவரைப்பெற்றது மக்கவர்சேர்ந்து
மறுத்து மறுத்து மனுக்குலமானதும். —சக்

3. சாதிகள் வெவ்வேறதாகப் பிரிந்ததுஞ்
சைவமதங்கள் சமையங்களானதும்
வேதியராகம சாஸ்திரிமார்களும்
விபூதிருத்திராட்ச மெய்விதக்கோலமும். —சக்

4. வேந்தர்பிரபுக்கள் மந்திரிமார்களும்
மேலான ஞாயத்துரைமார்கள் கூட்டமும்
ஆய்ந்த உபதேசியார்கள் குருக்கள்மெத்
திராணிகள் நின்று திராணிகள் சொல்வதும். —சக்

5. மேல்சாதிநானென்றும் கீழ்சாதிநீயென்றும்
வித்தியாசம்பண்ணிப் பெத்தரிக்கஞ்சொல்லிச்
சாலவேதம்மை யுயர்த்தி மற்றோர்களைத்
தாழ்த்துகிறீர் மிகத்துற்றுகிறீர்களே. —சக்

6. அன்னியரோ உலகத்திலிருப்பவர்
ஆதத்தின் புத்திரர் மாத்திரந்தானவோ
பின்னை நீரெப்படிச் சின்னகுலங்கள்
பெரியகுலங்களென்றே சொல்லிப்பேசலாம். —சக்

7. மன்னவனார் சோறும் தன்னவனார் சோறும்
மந்திரியார் சோறும் தந்திரியார் சோறும்
முன்னவனார் சோறும் பின்னவனார் சோறும்
மூத்தவனாரதைப் பார்த்தவனார் சோறும். —சக்

8. பள்ள னுயர்த்தி பறையனுயர்த்தியோ
பாப்பானுயர்த்தியோ மூப்பானுயர்த்தியோ
கள்ளனுயர்த்தியோ வெள்ளனுயர்த்தியோ
கண்டவனாரதைக் கேட்டவனார் சோறும். —சக்

9. வலங்கைகளேது இடங்கைகளேது
வல்லவினைதொரு நல்லவினேது
குலங்களேதேது குலமேதேது
குற்றங்கள் பார்க்கையிற் சுற்றங்களுண்டோ. —சக்

10. கம்மாளனென்றும் நம்மாளனென்றும்
கற்றவனென்றுங் கொற்றவனென்றுஞ்
சும்மாயனே கம்பவுரிசங்கள் பண்ணிச்
சொன்னவனெங்கையோ கேட்டவனெங்கையோ. —சுக்

11. சண்டாளநீசப் புலையனென்று மிகத்
தாழ்ந்த புலையன் புதறையனென்றும்
கண்டாலுந் தோஷமென்றண்டாதகற்றிக்
கடும்பகை செய்வதிடும் பதலோசொலும். —சுக்

12. அன்னியனென்றுந் தன்னவனென்றும்
அடுத்தவனென்றும் அடாதவனென்றும்
சின்னவனென்றும் நீர் வின்னப்படுத்தியே
தீட்டென்று சொல்வது மேட்டிமையல்லவோ. —சுக்

13. தொண்டுமுறிப்பய லாளடிமைப் பயல்
சொந்த இனமல்ல இரத்தக் கலப்பல்ல
பண்டு பழக்க முகமறியாத
பலசாதியீனப் பயலென்பதாரை நீர். —சுக்

14. ஓங்குவிருட்சம் விலங்கு பறவைகள்
ஒருருவோர் குல மில்லாத வாறுபோல்
நான்குவிதக்குல மாந்தர்குல மென்க
ஞாயமிருக்குதோ நேயமிருக்குதோ. —சுக்

15. நான்கு குலங்களு மொன்றிப்புணர்ந்து
நயந்துபெறுவது புத்திரனுற்
றீங்குகுறித்திவன் சின்னக்குலமென்று
செப்புவது மிகத்தப்பிதமல்லவோ. —சுக்

16. என்னுடசாதியிடங்கை யென்றும் விரு
தில்லையென்றுங் கனயீனப்படுத்தியே
தன்னுடசாதி பெரிதென்று சொன்னவர்
சத்திய வேதத்திலொத்துக்கொடுக்கட்டும். —சுக்

17. ஆதத்தின் புத்திரர் நீங்களுநானுமொன்
ருயிருந்தா லொருஞாயமில்லாமலே
பேதித்துச் சின்னப் படுத்திவிரோதமாய்ப்
பேசுவதே னென்னையேசுவதேன் சொலும். —சுக்

18. கோவிலுமொன்று குருக்களுமொன்று
கொற்றவன் றீட்சை விதிகளுமொன்று நன்மைப்
பாவிகளின் பிணையாளியொன்று
பாத்திர மொன்றெனப் பார்த்தறிந்தீர்களே. —சுக்

19. ஒவ்வொருசாதியுந் தங்கள் குலத்தை
யுயர்த்திமற்றோர் குலம் தாழ்த்தியெண்பீர்களே
யிவ்விதம் நீங்களிருக்க மற்றோருமை
யீனஞ் செய்தாரென்றிரங்கியழுவதேன் —சுக்

20. தன்னைச்சினேகித்திருப்பது போலவே
தன்னயலானைச் சினேகிக்கவேணுமென்
றுன்னதன்சொன்னது மக்கிலேயோபிணே
யென்னையிடங்கை யென்றெப்படித்தள்ளினீர் —சுக்

விருத்தம்

நன்மைக்கு வித்தாய்நின்ற
நாயகனுரையை மீறி
வன்மத்தின் கடியைக்கேட்டு
மரக்கனி தின்றத்தாலே
தொன்மை தொட்டிந்நாள்மட்டுந்
தோன்றிய தந்தைதாயின்
சென்மத்தின் குணத்தாலெல்லாத்
தீவினைகளுமுண்டாச்சே.

சென்மக் குணமல்லவோ இதெல்லாந்
தீமைக்குணமல்லவோ.

1. தன்மப்பராபரன் தின்ன விலகுந்
தருவின்கனியைக் கருதினதால் வந்த. —சென்

2. தன்குலந்தானே பெரிதென்று சொல்வதுஞ்
சாதிவித்தியாசங்கள் பார்த்துத்திரிவதும்
பின்குலத்தாரைப் பகையாக்கிக்கொள்வதும்
பெத்தரிகத்தாற் பெருமைகள் சொல்வதும். —சென்

3. தன்னையனைவரு மெண்ணிக்கையா யெண்ணி
சங்கித்திருப்பதற் கங்கமெலாஞ்செய்து
பின்னையொருதன் சரியான சங்கையைப்
பேதித்து மெத்தவிரோதித்துச் சொல்வதும். —சென்

4. வாருமையாசுகமோ இருமென்று
மருவியுபசரித்தன்பு பாராட்டிப்
பாரில் விருந்துகளும் பண்ணிச்சற்பனை
பண்ணியடுத்துக் குடியைக்கெடுப்பது. —சென்

5. வன்மத்தைப்பேணி மனதில்வைத்துக்கொண்டு
வாயினால் மாத்திரம் நேயமதாய்ப் பேசிக்
கன்மப்பிசாசின் கவடங்கள் பண்ணிக்
கறுவிக் கறுவிக் கழுத்தையறுப்பது. —சென்

6. வஞ்சகத்தாலும் அநீதத்தினாலு
மாயத்தினாலு முபாயத்தினாலு
நெஞ்சகமுற்று நினைத்திருந்தாலும்
குஞ்சிரிப்பேமிகக் கொண்டுரை சொல்வதும். —சென்

7. ஆண்டவன் பாக்கியத்தந்திருந்தாலும்
அனுபவியாமல் அடக்கிவைத்துக்கொண்டு
பூண்டவறுமை பிடித்ததென்றே கந்தை
போட்டுக் கொண்டேழைபோற் காட்டுக்கவடெலாம்.
—சென்

8. தன்மத்தைக் கண்டவாரென்று கேட்பதுஞ்
சாமித்துரோகந்தனைக் கட்டிக்கொள்வதும்
வன்மத்தைத்தானே மனதிற்குறிப்பது
மாயையிற்சிக்கி மயங்கித்திரிவதும். —சென்

9. எத்தனை செல்வமிருந்து மனதி
னிரக்கமில்லாமலெரித்து விழுந்து
சத்தியதற்றரித்திரர் கூப்பிடச்
சல்லிக்கா சொன்றுந்தாராமலே போறதும். —சென்

10. ஆபத்தடைந்தவனிக் கட்டுப்பட்டவ
னரையுங்கண்டுமன துருகிப்பர
தாபித்தியன்ற உதவிசெய்யாது
தனித்துப்பொசித்துச் சுகித்துத்திரிவதும். —சென்

11. தன்னைச் சினேகித்திருப்பதுபோலச்
சகலஉயிரையுந் தன்னுயிராயெண்ணிப்
பின்னைச் சினேகித்திராமலிருந்து
பிசாசுக்குப் பிள்ளைகளாகநடப்பதும். —சென்

12. அண்டினபேரை யடுத்துக்கெடுப்பதும்
அன்புசெய்தோருக்கபகாரஞ்செய்வதும்
குண்டணிசொல்லித்தெரு வெங்குந்தூற்றியே
கொண்டகணவனைக் கொல்லப்பகைப்பதும். —சென்

13. என்னெனதானுபகாரங்கள் செய்தாலும்
எள்ளளவேனு மிருதயத்தெண்ணாமல்
வின்னமதாகவே நன்மைக்குத்தின்மை
விசுவாசபாதகத்தால்மிகச் செய்வதும். —சென்

14. தன்னுடதாரத்தைவீட்டுக்குள்ளேவைத்துத்
தப்பாதிராப்பக லெப்போதுங்காப்பவன்
என்னவிதத்தினும் மற்றவன் பெண்டிரை
பிச்சிக்கலாமென் றெண்ணமற்போறதும். —சென்

15. தாவீதபிசலோமாற்றுரத்துண்டதும்
சால்மோனுக் காயிரம் பெண்களிருந்ததும்
சீவனிழந்த மனேன்கொலையுண்டதும்
சிமசோன்றன்னிருகண் கெட்டுப்போனதும். —சென்

16. வேசிகள் வீட்டுக்கலைந்து திரிவதும்
மெத்த வெறியெடுக்கக் குடித்துக்கொண்டு
சீசீசீ நாய்நாய் போபோபோவென்றேசித்
திட்டவுங்கட்டவுஞ் சின்னப்படுவதும். —சென்

17. கண்டதுஞ்சொல்லிக் கேட்டதுஞ்சொல்லிக்
காணாத கேளாதகாரியமுஞ் சொல்லிக்
குண்டணிசொல்லித் தெருவெங்குந்தூற்றிக்
குறளிகள்போலப் பிரளிகள்செய்வதும். —சென்

18. வார்த்தைக்கு வார்த்தை அசத்தியஞ்சொல்வது
மாய் மாலம் பண்ணிக்குருக்களையேய்ப்பதும்
சேர்த்திக் கையாக இருந்துமுறிப்பினை
செய்வதும் வைவதும் திட்டுவதுமெல்லாம். —சென்

19. சீவனுளையெல்லாம் அவம்போக்கிச்
சிற்றின்பத்தாலே தெருக்களைச்சுற்றிக்
காவாலித்தம் பிகளோடேகுலாவிக்
கனைத்துக்கனைத்துக்குனித்துத் திரிவதும். —சென்

20. வாணிபஞ்செய்து பிழைக்கறியாமல்
வறண்டித்திருடி வயிறு வளர்ப்பது
நாணமும் வெட்கமுமானமுமில்லாமல்
வீணிற் குடித்து வெறித்துக்கிடப்பதும். —சென்

21. எல்லாமனுஷரும் ஆதத்தின் பிள்ளைக
ளென்றறிந்தாலுமிடங்கை வலங்கையென்
றில்லாத நிந்தைகள் சொல்லிச் சொல்லிக்கொண்டு
எந்நேரம் பார்த்தாலும்பொல்லாப்புச்செய்வதும்.
—சென்

22. சங்கையுள்ளோரைக்கனஞ் செய்துகொள்ளாமல்
தானும் பெரியவர் தாமுஞ்சரியென்று
பங்கமுறச்சொல்லி மேன்மையுள்ளோரைப்
பழித்துப் பழித்துப் பரிகாசஞ்சொல்வதும். —சென்

23. உன்னதமான பராபரவஸ்துவுக்
கொப்பெனக் கோடியுருக்களைச்செய்துமே
யென்னைப்படைத்தவர் தன்னைப்படைப்பது
எவ்விதமென்று நானெண்ணமற்போனதும். —சென்

24. தன்னைப்படைத்தவர்க் கொப்பெனபற்பல
சாயலைச்செய்தவர் சன்னைகையெங்கணும்
வின்னப்படுத்தின தோஷத்தினாலென்
விசுவகன்மாவென்ற மேன்மையிழந்ததும். —சென்

விருத்தம்

அடர்ந்தசாபத்தினாலே
யநித்திய வாழ்வை நம்பிக்
கடந்து நன்வழியைவிட்டுக்
கற்பனை பத்து மீறித்
தொடர்ந்து பாதகத்தைச்செய்து
துணிந்து பல்விதங்களாக
நடந்துகொண்ட நீதமாயென்
னாட்களைச் செலவிட்டேனே.

பல்லவி

நடந்துகொண்டேனே பலவிதம்
நடந்துகொண்டேனே.

1. தொடர்ந்து லோகத்தினிச்சையிலே
துன்னியபாவத்தின் லெட்சையிலே
தோணாமலே காணாமலே
நாணாமலே கோணாமலே. —நட

2. கற்பனைபத்துங் கொடுத்திருக்கச்சே
காரணனார் வந்தடுத்திருக்கச்சே
விற்பன ஞானங்களெங்குஞ்செல்லச்சே
வேதகுருக்கள் பிரசங்கஞ் சொல்லச்சே
சற்பினையாகக்கெடுத்துத்திரிகின்ற
சத்துருவுக் கிருதயத்தை யொப்புக்கொடுத்
தற்பகினைவினால்த்தற்பரனார் தமக்
கஞ்சாமற் பாவத்தை நெஞ்சாரச்செய்து நான். —நட

3. (தேவன் புவியிற் பிறந்திருக்கச்சே
சேணுலகங்கள் திறந்திருக்கச்சே
பாவிகள் குற்றமறந்திருக்கச்சே
பாதகம் யாவும் பறந்திருக்கச்சே
ஆவலதாய்க் குணப்பட்டுத்தவம்புரி
யாமற் பழையபடி துர்குணத்துடன்
சாவதுறங்கேட்டின் பாதையிலுட்பட்டுச்
சத்தியவேதத்தை முற்றிலுங் கைவிட்டு.) —நட

4. ஆங்காரமாகச் கெறுவங்கள் கண்டு
ஆரையும் பேச்சு மதியாமல் விண்டு

வாங்காமற் பாவத்திலே யுழைப்புண்டு
வன்மத்தைப்பேணி மன தூரங்கொண்டு
பாங்கான நல்வினையொன்றுஞ் செய்யாமற்
பாராபரன்பேரினிற் பத்திவையாமற்
நீங்கானபேயின் வலையினிற் பட்டுச்
சென்மச்சுபாவத்தினாற் குணங்கெட்டு. —நட

5. செய்யும் பிசாசடமோசத்தினாலே
சிற்றின்பமாய உல்லாசத்தினாலே
மையல் தரும்புவி நேசத்தினாலே
மாருத அவ்விசுவாசத்தினாலே
பொய்யும் பிரட்டு முருட்டுந்திருட்டும்
பொறாமையும் பூட்டி யொறாமையுங்காட்டி
வையுமுதாசனத்தாலும் நிறைந்து
மதியுமறந்து துதியுங்குறைந்து. —நட

6. யேசுவொருபிரதான ஆசாரி
இரட்சிக்கும் இம்மானுவேலனுசாரி
மேசியாவாம் அவரேயதிகாரி
வேதநாயகன் தமிழ்க்குபகாரி
ஆசைக்கிறிஸ்துவை யன்புடனோக்காமல்
ஆற்றும வாழ்வையுந் தாழ்வையும் பார்க்காமல்
பாசவலையுக்குள்ளே யகப்பட்டுப்
பத்தியும் புத்தியும் சித்தியுங்கெட்டு. —நட

விருத்தம்

வேதியர் பலருங்கூடி
வேதங்களலதென்றுஞ்
சாதியோர் நாலதென்றுஞ்
சைவமேயுயர்த்தியென்றும்
பேதகமாகச் சொன்னப்
பிரட்டெல்லாஞ் செல்லாதென்றே
நீதியாசாரத்தோடே
நேருத்தாரஞ்சொல்வேனே.

சாதியேதுகாண் அதிலொரு
சைவமேதுகாண்.

1. வேதியரேயுங்கள் சாதிமேலதென்
றோதிய நூல்களிலொப்புவிப்பீர்களோ. —சாதி

2. ஆதிமானிடனொருத்தனாலுல
கனைத்தும் வந்ததுதெரிந்திருக்கையிற்

பேதகமாகவே நீங்கள் வேறன்று
பிரட்டுப்பேசுற திருட்டுச் செல்லுமோ. —சாதி

3. ஒப்பில்லாத பிரமருக்குரு
வசியென்ற கூத்தி வயிற்றிற் பிறந்த
தப்பில்லாத வதிஷ்டருடைய
சாதிபேதகமானதில்லையோ. —சாதி

4. அதட்டியதட்டி வேதங்களோதி
யாகமசாஸ்திரம் படிக்கின்றீர்களே
வதிஷ்டருக்குச்சண்டாளிவயிற்றினில்
வந்தவர் சத்தியரென்றறியீர்களோ. —சாதி

5. சங்கையறவே புலைச்சியோடு
சத்தியர்கூடிச் சேர்ந்ததினுலே
புங்கனூரில் மரபில் முளைத்துப்
போதகஞ்சொன்னவர் பராசரல்லவோ. —சாதி

6. உச்சமாகிய பராசர் தானன்று
மச்சகந்தியென்ற மீன் வாலிச்சியை
மிச்சமாகவே வைத்திருந்தல்லோ
வேதவியாசரும் பிறந்த காரணம். —சாதி

7. வதிஷ்டர் சத்தியர் பராசருடனே
வளமை வேதவியாசரின்னுல் வரும்
குதட்டிக்குதட்டி வேதங்களோதியே
குலத்தின் வேதியர்குயர்த்தியாகினர். —சாதி

8. கருவூர்ப் பறைச்சியாதி வயிற்றிற்
கலைகளோதிய பகவனுர்க்குமே
திருவாரூரிலே யந்தணர் வீட்டிலே
செழித்தகபிலர் பிறந்ததல்லவோ. —சாதி

9. ஆதிவயிற்றில் மாரியுருவை
யவ்வைவள்ளியும் அதிகமானுடன்
ஏதமற்றவள்ளுவன் கபிலரோ
டெழுவர் பிறந்த பழமை பாருமேன். —சாதி

10. கள்ளத்தனத்தில் வளகிச்செட்டிபோற்
கனைத்துச் செந்தினைப் புனத்திலேவந்து
வள்ளிக்குறத்தி தன்னைப் புணர்ந்து
மருங்கிநின்றவன் முருகனல்லவோ. —சாதி

11. மெய்வாய் மூக்குச் செவிகண்ணுடைய
மிருத்தமேலவர் பகுத்துபாருங்
தெய்வானையொரு பாத்தியல்லவோ
சிவனுடமகன் மணர்ந்ததில்லையோ. —சாதி

12. அண்ணாமலையார் திருவண்ணாமலை
வண்ணாத்தியெனு முண்ணாமுலையைப்
பண்ணாலாட்டியுங் கண்ணாற்கண்டதென்
றெண்ணாமலே நீங்கள் விண்ணானம் பேசுறீர். —சாதி

13. பிரமன்றலையி லொன்றைக்கிள்ளின்
பிரமத்தியது பிடித்துச்சிவனு
மறுகிச்சுடலை தன்னிலாடி
மதங்கி வெட்டிச்சியுடன் றிரிந்தாரே. —சாதி

14. ஆனையேறும் பெறும்பறையனும்
அவன் தம்பி திருநாளுக்குப்போவான்
தானிருவருமதங்கி வெட்டிச்சி
தமக்கு பிறந்ததுமக்குத் தெரியும். —சாதி

15. உத்திரகோசமங்கைச்சிவனும்
உகந்து மகரமீனைப்பிடித்து
மத்தமாகவேபரத்தி மங்களேஸ்
பரியைமணஞ் செய்திருந்ததில்லையோ. —சாதி

16. விந்தையாகவே பரவை நாச்சியார்
சுந்தர மூர்த்திக்கிணங்கவேண்டியே
தந்திரம் பண்ணியாரூர் வீதியிற்
சங்கரன் தூது நடந்ததில்லையோ. —சாதி

17. வென்றிபெறவே வேடன்கண்ணப்பன்
வேட்டையாடின கறிகளனைத்தும்
தின்றுபார்த்த பின் எச்சிலையல்லவோ
சிவனுக்குப் படைத்தானென்று சாற்றுவர். —சாதி

18. ஆயப்பாடியினிலிடைச்சிகள் பதி
னாயிரம் பெண்களைக்கற்பழித்துத்
தீட்பாய் விட்டுனுதுலுக்க நாச்சியைச்
சேர்ந்து கொண்டது சீரங்கஞ் சொல்லுமே. —சாதி

19. சீதாதேவியு மிராவணன் சிறை
யெடுத்துப்போனபின் திரும்பி வந்தவள்
வா தாய்க்கு சலவன் கதையிலே
வண்ணான் சொன்னது கேட்டதில்லையோ. —சாதி

20. ஆத்தாமயலிற் பிராமணஸ்திரீ
யாரியமாலையைச் சிறை யெடுத்தவன்
காத்தானவனும் பறையனல்லவோ
காமாட்சி யொருபறைச்சியல்லவோ. —சாதி

21. தொட்டியைப் பொம்மியை வெள்ளையம்மாளென்ற
சுயமரத்தியைசோரம் பண்ணின
மட்டிலாதகத்துட்டத்தனத்து
மதுரைவீரன் சக்கிலியனல்லவோ. —சாதி

22. கட்டாய்நெல்லையின் வேதசாஸ்திரி
கனத்த இனங்கள் பணிந்து போற்றிய
புட்டாரத்தியும் நெல்லையப்பனைப்
புணர்ந்த கூத்தாடி பறைச்சியல்லவோ. —சாதி

23. மாதங்கடோறுஞ் சம்பளம் வாங்கியே
வாணிபங்கள் பயிர் வேகிமைகள் செய்து
வேதங்களோதாமல் வெள்ளைத்துரைகளை
வேதியர் கூட்டங்கள் சேவிக்கிறார்களே. —சாதி

24. துலுக்கன் மலுக்கன் வெள்ளைத்துரைகளை
துன்னுமருட்டியார் பின்னுமற்றோர்களை
மெலுக்கெலாங் கெட்டுக் குலப்பெண்களெலாம்
வேடிக்கையாய்க் கூடிப் பிள்ளைப்பெறலையோ. —சாதி

25. நெய்யும் பாலுமோருங் குடித்து
நீறுஞ்சுட்டுத்தின்று கோமியமுங்கொண்டு
கையுடன் மெய்யாய் மாட்டுக்கறிப் பெருங்
காயத்தைத்தின்றபின் ஞாயத்தைகேட்பானேன். —சாதி

26. மாட்டின்வயிற்றுக் கோரோசனையை
மருந்துப்பண்டமென்றருந்தி நீங்களும்
கூட்டியசக்கரை வெள்ளையாய்த்தின்றது
கோழிமுட்டையுடவெள்ளைக்கருவல்லோ. —சாதி

27. மந்திரஞ்சொல்லியாட்டையடித்து
மறையவரதை யெக்கியமென்று
தந்திரம் பண்ணிச் சமைத்துப் பொரித்துச்
சாப்பிட்டதில்லையோ கூப்பிட்டுக்கேளுமே. —சாதி

28. வாய்த்த புதிலி நெய்யும் பொசித்து
மரக்கறியினிற் புழுக்களைத்தின்று
பேய்த்தனமாக நத்தையுமீன்களும்
பெருத்த குளத்திற் ஸ்நானஞ்செய்தீர்களே. —சாதி

29. சக்கரை வெல்லம் பனைகருப்புக்கட்டி
சாதிகற்கண்டு மாமலைத்தேன்களும்
எக்குலத்தார்கையிலிருந்து வந்ததென்
றீனத்தை நோக்காமலேனத்தைத்தின்றீர்கள். —சாதி

30. சத்திபூசையிற் பெறுங்கறிகளுஞ்
சாராயங்களுங் கள்ளுகளும் படைத்

தெத்தனை பெச்சிலோ தின்று போட்டு வந்து
பத்தினி வேஷமும் போட்டுக்கொண்டீரல்லோ.—சாதி

31. அப்புறஞ்சாதியுஞ் சைவமுமில்லையென்
றுபிரசங்கிட்டாக் தங்களைச் சொல்லலாம்
தப்பிதமோ இக்காலக்குறையுது
சாஸ்திரக்கும்மியைப் பார்த்துப் படியுங்கள். —சாதி

32. (ஓதுவண்ணமே சாதிபழித்த
பாதகத்தேவரைப் பணிந்து கொண்ட நீர்
வேதக்காரரைக் குலம் பூர்த்தோரென்று
பேதகஞ் சொல்வது பெருமையாகுமோ.) —சாதி

விருத்தம்

துலக்கியோர் மனுஷனாலே
தோன்றின துலகமெல்லாம்
பலன்றரும் கிறிஸ்துவாலே
பாவிகளொன்றாய்ப்போனார்
வலங்கையே திடங்கையேது
வலிய மேலவர்களேது
குலங்களிலங்களேது
கூறுவீர் அறிவுள்ளோரே.

குலங்களேது தான் அதிலுட
னலங்களேது தான்.

1. வலங்கையானது மிடங்கையானது
மன்று கிறிஸ்துவினுள்ள தச்சங்கமே
வருத்த பருத்தத் தொகுத்துச்சொல்லுங்கோ. —குல

2. வலங்கை யிடங்கை யிரண்டு கையாலல்
மற்றொரு சிரசம் பாதமு மெங்கே
கலங்கறிந்து துலங்கு மேலவர்
ஞாபகத்தோடே பொருபாபத்தைக்காட்டி
நன்மைக்குந் தின்மைக்கு நடுவறங்கோனேன். —குல

3. முப்பிதாக்கள் பன்னிரு கோத்திர
முழுது மெகிப்பத் தாசன் றனக்குத்
தப்பிலாத அடிமைகளானத்
தானறிவீர்களே யேனவர் வங்கிஷுக்
தன்னிலே காக் தொழு மன்னவர் வந்தார். —குல

4. யோசே தவிதுபாக்கோபோயின
முதன்மையானவர் இடையரல்லவோ

இராசவாகிய யேசு நாயகர்
நம்முட சாயலாய்த் தம்முட ரூபமாய்
நாடியவர் குலத்துதித்தாரல்லோ. —குல

5. தாமாரென்ற தன் மருமகடனைத்
தாசியாமென மோசமா பெண்ணி
மாமணுகிய யூதாச்சேர்ந்ததில்
வந்தபரே சுடசந்ததியாகிய
வங்கிஷயூதர்கள் அங்கிஷமேன்மையோ. —குல

6. சல்மோன்போவாசைராகாப் பென்றவள்
தன்னுற் பெற்றதிற்சின்ன மதைவிடச்
சொல்மோ வாபின் குலஸ்திரீ ரூத்துமே
சுற்றிக்களத்திலே பற்றிப்போவா சுடன்
சோபிதமாய்க் கூடியோ பேதைப்பெற்றுளே. —குல

7. பாத்திபன் தவிது உரியாவின் மனைப்
பற்சேபாளைக் கூடி யச்சமிலாமலே
நாற்றிசையோர் பணிந்தேற்றிய யூதரும்
நம்பிக்கையாய்த் தொழும் சம்பத்து மேவிய
ஞானத்திறை சலமோனைத்தந்தானலோ. —குல

8. சீரிலங்குங்கனி மாமரியைமணஞ்
செய்தயோ சேப்பெனுந் துய்யதச்சாசாரி
பாரிலங்கு மனுவான பராபரன்
பாலனோடே தச்சுவேலை செய்தானென்று
பண்டு முனிவர்கள் விண்டதறிவீரே. —குல

9. மன்னுபுகழ் சுவி சேடத்தின்முந்தின
மத்தேயு தானுமோர் ஆயக்காரன் பின்னும்
பன்னிரப்போஸ்தல மாருங்கடலினைப்
பற்றியே மீன் பிடித்தொற்றுப் பிடிக்கும்
பரும் வலையோரென்றரு மறைசாற்றுது. —குல

10. வேதியர் கூட்டமுஞ் சைவத்தம்பிரான்களு
மேன்குலத்தார்க்குக் குருக்களென்றோதிய
பாதகக்கட்டை யறுத்துப்பொதுவிலே
பள்ளர் பறையர்க்கும் வெள்ளாளரார்க்கும்
பரிவுடன் வந்த குருவுஞ்சராசரி. —குல

11. ஆலயங்கடோறு மேலான சாதியோன்
றல்லாமனிசன் அணுகப்படாதென
சாலவே கட்டின பொய்க்கட்டறுத்துச்
சகலஜனங்களு மொன்றித்திருந்து
தயாபரனைத் தொழுங் கோவில் சராசரி. —குல

12. பணக்குருவோர்க் கன்னியர்க்கிட்டசைகொடாதவர்
பாழூருச்சமைய பீசாசையுங்கள்ளிக்
குணக்குரும் பாவிகள் அத்தக்கரிக்கிரார்
கூடிய நீசரிராக செல்லார்க்கும்
குருக்கள் கொடுக்கு பின்னாணஞ்சாசரி. —குல

13. இன்மை மறுக்குமை குரியவான் கட்டும்
சனக் குலத்தார்க்கு மேன்மைக்குலத்தார்க்கு
நன்மையுந் தின்மையும் மாறுமொன்றல்லாமல்
ஞானத்திராவியமான கிறிஸ்துவின்
சாப்போசனத்தினிற் பாத்திரஞ்சாராசரி. —குல

14. அத்தனைன்றன் மறைருத்திரர்க்கோதில்
அதிகாகெதியாவனென் சூரியசோதினை
தந்திரக்கட்டையழுந்துப் பராபரன்
சாதிகளுக்கெல்லாம் போதகவாய்த்தந்த
சத்தியவேத பொஸ்தகஞ்சாராசரி. —குல

15. மேல்வரம் போருக்குங்கீழ்வரம் போருக்கும்
வித்தியாசமெனச் செத்தசெனத்திலே
பாலகர்கூடிப் பிரார்த்தினை சொல்லவே
பல்லவர்க்கும் பொதுக்கல்லறைத் தானத்தில்
பாடியெடுத்துப் போம்பாங்குசாராசரி. —குல

16. தேவனும்மோட்சமும் நன்மையுந்துன்மையுஞ்
சேருமிடமுந் திருவசனங்களும்
பாவப்பொறுத்தல் உயிர்த்தல் அச்சிட்டவர்
பங்குவீதக்கட்டு நித்தியசீவன்
பரிசுத்தரூபி வரமுஞ்சாராசரி. —குல

17. எல்லாமானிடருங் கரையேற
இரக்கமதான பெருக்கப்பராபரன்
பல்லோர்க்கும் பொதுவாகக் குமாரனைப்
பக்ஷமாய்த்தந்த முக்கிய கிருபையைப்
பார்த்திருந்தேனிந்த வேற்றுமைசெய்கிறீர். —குல

18. எல்லாச்சாதியுந்தம்முட சொந்தமென்
றேகசு தனராகப் பிறந்ததும்
பல்லோர்க்காகவுந்தம்முட சீவனைப்
பாடுபட்டுத்தந்த நீடுங்கிருபையும்
பாராமல் தருக்கித்தேன் போராடி நிற்கிறீர். —குல

19. எத்தனையாகப் பராபரன் லோகத்தை
யெண்ணித்தஞ் சொந்தகுமாரனைத்தந்ததும்

இத்தனையாகக் கிறிஸ்து நமைச்சினே
கித்துத்தஞ் சீவனையீந்தது மெய்பானு
லேனித்தனை வித்தியாசங்கள் செய்கிறீர். —குல

வகுப்பு 5.

உலகத்தச்சன் கிரித்தியம்

விருத்தம்

நளமிகுமுலகுக் கெல்லாம்
நன்மையே செய்தஎம்மை
உளமிக நோகப் பேசி
உயர்குலந்தாங்களென்றும்
இளமையான் தாழ்ந்தோனென்றும்
இயம்பினதெந்தநீதம்
வளமை சேர் பிள்ளைமாரே
வழுத்தும் விண்ணப்பங்கேண்மோ
வெள்ளாளப்பிள்ளைமாரே யெமக்கொரு
விண்ணப்பமுண்டு சொல்வீரே.

கணக்கு

1. வெள்ளாம் அரசதுவே
மேலரசதென்றெவர்க்குங்
கள்ளாண்மையாயுரைத்துக்
கவட்டுக் கணக்கெழுதும் —வெள்

2. ஏட்டையும் பிடித்தென்னெழுத்
தாணியுங்கத்தியும் வைத்த
கூட்டையுமடியினிற்கு
லாவியே சொருகிக்கொண்டு
நாட்டிலுள்ள கணக்கெல்லாம்
நாமறிந்தோமென்று சொல்வித்
தீட்டுகைவிரசதாகச்
சீக்கிரமெழுதிக்கொள்ளும். —வெள்

வேள்ளாண்மை

3. முந்தமுந்த நன்செய் புன்செய்
முழுதுமுழுவதற்கு
அந்தமுடனேரதுகொண்டு
டாருடகலப்பையையும்

எந்தமரபோர் கொழுவும்
எவர் மண்வெட்டியுங்கொண்டு
விந்தைவிந்தையாகப் பயிர்
வேகிமைகள் செய்து வந்தீர். —வெள்

4. நன்செய் புன்செய் விளைந்தபின்
நமதறிவாளதுகொண்
டஞ்சலுடனறுத்தடித்
தப்புறமென் மரக்காலே
சஞ்சலமிலாதெடுத்து
சகல சனங்களுக்குங்
கொஞ்சங்கொஞ்சமா யளந்து
கொடுத்துக்குறித்துக்கொள்ளும். —வெள்

வீடு

5. திட்டவட்டமாக வீடு
செய்து கம்பக்கா ணிறுத்தி
விட்டமு முத்திரங்களு
மேவிய வளையும் பூட்டிக்
கட்டு மெட்டதாக வாழ்கக்
கதவுந்தாப்பாளுமிட்டு
பட்டணமுழுவதும் நான்
பண்ணின சிறப்பல்லவோ. —வெள்

கல்யாணம்

6. வல்லமையதாக நீங்கள்
மணஞ்செய்யு நாளையிலே
மெல்லியர்க்கென்னுடைமைகள்
விதவிதமாகப்பூட்டி
அல்லலற்று யான் சமைத்த
அலங்காரத்தாலிகட்டிப்
பல்லக்கினி லேறிக்கொண்டு
பட்டணப்பிரவேசம் வந்த. —வெள்

7. வண்டிக்கடுக்கனிட்டு
மார்பில் பதைக்கமிட்டுக்
கண்டி சரப்பளி அஸ்த
கடையம் பொன்காப்புமிட்டு
மிண்டுடன் முருகுமிட்டு
வெள்ளி யரைஞாளுமிட்டுப்
பெண்டுகளைக்கைப்பிடிக்கப்
பிலிக்கித் திரிந்தீரல்லோ. —வெள்

8. முத்துத்தாயுமிட்டு
மோகன மாலையிட்டுச்
சித்திரக்கணையாழி யிட்டுச்
சிங்கமுகத்தோடரிட்டு
அத்தமதில்த்தாயித்திட்டு
ஆபரண மியாவுமிட்டுப்
பெத்தரிக்கம் நீங்கள் செய்யப்
பெருமை கொடுத்தவர்யார். —வெள்

9. அட்டிகை பட்டக் காரையிட்
டனந்தமுடிச்சு மிட்டுப்
பொட்டுமிட்டுப் பிறையிட்டுப்
பூரான் சுட்டியுமிட்டு
ஒட்டியாண மிட்டுத்தங்க
ஓலையிட்டு மாலையிட்டு
கட்டிக் கட்டிப் பெண்களுக்குக்
கலியாணஞ் செய்தீரல்லோ. —வெள்

10. கடகம் பவள மிரத்தினக்
காப்புடன் கைவிந்தியிட்டுச்
சடைநாக மிட்டுக்காலில்
தண்டையும் சலங்கையிட்டு
அடவாகக் கொப்புமிட்டு
அரசிலைத் தொங்கலிட்டுப்
படமிட்டுக் கொலுசிட்டுப்
பாடகமுமிட்டதெவர். —வெள்

11. தண்டட்டியிட்டுப் பெரிய
சவளிக் கடுக்கனிட்டு
கண்டசர மிட்டடிக்குக்
காலாழி பீலியிட்டு
வெண் டாரா[1] மாலையிட்டு
மேவிமணம் செய்த பெண்ணை
சண்டையிட்டு நான் கொடுத்த
தாலிபறித் தோட்டுவானேன். —வெள்

12. கங்கணி யிட்டு வச்சிரக்
கணையாழியிட்டு மார்பில்ச்
சங்கிலியிட்டு மூக்குத்
தழுக்கிட் டொன்னப்பூவுமிட்டுத்

[1] தாரம்—முத்து

தொங்கலிட்டுக் கொலுசிட்டுச்
சுத்துருவிட்டுங்களுடை
மங்கையர்க்குச் செய்த நகை
மட்டதுண்டோ திட்டமுண்டோ. —வெள்

13. கண்ட மதயானை வைத்த
கனக அம்பாரியிலும்
வண்டில்களிலும் குதிரை
வாகனத்திலும் பெரிய
தண்டிகைப் பல்லக்கினிலும்
சகல விருதுஞ் சூழ
யெண்டிசையறிய நீங்கள்
ஏறிக் கொண்டதெந்தவிதம். —வெள்

14. தம்பட்ட மல்லாரிடக்கை
தவிலொடு நாதசுரம்
பம்பைநகரா முரசு
பாடிய தம்பூர்கள் வீணை
கொம்புகள் கைத்தாளமேளங்
கொட்டிய பறைகளெல்லாம்
எம்பட்டமல்லா மலுங்கள்
தம்பட்டமோ சொல்லுமையா. —வெள்

15. பாதகுறட்டேறிக் கொண்டேன்
பாக்குவெட்டி கரண்டாகம்
சாதகமதாய்ப் பிடித்துத்
தாம்பூல மடித்தொருதன்
ஆதரவதாய்க் கொடுக்க
ஆனந்தமாய்ப் போட்டுக்கொண்டு
வீதியிலுலாச மாய்க்கை
வீசியே நடந்துபோற —வெள்

தளவாடம்

16. குத்துவிளக்குகள் செப்புக்
குடமுஞ் சருவச்சட்டி
சித்திர விதங்களாகச்
செய்த பலசெம்புகளு
மெத்த மெத்தப்பாத்திரங்கள்
வெண்கலத் தொட்டிகளுடன்
எத்தனை பண்டம்பாடிகள்
அத்தனையுமார் செய்தது. —வெள்

17. கட்டிலு நாற்காலியுமுக்
காலிஆ சனப்பலகை
தொட்டிலொடு தூங்குமஞ்சந்
துலங்கு கண்ணாடிகளும்
வட்டவட்டச் சிமிள்களும்
வன்னவன்னச் சிப்புகளும்
பெட்டிகளும் பேழைகளும்
பெருக்கக் கொடுத்தவரார்.
—வெள்

18. விளையாடப் பிள்ளைகட்கு
விதவிதப் பாவைகளும்
உளமகிழப் பெண்களுக்
கொப்பிய பன்னாங்குழியும்
வளர் சதுரங்கஞ்சொக்கட்
டான் மற்றப்பேர்களுக்கும்
இளமை தொடுத்தாடுவதற்
கெத்தனையோ செய்துதந்தேன்.
—வெள்

19. வெட்டரிவாள் சூரிக்கத்தி
வீசிய கோடாலியுளி
கொட்டுமண் வெட்டிபெரிய
குந்தாளங் கடப்பாரை
யெட்டியெட்டி வீடுமேய
ஏணிகளு மற்றபோது
தட்டுப்பட்டுக் கேட்டுக்கேட்டுத்
தவித்துத் திரிந்தீரல்லோ.
—வெள்

20. செம்மையுடனே யுரலில்
தீட்டின அரிசிதனைக்
கொம்மைமுலை மாதர்நாழி
கொண்டளந்து ஆக்கினபின்
எம் அகப்பையாலேயுங்கள்
எல்லவர்க்கும் பங்குபோட்டேன்
அம்மியையல்லாது கறி
யாக்கியு மக்கிட்டதுண்டோ.
—வெள்

21. மன்னவர்க்குப் பொன்முடியும்
வலிய சிம்மாசனமு
மின்னியரதமும் அம்பும்
வில்லுவல்லையம் வளரி

யின்னமெறிவேல் சமுதா
மட்டி கரவானுடனே
துன்னிய பிரங்கிக்குண்டுந்
தொகுத்துக் கொடுத்தவாரர். —வெள்

விக்கிரகங்கள்

22. செந்திவேல் முருகன் தில்லைச்
சிதம்பரே சருடன்
விந்தை செய்தியாகராசர்
விஷ்டுணு சாரங்கபாணி
நந்தி வயிரவன் அரு
ணாசலர் கும்பேசரும்
முந்திய விநாயகனு
மூர்த்தியென்று செய்தவாரர். —வெள்

23. நெல்லையப்பர் சொக்கநாதர்
நீடிய சிரங்கநாதர்
வல்ல பிரதீசரும்
வயித்திய நாதருடன்
கொல்லுகதிர் காமர்கொங்க
ணேசுரர் குத்தாலநாதர்
எல்லையுண்டோ நான்படைத்த
இழவு தெய்வங்களுக்கு —வெள்

24. சந்திலிங்கப் இராமலிங்கம்
தாயுமான் சன்னதிலிங்கம்
முந்தமுந்த அம்மன்கோவில்
முகப்பி லெழுந்தலிங்கம்
பந்தமிகும் ஆவுடையார்
பாத்தி பளிங்கத்துடனே
அந்தலிங்க மிந்தலிங்கம்
யாரிலிங்கம் பெரியதையா. —வெள்

25. காந்திமதி சிவகாமி
காமாச்சி மீனாச்சி
சேந்த அகிலாண்டமுடன்
செங்கமலம் விசலாச்சி
பூந்த மகமாயிமாலைப்
போதா மலையேறியம்மை
யோந்தியம்மை நாடியம்மை
யொருகோடி யம்மையுண்டே. —வெள்

26. மாரியம்மன் எல்லையம்மன்
வள்ளியம்மன் அங்காளம்மன்
எரிப் பிடாரியம்மன்
எகரி வீரியம்மன்
கோரக் கறுப்பியம்மன்
கொடும் பத்திரகாளியம்மன்
ஆரிய மாலையம்மன்
யாரறிய அம்மனுனர். —வெள்

27. கோவில்களும் ஆலயமும்
கோபுரமு மண்டபமு
மேவிய அனேகனேக
விக்கிரகத் தோப்புகளும்
தேவர்களுந் தேவர்கட்குத்
தேர்த்திரு நாளானதுவும்
பூவுலகி னுனடத்தப் —வெள்
பூசனை செய்தீர்களல்லோ.

பணங்காசு

28. சந்தமியான் காசுதங்கக்
காசு சாணுக்காசு
சுந்தரப் பல்லங்கிக்காசு
சுனுத்தான்காசு பூக்காசு
விந்தபிடா விட்டகாசு
வில்க்காசு சப்பங்கிக்காசு
அந்தந்தக் காசுகளெல்லாம் —வெள்
யார்கம்பட்டம் வைத்தடித்தார்.

29. கண்டிராயன் மம்மது
கானிஸ்க் காட்டுவராகன்
கொண்ட சிரங்காயன்
கூறுமானந்த ராயன்
தண்டிய நிசானிபாதர்
சன்னகிரி பாங்கி
மண்டலம் விளங்கும்பூ —வெ
வராகனையும் பண்ணினதார்.

30. ஆர்க்காட்டு ரூபாய்கு
ரத்துரூபாய் சிக்காரூபாய்
பார்க்கும் கும்பினிரூபாய்
பழம்புதுச் சேரிரூபாய்

நோக்கும் வெள்ளிக்காசுகளும்
நோன்மையிறையால்களும்பத்
தாக்குகளும் அச்சடித்துத்
தங்கச்சாலே போட்டவரார். —வெள்

31. மயிலே வெள்ளிப் பணமு
மலேயாளப் புத்தனுடன்
செயமறவன் சுழியுஞ்
சீராப்பள்ளிச் சக்கரமும்
நயஞ்செய் கலியதுமா
னந்தாராயனும் பிறையும்
அயலாரோ அல்லது நான்
சுயமாகத்தான் செய்தேனோ. —வெள்

32. பணத்தை காசாக மாற்றிக்
காசையும் பணமடைத்து
மணப்படப்பணமெல்லாம்
வாங்கியே வராகன் கொண்டு
குணத்துடன் அவரவர்
கொடுக்கல் வாங்கல் செய்யாட்டால்
பிணத்தைப்போலெண்ணப்பட்டுப்
பேயரைப்போலத்திரிவாரே. —வெள்

33. கையிலே பணமில்லாட்டால்
காசு தட்டுப்பட்டிருந்ததால்
ஐயர்சம்பளம் கொடாட்டால்
ஆயிரம் யோசனேபண்ணி
மெய்யெலாங்குருவிநீர்
விசாரம்பிடித்துப்பணங்கள்
பையிலே வருந்தனேயும்
பரிதவித்துத் திரிவீரே. —வெள்

கப்பல்

34. அப்புக்கடல் மீதிலேயும்
ஆச்சரியமாகவே நான்
தெப்பமுடன் கட்டுமரம்
சிறுதோணியுஞ் சுலுப்பும்
கப்பலேயுமுண்டுபண்ணிக்
கடலோடச் செய்ததல்லால்
ஒப்பியநதிகடக்க
ஓடமும் பண்ணிக்கொடுத்தேன். —வெள்

35. உப்புக்கொடுத்திதோர் கடமை
யுள்ளமட்டும் நினைப்பது
செப்பமென்று நீர் அறிந்தும்
செய்தவென் சகாயமெல்லாம்
எப்படி மறந்திதை
யிடமில்லையென பேசுகிறீர்
தப்பிதமோ உமக்குத்
தருமமோ சொல்லுமையா. —செவ்

விருத்தம்

எழில் மிகுமுலகிலுள்ள
எக்குலத்தோர் கட்கெல்லாந்
தொழில் செய்து பிழைக்கவேண்டித்
தொகையிலா விதங்களான
செழுமை பெற்றினங்கள் யாவுஞ்
செய்தளித் தலகைவாழ்க
வழிபட நடத்திவந்த
வகையெலாஞ் சொல்லுவேனே.

தரு

குருக்கள்

1. வேதமறைகுருமார்க்கு மெஞ்ஞான
மிக்க உபதேசிமார்க்கும்
போதகங்கள் பண்ணுமிடமும் புற்பமும்
பூசை பாத்திரமுஞ்செய்தேன்.

அச்சுக்காரன்

2. எச்சமயத்தோர்களுக்கும் பூவிலுள்ள
எந்த விதச் சாதிகட்கும்
அச்செழுத்தை யுண்டுபண்ணிப் பொஸ்தகங்கள்
அச்சடித்தனுப்பச் செய்தேன்.

வாத்தியார்

3. வாத்திகட்குங் கணக்கருக்குஞ் சம்பிரதி
மணியஞ்செய் பிள்ளைமார்க்கும்
கேத்தியுடனெழுத்தாணி தந்தவரை
நித்தியம் பிழைக்கப்பண்ணினேன்.

துரைகள் துபாஷிகள்

4. வெள்ளைக்கார துரைகட்கும் அவரிட
மேவிய துபாஷிகட்கெல்லாம்
தெள்ளுகடதாசி யெழுதப் பென்கத்தி
செய்து கொடுத்தாம் பண்ணினேன்.

பிராமணர்

5. பிராமணருக்குப் பூசைப்பலகை பஞ்சாங்கம்
பிரிக்குமிலேகனிகளும்
இராமமிடக்கண்ணாடியுஞ் சிற்றமர்
திட்டுத்திராட்சங்களுந் தந்தேன்

பண்டிதப்பாப்பார்

6. பண்டிதப் பாப்பாருக்குக் காகிதங்கள்
பண்ணுகின்ற எற்றினங்களும்
கண்டகொருக்காக்குச்சியைக் கொண்டெழுதக்
கத்தியொன்று செய்து கொடுத்தேன்.

சத்திரியர்

7. சத்திரியராம் அரசர் தங்களுக்குச்
சண்டை பண்ணி வெற்றிகள் பெறக்
கத்தியுடனெறிவேலும் அம்பு வில்லும்
கரவாளுஞ்செய்து கொடுத்தேன்.

சிப்பாயிகள்

8. துப்பாக்கி பிஸ்தோலும் அலேகிமான்
துருப்புகட்குக் கத்தியுந்தந்து
சிப்பாயி மார்களெல்லாம்
சேவிக்க இடம் பண்ணினேன்.

வசியர்

9. வசியருக்கு வெள்ளியும் பொன்னும் காசும்,
வராகனும் பணங்களுஞ் செய்து
நிசமாகக் கொண்டு கொடுத்து ரசியென்று
நேர்ந்தபடி பிழைக்கச்சொன்னேன்.

சூத்திரர்

10. சூத்திரர்களான பேர்க்குக் கலப்பையுந்
துன்னிய கொழுவுங் கொடுத்து
நேத்தியுடன் பயிர் நடத்தியுலகத்தி
னீடித்திருக்கப்பண்ணினேன்.

செட்டிகள்

11. கட்டிய திராசுகளும் படிக்
கல்லுகளும் நாழியுழக்கும்
செட்டிகட்குச் செய்து கொடுத்துத்தேசமெங்குஞ்
சிவனஞ்செய்யப்பண்ணினேன்.

காசுக்காரன்

12. காசு விற்குஞ் செட்டிகளுக்கு மூக்குக்
கண்ணாடியொன்று கொடுத்து
ஆசையுடன் பொன்னுரைக்கல்லும் பொற்றிராசும்
ஆணிக்கோர்வையுங் கொடுத்தேன்.

சவளிக்காரன்

13. சவளியாபாரிகளுக்குக் கெசக்கோல்
தான் கொடுத்து பருத்தி விற்கும்
அவர்களுக்குத் துலாக்கோலையும் ரசம்போட்
டடையாளம் பண்ணிக்கொடுத்தேன்.

பூவணிகர்

14. பூவிற்கும் வணிகருக்குக் காக்காய்ப்
பொன்னுன வேகடைகளும்
ஆவலுடன் ஊசிகளும் கத்திகளும்
அன்பாகச் செய்து கொடுத்தேன்.

வயித்தியர்

15. பண்டிதர்க்கு மாத்திரைக் கல்லுஞ்சத்திரம்,
பண்ணுகின்ற எற்றினங்களும்
கண்ட கண்ட மருந்து வைக்கச் செப்புகளும்
கடைந்த சிமிள்களுங் கொடுத்தேன்.

காவல்க்காரர்

16. காவல்க்காரர் தமக்கெல்லாம் வளை தடிக்
கம்புடன் கிலுக்குத்தடியும்
மேவுசமுதாடீட்டியுங் கத்தியு
மேன்மை வளரியுங் கொடுத்தேன்.

சோப்த்தார்

17. வெள்ளித்தடி பொன்தடியும் சோப்தார்க்கு
வேடிக்கையாய்க் கொடுத்துத்
தெள்ளிய பிரம்பதுந்தந்து முத்திரைச்
சேவகர்க்கு வில்லை போட்டேன்.

சிலம்பக்காரர்

18. பாணுசிறுத்தாக் கேடையம் கப்படாப்
பட்டாச்சமுதாடு வாங்கு
கோணுமற் சிலம்பஞ் செய்யவே தாண்டுக்
கோல் வாளும் போத்துங் கொடுத்தேன்.

மல்லகசேட்டி

19. மல்லகசெட்டிகள் பிழைக்க எழுமுள்ளும்
வச்சிரக்கெதையுங் கொடுத்து
பல்லுயித்தங்களைப் போட்டு ராஜாக்கள்
பார்க்கவேடிக்கை பண்ணினேன்.

கள்ளன்

20. கள்ளனுக்குப் பெருந்தடியும் கன்னமிடக்
கன்னக்கோலையுங் கொடுத்துக்
கொள்ளையிடக் கண்டுபிடித்தாலத்தூக்குமரம்
கொலைக்களத்தில் நாட்டிவைத்தேன்.

கோடிக்கால்க்காரன்

21. ஆடியதுலாப் போட்டு மண்வெட்டி
யரிவாளும் வெற்றிலை கிள்ளும்
கூடிய கருவியுந்தந்து நாடுகளிற்
கொடிக்கால்கள் போடப் பண்ணினேன்.

தோட்டக்காரன்

22. தோட்டக்காரர் தமக்கெல்லாம்வெட்டரிவாள்
துறட்டு மண்வெட்டியுங் கொட்டும்
பூட்டைமரம் பீப்பாக்களும் ஏத்தமும்
போட்டுவைத்துச் சாலுங் கொடுத்தேன்.

கோல்லத்துக்காரன்

23. கொல்லத்துக்காரனுக்கு கரணையுங்
குண்டு மட்டப்பலகையும்
வல்லதொரு நீர்மட்டமுந் தீத்துக்கல்லும்
மணியாசைப்பலகையுந் தந்தேன்.

பாட்டகர்

24. கின்னரம் தம்போர்கள் வீணை மத்தளங்கள்
கிலுக்கு வெண்டையங்கள் தாளம்
பன்னருஞ் சுரமண்டலங்கள் பாட்டகர்க்குப்
பலவிதஞ் செய்துகொடுத்தேன்.

நட்டுவன்

25. நட்டுமுட்டுக்காரனுக்குங் கூத்தாடும்
நாட்டியப் பெண்களுக்கும்
கட்டியசலங்கைத்தாளம் பலவிதக்
கனவாத்தியங்களுந் தந்தேன்.

26. வசந்தரிமேளக்காரர்க்கு நாகசர
மத்தளமுங்கைத்தாளமும்
பசந்த புல்லாங்குழல்களு மொத்துகளும்
பலவிதஞ் செய்து கொடுத்தேன்.

யானைப்பாகன்

27. ஆனைப் பாகன்றனக்குச் சங்கிலியும்
அங்குசமுங் கொடுத்த தல்லாற்
சேனை குதிரைக்காரர்க்குக் கடிவாளஞ்
செய்து குரப்பமுங்கொடுத்தேன்.

நிசவுகாரர்

28. கைக்கொளர்க்குஞ்சேனியர்க்கும் பட்டுநூற்
காரருடன் கச்சைத்துலுக்கர்
திக் கிலுள்ள சாலியர்கட்டுங் கோலியர்க்குஞ்
சேடரினம் நெய்பவர்க்கெல்லாம்.

29. படமரம் பலகைமரஞ் சீர்வண்டில்
பரிவட்டந்திரிவட்டமும்
அடர் கவர்க்கட்டையலகுந் திரிநாக்
காயுதங்கள் முதலான.

30. மின்தண்டு மிதிப்பலகை கரணைக்கோல்
விசைக்குத்தும் வேறு சிலதும்
பொன்தண்டியாடவர்க்கெல்லாஞ் சீலை செய்து
போத்துதற்கு பாயம் பண்ணினேன்.

31. பட்டுப்பட்டாவளியுடன் குத்தினியும்
பலவிதச்சகலாத்தும்
இரட்டுகளுட் சால்வைகளும் கம்பிளியும்
நிசவுகள் போடப்பண்ணினேன்.

கவறைச்செட்டிகள் முதலான
கல் வியாபாரிகள்

32. முச்சியன் காசுக்காரன் சற்காரன்
முத்து வியாபாரிகளுடன்
அச்சுவளையக்காரனும் என்னிடத்தில்
ஆயுதங் கொண்டு பிழைத்தான்.

33. பாசிகள் பவளங்களுடன் முத்துகளும்
பலவிதரத்தினங்களும்
தேசுறுங் கண்ணாடிகளையுந் தமரிட்டுச்
செய்யுமெற்றினங்கள் பண்ணினேன்.

சித்திரக்காரர்

34. கவராசமட்டப் பலகை தூறுகோல்
கத்தியுங் கத்திரிக்கோலுங்
தவறாமலே கொடுத்துச் சித்திரக்காரர்
தங்களைப் பிழைக்கப் பண்ணினேன்.

நெட்டிக்காரன்

35. நெட்டிமாலைக்காரனைக் கத்திரிக்கோல்
நீண்ட அரிவாள் பாக்கு
வெட்டிரம் பஞ்சூரிக்கத்தியால் பொம்மைகளை
விதவிதஞ் செய்யப் பண்ணினேன்.

பாணன்

36. கோணூம ஹூசியையுங் கத்திரிக்
கோலுடன் அங்குஸ்தானையும்
பாணக்கள் தையல் தைத்துப் பிழைப்பதற்காய்
பரிவுடன் செய்து கொடுத்தேன்.

பிரம்புக்காரர்

37. அச்சுக்கத்தி சூரிக்கத்தி குத்தூசி
யானது கொண்டேபிரம்பில்
உச்சிதமதாய்ச் சிலபேர் வேலைகள் செய்
துயிர் பிழைக்கப் பண்ணினேன்.

பொஸ்தகங்கட்டி

38. கத்தி கவராசம் ஊசி பிரேசு மணைக்
கத்திரிக்கோல் மட்டப்பலகை
சுத்தியல் அச்சுகள் மேசை தோற்கருவி
பொஸ்தகங்கட்டிகட்களித்தேன்.

சாணைக்காரன்

39. சாணைக்காரன்றனக்குச் சிவுளியுஞ்
சாணைகளுங் கொடுத்ததல்லாற்
கோணமல் தட்டார்களின் ஆயுதமும்
கொடுத்துப் பிழைக்கப்பண்ணினேன்.

ரோட்டிக்காரன்

40. திக்காண்டிவிடுபலகை ரூல்த்தடியும்
திரிகையம்மிக்குழவியும
கேக்கச்சுமா மேசையும் ரொட்டிசெய்யக்
கீர்த்தியுடன் கத்தியுந்தந்தேன்.

முட்டாயிக்காரன்

41. முட்டாயிரக்காரனுக்கு கொப்பரையு
முத்திரைத் திராசுபடிக்கல்
சட்டிகளுஞ் சட்டுவங்களுந் தட்டுகளும்
சலாகையுஞ் செய்து கொடுத்தேன்.

தோசைக்காரி

42. தோசைவிற்குஞ் பெண்டுகட்கெல்லாம்
அகப்பையும், சுட்டெடுக்கும் சட்டுவங்களும்
ஆசையுடன் செய்துகொடுத்தே யொருபணத்தை
யரைப் பணத்திற் காணப்பண்ணினேன்.

நூற்போர்

43. கதிருடன் ராட்டணமும் பஞ்சுவெட்டான்
கம்புடன் மணை யுங் கொடுத்துச்
சதுருடன் பெண்டுகளெல்லாம் நூனூற்றுச்
சாப்பிட்டுக் கொள்ளப் பண்ணினேன்.

மேச்சோடு தைப்போர்

44. மேச்சோடுதைப்பதற்குப்பித்தளையால்
மெல்லிய கம்பிகள் பண்ணி
ஆச்சிகட்குமாதமாதம் பூவராகன்
அரைக்குக் குறையாமற் பண்ணினேன்

பாய் முடைவோர்

45. சத்திரக் கத்திகளைக்கொண்டு ஓலைகள்
தாழைகள் சம்புகளினல்
பத்திரவன்னப் பெட்டிகளுங் குடைகளும்
பாய்களு முடையப்பண்ணினேன்.

பாய் நிசவுக்காரர்

46. அணைத்தண்டு முன்தண்டு பின்தண்டு பாய் நிசவுக்
கக்சுடன்கதிரும் விழுதும்
மணைப்பலகை முக்கூட்டுக்கனி கிச்சாரை
வடமிதிப்பலகையுந் தந்தேன்

கடதாசிகாரன்

47. மிதிமரங் கொட்டாப்புளி அச்சுக்கம்பி
விந்தையாய்க் கத்தரிக்கோலும்
கதிரையுஞ்செய்து கொடுத்துக் கடதாசிக்
காரனைப் பிழைக்கப்பண்ணினேன்

காளவாய்க்காரன்

48. காளவாய்க்காரருக் கெல்லாம் ஓட்டுக்
கட்டளை கற் கட்டளையென்றே
நீருமிருபட்டடையுடன் கத்தியு
நெடிய மண்வெட்டியுந் தந்தேன்

சுண்ணாம்புக்காரன்

49. சுண்ணாம்புக்காரனுக்கு மண்வெட்டிச்
சூளைசெய்யக் கொட்டுங் கொடுத்து
கன்னார நீர்ப்பறையும் காழியும்
கல்லுடைக்குந்தடியுந்தந்தேன்

குயவன்

50. குயவனுக்குத் தட்டுப் பலகை தட்டுக்கல்
கோலச்சக்கரமுந் தந்து
வயணமுடன் அச்சினுலே பானைசட்டி
வகை வகை செய்யப்பண்ணினேன்.

அறுப்புக்காரன்

51. மரம் அறுத்துப் பிழைப்போர்க்குவாளுடன்
வாளரமுங் கொடுத்ததல்லால்த்
திறமுடன் புல்லறுப்போர்க்கு அரிவாளும்
செருக்குப்பாரையுங் கொடுத்தேன்.

வெட்டுக்காரன்

52. விறகு வெட்டிப் பிழைப்போர்க்குக் கோடாலி,
வெட்டரிவாளையுங் கொடுத்து
திறமுடன் மண் வேலைகள் செய்ய மண்வெட்டி
சேனைபேர்களுக்களித்தேன்.

கசாப்புக்காரன்

53. வெட்டுக்கத்தி திராசு படிக்கல்
ஆடடிக்கும் விந்தையான முக்கூட்டுக்களிக்
கட்டையும் மரப்பலகையுங் கசாப்புக் கடைக்
காரனுக்குச் செய்து கொடுத்தேன்.

சாணர்

54. செருக்கரிவாள் பட்டையரிவாள் சிற்றரி வாள்,
திட்டு மட்டை பாளையிடுக்கி
முருக்குத்தடி வண்டு குத்தியால் சாணரை
முழுதும் பிழைக்கப்பண்ணினேன்.

கயிறுக்காரன்

55. வடம் போடக்கயிறு முறுக்கியமாருடன்
மரந்திருப்பிக் கொட்டாப்புளி
கடுகவொரு பூத்தருஞ் செய்து பலவிதக்
கயிறுகளை போடப் பண்ணினேன்.

வலையர்

56. செம்படவர் வலைகாரர் மீன்பிடிக்கும்
சேனைவிதச்சாதி கட்கெலாம்
நம்படவுங் கட்டுமரமுந் தூண்டிலும்
நச்சுவலை குண்டுங் கொடுத்தேன்.

வாணியர்

57. எண்ணெய் விற்கும் வாணியர்க்கும் வீசமூதல்
ஏற்றமுழுச் சேர்வரைக்கும்
பண்ணியதிற் சங்கிலிகட்டிக் கரண்டியும்
பலவிதஞ்செய்துகொடுத்தேன்.

வண்ணார்

58. வண்ணார்க்குச்சிலைதப்பக் கற்கொடுத்து
மறுத்தஞ்சேங்கொட்டையைக்கொண்டு
எண்ணுமற்குறிபோட ஊசிகொடுத்
தெங்கையும் பிழைக்கப் பண்ணினேன்.

நாவிதர்

59. நாவிதர்க்குக்கண்ணாடிகோல் தீட்டுக்கல்
நல்ல நல்ல கத்திகளுடன்
மேவிய முள்வாங்கி சிமிட்டா கிண்ணமும்
விதவிதஞ்செய்து கொடுத்தேன்.

ஒட்டன்

60. ஒட்டனுக்குக் கடப்பாரை குந்தாள
மோவியமண்வெட்டிகொடுத்து
வெட்டிவெட்டிக் கேணிகுளங்கள் செய்வரப்பு
வேலைகளைச்செய்யப்பண்ணினேன்.

குறவன்

61. குறவனுங்குறத்தியாரு மூங்கில்வெட்டிக்
கூடை முறஞ் சல்லடைசெய்யத்
திறமுடனோர் வாங்கரிவாளுங் குத்தீட்டி
சிற்றரிவாளொன்றுங் கொடுத்தேன்.

கூத்தாடி

62. கூத்தாடிகளையாடிப் பேயாடிக்
குறளிவித்தைக்காரருக்கெல்லா
மாத்தான பொம்மைகளுஞ் செப்புகளும்
வாத்தியமுட்டுகளுந்தந்தேன்.

சக்கிலியன்

63. ஒக்குமிரம்பையுங் கத்தியுங் கொட்டலானு
முளியுஞ் சிற்றுளியுந்தந்து
சக்கிலியன் தோல் பூரிப் பாதரட்சை
சமைத்துப் பிழைக்கப்பண்ணினேன்.

வெட்டியான்

64. வெட்டியார்க்குப் பெருந்தடியங்கனகதப்பு
மேளங்கள் பல கொடுத்து
மட்டிகைப்பலகையுடனே குறிமொந்தை
மரக்காலுஞ் செய்துக்கொடுத்தேன்.
65. தவிலடித்து முரசடித்து டங்காவுந்
தமுக்குஞ் சில்லானுமடித்துப்
புவிதனிற் கைக்கோலுமடித்து அங்கவரைப்
போசனஞ் செய்யப்பண்ணினேன்.

கேள்வி

66. இந்தவிதம் பூமியிலுள்ள சாதிகளெல்
லாம் பிழைக்க எற்றினஞ் செய்த
எந்தனை யிடங்கையதென்றே தள்ளிவிட்ட
தெந்தவிதம் பிள்ளைமாரே.

வகுப்பு 6.

அனந்தக்களிப்பு

விருத்தம்

தேவனும் நரனுமான
திவ்விய கிறிஸ்துநாதர்
சீவியர் மரித்தோர் தங்கள்
செய்கையின் படியே தீர்வை
மேவி வந்திடுமுன் நன்றாய்
விழித்திரு தவத்திலே நில்
பாவஞ் செய்யாதே நெஞ்சே
பரகதியடையத்தானே.

பாவஞ் செய்யாதே நீ நெஞ்சே நாளைத்
தேவனடுத்தீர்வை
செய்வானென்றஞ்சே
ஆனந்தம் குருபாதம் ஞானம்பா

1. ஆவியிருக்கின்ற கூடு என்றும்
அழியாதிருப்பதே யானந்தவீடு
சீவனின்பாதை கண்டோடு சாபத்
தீட்டையுங்கேட்டையும் கைவிட்டுப்போடு. —பாவ

2. மெய்யான வார்த்தையைச் சொல்லு அந்த
மேலோக ராசாவின் வீதியிற்செல்லு
பொய்யான மாயைவெல்லு மெத்தப்
புத்தியாய்ப் பத்தியாய்ச் சித்தமாய் நில்லு. —பாவ

3. வாழ்வைச் சதமென்றிராதே கெட்ட
மாய்மாலக்காரர் வளவில் வராதே
தாழ்வைப் புறக்குத்தராதே சதி
சற்பனை செய்வது சாமிக்கேராதே. —பாவ

4. வன்மத்தைப் பேணி வையாதே தீய
வஞ்சகஞ் சூது கவடுசெய்யாதே
கன்மத்தில் வீழ்ந்து தொய்யாதே நல்ல
காலத்தை வீணிற் கழித்து நையாதே. —பாவ

5. சாபத்தைக் கட்டிக்கொள்ளாதே பெற்ற
தந்தை தாய்பேரிலே நிந்தை விள்ளாதே
கோபத்தைக்காட்டித் துள்ளாதே சற்
குருவின் வார்த்தையி லொன்றுந்தள்ளாதே. —பாவ

6. நீதிஞாயத்தைவிடாதே கொடும்
கெட்டோர் ஆலோசனைக்குட்படாதே
வாதைப் பொருளைத்தொடாதே மெத்த
வன்மத்தைக் கன்மத்தை யெண்ணிக் கெடாதே. —பாவ

7. கல்லித்தனங்கள் பண்ணாதே கெட்ட
காவாலித்தம்பிகள் வீட்டை நண்ணாதே
யில்லைத்தை மெய்யென்றெண்ணாதே சாமிக்
கேருத காரியஞ் செய்யவொண்ணாதே. —பாவ

8. ஆசைக்குள் வீழ்ந்து சாகாதே மிக்க
ஆத்தும வாழ்வை யிழந்துபோகாதே
நீரக்குழிக்குள் வேகாதே தேவ
நித்திய கோபாக்கினைக்கேதுவாகாதே. —பாவ

9. சத்துருப் பேயைநாடாதே கன்மச்
சண்டாளப் பாவிகளோடு கூடாதே
புத்தி கெட்டெங்குமோடாதே நாளைப்
பொன்றும் நரனைப் புகழ்ந்து பாடாதே. —பாவ

10. நாட் பொருத்தங்கள் பார்க்காதே நீதி
ஞாயத்தை விட்டு வழக்குத்தீர்க்காதே
கோட்சொல்லும் வார்த்தை கேட்காதே சற்
குருத்துரோகஞ் சுவாமிக் கேற்காதே. —பாவ

11. துர்க்குணர்க்கொன்றுஞ் சொல்லாதே கெட்ட
சோரக்குலாமர்க்குத் தூது செல்லாதே
சற்குணங் கெட்டு நில்லாதே உத்த
தன்னுயிர் தானே தனக்குப் பொல்லாதே —பாவ

12. அறிவைப்படிப்பது துங்கம் நமக்
காண்டவன் முனே யபாஞ்சித் தங்கம்
பொறியை யடக்குதல் புங்கம் அப்போ
புத்திமானுருனைப் போற்புருஷ சிங்கம். —பாவ

13. சுட்டாலும் வெண்மையே சங்கு என்ன
துன்பம் வந்தாலும் சுகிப்பதே நங்கு
கெட்டோருக்குண்டான பங்கு கிறிஸ்
தேசுவின் காயம் அடைக்கலந்தங்கு. —பாவ

14. ஆசைக்கடிமைக்குண்டச்சம் பேயி
னக்கியான மார்க்கத்திலாவதேன் மிச்சம்
யேசு கிறிஸ்துவின் பட்ச முனக்
கெத்தனை பாக்கியம் லெட்சாதி லெட்சம். —பாவ

15. ஏழைக் கேதாகிலுங் கொஞ்சங் கொடு
இன்றைக் கழிந்துபோமே யிப்பிரபஞ்சம்
பீழைப் படச்செயும் வஞ்சம் கெடப்
பேசாதே யேசுவின் பாதமே தஞ்சம். —பாவ

16. சுத்த திருச்சபை கட்டுத் திட்டம்
துன்மார்க்க லோக மயக்கத்தை விட்டுச்
சத்திய வேதத்துட்பட்டுச் செப
தபத்தினால் மோக்ஷ வாசலைக்கிட்டு. —பாவ

17. நல்லார் பொல்லாரென்றிரண்டு வரும்
நரகதி பரகதி யிருவர்க்குமுண்டு
எல்லாத்தையும் புத்திகொண்டு அறிந்
தேசுநாதர்க்கடிமை செய்தொண்டு. —பாவ

18. நற்குணமாவதே பத்தி யிரு
ஞானத்திரவியம் ஆத்தும சுத்தி
சொற்க மடைவதே முத்தி சுத்த
சுவிசேடவாக்கியமே நல்ல புத்தி. —பாவ

19. துன்மை வருத்தம் உபத்திரங் கெட்ட
துட்டரின் கொள்கைக்கடுத்ததே சூத்திரம்
நன்மையைச் செய்வதே சித்திரம் நீதி
ஞாயத்தில் மோசம் பண்ணாதே நீ பத்திரம். —பாவ

20. என்ன படித்தாலும் மந்த முனக்
கெத்தனை புத்தி சொன்னாலும் நிற்பந்தம்
பின்னையுஞ் சூழு முத்தொந்தம் பற்றிப்
பிடித்துகோ யேசுவின் பாதாரவிந்தம். —பாவ

21. வேதம் படிப்பது சுந்தர மற்ற
வீணான சாஸ்திர புராணப் படாந்திரம்
ஏது செய்யும் பேயின் தந்திரம் நீ
யெப்போதுஞ் சொல்லிக்கோ பரமண்டல மந்திரம். —பாவ

வகுப்பு 7.

வெண்கலச்சற்பம்

விருத்தம்

வீம்பினா னன்மையற்று
விண்ணிழந்தலகையான
பாம்பது கெடுத்தமைந்தர்
பாதகந்தவிழ்க்கவந்த

ஓம்பிரணவமாய்க் கம்பத்
தோங்கும் வெண்கலச் சற்பத்தைத்
தீம்பற நோக்கி மோசேச்
சித்தன் பாம்பாட்டினனே.

ஆடுபாம்பே யெழுந்தாடுபாம்பே கிறிஸ்
தண்ணலைக் கொண்டாடிக் கொண்டாடு பாம்பே.

1. நாடும் பராபரன் கிருபையாலே மோசே
நடுங்கக் கைக்கோற்குணின்ற நல்லபாம்பே
நாகப்பாம்பே விவேகப்பாம்பே
நாதாந்த சித்தாந்த நற்குணப்பாம்பே. —ஆடு

2. கனிந்து கனிந்து கடவுளை நோக்கி யொரு
கருத்தின் மனத்தைப் பரவசமாக்கி
யனந்த சந்தோட மென்றாடு பாம்பே பர
மானந்தக் களிப்புக் கொண்டாடு பாம்பே
அந்தப் பாம்பே கனவிந்தைப்பாம்பே
அப்பாலுக் கப்பானின்றாடு பாம்பே. —ஆடு

3. துணிந்து பராபரத்தைக்கொண்டாடி ஐயன்
சுத்தக்கிருபை பெற மன்றாடி
பணிந்து பணிந்து நின்றாடு பாம்பே திருப்
பாதார விந்தங்கண்டாடு பாம்பே
பத்திப்பாம்பே யதி சித்திரப்பாம்பே
பட்சதாபத்திலே டாடுபாம்பே. —ஆடு

4. ஒளிந்து ஒளிந்து மறைந்தோடாமற் சத்திய
உண்மை உறுதிநெறி சாயாமல்
தெளிந்து தெளிந்து நின்றாடு பாம்பே பரன்
சீர் பாதங்கண்டு மகிழ்ந்தாடு பாம்பே
சித்தனுரே பரிசுத்தனுரே
தெரிசித்தார் கரிசித்தாரென்றாடு பாம்பே. —ஆடு

5. காவாதி தோட்டத்தில் வந்த பாம்பு அது
கள்ளப்பாம்பாகாத கொள்ளிப்பாம்பு
ஏவாளை யேய்த்துக்கெடுத்த பாம்பு உல
கெங்குந்திரியுதென் றுடுபாம்பே
பிந்தப்பாம்பு மாதந்திரப்பாம்பு
எவரையுங் கடித்ததென் றுடுபாம்பே. —ஆடு

ஆதி. 3:1-5.

6. தந்திரம்பிசாசென்ற ஆதி சற்பம் ஆதித்
தாயைக்கெடுக்க வந்த ஆதி சற்பம்
எந்தை விலகுங்கனி தின்பையானல் சரு

வீசனுக்கொப்பா விரென்று சற்பம்
பந்தச்சற்பம கந்தைச்சற்பம்
பாதாளச்சற்பமென் றூடுபாம்பே. —ஆடு

7. வானத்திலே யிருந்த தேவதூதன் சொந்த
வாசஸ்தலத்தை விட்டு வந்ததுமல்லால்
ஈனச்சற்பத்தின் சொரூபங்கொண்டு வனத்
தேவாளை மோசப்படுத்தினதிறு
லெத்தனுகி யெங்கள் சத்துருவாகி
லெட்சைக்குட்பட்டதென் றூடுபாம்பே. —ஆடு

8. எல்லா மிருகங்களிலுந் தாழ்த்தப்பட்டுவெளியின்
எல்லாச் செந்துகளிலுஞ்சபிக்கப்பட்டு
வல்லாமை யன்றி வயிற்றானடந்து நித
மண்ணைத்தின்பாயென்றான் மாசேனன்
மட்டிலாதான் சபித்திட்டவாறே
மாறூட்டப்பாம்பதென்றூடுபாம்பே. —ஆடு

ஆதி. 3:14,15

9. உனக்குமிஸ்திரிக்கும் பகையாக்கிப் பின்
முன்றன் வித்தவள் வித்துக்கு முறவகற்றிக்
கனத்த விரோதத்தை யுண்பிடாக்குவோ மத்த[1]
கத்தை யழிப்பார் குதிகால் நசுக்குவாய்
கட்செவியே யென்றற சபித்த
கத்தா நம்பத்தா வென்றூடு பாம்பே. —ஆடு

10. அந்தச்சற்ப மல்லோ இந்தச்சற்பம் பணிந்
த்தக்கியானிகள் வணங்கும் அகந்தைச்சற்பம்
நிந்தைப்பிசாசான தந்திரச்சற்பம் என்று
நீசக்குலாமர் மனத்துணராமல்
நித்தநித்தமே மனப்பத்தம் வைத்துமே
நிற்பாக்கியராளுரென்றூடுபாம்பே. —ஆடு

11. ஆதித்த கப்பனைக்கெடுத்த சற்பம் இந்த
அகிலத்தையுங்கெடுக்க ஆங்காரித்துச்
சோதித்து மானிடரை மயக்கிவித்து நாக
சுவாமியென்றரவத்தைத்துதிக்கப்பண்ணிச்
சூதாகவே கொடுந்தீ தாகவே
சொற்கந்தடுத்ததென்றூபாம்பே. —ஆடு

12. சிவனார் முடியின் மேலொருபாம்பாம்சிவன்
தேவியார் மோதிரமங்கொரு பாம்பாம்

[1] மத்தகம்—சிரசு.

புவனஞ்சுமப்பது மொருபாம்பாம் உந்தி
பூத்தோன் படுப்பது மொருபாம்பாம்
பொய்க்கதையோ இது மெய்க்கதையோ
புத்தியினலறிந்தாடு பாம்பே. —ஆடு

13. ஐந்தலை நாகமென்றேன்றிருக்குதாம்அதை
யல்லாமற் சேடனுக்காயிரந்தலையாம்
விந்தை விந்தைத்திக்குப்பாம்பெட்டுப்பாம்பாந்
தலை வெட்டுண்டிரண்டாய்த்திரிவதுஇராகு கேதாம்
மெய்க்கதையோ இது பொய்க்கதையோ
விவேகத்திஞற்றெளிந்தாடுபாம்பே. —ஆடு

14. நாகவடம் போட்டுக்கொண்டாட்டுவோரும்
பச்சைராமத்தை நெற்றியினீட்டுவோரும்
வானென்று சிகப்பிட்டுக்காட்டுவோரும் முழு
மதிகெட்டமாடுகளென்றூடுபாம்பே
மாயையல்லோ இது மயக்க மல்லோ
வலுசற்பத்துருவமென்றூடுபாம்பே. —ஆடு

15. சடைநாகமிட்டுக்கொண்டுது லுக்கிகளுமைந்
தலைநாகமாலை கட்டிப்பிலிக்கிகளும்
கொடிதான பாம்படத்தை மாட்டிக்கொண்டுமெத்தக்
கோரணி காட்டு கோமாளிகளும்
அடியாரே பேய்க்கடியாரே
ஆகாத்தியக்காரிகளென்றூடுபாம்பே. —ஆடு

16. நாகம்மாள் நாகசாமியென்று சொல்லிமுழு
ரண்டகக்காரியெங்கள் தாய்மார்கள்
போகி[1] வந்து தங்களைக்கடியாமற்காதிற்
பொற்பாம்புகளைப்பண்ணி பூட்டினர்கள்
பூட்டக்கமேயிது பொம்மலாட்டே
புத்திகெட்ட மூடங்களென்றூடுபாம்பே. —ஆடு

17. தாயைக்கெடுத்த பாம்பறியாளோ தன்
தலையின் முடித்த தென்று குறியாளோ
பேயைக்கும் பிட்டதற்கி தொப்பல்லவோ யின்னும்
பெத்தரிக்கம் பேசுவது தப்பல்லவோ
பேய்மாலமே யிதுமாய்மாலமே
பின்னிட்டு வீழ்ந்தாயென்றூடுபாம்பே. —ஆடு

18. சொந்தச்சனமென்றுனைத்தெரிந்துகொண்ட
பரி, சுத்தபராபரனுக்கேறுத
இந்த அருவுருப்பைச்செய்யலாமோ மொட்டை

[1]போகி—பாம்பு.

பராபர வஸ்து வென்ற ஒருதேவன்கண
பற்றமாய்த் தம்முடைய தோற்ற அடிகளை
பரிசுத்த சாயலாய்ச் செய்திருக்க தமையும்
~~பாவ்காளை~~ தீதி பச்சைக்குத்திக்கெடுத்தாயே — ஆடு
பச்சை ச
பாவ்களைய தாய்ப்பாழாக்கியே
பசாசுருவங் கொண்டாயென்று பாம்பே

யக்கப்
யே
ளைறய தாய்ப்பாழாக்கயெ
பசாசுருவங்கொண்டாயென்றுடுபாம்பே. —ஆடு

20. (வேறு) முள்ளுவிருட்சத்திலேகத்தனெழுந்து,
மோசேமுனிவனுக்குக்காட்சிகொடுத்து
வெள்ளப் பெருக்கத்திச றேலைமீட்க
விரும்பிப்பார் வோனிடத்தில் விட்டபோது
எள்ளத்தனை விருப்பமில்லாம
லெகிப்பத்துக்கேக மனங்கொள்ளாமல்
வள்ளலுடனெதிர்த்து வாதுகூறுகையில்
வைத்தகோற்பாம்பாக்குஞ்சித்தனுர்முன். —ஆடு

யாத். 4:2-4.

21. அடிமைத்தனத்திசறேலைமீட்க
அறுதித்திருவுள முண்டானபோது
ஆடுமேய்ததுத்திரிந்தமோ சேக்கு
அக்கினிச்சுவாலைற் காட்சிதந்து
ஆட்டுக்கோலைப்போட்டுப்பாம்பாக்க
அப்பால் விலகியவனதிர்ந்தோட
ஆனந்தச்சித்தனுராட்டும்பாம்பு எகித்
தனைத்துங்கெடுத்ததென்றுடுபாம்பே. —ஆடு

22. பாம்புக்கோல்மோ சேயும் ஆரோனும்
பார்வோன்முன் அற்புதங்கள் பண்ணும்போது
வீம்புக்காயன்னேயும் அம்பிரேயும்
வித்தைக்கோலைப்போட்டுப்பாம்பாக்க
தீம்புக்காரக்கயவர்க்கேச்சாகச்
சித்தனுர் கோற்பாம்பு தின்றதாலே
சாம்பற்பூச்சுக்காரர் கொண்ட பாம்புமிகச்
சாபிக்கப்பட்டதென் றுடுபாம்பே. —ஆடு

யாத். 7:1-12.

23. நானாற்குடுந் திரத்தின் வழியாக
நடந்திசுரு வேலர் சென்றபோது
தேவனைப்படும் பலவிதனைத்தாலே
தூய்ய கிறிஸ்துவைச் சோதித்த பாவம்
கோனைக் குறைந்து வதையுண்டெங்
கொள்ளிவாய்ச் சர்ப்பம் கடித்ததாலே
உணரக் கடித்தோர் கம்பத்திற்றூக்கும்
வெண்கலச் சர்ப்பத்தை கண்டாறும்பூ

24 வஞ்சனா பறையனாம் மோசேயுடன்
மாருட்டபாவிகள் மாளாமலே
கொள்ளிவாய்ப்பாம்புருவத்தை யுண்டாக்கிக்
கோப்பாயொரு கம்பத்தில் வாயப்பாகவே
யுள்ளியே தூக்கிவை யென்றவண்ணமே
யொல்லையிற்செய்தே கடியுண்டவரெலாம்
வெள்ளமாகத்திரண்டு மேனேக்கவே விஷ
மீண்டதுமீண்டு தென்றூடுபாம்பே. —ஆ

25. தீராத விஷமல்லோ சென்மப்பாவம்
செய்யும் பாவங்கூடச்சேர்ந்தபோது
ஆராலுந்தீர்ப்பதற்கேலாதே
ஆசைப்பாம்போடிவந்து தீண்டினுக்கால்
வேரேது மந்திரங்கள் மணியேது
வெண்கலச்சற்பத்தை மேனேக்கியே
பாராத சித்தருக்குப்பலியாதே
பார்த்தவர்க்குச்சித்தியென் றூடுபாம்பே. —ஆ

26. மதுபானத்தைநல்லவன்னமென்றும்
வடிவானபாத்திரத்தில் ரூபிக்குமென்றும்
மெதுவாயிரங்குமென்றுஞ் சிந்தியாதே
மீண்டதுவிஷப்பாம்புபோற் கடித்து
சதியாகக்கட்டுவிரியன் போற்றூடும்
சாலமோன்ஞானியவன் சாற்றினனே
நிதியேது குடியர்க்குநீதியேது
நிச்சயநிச்சய மென்றூடுபாம்பே. —ஆ

வாக்கியம் **23:31,32.**

27. அடப்பைப் பறித்தவனைப்பாம்பு கடிக்கும்
அரவமாட்டேனென் றவ்வையுஞ் சொன்னாள்
தடைகட்டப்பாடாப் பாம்புதொடில்வாய்ச்
சாலகனூற பிரயோசனமுண்டோ